

# பூச்சுமை

மேலாண்மை பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

# பூச்சுமை

மேலாண்மை பொன்னுச்சாமி

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை– 600 017

முதற்பதிப்பு : டிசம்பர், 1992
இரண்டாம் பதிப்பு (திருவரசு) : டிசம்பர், 2004
உரிமை : ஆசிரியருக்கு

**விலை : ரூ. 70.00**

| | |
|---|---|
| TITLE | POOCHCHUMAI |
| AUTHOR | MELANMAI PONNUSAMY |
| LANGUAGE | TAMIL |
| SUBJECT | SHORT STORIES |
| EDITION | SECOND EDITION DECEMBER, 2004 |
| PAGES | 216 |
| PUBLISHED BY | THIRUVARASU PUTHAKA NILAYAM<br>23, Deenadayalu Street<br>Thyagaraya Nagar.<br>Chennai - 17 |
| Price | **Rs. 70.00** |

Typesetting : AMARAVATHI
Chennai - 83.
Cell : 9444169725

Printed by : **Malar Printers 044-8224803**

# என்னுரை

டவுசர் போட்டிருந்த நாளிலேயே என்னுள் அரும்பிய இலக்கிய உணர்வை உணர்ந்து ஊக்கப்படுத்தி மலரச் செய்த எனது மதிப்பிற்குரிய தோழர் எஸ்.ஏ.பெருமாள்.

நான் எழுதியனுப்பிய கதைகளையெல்லாம் பொறுமையாய் படித்து, அன்போடு பிரசுரித்து என்னை வெளிச்சப்படுத்திய 'செம்மலர்' ஆசிரியர் கே.முத்தையா, தி.வரதராஜன், அரவணைத்து, அன்பான கதகதப்பூட்டி என்னைப் போற்றிப் பாதுகாக்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தோழர்கள்-

எனது நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு ஆதரவு தருகிற திருவரசு புத்தக நிலையத்தாருக்கும், பதிப்பாசிரியர் வானதி ஏ. திருநாவுக்கரசு அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கதைகளை வெளியிட்டு உதவிய இதழாசிரியர்கள், நூலுக்கு நல்ல அணிந்துரை, முன்னுரை வழங்கிய பேராசிரியர் சாலமன் பாப்பையா, டாக்டர் சு.வேங்கடராமன், அட்டை ஓவியம் வழங்கிய ஓவியர் ஆனந்தன் ஆகிய அனைவருக்கும் எனது இதயம், நன்றி சொல்லி மகிழ்கிறது.

சரி...நூலைப் படியுங்கள். மௌனமாயிருந்து விடாமல் எழுதுங்கள். உங்கள் பாராட்டு என் பயணத்துக்கு தெம்பூட்டும். விமர்சனம் வெளிச்சம் காட்டும்.

நன்றி!

மேலாண்மறைநாடு
காமராசர் மாவட்டம்

என்றும் உங்கள்,
**மேலாண்மை பொன்னுச்சாமி**

# அணிந்துரை

பேராசிரியர், சாலமன் பாப்பையா
தமிழ்த்துறைத் தலைவர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபது-எழுபத்தைந்து வாக்கில் என்று ஞாபகம். ஒரு நள்ளிரவில் இலக்கியப் பட்டிமன்ற நிகழ்ச்சி முடிந்து, நிகழ்ச்சியின் வெற்றியில் நான் உற்சாகமாக வருகிறேன் கேட்க வந்திருந்தோரிற் சிலர் என்னுடன் பேசிக் கொண்டு வருகின்றனர். அவர் களுடன் 'அரைக் கால் டவுசர்' போட்ட ஒரு சிறு பிள்ளை; அதன் கையில் சில காகிதங்கள், பிள்ளையைக் கூர்ந்து பார்க்கிறேன்.

'முற்றிக் காய்ந்த நெல்லின் நிறம்; வற்றி வரண்ட எலும்பு மேனி: அறிவுத் தாகத்தில் அலைந்து பாயும் விழி; அடங்கியும் அடங்காமலும் வரும் மொழி; மொத்தத்தில் கவனிப்பார் அற்ற வெட்ட வெளிச் சிறு செடி'

நான் பார்த்த வேகத்தில் அந்தப் பிள்ளை 'ஐயா' நான் ஒரு சிறுகதை எழுதியிருக்கிறேன். இது பிரசுரிக்கத் தகுதியானது தானா-பார்த்துச் சொல்லுங்க' என்கிறது.

கிராமத்து வெளிச்சம்; இரவின் சோர்வு; எனினும் வேகமாக என் விழிகளை எழுத்துகளின் மேல் விரட்டு

கிறேன். அதிகம் படிக்காத அந்தக் கிராமத்துச் சிறுவனின் எழுத்தில் கிராமியம் கொட்டிக் கிடந்தது. எனக்கு வசப் படாத தமிழ் அந்தச் சிறுவனுக்குச் சேவகம் செய்வது கண்டு அப்போது எனக்குள் பொறாமையா-பெருமையா எது தோன்றியது என்று இப்போது சொல்லத் தெரியவில்லை. 'உனக்கு நன்றாகவே எழுத வருகிறது; பத்திரிகைகளுக்கு அனுப்பி வை' என்று மட்டும் சொல்லி வைத்தேன். சிறுவனின் நினைவு என் நெஞ்சிற்குள் சிறைப்பட்டுக் கிடந்தது. அந்தச் சிறுவன்தான் பல்வேறு இதழ்களில் பரிசு பெறும் எழுத்தாளராக, பண்பிலும் படிப்பிலும், அன்பின் பிடிப்பிலும் மேலும் மேலும் வளர்கின்ற மனிதராக மிளிரும் 'மேலாண்மை பொன்னுச்சாமி' என்று அறிந்த போது எனக்குள் கங்கை வெள்ளமாய்க் கிளப்பு. அவரது 'பூச்சுமை' அவரை அறிந்து கொள்ளவும் உதவும்; வளரும் எழுத்தாளர் கள் எழுதும் வழி தெரிந்து கொள்ளவும் துணை நிற்கும்.

*மதுரை* — வாழ்த்துகளுடன்

*16.12.1992* — **சாலமன் பாப்பையா**

# முன்னுரை

**டாக்டர் சு.வேங்கடராமன்**
*தற்கால இலக்கியத்துறைத் தலைவர்,*
*தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக் கழகம்*

அண்மைக்காலமாக நிறைய நல்ல தரமான படைப்புக்களைத் தந்து வருபவர் மேலாண்மை பொன்னுச்சாமி. கரிசல் பகுதி படைப்பாளரான அவர் சிறுகதைகளை நல்ல வலுவான உள்ளடக்கத்துடன் தேர்ந்த கலை நயத்துடனும் எழுதுகிறார். சமூகமாற்றத்திற்கும் மனிதகுல மேன்மைக்கும் தம் கதைகள் பயன்பட வேண்டும் என்ற தீவிர சிந்தனை உடையவர் அவர். பூச்சுமை என்ற இந்தத் தொகுப்பும் அவருடைய எழுத்தின் தனித்தன்மை களை வெளிப்படுத்துகிறது. வியாபார நுட்பங்கள் அறியாமல், கை நஷ்டப்பட்டு வியாபாரஞ் செய்து பொறுப் பின்றி இருக்கும் பூவாத்தாவின் கணவன், பிள்ளைக்குத் தந்தையாகப் போவது அறிந்ததும் பொறுப்புள்ளவனாக மாறுகிறான். இந்த மாற்றம் அவனிடம் ஏற்பட்டதைப் 'பூச்சுமை' கதை மிகுந்த நளினத்துடன் இயல்பான பாங்கில் யதார்த்தமாகக் காட்டுகிறது. 'பூ' என்ற சிறுகதை மிகவும் நுட்பமான வாழ்க்கை தத்துவத்தைக் காட்டுகிறது. தன் மகளின் வளர்ச்சியை நினைத்து மகிழாமல், அஞ்சும் தாயின் மனநிலை, அதற்கான காரணம், அச்சத்திலிருந்து அவள்

பெறும் தெளிவு என்பன அருமையாக இக்கதையில் இணைந்து வடிவம் பெற்றுள்ளன. 'பெண்ணா ஜென்ம மெடுத்தவளைக் கிழிச்சு கேவலப்படுத்துகிற ஊரு உலகத்துக்குப் பயந்து என்ன ஆகப்போறது? தும்பம் வந்தா செத்தா போறோம்? மல்லுக்கட்டிப் புரளிலியா? அப்படித்தான் இதுவும்' என்னும் வரிகளில், வாழ்க்கை பற்றிய நம்பிக்கைக்குரலும், பிரச்சினைகள் வரும் போது, அவை கண்டு துவண்டு விடாமல், எதிர்த்து நின்று போராடி வாழ்க்கையை வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற துணிவை யும் இக்கதைகள் காட்டுகின்றன. இதைபோன்ற குரலை 'அவள் சாரதி' சிறுகதையிலும் ''வாழ்க்கையோடு மல்லுக் கட்ட துணிவு கொண்ட உழைப்பாளிகளிடம் பாலிடாலுக்கு ஏது வேலை?'' என்று வருவதிலும் கேட்கலாம்.

இவருடைய கதை நிகழும் களம் யாவும் கரிசல் பகுதி தான். இவருடைய கதை மாந்தர்கள், நாள் முழுவதும் பாடுபட்டு, உழைத்து அரைக்கால் வயிற்றுக்கு உணவு தேடிட அத்தனைபேரும் கடும் உழைப்பை நல்கும் கந்தகபூமி உழைப்பாளர்கள். விளையாட்டுப் பருவம் கழியாத நிலையில், தீப்பெட்டி ஆலைக்கு வேலைக்குச் சென்று, முதலாளி, மேஸ்திரி ஏஜெண்ட், கார் டிரைவர் என்று அத்தனைக் கொடுமையாளர்களிடமும் ஏச்சும் பேச்சும் வாங்கி இடிகஞ்சி குடிக்கும் குழந்தைத் தொழிலாளர் முதல் வயல் வரப்புகளில் நாள் கூலிக்குச் செல்லும் பெண் வரை அனைவரும் உழைப்பாளிகளே, 'விலைவாசி ரெக்கை கட்டிப் பறக்க' தினமும் வயிற்றுப் பாட்டிற்கே கூலி கிட்டாத காலத்தில் (மழை தண்ணீர் இல்லாமல், ஒரு வெள்ளாமை கூட இல்லை. இறவைக் கிணறுகளிலும் தண்ணீர் வரட்டிழுப்புத்தான். மிளகாய்ச் செடிகள், தாயற்ற பிள்ளை

களாக வாடிச் சுருங்கிக் கிடந்த காலத்தில்) தான் வளர்க்கும் வாயில்லா ஜீவன்களான ஆட்டுக் குட்டிகளுக்குக் குழை ஒடிப்பதற்காக அலைந்து திரிந்து-திருடியாவது-கொண்டு வரும் பாசமுடைய உழைப்பாளிகள் இக்கதை மாந்தர்கள். உழைத்து நாள் முழுக்கப் பாடுபட்டு மாலை மயங்கும் வேளையில் வீட்டிற்கு வந்து, பிள்ளை-குட்டி, கணவனுக்_காக உணவு சமைக்க வரும் தாய்க்கு, பள்ளி சென்று வந்த பெண் குழந்தை கூடமாட உதவும் அன்புலகமாக வீடு உள்ளது. மகளின் இத்தகு பொறுப்பும் உழைக்கும் பாங்கும் கண்டு தாய் மகிழ்கிறாள்.

'மைதானம்'இத்தொகுப்பிலே அற்புதமான கதையாக உள்ளது. தீப்பெட்டி ஆலைக்குச் சென்று உழைத்து வரும் கூட்டுக்குஞ்சு பேச்சி அற்புதமான படைப்பு தன் வயதுக் கேற்ப விளையாட்டுப் போக்கில், தனக்கு ஒதுக்கப்பட்ட குச்சி அடுக்கும் பணி முடித்தபின், அடிபம்பில் அவள் விளையாட்டாகத் தண்ணீர் அடித்து, அந்த இன்னோசையில் சிறிது நேரம் நிற்கிறாள். தனியாக இருந்த அவளை மேஸ்திரி, வேலை செய்யாமல் விளையாடிக் கொண்டிருப்பதாகக் கூறி அதட்டிக் கையை ஓங்குகிறான். அது வாக்கு வாதமாகிப் பிரச்சினையாகிறது. 'இந்த வயசில் விளையாடுகிறது இம்புட்டுப் பெரிய குற்றமா?' என்று அச்சிறுமியின் எண்ண ஓட்டத்தைக் காட்டுமிடமும், மைதானம் அவளை விட்டுப் பிரிந்து தூரம் தூரமாகப் போய்க் கொண்டிருந்தது' என்று வரும் கதையின் கடைசி வரியும் மிக நுட்பமான கலைநயத்துடன் வெளிப்பட்டுள்ளன. நடப்பியல் பார்வை அருமையாக வெளிப்பட்டுள்ளது. சிறுவர்களைத் தீப் பெட்டி ஆலைக்கு வேலைபார்க்க அனுப்பும் குடும்ப நிலை, வறுமை, ஆலைகளில் பிள்ளைகளின் உழைப்பைச் சுரண்டிடும் அவலம், பள்ளிக்குச் செல்ல வேண்டிய

பருவத்தில், கல்வி கற்கப் போகாமல் இப்படி கடும் உழைப் பிற்கு ஆளாகும் சிறுவர்களின் நிலை என்று பல்வேறு நிலைகளை நம் படைப்பாளர் பலரும் காட்டியுள்ளனர். 'விளையாட்டு மைதானம்' சிறுகதை அவைகளிலிருந்து மாறுபட்டுச் சிறுவர் உளவியல் பார்வையில், விளை யாட்டுப் பருவத்தில் அச்சிறுமிக்குக் கிட்ட வேண்டிய மனமகிழ்வையும் விளையாட்டையும் இழக்கும் அவலத்தைக் காட்டுகிறது.

முன்னரே கூறியபடி, இக்கதைகள் நுட்பமான கலைத் திறனும், வடிவச் செம்மையும், ஆழமான உள்ளடக்கமும், வலுவான சமூகப் பார்வையும் கொண்டவை. வாழ்க்கை பற்றிய நம்பிக்கையையும், பிரச்சினைகளை எதிர்த்துப் போராடும் உரமிக்க உழைப்பாளிகளையும் மனிதநேயமிக்க பாங்கில் நட்பியல் நெறியில் படைத்துள்ளார் மேலாண்மை பொன்னுச்சாமி. அவருடைய இச் சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதையுலகிற்குப் புதிய வளம் சேர்ப்பவை. அவரை நாம் பாராட்ட வேண்டும். இன்னும் மிகச் சிறந்த கதைகளை எழுதி, அவர் மேன்மேலும் உயர்ந்து சாதனைகள் பல செய்து, பாராட்டும் சிறப்பும் பரிசும் ஏற்றங்களும் பெற்றிட வேண்டும். அவருக்கு என் மனப்பூர்வமான பாராட்டுக்கள். இத்தகு சிறுகதைகளை அறிமுகஞ் செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மதுரை-21 **சு. வேங்கடராமன்**
24-12-1992.

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | பூச்சுமை | 11 |
| 2. | பாட்டையா | 26 |
| 3. | பூ | 47 |
| 4. | அவள் சாரதி | 59 |
| 5. | தாளமுடியாத மன்னிப்பு | 76 |
| 6. | பாரம் | 92 |
| 7. | யுகமாய் நகரும் பொழுது | 107 |
| 8. | மைதானம் | 121 |
| 9. | அவளுக்குள் | 135 |
| 10. | தளை | 149 |
| 11. | உதிர்வு | 160 |
| 12. | சாபம் | 170 |
| 13. | அவனை அவனே | 182 |
| 14. | கோணல் எழுத்து நாலு | 192 |
| 15. | பெண் ஒரு பூ மட்டுமல்ல | 202 |

# பூச்சுமை

'அப்பவும்...இப்படியா ஒரு மனுசர், அப்புராணியா இருக்கிறது?'

அடுப்பு வேலையிலிருந்த பூவாத்தா விடிந்து பொழுது புறப்பட்ட பிறகும் ஒதுங்குகிற கைலி தெரியாமல் 'குண்டக்க முண்டக்க' படுத்து உறங்குகிற புருஷனைப் பார்த்தாள். குறட்டைச் சத்தம் வேறு. கள்ளமில்லாத ராசாவுக்கு கவலையற்ற உறக்கம்.

இரண்டு அடுப்பிலும் தீ. ஒன்றில் சோறு; மற்றதில் குழம்பு. அவசரமாய் சோறு ஆக்கி வைத்துவிட்டு, ஏழு மணிக்குள் பூமார்க்கெட்டுக்குப் போயாகணும்.

முள்ளில் உட்கார்ந்திருப்பவளைப் போலத் தவித்தாள். பெரிய பூக்குடலையை எடுத்து வைத்தாள். ஈரத் துணியும், பையும் எடுத்துப் போட்டாள். வாழை மட்டைகளை நீரில்நனையப் போட்டாள்.

ஏற்கனவே நனைந்த மட்டைகளை எடுத்துப் போட்டு, கத்தியால் கிழித்தாள். பழகிய கை. தன்னிச்சையாக இயங்கியது. சிந்தாமல் சிதறாமல் உரித்தாள். மயிரிழையாய் நார்கள் மடியில் துவண்டன. அதையும் முடிச்சாக போட்டு நீருக்குள் போட்டாள்.

மறுபடியும்... அடுப்படியிலிருந்து கொண்டே புருஷனைப் பார்த்தாள். நல்ல கறுப்பு, முரட்டு உடம்பு.

தடித்த உதடுகள். உதடுகளின் பருமனை மறைக்கிற கட்டி மீசை. அவன் சிரித்தால், முகத்தில் ஓர் அழகு விரியும். கண்ணில் ஒளி துள்ளும். உள்வேதனையை மறைத்துக் கொண்டு சிரிக்கிற மாதிரியாக பக்குவப்பட்ட ஒரு தோற்றம் தெரியும்.

தோற்றத்திற்குச் சம்பந்தமில்லாத மனசு. ரொம்ப இளகின மனசு. கோழை மனசு. அசட்டு மனசு. அப்புராணி...

இப்படிப்பட்ட அப்புராணியாக யாரும் இருக்க மாட்டார்கள். அதுவும்... இந்தக் கலிகாலத்தில்!

போன மாதம்... அப்படித்தான்,

கடையை பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, பூ மார்க்கெட் போயிருந்தாள். வந்து பார்த்தால்...கடையே காலி. சின்ன மாலை, பெரிய மாலை எல்லாம் குளோஸ். பூப்பந்து கூட ரொம்பக் குறைந்து போயிருந்தது.

பூவாத்தாவுக்குள் பகீர் என்றது.

டப்பாவை திறந்தாள். அவசரமாய் எண்ணிப் பார்த்தாள். அவள் பயந்தபடியே ஆகியிருந்தது. பணம் ரொம்பக் குறைந்திருந்தது. அசல்கூடத் தேறவில்லை. கட்டுக்கூலி, லாபம் எல்லாம் போச்சு, மண்ணாப் போச்சு.

அவளுள் ஆத்திரமும் குழப்பமும் ரௌத்ரமாய் புருஷனைப் பார்த்தாள். பார்வையின் தொனியில் அரண்டு போனான்.

...அதிகாலையில் நகரத்தின் மிக முக்கிய பிரமுகர் பெரிய தொழிலதிபர்.

அருஞ்சுனை நாடாரின் மரணம், அந்த நகரைக் குலுக்கியது. ஏகப்பட்ட பேர் அஞ்சலி செலுத்த மாலை

கேட்டு ஆலாய் பறந்திருக்கிறார்கள். அருஞ்சுனை நாடார் இவனுக்கும் முதலாளி. அவரது நிறுவனங்களில் ஒன்றான பெரிய தீப்பெட்டியாபீஸில் ரெண்டு வருஷம் வேலை பார்த்திருக்கிறான்.

'மோலாளி' செத்துப் போனார் என்ற செய்தியில் இவன் ரொம்ப ஆடிப்போனான். மாலை கேட்டு வந்தவர்களுக்கு எல்லாம் தூக்கி தூக்கி தந்து விட்டான்.

விலையும் சொல்லவில்லை; பேரமுமில்லை அவர்களாக கொடுத்த பணத்தை மட்டும் டப்பாவில் போட்டு வைத்திருந்தான்.

பூவாத்தாவுக்குள் திகுதிகுவென்று எரிந்தது. ''அடப்பாவி மனுசா'' என்று மனசு கிடந்து புலம்பியது.

''இப்படியும் ஒரு மனசரா? இளிச்ச வாய்த்தனமாய் ஏமாந்து போய் இருப்பார்களா? அடக் கொடுமையே''

காலை நீட்ட பொழுதில்லாமல் மடக்கிக் கொண்டே உட்கார்ந்து, இடுப்பொடிய பூக்கட்டியவள். அவள் குலை கொதித்தது.

''இப்படி... எல்லாத்தையும் கரியாக்கித் தொலைச் சுட்டு நிக்கீகளே-உங்களுக்கு அறிவேயில்லியா? சுரணை யில்லியா? நீங்க ஒரு ஆம்பளைதானா? ச்சே.''

சீறினாள். அவள் முகமே ரணகாளியாய் கோரமாய் இருந்தது.

அவன் அலுங்காமல் நின்றான்.

இந்த கதைதான் எப்பவும். வெள்ளை மனசில் காரியம் செய்து, ஏமாந்துபோய் நிற்பான். அதைவிடக் கொடுமை, ஏமாந்து போனதை உணரவே மாட்டான்.

'கடையோ, கருவூலமோ' என்று கருதுகிற அக்கறை இருக்காது. லௌகீக வாழ்வின் மேடுபள்ளம் தெரியாது.

பஸ் ஸ்டாண்டு பக்கத்தில் மெயின் வீதியின் ஓரத்தில் வரிசையாக பூக்கடைகள். பெரிய கடையல்ல. ரோட்டின் விளிம்பில் ஒரு மேஜை. பின்னால் இரண்டு மரப்பெட்டி. இரண்டு குச்சிகளை ஊன்றி, அதன் மேல் ஒரே ஒரு கிடுகு. அவ்வளவுதான் கடை.

மாமூல் வாங்க மாசாமாசம் காக்கி உடுப்பு வரும். பழக்கமான ஆள்தான். அவரைக் கண்டுகூட இவன் பதறுவான். கைகால் எல்லாம் நடுங்குவான். வேட்டியைக் கூட சில சமயம் நனைத்துக் கொள்வான். பூவாத்தா வந்தால் தான் அவனுக்கு உயிரே வரும். மூச்சு விடுவான்.

உறங்குகிற இந்த மனிதரை இலேசில் எழுப்பிவிட முடியாது. கும்பகர்ணனை எழுப்புகிற மாதிரித்தான். கத்திக் கத்தி தொண்டைத் தண்ணீர் வற்றிப்போகும்!

கடை திறக்கப் போகச் சொன்னால்-ஏகமாய் 'பிகு' பண்ணுவான். கிராக்கி பண்ணுவான். 'ஐயா, ராசா' என்று நாடியைப் பிடித்து, கெஞ்சிக் கூத்தாடி, தள்ளி விடுவதற்குள்... ஆத்தாடி அம்மாடி என்றாகிப்போகும்.

மார்க்கெட்டுக்குள் நுழைந்தாள் பூவாத்தா. அங்கே கமிஷன் கடையில் ஏலம் துவங்கிவிட்டது. ஏகப்பட்ட ஆட்கள். பூ வாங்க காத்திருக்கிற ஏலம் கேட்கிற ஆட்கள்.

அரும்புகள் யாவும் நானூறு நானூறு கிராமாக கூறு கட்டி ஏலம் விடப்பட்டது.

''சீவலப்பேரி மல்லி அரும்பு... அம்பது பைசா...''

''ஒன்னேகால்''

''ஒன்னேகால்''

''ஒன்னேமுக்கா''

''ஒன்னேமுக்கா''

''ரெண்டரை''

''ரெண்டரை''

பூ வாங்க வந்தவர்கள் கேட்கிற ஏலத் தொகையை கமிஷன் கடைக்காரர் எதிரொலிக்கிறார். ஒரே கூச்சல், கிண்டல், கேலி, போட்டி. பூவின் தரம் பற்றிய அபிப்பிராயங்கள்... காலடியில் நசுங்கிக் கிடக்கிற பூக்கள். மூடை மூடையாய் கேந்திப்பூக்கள், குவிந்து கிடக்கிற ரோஜாப் பூக்கள்...

பூவின் பவித்திரமும் கவித்துவமும் காணாமல்போய், ஏலப்பொருளாய், கேலிப் பண்டமாய்...

கூட்டம் நெரிபட்டது. 'நாமுந்தி நீ முந்தி' என்று ஏலம் கேட்கிற கூவல். ஏலம் முடிந்த பூவை அள்ளிக் கொண்டு கணக்கு முடிக்கிற பேரம், இரைச்சல். சந்தைக் கடை இரைச்சல்.

கையில் உள்ள பணத்திற்கேற்ப ஏலம் கேட்டு, பூ வாங்கிக் கொண்டாள். அப்புறம் கேந்தி, ரோஜா சேவல் கொண்டை, மரிக்கொழுந்து, எல்லாவற்றையும் எடை போட்டு வாங்கிக் கொண்டாள்.

பூச்சந்தைக் கூட்டத்திலிருந்து பிதுங்கிக் கொண்டு பூவாத்தா வெளியே வரும்போது, வியர்வையில் 'தொப், தொப்'பென்று நனைந்திருந்தாள்.

நீரில் நனைத்த அரும்பு, துணிப் பொட்டலத்தில், கசிந்து வழிகிற நீர், செவியோரங்களைக் கடந்து புஜத்தில் சொட்டுப் போட்டது.

பூச்சுமை தாளாமல் பூவாத்தா திணறினாள்.

மணி எட்டரை இருக்கும். நகரம் ரொம்பச் சுறு சுறுப்பாகி விட்டது. யந்திர கதியில் பரபரத்தது. அவளும் யந்திரமாய் நடந்தாள்.

'...இன்னிக்கு மட்டும் எரநூத்தி நாப்பது ரூபாய்க்கு பூ வாங்கியிருக்கு. நமக்கும் அரைக்குறுக்கம் புஞ்சை இருந்திருந்தா... இம்புட்டு ரூபாயும் மிச்சமாகும். பாடுபட்டு வெளையவச்ச பூவைமட்டும் மாலைகட்டி வித்து, துட்டாக்கிடலாம்!

புஞ்சையில்லே. துட்டு போட்டு சரக்கு வாங்கி, இடுப்பொடிய உக்காந்து, கண் பூத்துப்போற அளவுக்கு உத்து உத்துப் பாத்து... பூக்கட்டி வித்துப் பொழைக்குற ஏவாரப் பொழப்பாய்ப் போச்சு. நாலு சில்லறை மிஞ்சுறதும் உண்டு. இல்லாமப் போறதும் உண்டு.

சொந்த பந்தம் ஒட்டுதலும் இல்லை. நாதியற்ற நிலைமை. தாய் தகப்பனை உதறிவிட்டு வந்தவள், பூவாத்தா.

அதுவும் இந்த ராசாதி ராசாவுக்காக!

இவனது இரக்க சுபாவம்தான் அவளது மனசை முதலில் ஈர்த்தது. இரும்பு உடம்புக்குள் இருந்த பூப் போன்ற மிருதுவான மனசு, பூவாத்தாவின் பூ நெஞ்சுக்குள் வேர்விட்டது.

தெருவில் பூ விற்றுக்கொண்டு திரிந்த கன்னி மனசு. கள்ளமற்ற அந்த மனிதனின் வெள்ளையான சிரிப்பால் சூறையாடப்பட்டது.

வாடுவதற்குள் சூடினால்தானே பூ பூவாக பயன்படும். அதனால் தயங்கித் தயங்கி அய்யாவிடம் வாயைத் திறந்தாள். அவரோ வெகுண்டு சீறினார். முரட்டுத்தனமாய் பூக்கூடையை ஏற்றினார்.

நாதியத்த பயல், உப்பு கல்லுக்குக் கூட பெறாத வெறும் பயல்... உருப்படி வழியறியாத குருட்டுப் பயல்.

இதுதான் இவனைப் பற்றிய அய்யாவின் கணிப்பு.

''பூ விக்குறதுக்கு... தெருவுல திரிஞ்சதுலே, ஒம் மனசே நாறிபோச்சு. பேசாம வீட்லே கிட.''

அய்யாவின் கட்டளை அவளை உசுப்பியது. உழைப்பும். தொழில் அறிவும் அவளை தைரியப்படுத்தியது. தீயின் பலத்தோடு புறப்பட்டாள்.

''நாதியத்தவனோட நாதியத்த ஒருத்தி சேர்ந்துட்டா நாங்க தனிமரமில்லையே, தோப்பு மரங்கதானே? பாருங்க அய்யா, நா உப்புக்கல்லை வைரக்கல்லா ஆக்கிக் காட்டுறேனா... இல்லியான்னு பாருங்க''

என்று வீராவேசமாய் சவால் விட்டுவிட்டு வந்தாள், இவனுடன். வந்து, வருஷம் மூன்றாகிப்போயிற்று. இன்னும் இவன் சுக்கான் கல்லாகக் கூட மாறவில்லை.

அதே இரக்கம். அதே அப்பாவித்தனம். அதே நடுக்கம். அதே, அதே, எல்லாம் 'அதே'தான்.

அன்பில் கரைத்துப் பார்த்தாள். ஆசை மோகத்தில் நனைத்தும் பார்த்தாள். தலையணை மந்திரத்தில் புரட்டி

பார்த்தாள். கூடை கூடையாக பூவையள்ளிக் கொட்டுகிற மாதிரி அறிவுரை சொல்லிப் பார்த்தாள். அதட்டி மிரட்டியும் பார்த்துவிட்டாள். அலுத்துப் போனதுதான் மிச்சம்.

மலையைக்கூட நகர்த்திவிடலாம்; இந்த மனிதரை அசைக்கவே முடியலியே...

உருப்படவே மாட்டாரா? அய்யா சொன்ன சொல், மெய்யாகிவிடுமா? உருட்டி வைத்த பொம்மை மாதிரித் தான் இருப்பாரா? சுய அறிவு வராதா? சுரணை வரவே வராதா? தொழில் சூட்சுமம் புரியாதா? துட்டோட அருமை புரியவே புரியாதா?

மாறவே மாட்டாரா? வாழ்க்கையே நஷ்டமாகி விடுமா? மழையில் நனைந்த கேந்திப்பூவாய்...குப்பைக்கு போய்விடுமா?

நினைக்க நினைக்க அவளுள் கலக்கம் மலைப்பு. அயற்சி...

மனசுக்குள் வந்து நிற்கிற அய்யா, 'என்னாச்சு, நீ விட்ட சவால்' என்று எகத்தாளமாய் கேட்டு கெக்கேலி பண்ணுகிறார்.

மெயின் வீதியில் ஒரு திருப்பத்தைக் கடந்தாள். இன்னும் பஸ் நிலையத்திற்குக் கொஞ்ச தூரம்தான். அங்குதான் வீதியின் விளிம்பில் பூக்கடைகள், அதில் இவளது கடையும் உண்டு, பிளாட் பாரக் கடை. அடிக்கடி போலீஸ் வந்து மிரட்டுல். ஆக்கிரமிப்பால் போக்குவரத்தே முடங்கிப் போவதாகக் கூச்சல் போடும். லத்தியால் மேஜையில் 'டம்ம்' மென்று அடிக்கும். கொடுப்பதைக் கொடுத்து விட்டால்... பஸ் போக்குவரத்து எல்லாம் ஒழுங்காகிவிடும்.

இதுவேறு... நிரந்தரத் தொல்லை. அடிக்கடி இன்ஸ்பெக்டர் மாறுவார். புதிதாக ஒருவர் வருவார். வந்தால் கடையை பந்தாடுவார்கள். ஏகக் கெடுபிடியாயிருக்கும்.

அப்போதெல்லாம் 'சாலையோர வியாபாரிகள் சங்கம்' தான் வந்து கவசமாக இருக்கும். ஒற்றுமையின் பலத்தில் பாதுகாக்கும்.

'சாலையோர வியாபாரிகள் சங்க'க் கூட்டத்துக்கு அவன்தான் போவது வழக்கம். போய் என்ன பிரயோசனம்? நாலு வார்த்தை பேசினால்தானே!

அன்று ராத்திரி சாப்பிட்டு முடித்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கொட்டாவி விட்டான். படுத்து உறங்கிப் போனான். இவள்தான் ஒற்றையில் உட்கார்ந்து மாலை கட்டிக் கொண்டிருந்தாள். விரல்கள் யந்திர கதியில் 'பொடு, பொடு'வென்று இயங்கின. நேரம் போய்க் கொண்டிருந்தது.

அடிக்கடி கால் மரத்துப் போயிற்று. மரத்துப் போகப் போக காலை மாற்றி மாற்றி மடக்கிப் போட்டுக் கொண்டாள். இடுப்பு கடுத்தது.

இரண்டாவது ஷோ விடுகிற நேரம். உறக்கம் அப்பிக் கொண்டு வந்தது. நரம்பு முழுக்க அயற்சி. கண்ணை மூடினாள்... இமைக்குள் கலர் கலராய் ரேகைகள்.

சமாளிக்க முடியவில்லை. எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு படுத்தவளை ஆயாசம் அமுக்கியது.

படுத்தவுடன் அவளது வயிற்றின் குறுக்காக வந்து விழுந்தது அவன் கை. கைரோமங்களின் வருடலில் அவள்

தேகமே புல்லரித்தது, கழுத்தடியில் அவனது சூடான சுவாசம். முதுகில் வந்து உரசுகிற அவனது தேகச்சூடு.

'நேரம் கெட்ட நேரத்தில் இந்த மனிதருக்கு...இந்த நினைப்பா?' அலுத்துக்கிடந்த பூவாத்தாவுக்குள் மண்டிக் கொண்டு வந்த எரிச்சல்.

'என்ன...?'இறுகலான அவளது குரல்.

''சும்மாதா.''

''சும்மான்னா,''

''ஒன்னுமில்லே,''

அவனது கை இடம்மாறி, தடுமாறிக் கொண்டிருந்தது. அந்தக் கையை வெறுப்புடன் தட்டிவிட்டாள்.

''இதுக்கு மட்டும் பொண்டாட்டி வேணுமாக்கும்?''

''இதுக்கு மட்டுமா? எதுக்குமே எனக்கு பூவாத்தா தான். நீ தான் எனக்கு சகலமும்.''

''பேச்சுலே ஒன்னும் கொறைச்சலில்லே. எம்மேல உங்களுக்கு அக்கறையேயில்லே.''

''எனக்கா...இல்லே?''

''ஆமா''

''எப்படிச் சொல்றே?''

''நா குளிச்சு எம்புட்டு நாளாச்சு? ஒரு நாளாச்சும் ஏன்னு கேட்டதுண்டா?''

''நானே ஒன்னைக் குளிப்பாட்டி விடணுமா?''

''நா... அந்தக் குளிப்பைச் சொல்லலை''

''பெறகு? எந்தக் குளிப்பு?''

''அந்தக் குளிப்பு.''

மன ஆழத்தின் ரகசியமாய் அவளது குரல், அந்தரங்கமாய் ஒலித்தது. கிசுகிசுத்து நழுவியது.

அவனது குரலிலும் ஓர் உணர்வு மாற்றம்.

''எம்புட்டு நாளாச்சு?''

''நாளு தப்பிப்போய்... இன்னையோட முப்பத்தேழு நாளாகுது''

''அப்ப்... படியா?''

''ஆமா. மூணு வருஷமா ரெண்டு பேருமா வாழ்றோம். நாளும் பொழுதும் நகர்றதே பெரும்பாடா இருக்கு. ஒரு புள்ளையும் பெறந்துச்சின்னா... அதை வச்சு எப்படிக் காப்பாத்தப் போறோம்? நம்ம கையிலே ஐவேசு ஒண்ணுமில்லே. எப்படிப் பாடுபடப் போறோம்? ஒரு நோய்நொடி வந்தா எப்படிச் சமாளிக்கப் போறோம்? நெனைச்சாலே... படபடப்பா இருக்கு. நீங்க என்ன டான்னா... வெளையாட்டுப் புள்ளை மாதிரி பொறுப் பில்லாம இருக்கீக...''

கவலைப்பட்ட பாவனையில் பேசினாலும், பூவாத்தாவுக்குள் ஒரு பூரிப்புதான். ஓர் உயிரை சுமக்கிற மகிழ்ச்சியின் ததும்பல். ஒரு சிசுவைப் படைக்கும் தாய்மைப் பூரணத்தை எட்டப்போகிற சந்தோஷம். பனிச்சுமை தாங்காத பூவாக அவள் குலுங்கினாள்.

'கர்ப்பம்' என்றவுடன் புருஷன் குதிக்கப் போகிறான்; சிறுபிள்ளை போல் கும்மாளம் போடப் போகிறான்;

தன்னைக் கட்டிப்பிடித்து, சந்தோஷம் தாளாமல் கொண்டாடப் போகிறான்...

ஆவல் பரபரப்பில் காத்துக் கிடந்தாள். ஆனால், அவன் செயலற்றுப் போனான். ஆழ்ந்து பெருமூச்சு விட்டான். மேலே போட்டிருந்த காலை எடுத்துக் கொண்டான். சூடான சுவாசமில்லை. மல்லாந்து படுத்துக் கொண்டான். அவன் தேகச்சூடு விலகிப் போயிருந்தது.

இடையில் வந்து உட்கார்ந்து கொண்ட இடை வெளியின் தகிப்பை அவள் மனசுக்குள் உணர்ந்தாள்.

''என்ன... பேச்சு மூச்சையே காணோம்?'' திரும்பாமலேயே குறும்பாகக் கேட்டாள்.

''ஒண்ணுமில்லே.'' அடர்த்தியான அவனது குரல். யோசனையில் மூழ்கி, அமைதியில் அழுத்தமாகிவிட்ட குரல்.

''என்ன பூவாத்தா, கடைக்குப் போறீயா?'' வேற்றுக் குரல் வெளி உலகமாய் வந்து முட்டியது. உள் உலகத்திலிருந்து மீண்டு வந்தாள் பூவாத்தா. எதிரில்...

சாலையோர வியாபாரிகள் சங்கத் தலைவர், சொர்ணமணி.

''என்னண்ணே...இங்குட்டு?''

''பிரஸ்ஸுக்குப் போயிட்டு வாரேன். ஆமா, ஓம் புருஷனுக்கு என்னாச்சு? ஆளே மாறிப் போய்ட்டா னேம்மா...''

''என்னண்ணே சொல்லுதீக?'' பதறிப் போனாள்.

சொர்ணமணி சிரித்தாள்.

''முந்தியெல்லாம் சங்கக் கூட்டத்துக்கு வந்தான்னா பூப்போல இருந்துட்டுப் போயிடுவான். இருக்குற இடமே தெரியாது. நேத்து என்னடான்னா...!''

''ம்... ஏதாச்சும் ரகளை பண்ணிட்டாரா?''

''அதெல்லாமில்லேம்மா. நேத்துக் கூட்டத்துலே அவன் சத்தந்தான் தூக்கலா நின்னுச்சு. நெடுஞ்சாலைத்துறை மூணுதடவை நோட்டீஸ் அனுப்பியிருக்கே. அதைப்பத்தி கொதிச்சுப் பேசினான். ரெண்டுல ஒன்னு பார்த்தே தீரணும்னு ஒத்தைக் கால்லே நின்னான்...''

''அப்புடியா?''

''ஆமா பூவாத்தா பயந்து போய் கிடந்த அவன், இப்ப ரொம்பத் தெளிவா பேசுறான். என்னமோ-மாயம் நடந்திருக்கு''

அவளுக்குள் ததும்பிய பூரிப்பு. காலடி முழக்க பூத்தூவிய மாதிரியோர் உணர்வு. அவள் அவள் அப்படியே குளிர்ந்து போனாள்.

எக்காளச் சிரிப்பு சிரித்த அய்யாவின் உதடுகள் சுருங்கி ஒடுங்கிப் போகிற மாதிரியோர் பிரமை. மகிழ்ச்சியில் நனைந்து போன மனசு.

அந்த மகிழச்சிக்குள்ளும் ஒரு சின்ன நெருடல். ஒரு குழப்பம். அது என்ன மாயம்? ஆளைத் தலைகீழாய் மாற்றிய அந்த மாயம்தான் என்ன?

ஒரு இழவும் புரியவில்லை.

நிமிர்ந்து நடைபோட்டாள்.

அதோ கடை. கடையில் தொங்குகிற இரண்டு பெரிய மாலைகள். கடையின் முன்னால் ஒருவர்.

மாலையை காட்டி ஏதோ பேசுகிறார்.

அந்த மாலையை இருபத்தைந்து ரூபாய்க்கு விற்க வேண்டும். இருபதுக்கு குறைவாக விற்றால் நட்டம்தான்.

சத்தமில்லாமல் போய் கிடுகு மறைவில் நின்று கொண்டாள்.

''என்னய்யா, இந்த மாலை முப்பது ரூபாய்? அநியாயமா இருக்கே.''

''அண்ணாச்சி, நம்மகிட்டே 'காமா, சோமா' அய்ட்டமே கிடையாது. பாருங்க, மாலை பூராவும் மல்லியும், ரோசாவுந்தான். வேற வாசனையில்லாத பூவே கிடையாது.''

''அதெல்லாம் சரிதான். கொஞ்சம் கொறைச்சுக்கங்க'

''கொறைக்க இடமேயில்லே, இந்த வெலையும் ஒங்க மொத்துக்காகத்தான்!''

''சொன்னா-சொன்ன வெலைதானா? ஒரு சொல் கடையா? கொஞ்சம் கொறைச்சுக்கங்க''

''ம்ஹூம் இடமேயில்லேண்ணாச்சி''

''இப்படிச் சொன்னா எப்படி?''

''என்ன செய்யறது? பூ வெல அப்படியிருக்கு, எட வாடகை ஆளைத் தூக்குது. இதுலே ரெண்டு ரூவா பாத்துத்தான்-நாங்க புள்ளைக் குட்டியை காப்பாத்த வேண்டியிருக்கு.''

சரி... உங்க மனசு. இந்த மாலையை எடுங்க. நல்லா எலைவைச்சு கட்டிக் குடுங்க''

''ம்-அழகா கட்டிருவம்.''

அவன் மாலையை பார்சல் பண்ண, அந்த ஆள் முப்பது ரூபாயை மேஜை மேல் வைத்தார்.

''கடைக்கார அண்ணாச்சுக்கு புள்ளைக எத்தனை?''

''ஒரு புள்ளை, இன்னும் ஏழெட்டு மாசத்துலே பெறக்கப்போகுது''

அந்த ஆளுக்கு சிரிப்பாணி பொத்துக் கொண்டு வந்தது.

''அடேங்கப்பா... பெறக்கப்போற புள்ளைக்கு இப்பவே சம்பாதிக்கீகளாக்கும்?''

''என்ன செய்யச் சொல்லுதீக? நம்ம பொழைப்பும் அம்புட்டுக்குள்ளே தானே இருக்கு''

அவர் புன்சிரிப்பு உதட்டில் இருக்க, மாலையை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். மிச்சமிருந்த ஒரு மாலையை அவன் பார்த்தான்.

பூவாத்தாவுக்குள் மகிழ்ச்சித் திணறல். 'அட, இந்த மனிதருக்குள் இப்படி யொரு சாமர்த்தியமா? இத்தனை சாமர்த்தியத்திற்கும் மூலம் யார்? அந்த மாயம், என் கர்ப்பம் தானா? என் பிள்ளைதானா?

என் வயிற்றுப்பிள்ளைதான், இந்த அப்பிராணி மனிதரை ஒரு பொறுப்புள்ள அப்பனாக வார்த்துவிட்டதா...!

கடைக்குள் வந்தாள். அவன் ஓடிவந்து அவளது பூச்சுமையை இறக்கி வைத்தான். அவள் மனச்சுமையை இறக்கி வைத்தான். அவள் மனச்சுமையையும்தான்!

*- 1992 ஜூன் 'வாசுகி' முதற் பரிசுக் கதை*

# பாட்டையா

ஏழாங்கிளாஸ் பிள்ளைகளுக்கு சயன்ஸ் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது-என்னவோ தெரிய வில்லை- அரிஞ்சர் பாட்டையா ஞாபகம் வந்து உறுத்தியது. அவர் சாகக் கிடக்கிறாராம். ஏற்கனவே ரெண்டு மூன்று தடவைகள் பார்த்து விட்டு கொஞ்சம் பணம் தந்து விட்டு வந்தேன். இப்போது, இழுத்துக் கொண்டு கிடக்கிறதாம். பார்த்துவிட்டு வந்தால் நல்லது.

ஆவணி மாசம். காற்று நின்று போயிற்று. மழைக் கோப்பு முகம் காட்டி விட்டது. வெயில் பழுத்து அடிக்கிறது உக்ரமான வெயில். சுள்ளென்று உறைக்கிறது. உள்ளுக்குள் ஒருவித படபடப்பையும், இறுக்கத்தையும் ஏற்படுத்துகிறது. வெக்கையும் புழுக்கமுமாய் உடம்பு அவிந்து மூச்சுத் திணறுகிறது.

மேகம் சினந்து கனக்கிறது, அப்புறம் விலகிப் பிரிகிறது. வேப்பமர நிழலில்தான் ஏழாங்கிளாஸ். மைனானக்கள் சப்பிப் போடுகிற வேப்பம் பழங்கள் ‘சொத், சொத்’தென்று மஞ்சள் சளியாய் வந்து விழுகின்றன. நோட்டில் விழுந்து விடுமோ என்ற பயத்திலேயே பிள்ளைகள்.

எனக்கே கூட மைனாக்களும். காக்கைகளும் பெரும் தொல்லையாகத்தான் இருக்கின்றன. பாடம் நடத்த விடாமல் மனசைக் கலைக்கின்றன.

அதுகளின் சண்டைகளும், சச்சரவுகளும், மரத்தின் அடர்த்தியான இலைகளுக்குள்ளேயே அதுகள் பறந்து பறந்து ஓடிப் பிடித்து விளையாடுவதும்... அவ்வப்போது வெள்ளைப் பிசுக்காக எச்சங்களை போடுவதும்... ச்சே!

பாவம் பிள்ளைகள், பாடத்தைக் கேட்க முடியாமல், கவனம் குவியவிடாமல்-அதுகள் மனசும் கலைகிறது. வெட்ட வெளி ஊரின் மையம், தெருவில் போகிறவர்கள், வருகிறவர்கள், முன்னங்கால்கள் இரண்டையும் சேர்ந்தாற் போல தூக்கி 'தக்கு, தக்'கென்று தவ்வித்தவ்வி நடக்கிற கழுதைகள்.

கோழியைத் துரத்திக் கூச்சலிட்டு, புழுதி கிளப்புகிற சேவல்.

தமது இருப்பை உணர்ந்து கொள்வதற்காக ஓடி ஓடிக் குரைத்துக் கொள்கிற செவலை நாயும், கறுப்பு நாயும்.

எதிர்த்தாற் போலிக்கிற கடை. கடைசியில் வரிசையாகத் தொங்குகிற கலர் கலரான மிட்டாய்கள். லட்டுருண்டைகள், பலகாரங்கள்,

நான் கத்திக் கரைவதைப் பிள்ளைகள் கேட்கவா முடியும்? முழுசாக உள்வாங்கவா முடியும்? அதற்கான சூழலா, இது? கொடுமை!

''விஞ்ஞானத்தின் தாய், கற்பனை.'' நேற்று நான் படித்த லைப்ரரி புத்தகத்திலிருந்து மனசுக்குள் வந்து சொருகிக் கொண்ட வரி. ரொம்ப நேரம் அதைச் சுற்றியே யோசித்தேன்.

யோசிக்க யோசிக்க, உள்ளுக்குள் அலைஅலையாக விரிந்து, பரவி வியாபிக்கிற சிந்தனைப் படிவங்கள். என்னை நினைத்து நானே பிரமிக்க-

அதைத்தான் கிளாஸில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். கற்பனைக்கும் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளுக்கும் உள்ள உறவைப் பற்றி-கற்பனாசக்தியின் பயன்பாடு பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

கதைகளின் கற்பனையாக வந்தது புஷ்பக விமானம். இப்போது நிஜமாக வந்து விட்ட ஆகாய விமானம் பாரதக்கதையில் வந்த பிரம்மாஸ்திரம் இப்போது கண்டம் விட்டு கண்டம் பாய்கிற ஏவுகணை,

இப்படிப் புதிது புதிதாகக் கற்பனைகளைப் படைத்து வழங்குவதில் சிறுவர்களுக்கான கற்பனைக் கதைகள் வகிக்கிற பங்கு பற்றிச் சொல்லுகிற போதுதான்-

அரிஞ்சர் பாட்டையா ஞாபகம் மனசுக்குள் வந்து போயிற்று.

அதென்ன... அரிஞ்சர் பாட்டையா?

நான் சின்னப் பிள்ளையாக இருந்தபோது அவரிடம் கதைகேட்டு வளர்ந்தவன். எங்க அப்பாவும் அவரிடம் பையனாக நின்று கதை கேட்டவர்தான். அவருக்கும் அவர் ‘பாட்டையா’தான்.

பாட்டையா என்றால், படு கிழடு, பழுத்த கிழடு. பாட்டியின் அய்யா என்று அர்த்தமுள்ள ஒற்றை வார்த்தை.

அதென்ன, அரிஞ்சர்? அப்படியொரு பெயரா? இப்படியும் பெயர் வைப்பார்களா?

உலகத்திலுள்ள சகல பெயர்களையும் அலசி ஆராய்ந்தால்... ஆண்டவன் வடிவம் இருக்கும். ஆண்டவன் வடிவப் பெயர்களையும் தோண்டித்துருவினால்... இயற்கையின் வடிவமும் செயலும் இருக்கும்.

இப்படி எந்த அர்த்தமுமில்லாமல் ஒரு பெயரா? அதென்ன? அரிஞ்சர்? சிறுபிள்ளையாக இருந்து கொஞ்சம் முற்றியவுடனேயே இந்த யோசனை முளை விட்டு விட்டது, முண்டியது. யாரிடமும் கேட்கவும் தோன்றவில்லை.

'அரிஞ்சர் பாட்டையா' என்று யார் உச்சரித்தாலும் சரி, எனக்குள் அரிக்கேன்லைட்டின் வடிவம்தான் தோன்றி மறையும். எழுத்துக்களில் உள்ள 'அரி' என்ற உச்சரிப்பு ஒற்றுமைதான் காரணமா?

இல்லை, தோற்றமே ஏறக்குறைய அப்படித்தான். நல்ல கறுப்பு, உடம்பெல்லாம் ரோமம். பொக்கை வாய். பொடிக்கண்.

அவர் உட்கார்ந்திருக்கும் போது பார்த்தால்... அரிக்கன் லைட் மாதிரியான சாயல் தெரியும்.

ரொம்ப நாள் யோசனைக்குப் பிறகு

'அந்தா, இந்தா' என்று பாவலா காட்டிக் கொண்டிருந்த அந்தப் பெயர் விஷயம் ஒரு வழியாக எனக்குள் பிடிபட்டது.

'ஆங்... அப்படித்தானிருக்கும்' என்று நானே உறுதிப்படுத்திக் கொண்டேன்.

'அறிஞர்'என்ற பெயராக இருந்திருக்குமோ! அந்த அறிஞரைத்தான் கொறித்து கொறித்து உச்சரித்து 'அரிஞ்சர்' ஆக்கியிருப்பார்களோ... நம்ம ஜனங்கள்.

அறிஞர் என்று தாய் தகப்பன் பெயர் வைப்பார்களா? அறிவழகன், அறிவுமதி, அறிவரசன் என்றெல்லாம் உண்டு தான். அப்பவும் அறிஞர் என்றா பெயர் வைப்பார்கள்?

ஒரு வேளை... பட்டப் பெயராக இருக்குமோ...

இட்டுக்கட்டி பாட்டு படிக்கிற பாட்டையா, இம்புட்டுத்தான் என்ற எல்லையே கிடையாது. அம்புட்டுக் கதைகள் போடுவார்.

சில சமயம்... குழந்தைகள் நச்சரிப்பு தாங்காது. மனசிலும் கதை பிடிபடாது. எந்த யோசனையும் இல்லாமல் வெறுமனே ''ஒரு ஊருலே ஒரு ராஜா இருந்தாரு'' என்று துவங்கிவிடுவார். அப்புறம் சொல்லச் சொல்ல... சிலந்திப் பூச்சி வாய்ப்பசை மாதிரி கதை வந்து கொண்டேயிருக்கும்.

முடிக்கும் போதுதான் அவரே உணர்வார், 'இது ஒரு புதியகதை' என்று.

இப்படித் திறமைகள் உள்ளவர் என்பதால், 'அறிஞர்' என்று பட்டப் பெயர் வைத்து... அதுவே நிலைத்து, மருவி இப்படி அரிஞ்சர் ஆகியிருக்குமோ? இருக்கலாம். அப்படியும் கிராமத்தில் நிறைய உண்டுதான்.

மறுநாளுக்கு மறுநாள், ஞாயிற்றுக்கிழமை.

எழுந்து முகம் கழுவிவிட்டு வெளியே வந்தவுடன், தெருவில் வந்து மோதிய செய்தி; ''அரிஞ்சர் பாட்டையா மண்டையை போட்டுட்டார்.''

சாம்பல் நிற வெளிச்சம் இருக்கிற காலைப் பொழுது டீக்கடையில் ஏகமாய்க் கூட்டம். சாரல் வாடை மெல்லிய கூதலாக அடிக்கிறது.

''ஒரு டீ போடுப்பா'' என்று சொல்லிவிட்டு ஒரு கல்லில் உட்கார்ந்தேன். டீக் கடைக்குள் உட்கார்ந்து ரெண்டாவது டீ, மூன்றாவது டீ அடிப்பவர்களெல்லாம் 'கசா முசா'வென்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சப்ஜெக்ட்: 'பாட்டையா'தான்.

*''மூணுநாளா இழுத்துக்கிட்டு கிடந்துச்சு. இன்னிக்குக் காலையிலே நாலரை மணிக்குத்தான் உசுர் போச்சு.''*

*''ஆளு ரொம்ப மெலிஞ்சுப் போயிட்டாரு. வெறும் எலும்பா கிடந்தாரு. சட்டடியா படுத்துட்டாரு. நெஞ்சுக் குழியிலே மட்டும் லேசா துடிச்சிக்கிட்டிருந்துச்சு.''*

*''நல்ல வலுத்த கட்டை. பழைய காலத்துக் கட்டை. காந்தி காலத்து விஷயம். போஸ் காலத்துச் சமாசாரம் எல்லாம் சொல்லுவாரு. வயசு நூறை அடுத்து இருக்கும்.''*

*''மனுசன் கதை சொன்னாருன்னா... என்னமாய்ச் சொல்லுவாரு! கண்ணு முன்னாலே சினிமா மாதிரி ஓடுமே!''*

*''அவரு போடுற அழிப்பான் கதையை (விடிகதை) எந்தக் கொம்பாதி கொம்பனும் அழிச்சிட முடியாதே. அம்புட்டு நுட்பமா போடுவாரே.''*

*''ஊர்லே யார் வீட்லே கல்யாணம்னாலும், இவரு தானே வாழ்த்துப்பாட்டு படிப்பாரு. அந்நேரத்துக்கு அந்நேரம் இட்டுக்கட்டி பொருத்தமாய் படிச்சிருவாரே.''*

*''அந்தப் பாட்டுலேயும் என்னமாய்க் கேலி பண்ணு வாரு. கேலின்னே தெரியாது. யோசிச்சிப் பார்த்தாத்தான் கேலிங்கறது, முள்ளுமாதிரி நறுக்குன்னு குத்தும்.''*

*''அப்படித்தான் ஏங் கல்யாணத்துலே பாட்டு படிச்சாரு.*

'அயிரை மீனு கூடை தூக்கி
அய்யமாரு தெருவுலே போய்
அருமையாக ஏவாரம் பண்ணுவாரு,
அள்ளி அள்ளி லாபம் குவிப்பாரு.

அழகு சீமை ராசாவாம்-எங்க
ஆசைச் சீமை மாப்பிள்ளையாம்.''

டீக்கடைக்குள் ஒரே சிரிப்பாணிச் சத்தம் அந்தக் காலை நேரத்துச் சூழலுக்குப் பொருந்தாமல், வெடிச் சிரிப்பு, சரவெடி விடாமல் வெடிக்கிற மாதிரி.

என்னால் இதில் கலந்து கொள்ள முடியவில்லை. எரிச்சலாகக் கூட இருந்தது.

பாட்டையா செத்துப் போனார் என்ற நிஜம், ஒரு கனத்த சோகமாய் மனசை அமுத்துகிறது. ஆழ் மனசில் உறைந்து கிடந்த ஏதேதோ ஞாபகங்களைக் கிளறி விடுகிறது. எனது பால்ய நாட்கள்...

தாய்ப் பாலைப் போல பாட்டையாவின் கதைப் பாலை ஞானப் பாலாகக் குடித்து, ரசித்து, லயித்துக் கிடந்த நாட்கள். தேனில் விழுந்த ஈயைப் போல எழ முடியாமல் மயங்கித் திளைத்த நாட்கள்.

அறிஞர் பாட்டையா எனக்குச் சொந்தமில்லை. நெருங்கிய உறவுமில்லை. ஆனால் அவரது சாவு, என் மனசை ரொம்பப் பாதிக்கிறது. என் சொந்தத் தாத்தாவின் சாவு கூட என்னுள் இத்தனை சலனத்தை ஏற்படுத்தவில்லை. எதனால் இப்படி? எப்படி இது?

அவர்தான் எனக்கு ஞானத்தந்தையா? என் அரும்புப் பருவத்து மனசைச் செதுக்கிய ஆசானா? ம் ஹ்ூம், அதுக்கும் மேலே.

பனியனுக்குமேல் ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு, பாட்டையா வீட்டுப் பக்கம் போனேன். இழவு வீட்டுக்குரிய அடையாளங்கள்.

சின்னப் பந்தல், பந்தலின் அடிவயிற்றில் விரித்துக் கட்டப்பட்ட வெள்ளைத் துணி. அதற்குள் மாலையும் பூச்சரமும்.

வீட்டுக்கு எதிரில், 'அங்கே, இங்கே' என்று சிதறிச் சிதறி உட்கார்ந்திருக்கிற கிராமத்து ஜனங்கள் திண்ணையில் நாட்டாண்மை முன்னால் ஒரு நார்ப் பெட்டி. அதில், வெற்றிலைக்கட்டு, பாக்கு, சுண்ணாம்பு.

வழக்கம் போல்... இந்த ஆட்களோடு சேர்ந்து உட்கார மனசில்லை. உட்கார்வதற்கு முன் பாட்டையாவைப் பார்க்கணும். கண்ணாரப் பார்க்கணும். மனசு கரையப் பார்க்கணும். உள்மனசு குவிந்து, கும்பிடனும்.

மளமளவென்று வீட்டுக்குள் நுழைந்தேன்.

பாட்டையாவைச் சுவரோரத்தில் நாற்காலி போட்டு அதில் சாத்தி வைத்திருந்தார்கள். நாடிக்கட்டி போட்டிருந்தது. நெற்றியில் பொட்டாக ஐம்பது பைசா நாணயம் பாதத்துக்கு ஒரு பலகை வைத்து, கால் கட்டை விரல் இரண்டையும் துணியால் கட்டியிருந்தனர்.

வற்றி உலர்ந்து ஒடுங்கிப் போன நெஞ் செலும்பு. அவற்றை மறைக்க முடியாத மெல்லியதுணியாகக் கருப்புத் தோல். நிறைய ரோமங்கள். முடிவேயில்லாமல் வண்டி வண்டியாய்க் கதை போட்ட வாயில், சிவப்பாக எதையோ வைத்திருந்தார்கள்.

சுற்றிலும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த கிராமத்துப் பெண்கள், ஒரு வியப்போடு என்னைப் பார்க்கின்றனர். வியப்பை மறைக்கத் தெரியாமல் ஒரு மெல்லிய கிசு கிசுப்புச் சத்தம்.

''என்ன வாத்யாரய்யா...? பாட்டையாவைப் பாக்க வந்தீகளாக்கும்?''

''ம்.''

''ம். நல்ல சீவன். யாருக்கும் ஒரு தொல்லைதராம சீப்படாம போய்ச் சேந்துட்டாரு.''

வெறுமனே அவர்களைப் பார்த்து, ஒப்புக்குத் தலையாட்டி விட்டு வெளியே வந்தேன். யாரிடமும் பேச்சு கொடுக்கிற மனநிலையில்லை. ஒரு கனம். இழப்பை தாங்க மாட்டாத கனம்.

வீடுகளின் நிழல் மேற்காக நீண்டுகிடக்கிறது. காலை நேர வெயிலில் ஒரு உக்கிரம் தெரிகிறது. நானும் ஒரு சுவரடியில் உட்கார்ந்தேன்.

யாரோ ஒருவர் வெற்றிலை பாக்கைக் கொடுத்தார். போட்டுப் பழக்கமில்லை. மறுப்பது அநாகரிகம். வாங்கிச் சுருட்டி வைத்துக் கொண்டேன்.

மனசு முழுக்க பாட்டையா, கதை போடுகிற போது அவரது குரல், காதுக்குள் வந்து ரகசியம் பேசுகிற மாதிரியான குரல். சின்ன வயசு வாழ்க்கை முழுவதையும் ஆக்ரமித் திருந்த பாட்டையா.

பொழுதடைந்து விட்டால் போதும். அம்மாவிடம் சோறு கேட்டு நச்சரிக்க ஆரம்பித்து விடுவேன். அம்மா ரொம்ப இச்சிலாத்திப் படுவாள்.

''ஏண்டா, உசுரை வாங்குறே? இந்நேரத்துலே பசிக்கவா செய்யுது?''

''பசிக்கலே.''

''பெறகு ஏண்டா, 'சோறு சோறு'ங்கிறே?''

''கதை கேக்கப் போவணுமில்லே:''

சாப்பிட்ட கையின் ஈரத்தை டவுசரில் துடைத்துக் கொண்டு, ஒரே ஓட்டம் தான். அம்மாவின் சத்தம் முதுகுக்குப் பின்னால் துரத்திக் கொண்டு வரும்.

''ஏலேய்... பாடம் படிக்கலியா?''

''இல்லே...கதை கேக்கப் போறே...ன்'' என்று சத்தத்தை எறிந்து விட்டு... ஓடுவேன்.

வைத்தியர் தாத்தா வீட்டு முன்னால், முற்றத்தில் பாட்டையா உட்கார்ந்திருப்பார். அவரது விரலிடுக்கில் பொடிப் பட்டை அவரைச் சுற்றிலும் ஈக்களாகச் சிறுவர் பட்டாளம். பாவாடையும் டவுசருமாய்ச் சிறுவர் சிறுமியர்.

''பாட்டையா... பாட்டையா... கதை போடுங்க பாட்டையா...''

என்று நச்சரிக்கிற சிறுவர்களில் நானும் ஒருவனாய்ப் போய் விழுவேன். நானும் நச்சரிப்பேன். கெஞ்சுவதே பெரும் கூச்சலாக இருக்கும்.

''அடச் சும்மாயிருங்க கொரங்குகளா?' என்று கோபத் தொனியில் சொல்லுவார். ஆனால், பொடிக் கண்களில் பெருமிதம் இருக்கும்.

என்னைப் பார்த்து விட்டால், அவர் கண்ணில் ஒரு மின்னல்.

''இந்த உண்டு வளர்ந்தானும் வந்துட்டானா?'' என்று சலிப்போடு கேட்டு விட்டுச் சிரிப்பார். மேல் வரிசையில்

ஒன்றும். கீழ் வரிசையில் இரண்டுமாய்ப் பற்கள். அந்தரமாய் நிற்கும். செவலை நியமாய், கறை படிந்து கிடக்கும்.

''கதை போடுங்க பாட்டையா.''

''போட்டா... என்ன தருவீக?''

''என்ன வேணும் பாட்டையா? துட்டா?''

''துட்டு என்னத்துக்கு? பொடிப்பட்டை தருவீகளா?''

''ம். நா வாங்கித் தாரேன். பாட்டையா''

''அதுக்குத் துட்டு வச்சிருக்கீகளா?''

கப்சிப். பேச்சு மூச்சில்லாமல் பம்மிக் கிடப்போம். நிதர்சனத்தைத் தாங்காத திணறல்.

''சரி... கதையைக் கேளுங்க'' என்று பாட்டையா சொன்ன பிறகுதான் எங்களுக்கு மூச்சு வரும். உயிர் வரும். மனசுக்குள் ஒரு உற்சாகம். துள்ளலான மகிழ்ச்சி. என்ன கதை போடுவாரோ என்ற துறுதுறுப்பு. ஆவல். சிட்டுக் குருவிகளின் சிறகடிப்பாக... மனசு.

அவரே அவருக்குச் சொல்லிக் கொள்வதைப் போல ஒரு ருசியோடு-ரசனையோடு-லயித்துப் போய்ச் சொல்லுவார்.

பாட்டையா போடுகிற கதைகளில் ஈனாப்பூச்சி என்று ஒரு பயங்கரப் பூச்சி வரும். நாலு பூச்சிகள் சேர்ந்தால் ஒரு ஆளைத் தின்று தீர்த்துவிடும் என்பார். பெரிய பெரிய பூச்சிகள்!

பௌர்ணமி நிலா வெளிச்சம். ராணியைச் சிறை மீட்டுக் கொண்டு, ராசா குதிரையில் பறப்பார். காவலுக்கு நின்ற ஈனாப் பூச்சிகள் படையாகத் துரத்தும். எட்டுக்கால்

பாய்ச்சலில் விரட்டும். ராசா திரும்பித் திரும்பிப் பார்ப்பார். பூச்சிகள் ரொம்ப நெருங்கிவிடும். அவற்றின் கண்கள் நிலாவெளிச்சத்தில் நெருக்கமாய் மின்னும். ராசா பதறுவார். கத்துவார். ஐயய்யோ என்று அலறுவார். ராணி தைர்யம் சொல்வாள். தப்பிக்க முடியாத அபாய கட்டம். ராணி கழுத்தில் கிடந்த நவரத்தினமாலையை அறுத்து பின் பக்கமாய் எறிந்து விடுவாள்.

சிதறிக் கிடக்கிற ரத்தினங்கள், நிலா வெளிச்சத்தில் கண்ணைப் பறிக்கும். எல்லாப் பூச்சிகளும் ரத்தினங்களை மொய்த்துக் கொள்ள, ராசாவும் ராணியும் தப்பி விடுவார்கள்.

அப்பாடா!

அப்பத்தான் எங்களுக்கும் உயிர்வரும். நாங்களே ஈனாப்பூச்சியின் கொலைப் பசியிலிருந்து தப்பித்து விட்ட மாதிரி, ஒரு ஆறுதல். தவிப்படங்கும்.

ஜம்புலிங்கம் கதையை மட்டும் நாலு நாட்களுக்குப் போடுவார். காதுகளில் தங்கப் பாம்படம் போட்டிருக்கிற கிழவி, காட்டு வழியே செல்லப் பயப்படுவாள். துணைக்கு வருகிற ஜம்புலிங்கத்தின் அக்கிரமங்களைச் சொல்லிப் புலம்பி, அவனைத் திட்டித் தீர்ப்பாள்.

ஊர் எல்லையில் கொண்டு போய்ப் பத்திரமாகச் சேர்த்து விட்டுத் திரும்புகிற வழிப் போக்கனைக் கிழவி கையெடுத்துக் கும்பிடுவாள். நீ நல்லா இருக்கணும். தர்மராசா.''

அவன் சொல்வான்: ''நா தர்மராசா இல்லே. கொள்ளைக்காரன் ஜம்புலிங்கம்.''

கதை சொல்வதில்,பாட்டையா ஒரு ராசாதான். அப்படியே கண் முன்னால் காட்சிகள் ஓடும். கதையோடு சேர்ந்து நம் மனசும் துடிக்கும். ஜம்புலிங்கத்தைப் போலீஸ் நெருங்குகிறது என்றால்...நம் மனசெல்லாம் கிடந்து பதறும். ''ஐயோ, ஐயோ' என்று தவிக்கும்.

ராசா தனது புது மனைவியோடு பயணம் செய்வான். நண்பனும் உடன்வருவான். களைப்பாற ஆலமரத்தடியில் ஒதுங்கி ஓய்வெடுப்பார்கள். ராசாவும் ராணியும் உறங்க நண்பன் காவல் இருப்பான்.

மரத்தில் உட்கார்ந்திருக்கிற அண்ட பேரண்டப் பட்சிகள் பேசிக் கொள்ளும்.

''பாவம் இந்த இளைஞன்! புது மனைவியோடு நிம்மதியாக உறங்குகிறான். இன்னும் கொஞ்ச நேரத்தில் சாகப் போவதையறியாமல், கனவு கண்டு உறங்குகிறான்.''

''எப்படிச் சாவான்?''

''இந்த ஆலமரக்கிளை ஒடிந்து நசுக்கிக் கொன்று விடும்.''

''அதிலிருந்து தப்பி விட்டால்?''

''பெரிய ஆற்று வெள்ளத்தைக் கடப்பார்கள். திடீரென்று வெள்ளப் பெருக்கு உயர்ந்து, சுழலாகி, ராசாவை இழுத்துச் சென்றுவிடும்.''

''அதிலிருந்து தப்பி விட்டால்?''

அந்தப் பட்சி இன்னும் மரண வாசல்களை அடுக்கிக் கொண்டே போகும். விழித்திருக்கிற நண்பனுக்கு அந்தப் பட்சிகளின் பாஷை புரியும் என்பார், பாட்டையா.

''அதெப்படி? பட்சிகளோட பேச்சு நமக்கு எப்படிப் புரியும்?''

''ஒனக்குப் புரியாது. அவன் பெரிய படிப்பாளி. அறிவாளி. மந்திரி. அவனுக்கு எல்லாம் புரியும்.''

''சரி... பாட்டையா, மைனா என்ன பேசுது? உங்களுக்குத் தெரியுமா?''

''காடை கரையுதே... அதுக்கு என்ன அர்த்தம் பாட்டையா?''

''மயிலு கூப்பாடு போடுது. அது என்ன சொல்லிக் கூவுது?''

கேள்விகளைக் கண்டு அசரவே மாட்டார். கோபப்படவும் மாட்டார். சளைக்காமல் பதில் சொல்வார். தெரியாது என்று எதையும் சொல்லவே மாட்டார். அது அதற்கு எதையாவது சொல்லி அடைத்து விடுவார்.

பதினைந்து வயசு வரைக்கும் நான் அவரிடம் கதை கேட்டு வளர்ந்திருக்கிறேன். உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் போதுகூட, கதை கேட்டிருக்கிறேன்.

எங்க ஊர் நாவிதனிடம்தான் அப்போ முடிவெட்டிக் கொள்வேன். நான் சம்மணக்கால் போட்டு, தலையைக் குனிந்திருப்பேன். நாவிதன், குத்துக்கால் வைத்து முடி வெட்டுவான். என் காதோரத்தில் அவனது 'கத்தரிப்பான்', 'கரிச், கரிச், கர்ரீச்'' என்று கிறீச்சிடும்.

அது, எனக்கு மைனாவின் கத்தல் போலவே ஒலிக்கும் இந்த ஒலிக்கு என்ன அர்த்தம்? என்ன வார்த்தை வடிவம்? என்ன பேசுகிறது? நானாகவே ரொம்பக் காலம் யோசித்திருக்கிறேன்.

''கரிச், கரிச், கர்ரீச்...''

''வெட்டு. வெட்டு... வெட்ட்டு...''

அப்படீன்னா மைனாவின் சத்தமும் இதே சந்தத்தில். அதற்கு என்ன வார்த்தை வடிவம்? ''கொத்து... கொத்து... புழுக்கொத்து...''

நான் சொல்லிப் பார்ப்பேன் சரியாகவே இருக்கும்.

அம்புட்டுதான். எனக்குள் சந்தோஷம் சொல்லி மாளாது. ஏதோ அதிசயத்தைக் கண்டு பிடித்து விட்ட சந்தோஷம். ஏதோ மர்மத்தை- ரகசியத்தை- தொட்டுணர்ந்து விட்ட களிப்பு.

எனக்கும் பறவைகளின் பாஷை புரியத் தொடங்கி விட்டமாதிரி, ஒரு உற்சாகம்.

இதெல்லாம்... பாட்டையாவின் கதைகளால் வந்த ஞானப் பயிற்சி. அவரது தூண்டுதல். பாட்டையாவின் கதைகள், எனக்குள் எத்தனையோ நல்ல விளைவுகளை அற்புதங்களை-நிகழ்த்தியிருக்கின்றன.

கதை சொல்லுகிற அவரது நேர்த்தி... என்னுள் கதை கேட்டுக் கரைகிற ஆர்வத்தையும், பாடம் கேட்டுப் பதிய வைத்துக் கொள்ளுகிற ஈடுபாட்டையும் வளர்த்திருக்கிறது. கற்பனா சக்தியை வளர்த்திருக்கிறது; மந்திர தந்திரக் கதைகள், நம்பக்கூடியது எது-நம்ப முடியாதது எது என்று பகுத்தறிகிற சுயதீவிரத்தை வளர்த்திருக்கிறது; நடத்துகிற பாடங்களை உள்வாங்குகிற ஆற்றலை அதைச் சொந்த வார்த்தைகளில் வெளிப்படுத்துகிற தகுதியை வளர்த் திருக்கிறது; இளவயசுக்குரிய மன உலகத்திற்குள் ஜீவ ரத்த ஓட்டம் துரிதமாகி, துடிப்புடன் வளர்ந்திருக்கிறது.

அதனால்தான்... எல்லா வகுப்பிலும் முதல் ரேங்க் மாணவனாகவே இருந்து வந்திருக்கிறேனா? இருக்கும்.

பாட்டையாவின் கதை நாயகர்கள் எல்லாரும் சராசரி மனிதர்களல்ல; தனித்துவ மிக்கவர்கள்; சாகசக்கார்கள் சாதனையாளர்கள்; இளம் மனசுகளை கொள்ளை கொண்டவர்கள்.

என் மனசுக்குள் அவர்கள் பேசியிருக்கிறார்கள். என் கனவுகளில் வந்து மந்திரம் போட்டிருக்கிறார்கள். ''சும்மா கிடக்காதே... சராசரியாக இருக்காதே... தனித்துவமாக இரு. சாதனை செய்து காட்டு, சாகசமாய் ஜொலி'' என்று தூபம் போட்டிருக்கிறார்கள். வேட்கையை ஏற்படுத்தி, உத்வேகம் ஊட்டியிருக்கிறார்கள்.

பாட்டையா, உமது கதைகள் என்னை வார்த்திருக்கின்றன. என்னையறியாமல் எனக்குள் இயங்கியிருக்கின்றன. என்னை இயக்கியிருக்கின்றன. உசுப்பி விட்டு, 'ஓடு, ஓடு' என்று முடுக்கி விட்டிருக்கின்றன. துவண்டு சோர்ந்த போதெல்லாம்... தட்டி எழுப்பி வழி நடத்தியிருக்கின்றன.

அர்ஜுனனுக்கு வாய்த்த பார்த்தசாரதியைப் போல... எனக்கு நீரும் ஒரு கிருஷ்ணபரமாத்மாவா? என்னைப் போல எத்தனை பேருக்கு நீர் கிருஷ்ண பரமாத்மாவாக இருந்து வழி நடத்தியிருப்பீர் எங்க அப்பாவுக்குக் கூட.

நேரம் இளமதியம் ஆகிவிட்டது. எனக்குச் சாப்பிடத் தோன்றவில்லை. நான் உட்கார்ந்திருந்த இடத்தில் நிழல் சுருங்கி வருகிறது.

அங்கே இங்கே என்று உட்கார்ந்திருக்கிற எல்லாரும் கல்யாண வீட்டில் போல கல கலப்பாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

ஊர் நிலவரம். கட்சிக் கலவரம், உரவிலை உயர்வு, நிலத்தைச் சீரழிக்கிற டக்கர் உழவு, பருத்தி மார்க்கெட் என்று பேச்சு, சர்க்கரையில் மொய்க்கிற ஈக்களாக அங்கும் இங்குமாய்ப் பறந்து கொண்டிருக்கிறது.

ரெண்டு வாரிகளை நீளவாக்கில் போட்டு, குறுக்கு வாட்டில் நாலு குச்சிகளைப் போட்டு, பச்சை வாகைக் குச்சிகளை வளைத்துக் கட்டி, மேலே கலர்ச் சேலைகளைச் சுற்றி... ஒரு நிமிஷத்தில் தேர் செய்து விட்டார்கள். அதற்குப் பூ அலங்காரம் வேறு. தேருக்குள் சிம்மாசனம் போல ஒரு நாற்காலியைப் போட்டு இருக்கிக் கட்டிவிட்டார்கள்.

நீர் மாலைக் கிணற்றுக்குப் போவதற்காக நாவிதன், மூன்று தடவை சங்கு ஊதினான். ஆண்கள் எல்லோரும் பின் தொடர, நீர் மாலைக் கிணறு போய் வந்தவுடன்.

இளவட்டங்கள் 'தூக்குவதற்காக' மும்முரமாக வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டனர்.

பாட்டையாவைக் குளிப்பாட்டி, மல்லு வேட்டி கட்டி தேரில் உட்காரவைத்து, கயிறு போல முறுக்கிய வேட்டியால் கட்டி?

ஏகாலி தேருக்கு முன்னால் சேலைகளை விரிக்க, 'ஜே, ஜே' என்று தூக்கி விட்டார்கள். கிராமத்து மக்கள் பேச்சின் தொடர்ச்சி அறுபடாமல், தேரைப் பின் தொடர்ந்தனர்.

எனக்குள் கனம் இழப்பின் சுமை தாளாத திணறல். யாருடனும் பேசவில்லை. பேச முடியவில்லை. பேசுகிற மனசில்லை. பேசினால் மனப்பாரம் குறையும். பேச ஆளில்லை.

இவர்களைப் பொறுத்தவரை... இது ஒரு வெறும் சாவு. வயசான கட்டையின் பயணம். எந்தக் கவலையும் படத் தேவையில்லாத, இயல்பான பழுத்த உதிர்வு. நீண்ட காலம் வாழ்ந்து, முடிந்து, திருப்தியோடு சுருண்டு கொண்ட ஒரு சாவு அவ்வளவுதான்.

எனக்கு அப்படியா? என்னைச் செதுக்கிய ஞானத் தந்தை பார்த்தவனுக்கு தேரோட்டிய சாரதியைப் போல என்னை வார்த்து வழி நடத்திய கிருஷ்ணபரமாத்மா. எனது ஆன்ம வளர்ச்சியில் தீப ஒளி காட்டிய கிருஷ்ணன். அப்பேற்பட்டவரல்லவா, பாட்டையா.

பாட்டையாவுக்குப் பிறகு... யார் இப்படி கதை போடுவார்? என் பிள்ளைகளுக்கு இப்படியோர் பார்த்தசாரதி இல்லையே... கதை போட-கற்பனை ஆற்றலை வளர்க்க சாதனையாளர்களாக வார்க்க ஒரு பாட்டையா இல்லையே...

ஈரச் சிலிர்ப்பும் இனிமைப் பரவசமும் நிறைந்த ஒரு வாழ்க்கையை-வாய்ப்பையே-என் பிள்ளைகள் இழந்து விட்டனர்.

இதை எப்படி ஈடுகட்டுவது? ஈடுகட்டக்கூடிய இழப்பல்லவே, இது! வாழ்க்கை என்ன சக்கரமா? மறுபடியும் மறுபடியும் பாட்டையா பிறப்பாரா? மாட்டார் அவ்வளவு தான்,

யந்திரமான பரபரப்பாகிவிட்ட இந்த டக்கர்யுகக் கிராமத்தில்... இனிப் பாட்டையா பிறக்க வழியில்லை. பிறந்தாலும், பாட்டையாப் போல கதை போட முடியாது.

நான் பெற்ற வாய்ப்பை என் பிள்ளைகளுக்கு என்னால் பெற்றுத் தர முடியாது. முகம் மாறிப் போன வாழ்க்கையில், முடிந்து போன யுகம் மீண்டும். அரும்பப் போவதில்லை...

மயானக்கரை, பனைமரங்களின் நிழலில் ஜனங்கள், குழிக்குள் பாட்டையாவை இறக்கினர். ''வாய்க்கரிசி போட வாங்க'' என்று சத்தமாய் நாவிதன் அழைத்தான். நெருங்கிய உறவினர்கள், அவன் நீட்டிய வட்டிலில் சில்லறையைப் போட்டுவிட்டு, நீரும் அரிசியும் அள்ளி பாட்டையா மேல் போட்டனர்.

நானும் போனேன். என்னை வியப்புடன் பார்த்தனர் என் வருகையின் உட்காரணம் யாருக்கும் புரியவில்லை.

'நெருங்கிய உறவில்லாத இவன் எதுக்கு, வாய்கரிசி போட வரணும்?' என்ற யோசனை எல்லார் கண்களிலும், எதையும் நான் பொருட்படுத்தவில்லை.

முழுசாக ஒரு ரூபாயை வட்டிலில் போட்டுவிட்டு வாய்க்கரிசியைப் போட்டேன். குழிக்குள் மடங்கிக் கிடந்த பாட்டையாவின் திறந்த வாயைக் கூர்ந்து பார்த்தேன். மனசுக்குள் அள்ளி வைத்துக் கொள்வதைப் போல பார்த்தேன்.

இன்னும் சில நிமிஷத்தில் மண்ணைப் போட்டு மூடிவிடுவார்கள்.

குழிக்குள் கிடப்பது பாட்டையாவா? கதைகள், கற்பனைக் கதை சொல்லுகிற கலை, சிறுவர்களின் பூப்

போன்ற மன உலகை உரியமுறையில் வார்க்கத் தெரிந்த உயிர்க்கலை. சிருஷ்டிப்புக் கலை.

உடைந்த மனசு கண்ணில் கசிய... பனைமர நிழலுக்கு வந்தேன்.

மயானக்கரை வேலைகள் முடிந்து, பணச்செலவு முடிந்த பிறகு, சிரிப்பும் பேச்சுமாக- ஓட்டமாக- கலகலப்பாக- எல்லோரும் கிணறுகளை நோக்கிக் கிளம்பினர், குளிக்க.

நானும் ஒரு கிணற்றில் இறங்கி, மௌனமாய்க் குளித்துவிட்டுக் கிளம்பினேன். சுள்ளென்று அடிக்கிற வெயில் கண்ணை உறுத்துகிற மழை வெயில், தோள், புஜமெல்லாம் காந்தியது.

வீடு வந்து சேர்ந்தேன். இழவு வீட்டிலிருந்து திரும்பியிருந்த பார்வதியும் குளித்திருந்தாள். ஈரத்தலை யோடு இருந்தாள்...

''இன்னும் சாப்டலியா?''

''ம்...'

ஈரவேட்டியைக் காயப் போட்டேன். வேறு கைலியை உடுத்திக் கொண்டேன். வெயிலின் உக்கிரத்திலிருந்து வந்திருந்ததால், வீட்டு நிழல் இருட்டாகத் தெரிந்தது.

இன்னும் மனசுக்குள் பாட்டையா. அப்பாவுக்கும், எனக்கும் கிடைத்த கதைப் பாட்டையா என் பிள்ளைகளுக்கு இல்லை. நிரந்தரமாகத் தொலைந்துபோன பொக்கிஷம். இழந்துவிட்ட ஞானப் புதையல்,

நான் வந்ததைக்கூடக் கவனிக்காமல், என் பிள்ளைகள் ஆர்வமாய் டீ.வி.பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் பக்கத்தில் கோகுலம், அம்புலிமாமா புத்தகங்கள்,

டீ.வியின் பஞ்சதந்திரக் கதை கார்ட்டூன் படமாக ஓடிக் கொண்டிருந்தது. மொழி புரியாவிட்டாலும், கதை புரிகிற உற்சாகத்தில் ஒன்றிக் கிடக்கிற என் பிள்ளைகள்.

நானும் நின்று கொண்டே பார்த்தேன்.

புலி பேசுகிறது. மரம் விழிக்கிறது. நரி பாட்டுப் படிக்கிறது. எல்லாம் இந்தியில்தான். டீ.விக்குள்ளிருந்து வருகிற சத்தம், எனக்குள் அரிஞ்சர் பாட்டையாவின் குரலாக...

பிள்ளைகள் மீது சீற்றமாய்ப் பாய்ந்தாள்.

''அப்பா வந்ததைக் கூட கவனிக்காம... அப்படியென்ன டீ.வி.யிலோ? ரொம்பத் திமிர்தான்!''

டீ.வியை அணைக்க கோபமாய் முன்னேறிய பார்வதியைத் தடுத்தேன்.

''பாட்டையா கதை போடுறார். போடட்டும். தடுக்காதே.''

பார்வதி குழப்பமாய் என்னைப் பார்த்தாள். விளங்காமையுடன் அலைகிற அவள் விழிகளைப், பார்த்தேன். மெல்லிசாகச் சிரித்தேன். அமைதி முறுவலுடன் குனிந்து கோகுலத்தை எடுத்தேன்.

— 1991 கல்கி தீபாவளி மலர்

# பூ

“ராசாத்தி மகள் மூலையில் உட்கார்ந்து விட்டாள்.

முந்தா நாளிலிருந்து ஊரில் இதே பேச்சுதான். ஊர்ப்பெண்கள், மூக்கில் விரலை வைத்தனர். வாயைப் பிளந்தனர்.

ஆச்சரியத்தில் மாய்ந்து போனார்கள். ‘நிஜந்தானா’ ‘நிஜந்தானா’ என்று ஒவ்வொரு பெண்ணும் திணறித் தவித்தார்கள்.

பூங்கோதைக்கும் ஆச்சரியம்தான். அத்துடன் கொஞ்சம் அதிர்ச்சியும் கூட. மனசுக்குள் மெல்லிய நெருடல். ஆழத்திற்குள் ஜில்லிட்டுப் பாய்கிற பயம்.

‘அப்பவும் இப்படியா, அப்பவும் இப்படியா, என்று வாய்க்கும், கைக்குமாய் புலம்பிக் கொண்டிருந்தாள்.

புருஷனுக்கும், பிள்ளைகளுக்கும் எல்லாவற்றையும் கவனித்து, சமாளித்து முடித்து விட்டு, கூலி வேலைக்குக் கிளம்பினாள், பூங்கோதை. அவளுடன் வந்து சேர்ந்து கொண்டாள், மாடத்தி.

அவளிடமும் சொல்லிச் சொல்லி மாய்ந்தாள், பூங்கோதை. மாடத்திற்குப் பிடிக்கவில்லை. வெடுக்கென்று மறுத்துப் பேசினாள்.

''பொம்பளைப்புள்ளே சடங்காகுறது ஒரு அதிசயமா? இதுக்குப் போய்... இப்படி வாயாறிக்கிட்டிருக்கே?''

அப்பவும் இப்படியா பதினோரு வயசுகூட ஆகலே. இன்னும் தாவணியும் போடலை. அதுக்குள்ளேயா? இதெல்லாம் காலக் கூத்துதான்.''

''அதுக்கென்ன, கணக்கா இருக்கு? சில உடம்புவாகு அப்படி அதனாலே இருக்கும்லே?''

''என்ன உடம்போ...! நாங்க எல்லாம் சீலை கட்டுன முழுத்த பொம்பளைகளா ஆனப்பெறகுதான், மூலையிலே உக்காந்தோம். இப்ப என்னடான்னா... பால்குடி மறந்த புள்ளைக் கூட சமைஞ்சிருதுக.''

''அதுக இச்சையிலா நடக்குது? அதுக்கு அந்தப் புள்ளைக என்ன செய்யும்?''

''நானும் அதுகளை குத்தம் சொல்லலை''

''நீ சொல்றதும் வாஸ்தவம்தான். முந்தி மாதிரி இல்லே, இப்ப. ரொம்பச் சின்னஞ் சிறுசுக்கூட 'பொசுக் பொசுக்'குன்னு பூத்துருதுக.''

''மூலை மூலைக்கு நடக்குற சினிமா, டி.வி.களைப் பாத்துப் பாத்து... வர்ற சீரழிவு.''

காலை வெயில் சுள்ளென்று தைக்கிறது, மாடத்தி நடையை எட்டிப் போட்டாள். இவளும் தொடர்ந்தாள்.

விலகி எங்கே ஓடுகிற நினைவுகள்...

பூங்கோதை சின்னப் பிள்ளையாக, பாவாடை கட்டியிருந்த சமயம்...

சினிமா என்றால் அதிசயம். பார்க்கக் கிடைக்காத அபூர்வம். ஆசைப்பட்டவுடன் பார்த்துவிட முடியாது.

சினிமா என்றால், அப்போ திருவேங்கடம் போகணும். கெஞ்சிக் கூத்தாடி, அய்யா-அம்மாவிடம் வசவுகள் வாங்கி, அப்புறம் சம்மதம் வாங்கி...

பெரியாள்களுடன் ஈடுகொடுத்து நாலரை மைல் நடந்து சாகணும்.

கண்மாய்க் கரையில்-காய்ந்து பொடிப் பொடியான கரிசல் கட்டிகள் நெரிஞ்சமுள்ளாய் குத்தும். அதையும் தாங்கிக் கொண்டு, 'லொக், லொக்' கென்று மூச்சிறைக்க ஓடணும்.

டூரிங் தியேட்டரில் மணலைக் கூட்டி, உட்கார்ந்து படம் பார்த்துவிட்டு... மையிருட்டில், முள்ளுக் காட்டில் மறுபடியும் நடை.

வீடு வந்து சேர்வதற்குள், கோழி கூப்பிட்டு விடும் மறுநாள், எழுந்திருக்க முடியாது. அடித்துப் போட்ட மாதிரி உடம்பெல்லாம் வலியெடுக்கும். அப்புறம் ரொம்ப நாளைக்கு சினிமா ஆசையே வராது.

இப்போது... அப்படியா?

வாரா வாரம் டி.வி.யில் சினிமா. டி.வி.உள்ள புண்ணியவதிகள் வீட்டுக்குள் புளிச்சிப்பமாய் அடைந்து கிடந்து, சிறிசு, பெரிசுகள் எல்லாம் போய்ப் பார்த்து விடுகின்றன.

இதுவும் போதாதென்று, ஊர் மைதானத்தில் பத்து நாளைக்கு ஒரு தடவை 'டெக்'கும், டி.வி.யும் வந்துவிடும்

யாரோ சிலர் ஏற்பாடு செய்திருப்பார்கள். வீடு தேடிவந்து கதவைத் தட்டுகிற சனியன்கள்.

ஊரே திரண்டு, விடிய விடிய கண் கூசாமல் பார்க்கும். ஒரு ராத்திரிக்கு நாலு படங்கள்.

இப்போது வருகிற சினிமாக்கள், மனுச மக்கள் உட்கார்ந்து பாக்கிற மாதிரியாகவா இருக்கிறது? ஒரு கதை உண்டா? கருத்து உண்டா? ஒரு இழவும் இல்லை.

ஒரே ஆடுகாலித்தனம் தான். காமக்கூத்தும், அசிங்கமும்தான். டவுசர் போட்ட சின்னப் பையனும், பொண்ணும் காதலிக்க, தண்ணீரில் நனைய, தாவணியை உருவ...த்தூ! அசிங்கம்.

இந்தக் கூத்துக்களை மனம் கூசாமல் விடிய விடிய பார்த்து ரசிக்கிற சின்னதுகளும், பெரியதுகளும்...

பெரியதுகளாவது... காடு கரைகளில் இந்த அசிங்க களை பேசிச் சிரித்து 'கழித்து' விடுவார்கள்.

பாவம், சின்னதுகள்...

உள்ளுக்குள்ளேயே பொத்தி பொத்தி, அடை காத்து... ஒன்றுக்குப் பத்தாக யூகங்கள் பொறித்து...

தீயிலே பிடுங்கிப் போட்ட பிஞ்சுக் காய்களாக அதுகளே, வெந்து வெடிச்சிருதுக...

இதை காலக் கூத்து என்பதா, சினிமா கூத்து என்பதா? ஹூம்... அடக் கூத்துவனே!...

''என்ன பூங்கோதே, சத்தத்தையே காணோம்?''

''ஒண்ணுமில்லே'' என்றவள். பெருமூச்சுடன் வெளி உலகத்துக்கு வந்தாள். இழுத்துக் கொண்டு ஓடுகிற நினைவுகளை இழுத்துப் பிடித்தாள்,

''ராசாத்தி மகளைத்தான் நெனச்சுகிட்டு வாரீயா?''

''இல்லே. பொம்பளையா ஜென்மம் எடுக்கறதே. ஒரு பாவந்தான்.''

''ஆமா. அது நெசந்தா பூக்குற நேரம் நல்லாயிருக்கணும். கால காலத்துலே மாலை பூக்கணும். பூத்த மாலை வாடாம. வாசமா வாழணும்.''

''மச்சூ...''

''இதெல்லாம் எங்க ஒழுங்கா நடக்குது? இந்தா, என்னைத்தான் பாரேன், புல்லு மொளைக்காத பொட்டக் காடா... எம் பொழப்பு.''

சட்டென்று குலுங்கிப் போய் விட்டாள், பூங்கோதை. பக்கவாட்டில் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தாள். மாடத்தி முகத்தில் கனத்து நின்ற சோகம். கண்களின் ஆழத்தில் ஒரு வேதனை.

பார்க்கத் திராணியில்லாமல். பாதையைப் பார்த்தாள் பூங்கோதை. மனசு கிடந்து அடித்துக் கொண்டது. பேச விஷயமே இல்லாமல் போய்விட்ட மாதிரி ஒரு வெறுமை,

அவர்களைச் சுமையாக அழுத்துகிற ஒரு மௌனம். ஆழந்த துயரமான மௌனம்.

நல்ல வார்த்தை ஏதாச்சும் சொல்ல ஆசைப்பட்டாள். என்ன சொல்லித் தேற்றுவது?

சொல்லி ஆறுகிற சோகமா... மாடத்தி சோகம்?

எல்லாக் குமரிகளையும் போல, மாடத்தியும் நல்லபடியாக வளர்ந்தவள்தான். ஆட்ட பாட்டமாய்

கும்மாளம் போடுகிற புது வெள்ளமாய்... கனவுகளோடு பொங்கிச் சிரித்தவள்தான்.

நல்ல இடத்தில்தான், வாழ்க்கைப் பட்டு வெட்கச் சிரிப்போடு போனாள். இன்பத் ததும்பலில் முதல் வருஷத்திலேயே ஆண் பிள்ளை பிறந்தது, செத்தும் போனது.

அப்புறம், அவள் வாழ்க்கையில் ஒதே சூறாவளிமயம் தான். புருஷனுக்கு என்ன கேடு வந்ததோ... அவள் மேல் தீராத சந்தேகம்.

குற்றம் சொன்னால்... இல்லையென்று நிரூபிக்கலாம் கூறுகெட்ட குருட்டுச் சந்தேகத்திற்கு...ஏது வெளிச்சம்?

சீவி முடித்து பூ வைத்தால்...சந்தேகம்.

''எந்தப் புருஷனுக்காக?'' என்று கத்திக்குத்து.

வருத்தத்தில் நொந்து போய். எண்ணெய் தேயாமல் காய்ந்து கிடந்தால்... அந்நேரமும் ஈட்டிதான் நெஞ்சில் பாயும். ''எந்தப் பயலை நினைச்சு?''

அனுதினமும் செத்துச் செத்து வாழ்ந்தாள்.

''அப்பன் சாயலுமில்லாம, ஆத்தா ஜாடையுமில்லாம புள்ளை பொறந்துருக்கு, பாரு எங்க கிடந்து பொறந்துச்சோ... இது.''

பிறந்து செத்த பிள்ளை பற்றி ஒரு கிழவி வெள்ளைத் தனமாய் சொன்ன இந்த வார்த்தைதான், அவனுக்குள் விஷமாய் இறங்கி, ரத்தமெல்லாம் பரவி, மூளையின் நிறமே நீலம் பாய்ந்து...

வாழ்க்கை செத்தது.

அடியும், உதையுமாய் அவள் உடம்பு ரணப்பட, கொத்திப் பிடுங்குகிற பாம்புச் சொல்லில் மனசு நரகமாக...

அஞ்சு வருஷ இழுபறிக்குப் பிறகு ஒரேடியாக துரத்தப்பட்டு...

வாழாவெட்டியாகி இங்கு வந்து விழுந்தவள்தான்.

ஆதரவாயிருந்த அம்மா என்கிற ஜீவனும் ஒடுங்கிப் போய்ச் சேர... ஒற்றைப் பனைமரமாய் இவள்.

காய் காய்க்காத வெற்று மரம்.

இதோ... சூன்யமே ஒரு விடுதலையாகத் தோன்ற... பாதி ஆயுளைக் கரைத்து விட்டாள்.

கோடைப் பருத்திச் செடி, நெஞ்சு உயரத்துக்கு இருந்தது. கால் வைத்து விலகிச் செல்ல முடியவில்லை. அத்தனை அடர்த்தி.

ஆனால், அவ்வளவாக காய்கள் இல்லை. இருக்கிற காய்களும் பூச்சி விழுந்து... சூத்தையாகி...

அங்கொன்றும் இங்கொன்றுமாய் பருத்திச் சுளைகள். நொயில் வெம்பி வெடித்ததைப் போல... குத்தலும், கருகலுமாய்...

ஓடிஓடி பருத்தி எடுத்தாலும் மடி நிறைய மறுக்கிறது. மடியில் கிடக்கிற பருத்தியும் பங்கப்பட்டு மூளியான பெண் வாழ்க்கையைப் போல...கொத்தையும், கொதுக்கலுமாய்...

வாய்க்காலில் வரிசை வரிசையாக அகத்திகள். அதன் சிம்புகளில் சோற்றுத் தூக்குச் சட்டிகள்.

அவளைச் சுற்றிலும் பேச்சுச் சத்தம். ஊர்ப் புரணிகள், கேலி, கிண்டல், சிரிப்புச் சத்தங்கள், பூங்கோதை

நிறைபிடித்து பருத்தி பொறுக்கினாள். கட்டை விரல் காந்துகிறது,

அவளுக்குப் பக்கத்து நிறையில் பருத்தி எடுத்து வருகிறவள், சுந்தரி, ரொம்பப் பிந்திக் கிடந்தாள்.

''ஏன் சுந்தரி... கொமரிப்புள்ளே இப்படிப் பிந்திக் கிடக்கே? விறுவிறுன்னு எடுத்து வாயேன்...''

''வந்துக்கிட்டுத்தான் இருக்கேன், மதினி. நீங்க தான் 'பொடு, பொடு'ன்னு போறீக?''

...இவள் குமரியாகி ஏழெட்டு வருஷமாகிவிட்டது. கூடுதலாகக் கூட இருக்கும். இன்னும் இவளுக்கு மாலை பூக்கவேயில்லை.

இவளுக்குப் பிறகு ஊர்ல் பூத்த பெண்கள் எல்லாம், மாலை பூத்து, பிரசவம் முடித்து பிள்ளையும் கையுமாக மாறிவிட்டார்கள். இவளைச் சுற்றி கால வெள்ளம் இயல்பாய் கடந்து ஓட... இவள் மட்டும் நாணலாய் நின்று கொண்டே இருக்கிறாள்.

பார்க்க லட்சணம்தான். மூக்கும் முழியுமாய் சிவந்த திரேகமுமாய் கட்டான அமைப்புதான், பார்த்த எவனும் சொக்கிப் போவான். அப்படியும்...

வந்த வரன்கள் எல்லாம் நகை பிடித்தால் பெண் பிடிக்கலே, பெண் பிடித்தால் நகை பத்தாது.

ஒவ்வொரு காரணம். வாய்ப்புகள் நழுவி ஓட... இவள் பூத்த பூவாகவே காலமெல்லாம்...

இவளுக்கும் மனசு இருக்கு. ஆசை இருக்கு. சிலிர்ப்பு இருக்கு. உயிர் இருக்கு. ஆனாலும் மரக்கட்டையாக கிடந்து தீரணும்.

இது என்ன கொடுமையோ...

இப்போதெல்லாம்?

ஊர்ப் பெண்கள் முதுகுக்குப் பின்னால் குசுகுசுக்க ஆரம்பித்து விட்டனர். ''இவ பூத்த நேரம், தோஷமான நேரம்.''

பாவம், இவள்! உள்ளுக்குள் எம்புட்டு ரணப்படு கிறாளோ, சொல்லி அழமுடியாத அவமானத்திலும் அவஸ்தையிலும் தினம் தினம் நொந்து புழுங்கி...

வாழும் உயிரே சுமையாகி, வெதும்பி, வெந்து... வறண்டே போய்விடுவாள்.

இவளைப் பெற்று வளர்த்த வயிறு, என்னமாய் கொதிக்கும்? அடப் பாதரவே, இந்தக் கொடுமை எந்தப் பாதகத்திக்கும் வரக்கூடாதடியம்மா...

சாயங்காலம் பூங்கோதை மனசில் பிள்ளைகள். பள்ளியிலிருந்து வந்திருப்பார்கள். அடைத்த கதவில் வந்து முட்டியிருப்பார்கள். அம்மாவை ஆவலோடு தேடி யிருப்பார்கள். மடியில் விழுந்து, நடந்த விளையாட்டு, சண்டைகள் பற்றியெல்லாம் கெஞ்சல் கெஞ்சலாய் சொல்லி மகிழ ஆசைப்பட்டிருப்பார்கள்.

பாவம், அம்மாவைப் பார்க்காமல், அடைத்த கதவைப் பார்த்து ஏங்கிப் போயிருப்பார்கள்.

நினைக்க நினைக்க இவளுக்குள் தவிப்பு. மனசுக்குள் இந்த நினைப்பு பின்னிக்கொள்ள... வேலை, வெறும் பாரமாய்த் தோன்றியது.

மனம் பரபரக்கிறது. வீடு நோக்கி ஆலாய்ப் பறக்கிறது.

ஆயிற்று. விரிந்த சமுக்காளத்தில் கொட்டிய பருத்தியை பெரிய பொட்டலமாகக் கட்ட... மாடத்தியும், பூங்கோதையும் நடையைக் கட்டினர்.

இப்போது-

பூங்கோதை நடையை எட்டிப் போட்டாள். பிள்ளைகள் மனசைச் சுண்டியிழுக்க, கால் தரை பாவாமல் துரிதப்பட்டது.

ஊருக்குள் பாய்ந்தாள். தெருவைக் கடந்தாள் வீடு இருக்கும் தெருமுனையைத் தொட்டுவிட்டாள், அதோ-

பூட்டிக் கிடக்கிற கூரை வீடு வாசல் படியில் மூன்று பைக்கட்டுகள்.

மற்ற இரண்டும் விளையாடப் போயிருக்குமோ...

வீட்டு வாசலில் மூத்தவள் மட்டும் சுருண்டு உட்கார்ந்திருக்கிறாள். ஏழாம் கிளாஸ் படிக்கிறாள். வெட்டுப்பட்ட கொடியாக வாடிப் போயிருக்கிறாளே, எதுக்கு?

முகம் வெளுத்துப் போய்... அப்படியென்ன வாட்டம்? அழுது கரைந்த மாதிரி, கண்களில் அப்படி யென்ன சோர்வு? சுருண்டு கிடக்கிற அளவுக்கு அந்தச் சின்ன உடம்பில் என்ன தளர்வு?

பூங்கோதைக்குள் பகீரென்றது. அடிவயிற்றை கலக்கியது. மனசில் நெருடல். ஆழத்தில் ஜில்லிட்டுப் பாய்ந்த பயம். திகில்.

'ஒருவேளை... பூத்து உக்காந்துட்டாளா? ஐயய்யோ... அதுக்குள்ளாகவா?... அடிப்பாதகத்தி!'

இன்னும் பத்து எட்டுக்கள் தான் பூங்கோதைக்குள் பயத்தின் நடுக்கம். குப்பென்று உடம்பெல்லாம் வியர்க்கிறது.

மனசில் வியர்வைத் துளிகளாக... சுந்தரி, மாடத்தி... ஒரு கணம் வந்து மறைய-

படபடப்பு. கால்கள் பரபரத்து பின்னலாட-

ஓடிப் பாய்ந்தாள். மனசெல்லாம் பதைத்துப் போக... படபடத்துக் கேட்டாள்.

''என்னடி... என்னம்மா செய்யுது... என்னடி, சொல்லித் தொலையேண்டி.''

''ஒண்ணுமில்லேம்மா...''

''பிறகு ஏன்? இப்படி வாடிப் போயிருக்கே?''

''மத்தியானத்துலேயிருந்து மண்டையடிக்கு.''

''அம்புட்டுத்தானா?...''

அவளுக்கு அப்போதுதான் உயிரே வந்தது. மனசின் முறுக்கெல்லாம் தளர்ந்து, கால் தரையில் ஊன்றிவிட்ட மாதிரி ஒரு நிம்மதி.

பயத்தில் படபடத்த மனசு, சற்று அடங்கியது. வியர்வையில் காற்றுப்பட்ட மாதிரி... மனசுக்குள் ஒரு குளிர்ச்சி.

கதவைத் திறந்தாள். மகளை ஆதரவோடு அணைத்துக் கொண்டே, உள்ளே வந்தாள். நடையில் உட்கார்ந்து 'சுவரில் சாய்ந்தாள்.

'உஸ்ஸ்'ஸென்று விட்ட பெருமூச்சில் உடம்பின்-மனசில்-அயற்சி முழுவதும் கரைய-

''குடிக்க கொஞ்சம் தண்ணீ குடு''

தண்ணீர்ச் செம்பை நீட்டிய மகளைப் பார்த்தாள், பூங்கோதை. உள்ளுக்குள் முள்முள்ளாய் உறுத்தல், மனுஷத்தனமான உறுத்தல்.

பயந்தது சரிதானா, தெளிந்ததும் சரிதானா?

'புள்ளை வளர்றதை நெனச்சு சந்தோஷப்பட வேண்டிய பெத்தவள்... நா எதுக்குப் பயப்படணும்?'

அவளுக்குள் வெட்கமான ஒருவேதனை உணர்வு.

மறுபடியும் மனசுக்குள் மாடத்திகள்... சுந்தரிகள்...

பொண்ணா ஜென்மமெடுத்தவளை கிழிச்சு கேவலப் படுத்துகிற ஊரு உலகத்துக்குப் பயந்து என்ன ஆகப் போறது? தும்பம் வந்தா செத்தா போறோம்? மல்லுக்கட்டிப் புரளலியா? அப்படித்தான் இதுவும்.'

அந்த பெற்ற மனுஷிக்குள் புதிய தெளிவு. துணிச்சலில் வந்த பாசப் பெருக்கோடு,

''இங்க வா... கண்ணு'' என்று எல்லை மீறிய கனிவில் கூப்பிட்டாள்.

புரியாமையில் நெருங்கிய சிறுமியை, பற்றி இழுத்து மடியில் போட்டு இறுகத் தழுவிக் கொண்டாள்.

அவளது பிஞ்சுக் க்ன்னத்தை வலது கையால் வருடி... நெகிழ்ந்து போன மனசோடு மகளின் நடு நெற்றியில் முத்தமிட்டாள், வாழ்த்துவதைப் போல!

குழைந்து மிருதுவாகிப் போயிருக்கும் அம்மாவின் உணர்வுகளை உள்வாங்க முடியாமல், மிரள மிரள விழித்தாள், அந்தச் சிறுமி.

பூங்கோதையின் கண்களில் ஏனோ ஈரக் கசிவு.

*-அக்டோபர் 1991-இந்தியா டுடே.*

# அவள் சாரதி

***சா***த்தனூர் அணைக்கட்டுக்கான பிரிவுச்சாலையில் அந்தத் தனியார் பஸ் விலகி வேகம் பிடித்தபோது, ஈரப் புழுதியின் வெக்கையான வாடை நாசியைத் துளைத்தது. சிலமணி நேரத்திற்கு முன் தான் ஏறிதூறலாய் தூவானம் போட்டிருக்கிறது.

சரசுக்குள் சந்தோஷம் கும்மியடிக்கத் துவங்கிவிட்டது. முகத்தில் அதன் வெளிப்படையான மலர்ச்சி, கண்களில் ஒரு விரிவு, ஒரு மின்னல்.

சாலையின் ஓரத்தில் ஸல்யூட் அடிக்கிற சிலையைப் பார்த்ததும் முகமெல்லாம் சிரிப்பாய்க் கை கொட்டினாள். குதூகலமாய் இவனைப் பார்த்தாள். அய்ய...! நம்மளுக்கு வணக்கம் சொல்லி வரவேற்கிறாரு'

சந்தோஷ நதியாகத் துள்ளுகிற சரசுவை ஒரு மெலிந்த புன்னகையோடு நோக்கினான் ராசேந்திரன். உள் மனசின் இருட்டும் கலக்கமும் அவனது கண்களில் நிழலாகத் தொங்கியது. சரசுவைப் போல மகிழவும் துள்ளவும் அவனால் இயலவில்லை, காலையிலே அவளுக்குத் தெரியாமல் 'பாலிடால்' வாங்கி வைத்து விட்டான். இருவருக்குமான முடிவு எது என்பதை அவன் நேற்றே முடிவு செய்து விட்டான். அதை அவளிடம் சொல்லுகிற தைர்யம் தான் இன்னும் வரமாட்டேன் என்கிறது. அந்த முடிவு-இன்று இரவே...!

இவன் மனசுக்குள் அழுத்துகிற கனம்; மூச்சுத்திணற வைக்கிற பாரம். குழந்தையைப் போல கும்மாளமிடுகிற இந்தக் காதலியின் இதயத்தில் அந்தச் சோக முள்ளை எப்படிச் சொருகுவது?

ஓரக் கண்களால் சரசுவைப் பார்க்க விடாமல் திரை போட்டு மறைக்கிற நீர்க்கசிவு...

'என்னங்க, இங்கதா நாம எறங்கணுமா?'

ஆவல் பரபரப்பில் சரசு அவன் தொடையைத் தட்டினாள். அவன் தடுமாறிப் போய் பார்த்தான். 'ஆ...ங் ஆமாமா... இங்கதா' அவன் இரண்டு பைகளை எடுத்துக் கொண்டான். 'அவளும் ஒரு மஞ்சள் பையை எடுத்துக் கொண்டாள். கைலியும் காக்கி ஷர்ட்டுமாக இருந்த கண்டக்டர் 'எறங்குபா, எறங்குபா'' என்று பயணிகளை துரிதப்படுத்தினார். இறங்குகிற பயணிகளுக்குள் வார்த்தைகள். சத்தங்கள்.

'புச்சுக்கப்பா' 'இன்னாபா ஒன்னோட ஒரே பேஜாரு பா'. அந்நிய பூமி என்று உணர்த்துகிற அந்நிய உச்சரிப்புகள். எல்லோரும் இறங்கிய பிறகு கடைசியாக இந்தக் கிளிகள் இறங்கினர். கிளை கிளையாய் ஏற்றமாய் இறக்கமாய் ரோடுகள். 'எந்த வழியில் செல்வது?' மற்ற சுற்றுலா பயணிகள் செல்கிற திசையிலேயே இவனும் நடந்தான். மதிய வெயில் காற்றுசிலுசிலுப்பதால்...சற்றுச் சுகமாகவே இருந்தது. குறுக்காக ஒரு கேட். மறித்துக் கொண்டு ஒரு காக்கி உடுப்பு.

''உள்ளே போவணும்னா டிக்கட் வாங்கிக்கினு போ.''

''-சரி''

''இங்கே பாருங்க... நெசப்பாம்பு மாதிரியே செய்ஞ்சுருக்காக. அடியாத் தாடி'' அவன் தோளைச் சுரண்டி வியப்புக் கூச்சலாய் கத்தினாள். இவன் மெலிதான அதே புன்னகையில்... மலைபோல் உயரமாய் பிரம் மாண்டமாய் நிற்கிற அணைக்கட்டு. இத்தனை பெரிய அணைக்கட்டை ஒரு பொட்டலம் போல மடியில் போட்டு பொத்திக் கொண்டு ஓங்கு தாங்காய் நிற்கிற மலைத்தாய். தொட்டிலைப் போல் வளைவாய்க் கிடந்த சிமெண்ட் ரோடு. இறங்குமுகமான ரோட்டில் முன் பாதம் 'சட் சட்'டென்று சத்தம் கிளப்ப குஷியாக நடந்தாள். சரசு.

ஆங்காங்கே சிறிய சிறிய பூங்காக்கள், வண்ண வண்ணச் செடிகள், கலர்க் கலராய் இலைகள், வானத்து நட்சத்திரங்களாய் பூக்கள். குடும்பங்கள் தனித்தனியாக உட்கார்ந்து, கொண்டு வந்திருந்த பொட்டலங்களை வயிற்றுக்குள் தள்ளிவிட்டு, குழந்தைகளுக்கு ஐஸ்கிரீம் வாங்கித் தந்து ''புதிய உலகில் பிரவேசித்த சிறுமியைப் போல அவள் மனசாலும் உடலாலும் குழந்தையாகி புதிய அழகிலும் யௌவனத்திலும் ஜொலிக்கிற சரசு...

இன்று இரவு இவனோடு சேர்ந்து மரணத்தைத் தழுவப் போகிற சரசு...

கந்தகப் பூமியான காமராசர் மாவட்டத்தில் செவல்புட்டி வட்டாரத்தில்.

வேலி மரங்களுக்கு எமனாகப் பிறந்தவன் ராசேந்திரன். விறகு வெட்டுவது இவனுக்குச் சுவாசத்தைப் போல. கடின உழைப்பு என்கிற களைப்பே காணாமல் இயல்பாகச் செய்வான்.

''வேலி முள் விஷமுள் காலில் குத்தி, நீர்கட்டி, புரையோடிச் செத்தவர்கள் உண்டு. அந்த வேலி முள், இவனைக் கண்டால் நடுங்கும்; அரிவாளும் துரட்டியும் தான் சாதனம். கல்குவாரித் தொழிலாளி கழற்றிப் போட்ட கனத்த பூட்ஸ் காலுக்குக் கவசம். துரட்டி அவன் கையில் மின்னலைப் போலச் செயல்படும். நீள நீள முள்கிளைகளை கவை கவையாக இழுத்துப் போடும் அரிவாளைக் கையில் எடுத்து விட்டால்... உயர உயரமாய் ஓடி வளர்ந்திருக்கிற மரத்தின் கொப்புகளையெல்லாம் நிமிஷத்தில் துண்டு துண்டான விறகாக்கி குவியலாக்கி விடுவான்.

டவுசரும் தலைப்பாகையும்தான். உடம்பெல்லாம் படிந்திருக்கிற வியர்வையில் பொடிப் பொடியாய் வேலி இலைகள் ஒட்டியிருக்கும்.

மூணு குறுக்கம் அளவுக்குக் காற்று நுழையாத நெருக்கத்தில் அடர்த்தியாய் வேலிமரங்கள் அசோகவன மாய்க் கிடந்தாலும்... ஒற்றையாளாகவே நான்கு நாளில் விறகாக்கி விடுவான். புஞ்சை வெறிச்சோடிப் போகும்.

''விறகுதான் முக்கியம். துரட்டியால் இழுத்து ஒதுக்கப்பட்டு மலைமலையாக குவிந்து காய்ந்து கிடக்கின்ற முள் கிளைக்குவியல் எதற்கும் பிரயோஜனப்படாது.

கூலிவேலை கிடைக்காத நாட்களில் கூலிக்காரப் பெண்கள் வயிற்றுப் பாட்டுக்கு என்ன செய்வது? முள்ளுக்கு வருவார்கள். ஒரு கட்டு கட்டிப் போய் விற்றால் பத்தோ பதினைந்தோ கிடைக்கும். அடுப்பு எரியும் வயிறு நனையும்.

இவனிடம் வந்து முள்ளு கேட்டுக் கெஞ்சுவாரகள். கித்தாப்பாக மறுப்பான். அடாவடி செய்து விரட்டுவான். ஒரு

சிலர் கெஞ்சிக் கூத்தாடுவார்கள். கொஞ்சமாய் இளகுவான். சிரிப்பும் நக்கலுமாய் பேசுவான், நெருங்குவான். 'அங்க இங்க' தொட்டுச் சிரிப்பான், ஒன்றிரண்டு படிந்து விடும்.

இவனுக்கு இது பெரிய குற்றமாகத் தெரிந்ததே யில்லை. வெறுமனே வாலிப விளையாட்டு. வயசுக் குறும்பு, இவனது இளமையின் வெற்றி, ஈர்ப்பு சக்தியின் வெற்றி, முகராசி, பட்சி, அப்படித்தான் நினைப்பான். அப்படித்தான் சரசுவும் ஒரு நாள் வந்தாள். கையில் சும்மாட்டுத் துணி, கயிறு, ஒரு தடித்த குச்சி, முகத்தில் ஏகமாய் தயக்கம்.

''மோலாளி''

பயம் கலந்த அந்த அழைப்புக் குரல், அவனுள் ரகசியமாய் ஒலித்தது. திருமபினான், 'முதலாளி' என்று பவ்யமாய் அழைப்பது யார்?

நல்ல இளம் கிளி. சிவப்பான-ஒல்லியான-அழகுக் கிளி.

அவனுள் நரம்புகளில் ஓடிய இன்பச் சிலிர்ப்பு.

''என்னம்மா?''

''அஞ்சாறு முள்ளு எடுத்துக்கிடட்டா?''

''யாரும்மா நீ?''

''நம்ம ஊருதா மோலாளி.''

''நம்ம ஊரா?''

''பூச்சன் மகள், கடைக்குட்டி, தேனி சைடுலே கட்டிக் குடுத்துருந்தாக.''

''பெறகு ஏன், இங்கே இருக்கே?''

''தீர்த்துக்கிட்டோம்''

''எப்ப?''

''பத்து நாளாச்சு''

''எப்ப கல்யாணம் நடந்துச்சு?''

''போன வைகாசியி லெ''

''ஒரு மாசத்துக்குள்ளேயா தீத்துட்டீக? எதுக்கு?''

''அது ஒரு அசிங்கம் பிடிச்ச குடும்பம். 'மோலாளி' துப்புக் கெட்ட மனுசங்க. அப்பனுக்கும் பொண்டாட்டியா யிருன்னு புள்ளையே சொல்றான். த்தூ! அஞ்சாம் நாளே வண்டியேறி ஓடியாந்திட்டேன். அவுக வந்து தீத்துட்டு போயிட்டாக.''

இவனுள் மோகப் பரவசம் வலையில் விழக்கூடிய கிளிதான்... பேரத்தை முறுக்காகத் துவக்கினான். ''இங்க முள்ளெல்லாம் யாரும் எடுக்கக் கூடாதும்மா, கரிமுட்டம் போடுறவுக இந்த முள்ளெல்லாம் வேணும்னு ரேட்டுபேசி அட்வான்சு குடுத்துட்டுப் போய்ட்டாக''

''அப்படியா மோலாளி, அப்பச்சரி''

முகத்தில் மெல்லிய வாட்டம். ஏமாற்ற நிழல். கண்களில் வருத்தம். திரும்பிவிட்டாள். இவனுக்கும் ஏமாற்றம். பகீரென்றது. கெஞ்சுவாள் என்று எதிர் பார்த்திருந்தான்.

''இந்தா, ஏம்மா! வந்தது வந்துட்டே, வெறுங்கை யோட போக வேண்டாம். முள்ளைத் தட்டி எடுத்துக் கட்டு. நா சமாளிச்சிடுக்கிடுதேன்''

''சரி, மோலாளி''

இவனைப் பார்த்தாள். பார்வையில் குளிர்ச்சியாய் ஒரு நன்றி பாஷை. இவனுள் ஏராளமான குருவிகள் 'ஜிவ்' வென்று சிறகடித்தன.

அப்புறம் இவனுக்கு வேலையே ஓடவில்லை. வெட்டிக்கொண்டிருந்த மரத்து நிழலில் நின்றான். தலைப் பாகையை அவிழ்த்து, உடம்பைத்துடைத்துக் கொண்டான். பெருமூச்சுடன் பீடியை பற்ற வைத்துக் கொண்டான். அவனது பார்வை அவள்மீதே நங்கூரமிட்டிருந்தது.

பின்னிப் போய் சிக்கலும் சிடுக்குமாய் கிடந்த குவியலிலிருந்து சிரமத்துடன் முள்ளை குலுக்கி குலுக்கி உருவுகிறாள்.

சிலுப்பிக் கொண்டிருக்கிற இணுக்குகளை குச்சியால் அடித்து நொறுக்கி... நீட்டிப் போட்டிருக்கிற கயிறின் மீது போட்டு... கட்டி முடித்து விட்டாள். நீளமாக பெரிய கட்டு. ஆவரங்கொழையை ஒடித்து தலைபதிக்கிற இடத்தில் சொருகிக் கொண்டாள். நிமிர்ந்து தூரத்தில் நிற்கிற அவனைப் பார்த்தாள்.

'தூக்கிவிடணுமா?''

ஆமா என்பது போல தலையசைக்கிறாள்.

''இங்க வா''

தயங்கினாள். திகைத்தாள். மானின் மருட்சி. அப்புறம் மெதுவாக வந்தாள்.

''வேலை முடிச்சாச்சா?''

''ம். கட்டிக்கிட்டேன்''

''வா இப்புடி, நிழலுக்கு வேர்வையை ஆத்திட்டுப் போ.''

''இன்னும் செமந்து வீடு கொண்டு போய்ச் சேக்கணுமே''

''இதைக் கொண்டுபோனா. இருவது ரூவா கெடைக்கும்?

''அம்புட்டு எப்புடி குடுப்பாக? எட்டோ பத்தோ கிடைக்கும்.''

''சரி... ஒரு மணி நேரத்துலே வேலை முடிஞ்சிருச்சே''

''அது நெசந்தா'' பெருமூச்சில் அயற்சியும் ஆயாசமும் தெரிகிறது, அத்துடன் மெல்லிசாகச் சிரித்தாள், உதடுகளில் அதே நன்றி உணர்ச்சி. மெல்லிய காற்று காதோர ரோமங் களை அசைக்கிறது. வியர்வையைத் தழுவியணைத்துச் செல்கிற காற்றின் சுகத்தில் கிறங்கிப் போய்... கண்களை மூடியவளாய் சிலிர்த்தாள்.

அந்தக் கணம் பேய்க்கணம்.

விருட்டென்று.

அவளது தோளில் இடதுகை வைத்த மாத்திரத்தில், இடுப்பில் வலதுகையைச் சுற்றி இழுத்து அணைத்தான். அவன் எதிர்பார்த்த மாதிரி அவள் துள்ளவில்லை. திமிறவில்லை. கத்தக் கூடச் செய்யவில்லை. பரவசப் பரபரப்பில் முத்தமிட முனைந்தபோது.

எதிர்ப்பட்ட அவளது கண்கள்; அமைதியான அழுத்தமான பார்வை; நில்லடா பொறுக்கி' என்று செவிட்டில் அறைகிற கண்டிப்பான பார்வை 'சீ', நாயே என்று காறித் துப்புகிற நிதானமான பார்வை,

''கையை எடுங்க''

பதற்றமில்லாத அதிகாரத்தொனி. அசந்து விட்டான். பெட்டிப் பாம்பாக கட்டுப்பட்டான். குழம்பிப் போய் விலகி நின்றான்.

''என்ன இது?''

வார்த்தைகள் அவனுள் மாயம் காட்ட, நாக்குத் தடுமாறித் தவித்தான்.

''முள்ளு கட்டச் சொன்னேனில்லே.''

''அதுக்கு இதுதான் ஞாயமா? ஒரு கட்டுவெறகைக் குடுத்துட்டு உங்க தங்கச்சியை அனுப்பி வைக்கச் சொல்லி ஒருத்தன் கேட்டா... அனுப்புருவீகளா?...

'ஏய்... நாக்கை அளந்து பேசு. சாதிகெட்ட பொட்டச்சி நீ.''

''நா சாதி கெட்டவ இல்லெ. இப்ப நீருதா கீ(ழ்) சாதி. நடந்துக்கிட்ட நடத்தையுலும் கொணத்துலயும் கீசாதி. முள்ளு பொறுக்க வர்ற கூலிக்காரப் பொண்ணுகன்னா... ஒமக்கு அம்புட்டு எளப்பம்? தாராளமா கை போடுவீரு இல்லே? எங்களுக்கு மானமில்லையா? சூடு சொரணை யில்லியா? என்னத்தக்கு துணியை உடுத்தியிருக்கோம்? இப்படி மானங்கெட்டு பொழைக்கணும்னா...தேனிக் காட்டுலேயே தாலியோட இருந்துருக்கலாமே...''

தீச்சுடராய் அவள் கக்கிய அக்கினியில் அவன் வேர்கள் வரை கருகிப் போனான். குற்ற உணர்ச்சி மனசில் முள்ளாகக் குத்தி உறுத்த அங்கும் இங்குமாய் பார்வையால் அலைந்தான்.

''சரிசரி... வா. தூக்கி விடுதேன். வீடு போய்ச் சேரு.''

மேலும் வாய் திறக்கப் போனவளை கைச்சாடையில் தடுத்தான்,

''போதும். நல்லமாட்டுக்கு ஒரு சூடு போதும். நா சண்டிமாடு இல்லே''

விறகுக் கட்டை நோக்கி அவள் நடக்க, இவன் பின்னால்...

இவனுள் அவளது வேர்கள். சாதி மண்ணைப் பிளந்து கொண்டு உள் நுழைகிற வேர்கள். இவனைப் பக்குவப் படுத்தி உரமாக்குகிற உறவுவேர்கள்.

சுமையைத் தூக்கி விட்டான்.

''நெதம் இங்கவா. மனசுலே எதையும் வைச்சுக்காதே. நெசமாகவே இன்னிக்கு நீ எம்புத்தியிலே செருப்பாலே அடிச்சுட்ட.''

மனசு குழைந்த அந்தச் சொல், சரசுக்குள் கருணை கசியச் செய்தது. அவனை முழுசாக மனசில் வாங்கி வைத்துக் கொள்வதை போல...ஆழ்ந்த கனிந்த பார்வை பார்த்து விட்டு, பெருமூச்சுடன் நடந்தாள்.

மறுநாளும் வந்தாள். தினந்தோறும் வந்தாள்.

வெறும் வாயை மென்று கொண்டிருந்த ஊர்வாய்க்கு அவலாக இவர்கள் கதை அரச புரசலாக எல்லா இடத்திலும் பேசப்பட்டது.

அவளுக்குத்தான் துன்பம், சோதனை. ஆள் ஆளுக்கு அவளை மிரட்டினர். குத்திக் காட்டினர். திட்டித் தீர்த்தனர். அவனை யாரும் அதட்டவுமில்லை. கண்டிக்கவுமில்லை. மாறாக, குஷியாகக் கிண்டல் செய்தனர்.

''எலேய்... ராசு! ஒங்காட்லே மழைதாண்டா. தேனிச்சிட்டு தேடி வந்து கொஞ்சுதாமே...ம்... அனுபவிச்ச வரைக்கும் ஆதாயந்தானே...'' தாலிக்கட்டி குடும்பமாய் வாழப் போவதாக அவன் சொன்ன போதுதான், சாதிக்காரர்கள் கொதித்துப் போனார்கள். ஒவ்வொருவரும் ஆவேசம் வந்து சாமியாடினர், ''ஏலேய்... ஊர்ப்பகையை உன் முதுகு தாங்காதுடா அக்குருமம் செய்யாதே.''

மொத்தக் கிராமமே அவனை உர்ரென்று பகையோடு பார்த்தது. அவன் வீட்டிற்குள் அன்றாடம் புயல்... பூகம்பம்... வாய் சத்தங்கள்... ஞாயிற்றுக்கிழமை நடக்கிற ஜாதி கூட்டத்தில் ராசேந்திரனை கூப்பிட்டு விசாரிப்பது, அபராதம் போடுவது, கட்டுப்படாமல் திமிறினால் பலாத்காரமாய் பணிய வைப்பது என்று ரகசியமாய் முடிவு செய்யப்பட்டது.

அது கசிந்து, இவர்கள் காதுகளிலும் விழுந்தது.

டி.வி.யில் சினிமா முடிந்தவுடன் ஜாதிக் கூட்டம்.

சரசுவிடம் 125 ரூபாய் இருந்தது. இவனிடம் நானூறு சொச்சம் தேறியது. மொத்த ஊரை ஒற்றை ஜோடியாய் நின்று எதிர்க்க முடியாது. அதற்காக காதலைக் கொல்லவும் சம்மதம் இல்லை. வேறு வழி?

கிளிகள் ஏழுமணிக்கே சிறகு விரித்து விட்டன.

பாலத்தில் இறங்கி ஏறினார்கள். சரசு மகிழ்ச்சியில் பரவசமாகிக் கொண்டிருக்கிறாள். குதிரையில் அமர்ந்த நிலையில் ஒரு வினோத மிருகத்தின் மீது ஈட்டியை சொருகுகிற வீரனின் சிலை. நரிகளும் யானைகளும் மேளம் கொட்டி நாதஸ்வரம் வாசிக்கிற சிலை வட்டம்.

கடப்பாறையால் பாறையைப் புரட்டுகிற உழைப்பாளி சிலை. பெரிய பெரிய கடல் சங்குகள்.

''இங்கபாருங்க குளிக்கிற பொண்ணு. அப்படியே அச்சா செஞ்சுருக்காகளே... அய்ய்! இந்தா ஒரு தோட்டம். பாம்பு இருக்கு. மான் மேயுது... கிளி, புறா அப்படியே அசலா செஞ்சிருக்காகளே... இது என்னங்க. ச்சேய்! துணிமணி இல்லாம ஆணும் பெண்ணுமா...இத்தூ!''

''இது... ஆதாம் ஏவாள் தோட்டம் சரசு''

இன்னும் ஏறுமுகமாய் நடந்தார்கள். சமுதாயக்கூடம். மேட்டில் ஒரு ஓட்டல். இனிமை சூழலின் அமைதியை கொலை செய்து கொண்டிருந்த ஸ்டீரியோ டேப்பின் கர்ணக்கடூர இரைச்சல். உயிருடன் மேய்ந்து கொண்டிருந்த நிஜமானைப் பார்த்தாள். பறவைக் கூடுகளைப் பார்த்தாள். வித விதமான பறவைகள். விநோதமானக் கலர் பறவைகள் ஒவ்வொன்றையும் கை நீட்டுகிறாள். ரசிக்கிறாள்.

''ரசி...ரசி...சரசு...ஆசை தீர சிரி... இருக்கற சிரிப்பையெல்லாம் இன்னைக்கே கொட்டித் தீர்த்துப்புடு நாளக்கு நாம சிரிக்க வேண்டியிருக்காது.

காதலோடும் திகிலோடும் புறப்பட்ட கிளிகள், ஊரார்கள் கையில் சிக்கி விடக்கூடாதே என்கிற பயத்தில் தூரந் தொலைவுக்கு போய் விட வேண்டும் என்ற துடிப்பில் மதுரையைக் கடந்து, திருச்சி வந்து விழுப்புரம் வந்து.

...திருவண்ணாமலை வந்து பிரசித்தி பெற்ற கோயிலை சுற்றிப் பார்த்து சாமி கும்பிட்டுவிட்டு தாலியையும் கட்டிக் கொண்டு, சினிமா சூட்டிங் நடந்த சாத்தனூர் டேமை பார்த்துவிட ஆசைப்பட்டு... இதோ வந்தாய் விட்டது.

காசெல்லாம் கரைந்து விட்டது. இனி இருப்பது பதினேழு ரூபாய் முப்பது காசுதான், ஊர் திரும்ப பணம் இல்லை.

பிறந்த ஊருக்கு போகமுடியாது நுழைந்தால்... கொத்திக்குதற காத்திருக்கிற சாதி வெறி. ரணகளப்படுத்தி விடும். மனித உணர்வுகளை-உணர்வின் அருமைகளை யெல்லாம் பொருட்படுத்தாத குருட்டுச்சாதி வெறி.

காதலோடு வாழ்ந்த நாட்கள் அதன் இனிமைச் சுகங்கள் மிரட்டுகிற கிராமசாதி வெறி-மரணத்திற்கான காரணங்கள் எல்லாவற்றையும் விளக்குகிற நீண்ட கடிதம் ஒன்றை நேற்றே எழுதியாகி விட்டது. இதோ... அண்டிராயர் பையில் இருக்கிறது உலகத்துக்கான உயில். உயிரோடு வாழப் போகிறவர்களின் ஆன்மாவை அறையப் போகிற உயில்.

சந்தோஷத்தின் உச்சத்தில் சஞ்சரித்த, சிறு குழந்தை யின் மனசாகி துள்ளித் துள்ளி விளையாடிக் களிக்கிற சரசுவை ஓரக் கண்ணால் பார்த்தான்.

தாழ்ந்த சாதியில் பிறந்த சாதிமான் கன்று. மாசில்லாத மானஸ்தி அழுக்கைக் கழுவி மனிதனாக்கியவள். சோதனைக் காலத்தில் தோள் கொடுத்த இனிய காதலி. நேரிட்ட இடர்பாடுகளுக்கும் இடையூறுகளுக்கும் நெஞ்சுறுதி காட்டியவள்.

''இவளும் அநியாயமாச் சாகணுமா...

அவனுள் ஆழத்தில் அதிர்கிற உணர்வுகள். குழந்தைகள் ஏறிவிளையாடுகிற ரயிலைப் பார்த்தனர். தேங்கிய அணையைப் பார்த்தனர். கொஞ்சமாய்க்

கிடக்கின்ற தண்ணீரில் ஒன்றிரண்டு படகுகள். ஹோவென்று வெறுமையாகக் கிடக்கிற நீரில்லாத வெற்றிடம். தூரத்தில் மரங்கள். அடர்த்தியாய் மரங்கள். ஆயுள் முழுக்க வெட்டிச் சரித்தாலும் குறையாத மரங்கள். சூரியனை உள் வாங்கிற மரங்கள்.

அணையின் தலையில் இவர்கள் இருப்பதால் தாராளமாய் வருகிற காற்று முழு வேகத்தில் மோதித் தழுவிச் செல்கிறது. மணி ஆறு இருக்கும். ஜெகஜோதியாய் வர்ண விளக்குகள். தேவலோகமாய் மாயமுகம் காட்டுகிற ஒளிமயம்.

''ஏங்க, இன்னும் எம்புட்டு ரூபா இருக்கு?''

'ஏங் கேக்கே?''

'சும்மாதான்.'

''இருவது ரூவாய்க்குள்ளே.''

சட்டென்று வாடிக்கறுக்கிற அவள் முகம் கவலைகளற்ற குழந்தையாக இருந்த அவள் நிமிஷ நேரத்தில் கிழவியாகிப் போனது போல கண்களில் கலக்கம் கனத்த மௌனம் நெஞ்சையழுத்த கவலையோடு அவனை நோக்கினாள்.

''ரூவா இம்புட்டுத்தான் இருக்கா?''

''ஆமா''

நிலைமையின் பயங்கரம்-நிஜத்தின் கொடூரகனம்-மனசை அழுத்துகிறது, உடைந்து தளர்கிற சரசு.

''நம்ப ஊருக்கு போறதுக்கு எப்படியும் நூறுரூவா வேணுமிலே.''

''ஆமா''

''இந்த அயலூர் மண்ணுலே-அத்துவானக் காட்டுலே யிருந்து போகவே முடியாதா? நம்ம ஊரு. நம்ம சனங்களைக் கண்ணாலே பார்க்கவே முடியாதா?''

மௌனத்தில் மண்பார்த்தான். அவள் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் சங்கடப்பட்டான். விறு விறுவென்று வேகமாய் முன்னால் நடந்தாள் சரசு, திரும்பியே பார்க்கவில்லை. வேரறுந்த செடியாய் குலைந்து போய் விட்டாள்.

நாளை பார்க்க முடியாத சூரியன் மறைந்து விட்டான். ஆசையோடு வந்து சூழ்கிற அந்தி இருட்டு.

பஸ் நிற்குமிடம் வந்தவுடன் கால் வலியெடுத்து விட்டது போல் குத்துக்கால் வைத்து உட்கார்ந்து விட்டாள் முழங்காலில் முகம் புதைத்துக் கொண்டாள். முதுகு குலுங்குகிறது.

''சரசு, அழுகிறீயா?''

அவனும் பக்கத்தில் உட்கார்ந்தான், சுற்றிலும் ஆட்கள், பஸ் வந்தால் ஏறக் காத்திருக்கிற சுற்றுலா பயணிகள். ஐயய்யோ... வேடிக்கைப் பொருளாகி விடுவோமா...

இவளை இப்படியே அழவிடக் கூடாது. தேற்றணும், எதாச்சும் சொல்லித் தேற்றணும். என்ன சொல்லி தேற்ற? ஏதாச்சும் சொல்லு.

''ஏம்மா... அழற? அழாதே சரசு, மனசுக்குச் சங்கடமாயிருக்கு. இங்க பாரு, எதுக்காக அழணும்? நாம ஊர்ல சொத்தை வுட்டுட்டு வரலை. காடுகள் கரைகளை

வுட்டுட்டு வரலை. பறிகுடுக்க எதுவுமில்லாத கூலிக்காரங்க, நாம, ஒழைக்குற கூலிகாரனுக்கு எந்த ஊரும் அயலூர் இல்லேம்மா. எல்லா ஊரும் நம்ம ஊருதான்; எல்லா சனமும் நம்ம சனங்கதான். ஒன்னாச் சேந்து உழைக்கப் போறோம். ஒழைச்ச கூலியிலே உசுர் வாழப் போறோம். இதை நம்ம ஊர்லெ செய்ஞ்சா என்ன? திருவண்ணாமலையிலே செய்ஞ்சா என்ன? எல்லாமே ஒண்ணுதான்'' அவளது விசும்பல் சத்தம் மூக்கை உறிஞ்சிக் கொள்கிறாள்.

''சரசு, நம்ம ஊருலே எஞ்சாதிக்காரங்க நம்மரெண்டு பேரையும் கொத்தி புடுங்கக் காத்திருகாங்க. இங்கன்னா... அந்தக் கவலையேயில்ல. பயமில்லாம பாடுபட்டு பாசத்தோட இங்கேயே இருந்துருவோம். என்ன நா சொல்றது- நாயந்தானே?''

நிமிர்ந்தாள் சரசு, கசங்கிக் கிடக்கின்ற முகம், சிவந்து ஈரம் படிந்த விழிகள். வடிந்த கண்ணீரில் மனச்சுமை இறங்கிவிட்டதா... இவன் சொல்லிய நியாயம் உறைத்து விட்டதா...

''நெசமாவே சொல்லிதீகளா? இங்கேயே இருந்துரு வோமா?''

''ம், திருவண்ணாமலை போய்ச் சேருவோம். கூலிச்சனங்க வாழற ஓரங்கள்லே நமக்கு ஒரு குடிசை வாடகைக்கு கிடைக்காமலா போயிரும்? இந்தப் பரந்த ஊர்லே மலைக நெறைஞ்ச இந்த ஏரியாவுலே-கல் ஒடக்கிற வேலை கூடவா நமக்குக் கெடைக்காம போயிரும்? எந்தி... அழாதே... எந்தி''

அவள் முகத்தில் ஒரு மலர்ச்சி தெளிவின் பிரகாசம்.

''பேச்சு மாறமாட்டீகளே?''

''ஊஹூம் மாற மாட்டேன். இது நல்ல மாடு''

பஸ் வந்து விட்டது. வட்டமடித்துத் திரும்பிய பஸ்ஸில் முதல் ஆளாக ஏறி உட்கார்ந்து கொண்டாள்; வாழ்க்கையைப் பற்றிப் பிடிக்கிற வேட்கையின் பரபரப்பு அவளுக்கு. இவனும் ஏறிக் கொண்டான். ஜன்னலோரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

முட்டி மோதிக் கொண்டு ஏறுவதில் சச்சரவிடுகிற பிரயாணிகளின் மனிதக் கூச்சல் எதுவும் இவன் செவிகளில் விழவேயில்லை. இவன் இவனது உலகத்துக்குள்...

சரசுவை தேற்றுவதற்காக இவன் சொன்ன ஆறுதல் வார்த்தைகளே ''இவர்களின் வாழ்க்கைப் பாதைக்கான வெளிச்சமாயிற்று. வாழ்க்கையோடு மல்லுக்கட்ட துணிவு கொண்ட உழைப்பாளிகளிடம் பாலிடாலுக்கு ஏது வேலை?''

டிக்கட்டுக்குப் பணம் எடுக்கிற சாக்கில், அண்-டிராயர் பைக்குள் மடித்துக் கிடந்த நீண்ட உயிலை ரகசியமாய் எடுத்தான், சரசுவுக்குத் தெரியாமல் கிழித்து வெளியே எறிந்து விட்டு திருப்தியுடன் பெருமூச்சு விட்டான்.

மனசு இப்போது இலேசாகிப் போயிருந்தது. சுவாசம் சுலபமாகிவிட்டது.

பாராதது போல பாராக்குப் பார்த்துக் கொண்டிருந்த சரசு, கிழித்துப் போட்ட காகிதத்துாளை கடைக்கண்ணால் பார்த்தாள். மெல்லியதாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள். அர்த்தமுள்ள சிரிப்பு; உதட்டுகள் ஒளிந்து நின்ற சிரிப்பு.

-டிசம்பர் 1990 செம்மலர்

# தாள முடியாத மன்னிப்பு

**பு**ஞ்சைக்கு வந்து சேருகிற வரைக்கும் சுப்புத்தாய்க்கு கோபம் கோபமாய் வந்தது. புஞ்சைக்காரி வேறு வீடு தேடி வந்து சத்தம் போட்டுவிட்டுப் போனாள்.

''வேலை சோலி இல்லாத நேரம். 'வாரேன் வாரேன்'னு வர்றீக வெள்ளெனத்துலே கெளம்புனாத் தானே வேலை நடக்கும்? வீட்லேயே பொழுதைத் தேய்ச்சுக் கிட்டிருந்தா... எப்படி?''

அவள் சொன்ன தோரணையே சரியில்லை. குத்திக் கிழிக்கிற இளக்காரம். அதிகாரம் அடிபட்ட வேதனையோடு நிமிர்ந்த சுப்புத்தாய்க்கு எரிச்சல் பொத்துக் கொண்டு வந்தது. தொண்டைவரைக்கும் வந்து விட்ட வார்த்தைகளை அப்படியே விழுங்கிக் கொண்டாள்.

பொய்யாகச் சிரித்தாள். வேதனைக்கு உறைபோட்டுக் கொண்ட சிரிப்பு சிரிப்பில்லதே. சிரிப்பு.

''இல்லேத்தா... இந்தா கெளம்பிட்டேன்''

''சாப்ட்டீயா?''

''இந்தா... ஒருவாய் அள்ளிப் போட்டுருவேன்''

''சரியாப் போச்சு! இனிமேதான் சாப்பிடணுமா?

நேரம் ஒசக்கே வந்துரும்''

''இல்லேக்கா- இதோ... ஒரு நொடியிலே''

புஞ்சைக்காரி போனவுடன் துரிதமாகச் செயல் பட்டாள். மணசுக்கிடந்து கமறியது. புஞ்சைக்காரி 'விரட்டி'ப் பேசியதை நினைக்க நினைக்க வருகிற கோபம்.

'ரெண்டு மழை பேய்ஞ்சிருந்தா... இப்படியா பேசுவே? காடுகரைகள்லே வேலை ரொம்ப நடக்கும். கூலி வேலைக்கு ஆளுக கெடைக்குறதே, பெரும்பாடாக யிருக்கும். அப்பிடி இருந்துச்சுன்னா... 'அம்மா, தாயே'ன்னு நாடியைப் பிடிச்சுக் கெஞ்சுவே?... மழை தண்ணி யில்லாமப் போகப் போய்-கூலிக்காரிகன்னா... ஒனக்கு அம்புட்டு எளக்காரமாப் போச்சு? ம்...ம்'

ஏதோ அவளே இன்னும் இவள் எதிரில் நிற்பது போல... சுப்புத்தாய் கொதிக்கிற மனசோடு முணங்கிக் கொண்டிருந்தாள்.

சட்டுபுட்டுனு சாப்பிட்டு முடித்தாள். தூக்குச் சட்டியில் மிச்சமுள்ளதைக் கொட்டிக் கொண்டாள். மகளுக்கு மதியத்திற்கு குழம்பு வேண்டுமே! அது இருக்கிறதா என்று சட்டியைத் திறந்து பார்த்துக் கொண்டாள்.

மகள் சுந்தரி இப்போதுதான் பள்ளிக்கூடம் போயிருக்கிறாள். அஞ்சாங்கிளாஸ். மதியம் சத்துணவில் சாப்பிட்டுக் கொள்வாள். சத்துணவில் ஊற்றுகிற சாம்பார் நன்றாக இருக்காது. மஞ்சள் கலந்த பச்சைத் தண்ணீராக இருக்கும். சோறை மட்டும் வாங்கிக் கொண்டு வந்து, சுந்தரி வீட்டில்தான் சாப்பிடுவாள்.

அவளுக்கு ரொம்ப அறிவு. போட்டதைத் தின்னோம் என்றிருக்காது. ருசி பார்ப்பாள். காரம் சரியாக இருக்கிறதா

இல்லையா என்பாள். பெரியமனுஷி போலப் பேசுவாள்,'' உப்பு கொஞ்சம் கொறைச்சலா இருக்கு''

சுப்புத்தாய்க்கு ரொம்பப் பெருமையாக இருக்கும். 'எங்க அய்யா அப்புடியே வந்து பெறந்துருக்காரே' என்று அடிக்கடி நினைத்துக் கொள்வாள். குணம், பேச்சு, சுபாவம் எல்லாம் அப்படித்தான். சுப்புத்தாயின் அய்யா அச்சுத்தான்.

கதவைச் சாத்திவிட்டுக் கிளம்பினாள். மகள் வேகுவேகென்று ஓடி வந்தாள். ப்ளுகலர் பாவாடை. வெள்ளைச் சட்டை. ரெட்டைச்சடை. வலது கையில் பென்சில். 'என்ன இது? இப்படி ஓடியார்றா...?'

பதறிப்போய் கேட்டாள் சுப்புத்தாய்.

''எதுக்கடி இப்ப வாரே''

''அம்பது பைசா வேணும்''

அவளுக்குள் பகீர் என்றது. ஒரு சல்லிக்காசு கூட கையில் இல்லை. என்ன செய்ய?

''எதுக்கடி?''

''நேத்து ஒன்னாலேதானே... நா பள்ளிக்கோடத்துக்கு லேட்டாய்ப் போனேன்? அதுக்கு அபராதம் அம்பது பைசா''

''இப்ப இல்லியே... டி''

''ஐயய்யோ... எங்க வாத்யாரு ரொம்பக் கண்டிப்பு. அடிப்பாரு...''

''சரி... இப்ப கையிலே துட்டு இல்லியே''

''அது என்னமோ எனக்குத் தெரியாது. துட்டு வேணும்.''

கூலிவேலைக்குப் போனால் சாயங்காலம் கையில் பன்னிரண்டு ரூபாய் கிடைக்கும். நாலுமாதத்துக்கு முந்தி வரைக்கும் அரிசி ஒரு கிலோ நாலரை ரூபாய். இப்போது ஏழு ரூபாய். எல்லாச் சாமான்களும் ரெக்கைக் கட்டிக் கொண்டு பறக்கிறது.

முந்தியென்றால்... தாயும் மகளும் சாப்பிட்டது போக... எப்படியும் ரெண்டு ரூபாயாவது மிஞ்சும். சீட்டு கட்டுவாள். இப்ப உள்ள விலைவாசியில் கைச்செலவுக்கே பற்றாமல் போய் விடுகிறது. கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டவில்லை. ராத்திரியிலேயே முந்தியில் முடிவதற்கு ஒன்றுமில்லை. இப்ப துட்டுக்கு எங்கப் போறது?

சுப்புத்தாய் மருகித்தவித்தாள். மனசுக்குள் கையைப் பிசைந்தாள்.

''சாயங்காலமா... தாரேண்டி''

''அதெல்லாம் முடியாது. எங்க சார் அடி கொன்னுருவாரு. வெளியே வெயில்லே நிறுத்திருவாரு''

''ஏங்கிட்டே இல்லையே''

''வேணும்... எப்படியும் வேணும்''

என்று கையை உயர்த்தினாள். சிணுங்கி அழுதாள். கால்களை மாற்றி மாற்றித் தூக்கி வைத்து பூமியை உதைத்தாள்.

அவளுக்குள் புஞ்சைக்காரி வீசிச்சென்ற வார்த்தைச் சாட்டைகள். சுரீரிடுகின்ற வார்த்தைகள்.

கால்கள் துறுதுறுக்கின்றன. மறித்துக் கொண்டு மகள் பார்க்க பார்க்க அவளுக்கு எரிச்சலாக இருந்தது. இல்லாமையின் அவலம் கோபமாய் நிறம் மாற...

''எப்படியும் புலம்பிக்கிட்டு கிட.''

கிளம்பினாள். ஒரு எட்டு எடுத்து வைத்தாள். ஓடி வந்த சுந்தரி காலைக் கட்டிக் கொண்டாள்.' ''அம்மா... அம்பதுபைசாம்மா... குடும்மா... இல்லேன்னா... அடிப்பாரும்மா.''

சொன்னதையே சொல்லுகிற சனியன். நிலைமை புரியாமல் நச்சரிக்கிற தொல்லை. ஆத்தாள் பிழைப்பு அறியாமல், அதிகநேரம் பல்லக்கில் இருக்க ஆசைப்படுகிற நாய் நேரம் காலம் தெரியாமல் வந்து ஆடுகிற கூத்து...

கையில் பிடித்து சுந்தரியை சுண்டி இழுத்தாள். எல்லா வகை அவலங்களும் நெஞ்சில் கொதிக்க அந்தக் கொதிப்பு கையில் இறங்க...

சுந்தரி முதுகில் நாலு சாத்து! அவள் புழுவாய் துடித்து அலறினாள். சத்தம் போட்டு அழுதாள். அதைப் பார்த்துக் கொண்டிருக்க அவளுக்குப் பொழுதில்லை.

மனசுக்குள் புஞ்சைக்காரியின் இளக்காரம். வயிற்றுப் பாட்டுக்கு வழி பார்த்தாக வேண்டிய நிர்ப்பத்தம்.

சுவரோடு ஒண்டிக் கொண்டு அழுது கதறுகிற மகளை எரிச்சலோடு பார்த்து விட்டு நடந்தாள்.

''புள்ளையா... இது? சனியன், வந்து பொறந்து தொலைச்சிருக்கு. படிச்சு பெரீய்ய கலெக்டராகப் போகுதாக்கும்! வக்கத்தவ வயித்துலே பொறந்த கழுதைக்கு, வந்துருக்குற ஆசையைப் பாரு''

மகளை வைதுகொண்டே தெருவில் நடந்தாள், அதே கோபத்துடன் புஞ்சைக்குள் வந்து விட்டாள்.

வீட்டுக்குத் தெற்கில் புஞ்சை, தோலுரிந்த எலும்பாகக் கிடந்தது. ஓடை மணலைப் பறிகொடுத்துவிட்டு பாறையாய்ப் பல்லிளித்த ஓடையைக் கடந்து, ஊருணிக் கரையேறி வண்டிப் பாதையில் நடந்து...

எங்கேயும் ஒரு பச்சை கிடையாது. காய்ந்து கனல் பறந்து கிடந்தது காடு. தீப்பிடித்த மாதிரி இருந்தது. புல்கூட காய்ந்து போய் தேன்நிறச் சருகுகளாய்...

மழை தண்ணீர் இல்லாமல் மாணவரிக் காடு முழுக்க சும்மா கிடந்தது. ஒரு வெள்ளாமைகூட இல்லை. இறவைக் கிணறுகளிலும் தண்ணீர் வரட்டிழுப்புதான், மிளகாச் செடிகள், தாயற்ற பிள்ளைகளாய் காய்ந்து வாடிச் சுருங்கிக் கிடந்தது.

காலை வெயிலே வறண்ட அனலாய் வீசியது. துணுக்கு மேகங்கள் கூட இல்லை. கழுவிப் போட்ட பாத்திரமாய், ஆகாயம்.

அகத்தியில் தூக்குச்சுட்டியை மாட்டினாள். ஏற்கனவே மூன்று பேர் நிறைபிடித்து விட்டார்கள். இவளும் மடியைக் கட்டிக் கொண்டாள். மிளகாய்ப் பழம் பொறுக்கினாள். பழுத்துக்கிடந்த இலைகள். வளரத்தவறிப்போன நோய்ச் செடிகள். செடிகளின் இலைகளுக்குள் ரத்தச் சொட்டுக்களாய் மிளகாய்ப் பழங்கள்.

பொடுபொடுவென்று பொறுக்கினாள். முந்திக் குனிந்து விட்ட அந்தப் பெண்களை எட்டிப்பிடிக்கிற வேகத்தில் பரபரத்தாள். மனசுக்குள் அதே கோபம். அடர்த்தியான கோபம்.

முகமே இறுதிப் போயிருந்தது. சிடு சிடுப்பாக இருந்தது. அடைக்கோழி மாதிரி சீறிச்சினக்கிற சிடுசிடுப்பு.

அவள் முகலட்சணத்தைப் பார்த்துவிட்டு யாரும் பேச்சு கொடுக்கவில்லை. இவளும் யாரிடமும் எதுவும் வாய் விடவில்லை. கனத்த மௌனம். மௌனத்தின் அடர்த்தியில் மைனாக்களின் 'கிச்சட்டி'ச் சத்தம். வேலிக்காட்டுக்குள் செம்போத்துப் பறவையின் கூவல். குயிலின் சாயலான கூவல்.

வேலைத்தளத்தில் இம்மாதிரி மௌனத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது. காலை எட்டு மணியிலிருந்து மூன்று மணி வரைக்கும் உயிரைக் கொடுத்தாக வேண்டும். வாயைப் பொத்திக் கொண்டு எத்தனை நேரம் இருப்பது இதுவே ஒரு பாரமாக அழுத்துமே!

ஆனாலும்...சுப்புத்தாயை ஒதுக்கி விட்டு அவர்கள் மட்டும் அப்படிப் பேசிக் கொள்ள? அது நல்லாயிருக்காதே. ஆனாலும்... வேலைச்சுமை தெரியாமல் இருக்க வேண்டும் என்றால்... கேலி கிண்டல் பேச வேண்டும் சிரித்துக் கும்மாளம் போட வேண்டும். மனசையும் உடம்பையும் லேசாக்க வேண்டும் பஞ்சாக மாற்ற வேண்டும்.

'கம். கம்' என்று எத்தனை நேரத்துக்கு இருப்பது?

சுப்புதாயிக்கு மனம் பூராவும் மறித்துக் கொண்டு நின்ற மகள், காலைக் கட்டிக் கொண்டு அடம்பிடித்த மகள் நிலைமை புரியாமல் தொல்லை செய்த மகள்...

அதே கோப அடர்த்தியில் அவள் உள்ளுக்குள் கொதித்துக் கொதித்து தளதளக்கிற உஷ்ண நினைவுகள் மனசு கனத்துப் போயிருந்தது. மூச்சுத் திணறியது.

அதே மூச்சுத்திணறல், சக வேலைக்காரர்களுக்கும்...

ஒரு நிரை முடிந்தது. மடியில் கிடந்த பழத்தை சாக்கில் தட்டிவிட்டு அடுத்த நிரைக்குள் நுழைகிறபோது...

யார் யார் எந்த எந்த நிரையில் நிற்பது என்ற பிரச்னை நாலு வார்த்தைகள் பேசிக் கொண்டனர், எல்லோருக்கும் ஒரு ஜன்னல் திறந்த மாதிரித் தோன்றியது வாய் கிடைத்து விட்டது. மனசுக்குள் காற்று அடிக்கிறது.

''என்ன சுப்புத்தாயி ஒரு மாதிரியிருக்கே?''

''ஒன்னுமில்லே''

''வந்ததுலேயிருந்து பாக்கேன், என்னமோ போல இருக்கீயே... ஏதாச்சும் சண்டை சத்தமா?''

''ம்ச்ச்சூ! என்ன எழவுச்சண்டை அது ஒன்னுமில்லே. வவுத்தைக் கழுவ வக்கத்த கழுதைக்கு ரோஷம் மானம் எப்படி இருக்கும்? ரோஷங்கெட்ட ஏழை நாயிக்கு என்ன சண்டைசத்தம் வரப் போவுது?''

''சடைச்சுப் புளிச்சுப்போயி பேசுதீயே... என்ன விஷயம்?''

சுப்புத்தாயிக்கும் மனப்பாரத்தை எங்காவது இறக்கி வைத்தால் தேவலை என்று தோன்றியது. மனத்திணறல் குறையும்.

மெல்ல மனசைத் திறந்தாள்.

''வேலைக்குப் போவணும்னு 'பரபரன்'னு பெறப்புட்டு கிட்டுருந்தேன்னா... அப்பப்பாத்து எம்மக ஓடியாந்தா''

அவள் மனம் லேசாயிருந்தது. பக்கத்தில் பழம் பொறுக்கியவள் 'உம்'கொட்டிக்கொண்டே வந்தாள், ''அடிப்பாதகத்தி'' என்று சீறினாள்.

'அப்பவும் அந்த சின்னப்புள்ளையை-பச்சை மண்ணைப் பொட்டு அடிப்பாகளாக்கும்? நீயெல்லாம் ஒரு பொம்பளைதானா?''

''என்ன செய்யச் சொல்லுதே...? அன்னாடம் பாடுபட்டு வவுத்தை கழுவதே பெரும்பாடா இருக்கு. ஆத்தாடி அம்மாடின்னு ஆகிப்போகுது. போதாக்குறைக்கு வேற வேற இச்சிலாத்திக. இதுலே பெத்தபுள்ளையும் எதிரியா வந்து நின்னு மறிச்சிக்கிட்டா...''

''அதுக்காக? அடிச்சிடுறதா? சின்னப்புள்ளை. அதை அடிச்சுப் போட்டுட்டு வந்துருக்கீயே... நீயெல்லாம் ஒரு மனுசியாக்கும்? ச்சே! அந்தப்புள்ளை அங்க எப்படி தவிச்சுக்கிட்டு கிடக்கோ... பாவம்!''

சுப்புத்தாயின் கோபம் ஒரு மாயம்போல ஆகிவிட்டது. வெளிச்சத்தில் மறைந்த இருளாகிவிட்டது. அடிவயிற்றுக்குள்ளிருந்து பீறிட்டுக் கொண்டு வந்த ஏதோ ஒன்று நெஞ்சுக்குள் விக்கிக் கொள்கிறது.

ஒரு தவிப்பு. குலைநடுக்கம் ரத்தப் பிறப்பு, தன் வடிவம் அய்யாவின் குண அச்சு.

''அந்தப் புள்ளையை கொழுந்தைக் கிள்ளுகிற மாதிரி அடிச்சுப் போட்டுட்டு வந்துட்டேனே...ஏங்கையிலே புத்து பெறப்பட! இப்ப... சுந்தரி எப்படித் தவிச்சுக் கிட்டிருக் காளோ...''

வக்கரித்துக் கிடந்த பிழைப்புக்குள் முடங்கிக்கிடந்த அம்மா என்கிறவள், இப்போதுதான் மெல்ல எழுந்து வெளியே வந்தாள்.

''நம்ம சங்கடம் நம்மளோட. நம்ம சங்கடம் நமக்கே புரியலை. அதை என்னத்தைக் கண்டது? அதைப்போய் வைஞ்சுபேசுனேனே... என் நாக்குலே அந்நேரம் என்ன சனியன் வந்து உக்காந்துச்சோ...''

என்று உள்ளுக்குள் புலம்பினாள். சத்தமில்லாமல் கதறினாள். அடிபட்டு அலறிய மகள், துடித்துச் சிதறிய பெற்றமகள். மிதிபட்டு ஒடிந்த மிளகாய்ச் செடியாய் வாடிக்கிடந்த மகள்...

நினைக்க நினைக்க மனசு கிடந்து பதைத்தது. மனம் எதை எதையோ நினைத்து மாய்ந்தது.

எல்லாப் பிள்ளைகளும் பார்க்க... சுந்தரி மட்டும் தலை குனிந்து கிடக்கிறாள், வாத்தியார் அதட்டுகிறார். குச்சியை விறைப்பாக நீட்டிக் கொண்டு அதட்டுகிறார். பேந்த பேந்த விழித்துக் கொண்டு சுந்தரி. அவள் கண்களில் மருட்சி.

குச்சி சுளீர் சுளீரென்று அவள் தலையில் சத்தமாய் மோத...

சுப்புத்தாய்க்கு உயிரையே பிடுங்கிப் போடுகிற மாதிரியிருந்தது. அடி வயிற்றில் ஒரு சூன்யம் பகீல் என்கிற உணர்வு. மிளகாய்ப் பழம் பொறுக்க முடியாமல் நடுங்குகிற விரல்கள்.

நடுக்கத்தில் ஒரு செடியை ஒடித்து விட்டாள்.

புஞ்சைக்காரி பார்த்தால்... நாற வசவு வைவாளே என்ற பதற்றத்தில் புழுதிக்குள் போட்டு அந்தச் செடியை மறைக்க முயன்றாள்.

மதியத்துக்கு மேலாயிற்று. கேலியும் கிரிப்புமாய் ஒரே பேச்சு. சினிமாப் பேச்சு. தெருப்புரணி. அடுத்த ஊரில்

கள்ளச்சாராய வியாபாரிக்கும், ஊர் ஜனங்களுக்கும் வந்த சண்டை போலீஸ் சுற்றி வளைத்துக் கொண்டு ஊர் ஜனங்களை அடித்த அடிகள்...

இப்படி என்ன என்னவோ பேச்சுக்கள், எதிலும் ஒட்டமுடியாமல் சுப்புத்தாய்.

சாப்பிட உட்கார்ந்தனர். மஞ்சனத்தி மரத்தின் கஞ்சத் தனமான நிழல். கோடை வெயிலை உக்கிரமமாக்குகிற வறண்ட காற்று. மரத்தடியில் பொட்டு பொட்டாய் பறவை எச்சங்கள்.

சுப்புத்தாயும் தூக்குச் சட்டியைத் திறந்து கொண்டு உட்கார்ந்தாள். நினைவெல்லாம் சுந்தரி, மகளின் வாடிச் சுருங்கிய முகம்.

சோறு வாங்கிக் கொண்டு குழம்புக்கு வீடு வந்திருப்பாளோ? அம்மா மேலுள்ள கோபத்தில் வராமல் இருந்திருப்பாளோ? சத்துணவின் மஞ்சள் தண்ணிச் சாம்பாரை பிடிக்காமல் சோற்றை வேறுபிள்ளை வட்டிலில் கொட்டியிருப்பாளோ? வெறும் வயிற்றுடன் காத்து கிடப்பாளோ...

இருக்கும். அப்படித்தான் இருக்கும். ரொம்ப ரோஷக்காரி. அய்யாமாதிரி குணம். சுருக்கென்ற சொல் கேட்க மாட்டாள். ரோஷத்தில் ரொம்ப வீம்பு செலுத்துவாள்...

சுப்புத்தாயிக்கு சோறு இறங்க மறுத்தது. ஒரு மனசாக இல்லை. அலை பாய்ந்து வந்தது. எங்கோ வெறித்துப் பார்த்தாள். அவள் சாப்பிடாமல் இருப்பதைப் பார்த்த சகவேலைக்காரிகள், கடிச்சிக்கிடையை நீட்டினர்.

''இந்தா... சுப்புத்தாய், சீனியவரைக்காய் வத்தல்''

''துவையல் வேணும்னா, கொஞ்சந்தரட்டா?''

''இந்தா... சோத்தையள்ளி உள்ளே தள்ளு வேலை கிடக்கு வெருசா முடிக்கணும்''

அதற்குள் இன்னொருத்தி அவளை மடக்கினாள்.

''எதுக்கு பறக்கே?''

''எதுக்கா? டி.வி.யிலே சினிமா பார்க்கவேண்டாம். இன்னைக்கு?''

''சனிக்கெழமையிலே ஒனக்கு எந்தப் புருஷன் சினிமா காட்டுதான்?''

''அப்ப... இன்னிக்கு சனிக்கெழமையா...?''

ஒரு கூட்டுச் சிரிப்புச் சத்தம். சுப்புத்தாயிக்கு உயிரெல்லாம் மகளிடம் கிடக்க, கட்டையாக இங்கே கிடந்தாள். உண்ண மனசேயில்லே. சுற்றியுள்ளவர்களின் நிர்ப்பந்தத்தில் நாலுகை அள்ளி உள்ளே போட்டு விட்டு எழுந்தாள்.

ஊருக்குள் ராஜபாளையம் பஸ் மூன்று மணிக்கு வரும். வரும்போதே ஹாரன் சத்தம், காட்டுக்கத்தலாய் ஒலிக்கும். சுற்றியுள்ள காடுகளுக்கெல்லாம் அது கேட்கும்.

அந்த பஸ் வந்து விட்டால்... வேலை விடுகிற நேரம்.

பொறுக்கிய மிளகாய்ப் பழங்களையெல்லாம் சாக்கில் தட்டினர். மூன்று சாக்குகள் திமிரத்திமிர நிரம்பியிருந்தது. கூட்டிப்பிடித்து சணல்கயிற்றால் கட்டிப்போட்டனர். புஞ்சைக்காரர் பழச்சாக்குகளை தூக்கிக் கொண்டு போக மாட்டுவண்டியோடு வந்து சேர்ந்தார்.

சுப்புத்தாய் பரபரத்துக் கிளம்பினாள். மனம் பூராவும் மகளிடம். உயிரைப் பிடிக்கிற ஆவேசத்தில் நடையை எட்டிப் போட்டாள்.

மாசிமாச வெயிலோ... எதுவும் அவளை உறைக்கவில்லை. நிமிர நேரமில்லாமல் குனிந்தே பழம் பொறுக்கியது குறுக்கெல்லாம் வலி எடுக்கிறது. இடுப்பைச் சுற்றி ஒரே குடைச்சல் ஆனால்...

அதையெல்லாம் உணரவோ ஆயாசப்படவோ- நினைப்பில்லை. வெறிபிடித்தவளைப் போல ஊரை நோக்கி-உயிரைத்தழுவ ஓடிவந்தாள்.

வீட்டுக்கு வந்தால் உஸ்ஸென்று உட்கார முடியாது. நேரமிருக்காது. வீடெல்லாம் குப்பையும் கூளமுமாய்க் கிடக்கும், கோழிப்பீயாக நாறிக் கிடக்கும். சட்டி பானையெல்லாம் கழுவாமல் கிடக்கும். இன்றைக்கு மதியக் கரண்டு. போய்த்தான் தண்ணீர் எடுக்க வேண்டும்... சாகணும் போலிருக்கும்.

வேலைகள் தயாராகக் காத்திருக்கும். அப்புறம் கடைக்குப் போகணும். சோறு ஆக்கணும்.

வீட்டுக்கு வந்தாள். சாத்திக்கிடந்த கதவைத் தள்ளினாள், வீடு சுத்தமாகத் தூத்துக்கிடந்தது. சட்டிபானையெல்லாம் கழுவிச் சுத்தமாக...

தொட்டியெல்லாம் தண்ணீர் எடுத்து நிரம்பியிருந்தது.

அவளுக்கு ஒரே ஆச்சரியம் 'என்னடா இது!'

சுந்தரியைக் காணோம். மனசு கிடந்து பரபரத்தது. தவித்தது. வீட்டு வேலைகள் முடிக்கப்பட்டிருந்த நேர்த்தி லட்சணம். அவளுள் ஏதோ நெருடியது.

மகளைத் தேடிக் கொண்டு பார்வை அலைந்தது. தெருவில் வந்து எட்டிப் பார்த்தாள். நாலாவது வீட்டில், அவளுடன் கூடப்படிக்கிற சிறுமி.

அங்கே போய் எட்டிப்பார்த்தாள்.

மண்டி போட்டு படுத்துக் கொண்டு, நோட்டுகளை விரித்துப் போட்டுக் கொண்டு எழுதிக் கொண்டிருந்தாள், சுந்தரி.

அரவம் கேட்டு திரும்பினால்... அம்மா.

''வந்துட்டீயா...ம்மா?

''ம்''

அவள் நோட்டுகளை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். அவள் பின்னாலேயே வந்தாள் சுப்புத்தாய்...

''என்னடி... அதுக்குள்ளேயா பள்ளிக்கோடம் விட்டுட்டாக?''

''ம்... இன்னைக்கு மதியவரைக்குத்தானே?''

''சாப்ட்டீயா?''

''ம்.''

''இந்த வேலையெல்லாம் நீ தான் செய்தீயா?''

''ஆமா...''

''எதுக்குடி?''

''நீ வேலைக்குப் போய்ட்டு அசந்து போய் வருவே, அதான்.''

வீட்டுக்குள் வந்து உட்கார்ந்தாள் சுப்புத்தாய் சுந்தரி குடிக்க தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். வாங்கி 'மடக் மடக்'கென்று குடித்தாள். நாடியில் வழியும் நீர்க்கோட்டை துடைத்துக் கொண்டே மகள் முகத்தை ஆழ்ந்து பார்த்தாள். பார்வையில் மனசின் கனிவு. குற்ற உணர்வின் உறுத்தல்.

சுந்தரி இயல்பாக இருந்தாள். சலன மற்றிருந்தாள். காலையில் நடந்த சம்பவத்தின் அடையாளம் எதுவும் முகத்தில் தெரியவில்லை.

சுப்புத்தாயிக்குள் பூரான் ஊர்கிற ஓர் உணர்வு. ''ஏம்மா கண்ணு, வாத்தியாரு ஒன்னை அடிச்சாரா...?''

கேட்கும்போதே குரல் நடுங்கியது. சுப்புத்தாயிக்கு பயத்தின் குளிர்ச்சிப் பரவல்.

சுந்தரி பூப்போல் வெடித்துச் சிரித்தாள். குஷியும் கும்மாளமுமாய் குதித்து குதித்து கைதட்டிச் சிரித்தாள்.

''ஐய்ய்... இன்னைக்கு எங்க சார் வரலைல்லே... பாடமே நடக்கலேல்லே'' என்று பாட்டு படிக்கிற மாதிரி இசையோடு குதித்தாள். பூச்செண்டாய் குலுங்குகிற மகளைப் பார்க்க பார்க்க சுப்புத்தாயிக்கு என்னவோ போலிருந்தது.

அந்தச் சிறுமி எல்லாவற்றையும் மறந்து விட்டாள். கோபமேயில்லை. விசனமில்லை. முகத்தைத் தூக்கிக் கொண்டு உம்மென்றிருக்கவில்லை.

என்றும் போல இயல்பா யிருக்கிறாள்.

அதுவே இவளது குற்ற உணர்வை அதிகமாக்கியது. சொருகியிருந்த முள்ளைப் பிடுங்குகிற மாதிரி வலித்தது.

மகளையே பார்த்துக் கொண்டிருந்த சுப்புத்தாயிக்கு நெஞ்சு கனத்தது. திணறியது கண்ணெல்லாம் நெறு நெறுக்க நீர் கோர்த்து குபுக்கென்று அழுதுவிட்டாள்.

சிரிப்பையும் குதிப்பையும் நிறுத்திவிட்டு அம்மாவைப் பார்த்தாள் சுந்தரி. குமைந்து குமைந்து சத்தமில்லாமல் அழுகிற அம்மா...

''ஏ... ராசாத்தி... ஏந் தங்கப்பெட்டி, கெதிகெட்ட இந்தப் பாதகத்தி வவுத்துலே வந்து எதுக்குத்தான் பெறந்தீயோ...'' என்று கதறிக்கொண்டே புலம்ப...

அம்மாவின் அழுகையில் திகைத்துப் போய் நெக்குருகிப்போன சிறுமி...காரணம் புரியாமல் ''ஏம்மா... என்னம்மா'' என்று கேட்டாள்.

அம்மாவின் அருகில் வந்து உரசிக் கொண்டு நின்ற சுந்தரி, தன் முகத்தையே கனிவுடன் பார்க்கிற அம்மாவின் முகத்தைப் பிஞ்சுகரங்களால் தழுவினாள். சேர்த்து அணைத்துக் கொண்டாள். மகளின் ஸ்பரிசம், நெஞ்சுக்குள் இறங்க... அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டாள்.

அம்மாவைச் சுழற்றியடிக்கிற சூறாவளி எதுவென்று புரியாமல் நிற்கிற சிறுமியே தாயாகவும், தாயே பிள்ளையாகவும் இப்போது தெரிகிறது.

-மே. 1992 செம்மலர்

# பாரம்

அருங்கோடை. சித்திரைக்குப் பிறகு மழையின் முகமே மண் பார்க்கவில்லை. பயமற்றுப்போன குடிகாரனைப்போல வெட்கமில்லாமல் கூச்சலிடுகிற ஆடி மாதக் காற்று. கூரைமுகடுகளில் கை வைத்து கூத்தாடுகிறது. மட்டு மரியாதையில்லாமல் முகத்தில் அறைந்து, மேல்த்துண்டை உருவிக் கொண்டு ஓடுகிறது.

தென்மேற்கில் எந்நேரமும் சாரல் மேகம் கட்டிக் கொண்டு நிற்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் ஓயாத சாரல் மழை. ஆனால் இங்கு வறண்ட ஊதக்காற்று மட்டும்தான். வெயில் இல்லாத காற்று. கரிசல் காட்டு மனிதர்கள் மீது என்ன கோபமோ, கொதிப்போ... காற்று புழுதியை வாரியிறைத்துச் சாபமிடுகிறது.

பொழுது அடைந்து கொண்டிருக்கிற நேரம். வானம் தெரியாமல் மூடி மறைக்கிற சாரல் மேகத்தைப் போலவே நிறம் மாறிக் கொண்டிருக்கிற இருட்டு. டீக்கடைக்கு வெளியே காலை நீட்டி உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கிடக்கிற முனிசாமிக்குள் கிடாக் குட்டிகள் கத்துகிற சப்தம் ஒரு இணுக்கு கூட வீட்டில் கொழை இல்லை.

காலை நேரம் முழுவதும் ஓடைக்காட்டில் தான் துரட்டியோடு அலைந்தான். வேலிக்காய்களைச் சேகரித்தான். மதிய வரைக்கும் குட்டிகளுக்கு அது தீனியாயிருந்தது.

அதிலிருந்து குலை பட்டினிதான். மதியம் சாப்பிடப் போன இவனை அந்தக் குட்டிகள் பார்த்த ஏக்கப் பார்வை, 'எங்களுக்கு ஒன்னும் இல்லையா' என்று கேட்டு நச்சரித்த பார்வை.

கொழைக்கு எங்கே போறது? களவாடத்தான் வேண்டும். அதற்காகத்தான் பதிபோட்டு இங்கே உட்கார்ந் திருக்கிறான். கொழை திருடுவது என்றால் சாதாரணமா? அதற்குச் சமயம் வேண்டுமே! நேரம் வாய்க்கணுமே!

ஏற்கனவே வீட்டில் பெரிய கிடாக்கள் இரண்டு கிடந்தன. நல்ல வளர்ப்புக்கிடா. செழிக்க செழிக்க கொழை தின்று வளர்ந்த கிடாக்கள். வைகாசி மாதக் கடைசியில் தளவாய்ப்புரம் ஏவாரிகள் வந்து கூடுதலாக பத்து, இருபது என்று விலை வைத்து உருப்படிகளைப் பொறுக்கினர். இதுதான் சமயம் என்று இவனும் விற்று விட்டான். வஞ்சகமில்லாத விலை ஆயிரத்து எழு நூற்றுக்கு ஐந்து ரூபாய் குறை. இனிக் குட்டிகள் பிடிக்கக் கூடாது. கோடை. வளர்க்கமுடியாது. கொழை, குதிரைக் கொம்பாகி விட்டது.

இதெல்லாம் சொன்னாலும் மீனாட்சி விடுகிறாளா? சே!

காடுகரைகளிலிருந்த பச்சைப்பசப்புகளை கோடை வெயிலும் காற்றும் தின்று தீர்த்து விட்டன. கரிசல் காடுகளில் பயிர் பச்சையெல்லாம் ஓய்ந்து பழங்கதையாகி... உழுது போட்டு விட்டனர் சம்சாரிகள். இறவைத் தோட்டங்களிலும் பருத்தி ஓய்ந்து விட்டது. உழுது ஆறப் போட்டு விட்டனர். மிச்சமிருக்கிற ஒன்றிரண்டு தோட்டங்களிலும் கதை கந்தலாகிக் கிடக்கிறது. கோடை மழையில்லாமல் அகத்திகள் கூட நெஞ்சுவற்றிப் போய் இணுக்கு இணுக்காக இலைகளை ஆட்டிக் கொண்டு குச்சியாக நிற்கின்றன.

எங்கு போய் கொழை ஒடிக்க? எப்படி குட்டிகளைக் காப்பாற்ற? பாவம். அதுக வாயில்லா ஜீவன்கள்...

இதையெல்லாம் பொருட்படுத்தி நினைத்தாளா, மீனாட்சி? ஒத்தைக் காலில் நின்றாள். ''குட்டி ரெண்டு பிடிச்சே யாகணும்'' என்று நச்சரித்தாள்.

''இப்ப ரெண்டு பிடிச்சு விட்டா வேலிக்காய்களைப் போட்டாச்சும் வளர்த்துடலாம். மார்கழி மாதத்துக்குள்ளே பெரிய கிடாக்களாயிரும். அந்த நேரத்து வெள்ளாமைச் செலவுக்கு கை கொடுக்கும்.''

''அது சரி மீனாட்சி, நீ சொல்லறது ஞாயந்தான். இந்த அருங்கோடையிலே எப்படி குட்டிகளை வளர்க்குறது? நா வேலைக்குப் போறதா. வேலிக்காய்க்கு அலையறதா சொல்லு?''

''அதெல்லாம் வளர்த்துடலாம், ரெண்டு சின்னக் குட்டிகளுக்கு எரை பார்க்க முடியாமலா போயிரும்? மார்கழியிலேயே முளகாய்ச் செடிக்கு மருந்தடிக்கணும். உப்பு போடணும். அதுக்கெல்லாம் அஞ்சு வட்டிக்கு கடன் தானே வாங்கணும்? ஒன்னுக்குமத்த பயகிட்டே போய் பல்லையிளிச்சுக்கிட்டுத்தானே நிக்கணும்? எதுக்கு அந்தப் பொழப்பு? இரண்டு குட்டிக வீட்டுலே வளர்ந்து நின்னா... அப்படிப்பட்ட நேரத்திலே வித்துத் துட்டாக் கிடலாமே.''

ஆலோசனை சொல்வதில் மீனாட்சி அந்தக் காலத்து மந்திரி. நினைத்ததை உத்தரவாகி செயல்படுத்துவதில் ராணி. இரண்டு குட்டிகளைப் பிடித்துக்கொண்டு வந்து கட்டினான்.

திருவேங்கடம் சந்தையில் நானூத்தி தொண்ணூறுக்குக் கிடைத்தன.

குட்டிகள் இரண்டும் காயடித்துத் தேறிய நல்ல குட்டிகள், நல்ல நிறம். அடிவயிற்றில் வெள்ளை. மிச்ச இடமெல்லாம் மினுமினுக்கிற கறுப்பு நல்ல தினுசான இரட்டைக் குறுக்கு. குட்டையான கால்கள். எலும்புத் தாக்கான குட்டிகள். சத்துப் பிடித்தால் ரொம்ப அம்சமாயிருக்கும்.

'தாயைக் கழிச்சாலும் தண்ணீரைக் கழிக்கக்கூடாது' என்கிற சொல்வடை தெரிந்த குட்டிகள். எந்த இரையையும் கழிக்காது. எதையும் மடக்கிப் பிடித்து உள்ளே தள்ளிக் கொள்ளும்.

இதுகளுக்கு இரை பார்ப்பதே பெருங்காரியமாக இருக்கிறது. களவாணிப் பயலாகி சிறுமைப்பட வேண்டி யிருக்கிறது. இருக்கிற இறவைத் தோட்டங்களில் ஒன்றிரண்டு தான் நல்ல தண்ணீர். நல்ல தண்ணீர் பாய்கிற புஞ்சைகளில் தான் கொழை தாராளமாய் கொப்புக் கொப்பாய் வெடித்து வளரும்.

முனியசாமிக்கும் இருப்பது அரை குறுக்கம்தான்.

கோவணத்துணி போல கொஞ்சமாய் நிலம். அதுவும் உப்புத் தண்ணீர்... வாயில் வைக்க முடியாது. வேப் பெண்ணையாய்க் குமட்டும். உப்புத் தண்ணி பாய்ந்து பாய்ந்து உவர் பொங்குகிற புஞ்சையில் மழையில்லா விட்டால் தீப்பிடித்த மாதிரிதான். பருத்திச் செடிகளெல்லாம் பட்டுப் போய் விட்டன. அகத்தியும் செத்துப் போயிற்று. வேறு என்ன செய்ய? எல்லாவற்றையும் பிடுங்கி துப்பர வாக்கி, நிலத்தை உழுது போட்டாகிவிட்டது.

முத்துக்காளை புஞ்சையில்தான் இந்தக் கோடை யிலும் அகத்திக்கொழை அசோக வனமாய்க் கிடக்கிறது.

நல்ல தண்ணீர். அள்ளிக் குடித்தால் நெஞ்சுவரை இனிக்கும். வெள்ளாமைக்கேற்ற தண்ணீர் பாயப்பாய மண் உரமாகும். பயிர் செழிக்கும், கோடையை ஜெயிக்கிற உரமான தண்ணீர், இந்தப் புஞ்சையில்தான் இவன் இரண்டு நாளாகக் கொழை ஒடிக்கிறான்.

ஆளில்லாத நேரம் பார்த்து, கண் மயக்குகிற இருட்டில் கொழை ஒடிக்கிறான். களவுதான். வாயில்லா ஜீவன்களின் பசிக்கதறலைக் கேட்கச் சகியாத கருணையினால் செய்கிற களவு. இப்போதும் அதற்காகத்தான் பதிபோட்டு உட்கார்ந்திருக்கிறான். முத்துக்காளை மதிய பஸ்ஸில் ஏறிப்போனதைப் பார்த்து மனசில் குறித்துக் கொண்டான். இன்னும் வந்திருக்க மாட்டான். பிள்ளைகள் புஞ்சையில் இருப்பார்கள். இருட்ட ஆரம்பித்து விட்டால் அவர்களும் வந்து விடுவார்கள். இந்த வழியாகத் தான் அந்தப் பிள்ளைகள் வீடு போகும். அவர்கள் வந்து விட்டால்...

இவன் புறப்பட்டு விடுவான்.

புஞ்சைக்குள் நுழைந்து விட்டால்.

நொறுக்-நொறுக்-நொறுக்

அஞ்சு நிமிஷத்தில் காரியம் முடிந்து விடும். தோள் நிறைய கொழையோடு வீடு போய் விடலாம். குட்டிகளின் வயிற்றுப்பாடு கழியும். இவனது மன நமைச்சல் தற்காலிகமாய்த் தீரும்.

வடக்கிலிருந்து முள்ளுக்கட்டுகளுடன் வருகிற கூலிப்பெண்கள். செம்மறியாடுகளை பற்றிக் கொண்டு வருகிற சிறுவர்கள். ராசபாளையம் பஸ் வந்து ஆட்களை இறக்கி ஏற்றி விட்டு புறப்படுகிறது. கண்மாய்க்கு மண்

அடிக்கச் சென்றிருந்த டக்கர், கூலிக்காரர்களோடு லொடலொடத்து ஊருக்குள் நுழைகிறது. இவனுக்குள் பொறுமையற்ற நிலை. முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பது போலிருக்கிறது. சட்டென்று காரியம் முடிந்தால் தேவலையே என்று ஓடுகிற நினைவு...

மேகத்து வெளிச்சம் மட்டுமே மிச்சமாக இருக்கிறது. புழுதி வாரியிறைக்கிற காற்று இருட்டையும் கொண்டு வந்து சேர்க்கிறது. மெல்ல எழுந்தான் முனியசாமி. பெரு மூச்சுடன் புறப்பட்டான். உருவிக் கொண்டு ஓட எத்தனித்த காற்றோடு சண்டை பிடித்து துண்டை இழுத்து மூடிக் கொண்டான்.

எரிச்சலோடு திட்டிக் கொண்டான்: ''சனியன் பிடித்த காற்று, நாசமாய்ப் போக! மழையைக் கண்ணுல காணவிடாம விரட்டுற காத்து சே!

ஓடைக்குள் இறங்கினான். காற்றுக்குப் பேயாட்டம் போடுகிற வேலி மரக்கிளைகள் உடம்பைக்கீறி விடக் கூடாதே என்று ஒதுங்கிப் போகிறான். மனசுக்குள் முள்ளின் உறுத்தல். குற்ற உணர்வின் நமைச்சல். திக்திக் கென்று அடித்துக் கொள்கிற மனசு. உளைச்சலெடுக்கிற மனசு.

'வாயில்லா ஜீவன்களுக்காக இப்படி இருட்டுற நேரத்திலே குள்ளநரியாத் திரிய வேண்டியதாகிப் போச்சே. திருட்டுப்பய பொழப்பாகப் போச்சு. இது ஏம்புட்டு அசிங்கம்- வெளியே தெரிஞ்சுட்டா கேவலமாப் போயிறுமே. நம்பிப் பழகுற நம்ம மனுசங்க புஞ்சைக் குள்ளேயே திருட்டுப் புத்தியோட நுழைய வேண்டிய திருக்கே.'

வெறும் கையோடு போனால் மீனாட்டி வாயால் கிழிப்பாள், வார்த்தைகளால் குத்தித் தைப்பாள். ''துப்புக்

கெட்ட மனுசன் குட்டிக்கு அஞ்சாறு கொழை ஒடிச்சுட்டு வரணும்னு நெனப்பு இருக்கா? நேரத்தோட நாம வாயிலே கொட்டிக்கிடத் தெரியுது. வாயில்லா ஜீவனுங்க என்னத்தைத் திங்கறது? அந்த அறிவு கொஞ்சமாச்சும் இருக்கா?''

சட்டியில் போட்டு ஆளை வறுத்துக் கொட்டி விடுவாள்.

அவளுக்கு பயப்படாவிட்டாலும் குட்டிகளை கொழை வேண்டும் என்பது நியாயம்தானே! வாயில்லா அந்த ஜீவன்களை எப்படி பட்டினிபோடுறது? ஆனா அருங் கோடையிலே கொழை என்பது லேசா? தங்கம் போல அரிதாகிப் போச்சே...

இது மீனாட்சிக்கு தெரியாமலா இருக்கும்? தெரிந்தாலும் விரட்டுவாள், விரட்டினால்தானே இவன் வெருளுவான். ஊரான் புஞ்சையிலே கால் வைத்து நுழைகிற துணிச்சல் வரும்!

இது துணிச்சலா வெளிச்சத்துக்கு, பிள்ளைகளுக்குப் பயந்து நடுங்கி இருட்டுக்கு காத்திருந்து நுழைகிற காரியம் துணிச்சலான காரியமா? துப்புக் கெட்டகாரியம், இழிவான காரியம். வேறு வழி? வானம் செய்கிற வஞ்சகமும் வாழ்க்கை பண்ணும் கூத்தும் சேர்ந்து... நம்மை திருட்டுப் புள்ளியாக்குது...ம்...ம்.

ஓடையின் கரையேறுகிற போது, எதிரில் வந்தாள் முத்துக்காளை மகள். தலையில் காய்ந்த மிளகாய் மார்க்கட்டு. தாவணி போட்ட அவளுக்குத் துணையாக அவளது தம்பி.

இவனுக்குள் ஒரு ஆசுவாசம். மூச்சுத்திணறல் விடுபட்ட மாதிரியானொரு உணர்வு. வேலி அகன்று

விட்டது. தயக்கமோ தடுமாற்றமோயில்லாமல் தாராளமாய் நுழையலாம். நிமிஷத்தில் காரியம் முடித்து விடலாம். கரு கருவென்று மயங்கி விட்டது. கண்ணும் காதும் வைத்தமாதிரி காரியத்தை முடித்து விடலாம். குட்டிகள் பாடு இன்று கழியும்.

இங்கும் அங்குமாய் கள்ளப் பார்வை பார்த்துக் கொண்டான். யாரும் ஆள் தட்டுப்படவில்லை. ஒரு குஞ்சு கூட இல்லை. இன்னும் நாலு எட்டுத்தான். புஞ்சைக்குள் கால் வைத்து விடலாம்.

இன்றைக்கு காலையில்...

டீக்கடையில் ஏகமாய்க் கூட்டம். நிறையபேர் உட்கார்ந்திருந்தனர். கட்சித் தலைமையாபீஸை கைப்பற்று வதில் ஒரு கட்சியின் தலைவர்களே இருகோஷ்டிகளாகப் பிரிந்து அநாகரீகமாக அடிதடிகளில் இறங்கிய வெட்கக் கேடு பற்றிய விவாதம் தூள் பறந்து கொண்டிருந்தது. இனி ராமராஜன் படம் ஓடுமா ஓடாதா என்கிற விவாதமாய் நீண்டது. முனியசாமியும் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அப்போது...

முத்துக்காளை என்னமோ பேய்த்தனமாக கத்திக் கொண்டு வந்தான். வந்து உட்கார்ந்தான். முகத்தில் எள்ளுப் போட்டால் பொரிந்து சிதறி விடும். அத்தனை கோபம்.

''ஒரு டீபோடப்பா'' என்று அதட்டலாய் சொல்லி விட்டு வசவைப் பிடித்து விட்டான். மானாங்காணியாய் வசவு. நாறிப்போயுற்று வசவு. முகம் தெரியாத எதிரியை நோக்கி சகட்டு மேனிக்கு தாறுமாறாய் அள்ளியிறைக்கிற வசவு.

''ஆள் இல்லாத நேரம் எந்தப் பயலோ புஞ்சைக் குள்ளே நுழைந்து கொழை ஒடிச்சுட்டுப் போயிருக்கிறான்' என்பதுதான் குற்றச்சாட்டு. மற்றபடி பூராவும் வசவு தான். 'ஆத்தா, அம்மா' என்று முந்திய தலை முறையெல்லாம் இழுத்து காலுக்குள் போட்டு காறித்துப்பினான். நனைந்து அடித்தால் நாலு பக்கமும் சிதறட்டும் என்று ஆள் கூடுகிற இடத்தில் பொதுப்படையாகத் திட்டுகிறான்.

டீக்கடையே கப்சிப்பென்றாகி விட்டது. முனியசாமியும் அரண்டு போய்க் கிடந்தான். அவன் நெஞ்சு நஞ்சடித்த கெண்டை மீனாகத் தவித்தது. புழுங்கியது. புழு போல நெளிந்தது.

யாரோ ஒருவன் குறுக்கிட்டான்,

''யாரை வையுறே நீ? நீ பாட்டுக்கு திண்டுக்கு முண்டா வைஞ்சா எப்படி?''

முத்துக்காளை சீறினான்.

''எம்புஞ்சையிலே களவாண்ட பயலை வைவேன். நீ களவாண்டியா? அப்ப ஒன்னைத்தான். இல்லேன்னா... பேசாமக்கிடயேன். எதுக்கு ஒரு பய எம் புஞ்சையிலே நுழையணும்? அவன் எங்கப்பனுக்குப் பிறந்தானா? என்ன ரைட்லே வந்து களவாங்கணும்?''

அவனும் கப்சிப்பென்றாகி விட்டான். கொஞ்ச நேரம் நெருப்பு மழைதான். அனலாய் வீசுகிற மழை. முனியசாமியின் உள் மனசைச் சுட்டுக்கருகச் செய்கிற மழை. வசவு மழை. முடிவில்லாமல் நீண்ட மழை.

ஒரு பெரியவர் அதட்டலாய்க் குறுக்கிட்டார்.

''ஏய் இந்தா, யாரையும் குறிச்சுச் சொல்லறதானா சொல்லு. இல்லேன்னா பேசாமக்கிட. ஒம்புஞ்சையை நீ தான் காப்பாத்திக்கணும். காப்பாத்திக்க வக்கில்லாம... பொது எடத்துலே வந்து, குருட்டாம் போக்கிலே வாய்லே வந்தபடி பேசுனா... எப்படி? நீ ஒருத்தன்தான் ஆம்பளையா? நாங்கள்லாம் பார்த்துக்கிட்டு வாயை மூடிக்கிட்டு கிடக்கணுமா...?''

அதுக்குப்பிறகுதான் சற்று அடங்கினான். 'புஸ், புஸ்ஸெ'ன்று கோபத்தில் மூச்செறிந்தான். எல்லோரையும் பகையாளி போல வன்மத்துடன் பார்த்துவிட்டு விர்ரென்று வேகமாய் போய்விட்டான்.

கொழை ஒடித்தது முனியசாமிதான் என்று அந்த நேரம் முத்துக்காளைக்குத் தெரிந்திருந்தால்... என்ன கதியா யிருக்கும்? எம்புட்டு கேவலமாய் போயிருக்கும்! வாய்ச் சத்தம் முற்றி கைகலப்பு கூட ஆகிவிடுமே... நினைத்தாலே குலை பதறுகிறது, யம்மாடி... மானமரியாதேயோடு உழைத்து வாழ்கிற ஒரு மனிதனுக்கு எத்தனை தலை குனிவு... அது!

புஞ்சையின் தலைமாட்டுக்கு வந்து விட்டான் காலடி முள்ளோ... முடலோ பாம்போ, பூச்சியோ கண்ணில் தட்டாத அளவுக்கு இருட்டி விட்டது. இவனுக்குள் சஞ்சலம். இத்தனைக்கும் பிறகு இன்னும் களவாடத்தான் வேண்டுமா? தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று இத்துடன் திரும்பி விடுவோமா?...

மூத்திர நாற்றத்தில் தறிய முறிய நிற்கிற குட்டிகள். பசி பொறுக்காமல் கதறுகிற குட்டிகள். வேலிக்காயையே

எத்தனை தரம்தான் திங்கும்? அது குட்டிகளுக்கு நொறுக்குத்தீனி தானே? வயிற்றுக்கான முழுத்தீனியில்லையே...அதிலேயே அவை எத்தனை நாள்தான் உயிர் வாழ முடியும்?

மீனாட்சியின் வசவுகள். துப்பு கெட்டவன் என்று குத்திக்காட்டுகிற வார்த்தைகள் இளப்பமான பார்வைகள். அதைவிட வாயில்லா ஜீவன்களைப் பட்டினி போட்டு பார்க்கிற பாவத்தைச் சகித்துக்கொள்ள முடியாத இவனது இயல்பான கருணை உணர்ச்சி.

இளகி நழுவுகிற மனசை இறுகப் பிடித்துக் கொண்டு தயங்கித் தடுமாறுகிற கால்களுக்கு விறைப்பேற்றி புஞ்சைப்பொழியில் ஏறினான்.

நன்றாக இருட்டி விட்டது. கன்றிக் கறுத்துப் போன மேகத்தின் மெல்லிய வெளுச்சம்... வெள்ளைத் துணி தெரிகிற வெளிச்சம்.

பொழியில் கால் வைத்து ஏறி, பருத்திச் செடிகளுக்குள் மிதித்த பிறகு தான் இவன் பார்வையில் அது பட்டது. புஞ்சைக்குள் ஒரு ஆள், வெள்ளையாய். மங்கலாய் அசைவு. முத்துக்காளைதானா?

திக்கென்றது மனசு. மாட்டிக்கொண்டு விட்ட திகில்' கிலி. அடிவயிற்றில் ஜிவ்வென்று பரவுகிற பயம் இன்றோடு தொலைந்தோம். ஜென்மத்திற்கும் போதுமான கேவலம் வந்து சேர்ந்து விட்டது...

ஒரு கணம்... பயங்கரப் பேய்க்கணம். ''அவனையும் அறியாமல் அவன் சட்டென்று கதாரித்துக் கொண்டான்.

''யாரது, புஞ்சைக்குள்ளே? முத்துக்காளை மச்சானா?''

இவனது குரலில் மெல்லிசாக ஒரு நடுக்கம் குற்ற உணர்வின் சுய பதற்றம்.

''ஆமா, யாரது?''

''முனியசாமி''

''வா, மாப்பிள்ளே, என்ன இம்புட்டுத்தூரம்?''

''இன்னிக்குச் சாயங்காலத்துலேயிருந்து ஒம்மைத் தான் தேடிக்கிட்டு திரிஞ்சேன். தெருவுலே விசாரிக்காத ஆளு பாக்கியில்லே''

பொய்... பொய்... பொய்கள்... இவனது சமாளிப்பில் இப்போது இவனுக்குத் திருப்தி.

''தெருவுலே கேட்டுத்திரிஞ்ச கிறுக்கு மனுஷன். வீட்லே போய்க் கேட்டிருந்தா.

''உங்கக்கா சொல்லியிருப்பாளே! ராசபளையம் போயிருந்தேன்''

''எப்ப வந்தீரு?''

''ஆறு மணி வண்டிக்குத்தான், அது சரி, கிடக்கட்டும், நீ எதுக்குத் தேடித் திரிஞ்சே? அதைச் சொல்லு?''

''ஒண்ணுமில்லே, சும்மாத்தான்''

''ஒண்ணுமில்லாம ஊரெல்லாம் தேடி அலைவானா, ஒரு மனுஷன்? அடச் சொல்லு மாப்ளே, என்னத்துக்குக் கூச்சம்?''

''எம்புஞ்சையிலே உழுதுட்டேன். உப்புத் தண்ணி பருத்திச் செடியும் பட்டுப் போச்சு. அகத்தியும் சரியாய் வாய்க்கலே.''

''ஆமாம் அதான் எனக்குத் தெரியுமே.''

''வீட்லே ரெண்டு குட்டி கெடக்கு. நா வேண்டாம்னு தான் சொன்னேன், ஒம்ம தங்கச்சி மீனாட்சி விடுதாளா? புடிக்கச் சொன்னா. புடிச்சுக்கட்டுப் போட்டாச்சு. எரைக்கு எங்க போறது? அருங்கோடையாயிருக்கு யாருகிட்டே செழிப்பில்லே. யாருகிட்டே போய்க் கேக்குறது? கேக்காம யாரு புஞ்சையிலேயும் ஒடிக்கலாமா? அது அசிங்கமில்லே? அப்படி களவாண்டு பொழைக்கிற ஈனங்கெட்ட பொழப்பு பொழைக்கணுமா, மனுஷன்''?

மாப்ளே, இப்பச் சொல்றீயே... இது தான் வார்த்தை. நூத்திலோரு வார்த்தை. இப்படித்தான் மனுசன் மனுசத் தன்மையோட நேர்மையாயிருக்கணும். இப்ப உனக்கு என்ன வேணும்? கொழை வேணுமா? ஒடிச்சுக்கோ... வா நானும் ஒடுச்சுத்தாரேன். ஒன்னாவே வீடு போய் சேருவோம்''

முத்துக்காளை ஆகாயமாய் உயர்வது போலவும். இவன் காலடிப்புழுவரய் குறுகிப் போய் நெளிவது போலவும் ஒரு பிரமை மனசுக்குள் ஒரு உள் கூச்சம். உறுத்தல். ஆளுக்கொரு வாய்க்காலில் அகத்திக் கீரையை ஒடித்தனர். கொழை திருடு போன கொதிப்பை புகாராக இவனிடமே சொல்லி புலம்பி நாற வாத்தைகளால் திட்டுகிற முத்துக்காளை. முனியசாமி உள்ளுக்குள் குன்றிப் போனான். வாழ்க்கையின் மொத்த அவலமும் இவனைச் சப்பென்று அறைவது போலிருந்தது.

இருவரும் ஆளுக்கொரு கூட்டாக கட்டிக் கொண்டனர், புஞ்சையை விட்டு வெளியேறி பாதைக்கு வந்து விட்டனர். முத்துக்காளைக்கு முனியசாமியின் நேர்மையைப் புகழ்ந்து புகழ்ந்து பார்த்தாலும் மனசு ஆறவில்லை.

*''களவாணிப்பயக இருக்கிற ஊரிலே... இப்படி நேருக்கு நேரா வந்து கேட்குற-கேட்டு மருவுகிறமனுசனும் இருக்கீயே...இப்படித்தான் இருக்கணும் மனுசன். பீ திங்கற பன்னி களவுக்கு அலையற மாதிரியா மனுசப்பய திரியறது? த்தூ!''*

இவன் உம் கொட்டிக் கொண்டே வந்தான்'

*''மாப்ளே, எவன் எவனோ நம்ம கண்ணுலே மண்ணை தூவி விட்டு, ஆள் இல்லாத நேரத்திலே கொழையைக் களவாண்டுட்டுப் போறான். ஒன்னிய மாதிரி நேர்மையான மனுசனுக்கு கொழையை மனசார ஒடிக்கச் சொல்றது எம்புட்டோ புண்ணியம். எனக்கும் ஒரு எருமை மாடும் இரண்டு வெள்ளாடுகளும் கிடக்கு. அதுகளுக்கும் கொழை வேண்டியிருக்கு. இந்த மேலக் கடைசியிலே இருக்கிற இரண்டு வாய்க்காலும் ஒனக்குத்தான். நிதம் வந்து ஒடிச்சிக்கோ. மிச்சம் கிடக்குற வாய்க்கால்ல எனக்கு வேணும். சரிதானா மாப்ளே?''*

'ஆட்டும் மச்சான், அக்காகிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிரும்'

'நான் சொல்லிருதேன்'

கோடைப் பஞ்சம் தீர்ந்தது. கிடாக்குட்டிகளை எப்படிக் காப்பாற்றுவது என்கிற கவலை தீர்ந்தது. மனசில்

தான் ஒரு கனம், அழுத்தம் மாய்மாலம் செய்கிறோமோ என்கிற மன உளைச்சல். குற்ற உணர்வின் நமைச்சல்.

ம்ஊம், என்ன செய்யறது, மழை பண்ணுகிற கூத்து நெருக்கிப் பிடிக்கிற வாழ்க்கை... மனுசனுக்கு மனுசனை மாய்மாலம் பண்ண வைக்குது.

தோளில் அழுத்துகிற கொழைக்கட்டின் பாரத்துடன் தெருவில் தன் வீடு நோக்கி நடந்தான், முனியசாமி இன்னும் அவன் மனசுக்குள்ளே அதே உளைச்சல், இந்தக் கோடையின் காயம். காயத்தின் ரணம்.

அது ரொம்ப காலத்துக்கு இருக்கும்.

-அக்டோபர் 1990 செம்மலர்

# யுகமாய் நகரும் பொழுது

அவளுக்கு விழிப்புத் தட்டியபோது, இருட்டு மிச்சமிருந்தது. இன்னும் விடியலியா?

சற்றுத் தள்ளி மாரியப்பன் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். இடுப்பு வேட்டியை உருவி மூடிச் சுருண்டு ஒருக்களித்துப் படுத்திருந்தான். நடுவில் ராஜி விரலைச் சூப்பிக் கொண்டு படுத்திருந்தாள்.

தொட்டில் ஆடுகிறது. முத்துப் பயல் உதைத்த உதையில் அசைகிறது. நல்ல வேளை... அவன் அழவில்லை. பூவனத்துக்குக் கண்கள் சொருகிக் கொண்டு வருகிறது. உடம்பு முழுக்க அயற்சி 'இன்னும், இன்னும்' என்று தூக்கத்துக்குக் கெஞ்சுகிற உடம்பு, பேயாகப் போட்டு அமுக்குகிற களைப்பும், சோர்வும்...

''ஹாய்... ஆய்க்.''

பால் சொஸைட்டிக்குப் பால் பீச்ச எருமைகளைப் பற்றிக் கொண்டு போகிற சப்தம். எருமை சாணம் போடுகிற 'சத, சத, சத' சப்தம். 'ஊர் விழித்து விட்டதா நான் தான் பிந்தி விட்டேனே?''

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். நெட்டி முறித்துக் கொள்ளக் கூட நிதானமில்லை. விருட்டென்று வெளியே வந்து தலையை எட்டிப் பார்த்தாள்.

இருட்டு விலகாத காலை நேரம். கிராமம் சுறு சுறுப்பான உயிர்ப்போடு நடை போடத் துவங்கி விட்டது. ஆனி மாசக் காலையில் கூதல் இல்லாத குளிர்ந்த காற்று முகத்தில் மோதியது.

''அட இழவே, அசந்து ஒறங்கிட்டமே... பொழுது பொறப்படப் போகுதே...''

ஒரு சிறிய பதைப்பு, அவளுக்குள் முகம் காட்டுகிற பரபரப்பு. சுவிட்சைத் தொட்டவுடன் தடதடக்கும் மோட்டார் என்ஜினைப் போல, சுழலத் தொடங்கி விட்டாள்.

அடுப்புச் சாம்பலை அள்ளிக் கூடையில் தட்டினாள். கையோடு சேர்த்து முகத்தையும் கழுவிக் கொண்டாள். காப்பிச் சட்டியை அடுப்பில் வைத்து, தண்ணீரை ஊற்றினாள். வெல்லத் துண்டு, தேயிலைத் தூளைப் போட்டாள். அடுப்பை மூட்டினாள். புகை மண்டியது. கண்களைக் கரித்தது. கூடுதலாய்க் கொஞ்சம் விறகைத் திணித்து விட்டு கிளாஸுடன் பால் சொஸைட்டிக்கு ஓடினாள். அவசரப்படுத்தி, ஆளுக்கு முந்தி, பாலை வாங்கிக் கொண்டு ஓட்டம் நடையுமாகத் திரும்பி வந்தாள்.

'அடுப்புத் தீ அமர்ந்திருக்குமோ...'

நல்லவேளை... சிறு தீயாக எரிந்து கொண்டிருந்தது. மாரியப்பன் விழிப்பதற்குள் காப்பி தயாராக இருக்க வேண்டும். விறகைத் தள்ளி விட்டாள்.

சட்டிப் பானைகளை, வட்டில், கிளாஸ்களை விரல்களுக்கிடையில் இடுக்கிக் கொண்டு வெளிப் பானைக்கு வந்தாள். சாம்பலைப் போட்டு, பரபரவென்று

தேய்த்து மினுக்கினாள். இடையிடையே எழுந்து போய் அடுப்பைப் பார்த்து கொண்டாள்.

கொதித்த காப்பிச் சட்டியை இறக்கி விட்டு, குழம்புச் சட்டியை வைத்தாள். ரெண்டு வெங்காயத்தை அறுத்துப் போட்டு, மிளகாயைக் கிள்ளிப் போட்டு, சீரகத்தை உள்ளங்கையிலேயே நசுக்கிப் போட்டு... எண்ணெய் ஊற்ற பாட்டிலைப் பார்த்தாள். ஒட்டிக் கொண்டு கொஞ்சமாய்க் கிடந்தது. எல்லாமே துரித கதி.

வேலை ரெக்கை கட்டிக் கொண்டு பறந்தது. பூவனமும் சக்கரம் கட்டிக் கொண்டவளைப் போல... அங்கும் இங்குமாய்ப் பரபரத்தாள். ஓரிடத்தில் நிற்க முடியாமல், மின்னலைப் போல 'விருட், விருட்' டென்று ஓடிப் பாய்ந்தாள், வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் அவள் கையை எதிர்பார்த்துக் கிடக்கிற வேலைகள். மோவாயில் முத்து முத்தாகப் பூத்து நிற்கிற வியர்வைத் துளிகளைக் கூட துடைக்கப் பொழுதில்லை.

மாரியப்பன் காப்பியைக் குடித்து விட்டு 'வெளியே' போனவன் தான். தெருவிலும் டீக்கடையிலும் உட்கார்ந்து என்னதான் பேசித் தீர்ப்பார்களோ எட்டு மணிக்கு மேல் தான் திரும்பி வந்தான்.

வரும்போதே காலில் கொதிநீரை ஊற்றிக் கொண்டு வந்தான்.

''வேலைக்குப் போவணும். நேரமாச்சு வெருசா கஞ்சி ஊத்து?''

''வாங்க, கலெக்டரய்யா; இம்புட்டு நேரமா எங்க போயிருந்தீங்க?''

''என்ன விஷயம்? எதுக்குக் கேக்கே?''

''ஊரைச் சுத்திட்டு... இப்ப வந்து, 'பறந்தா எப்படி?''

''பொம்பளை மாதிரி மூலையிலேயே முடங்கிக் கிடக்கச் சொல்றியா? ஆம்பளைன்னா... நாலு இடம் போகத்தான் செய்வான். நாலு மனுச மக்களைப் பாத்துப் பேசத்தான் செய்வான். ஒனக்கென்ன வந்துச்சு? நீ சோலியைப் பாரு.''

வீடு பெருக்கிக் கொண்டிருந்த பூவனம், புருஷனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ம்... ஆம்பளைகதான் மனுசர். பொம்பளைங் கன்னா... மிஷின். ஊம், அப்படித் தானே?''

''இந்தா! இதெல்லாம் நமக்குத் தெரியாது. வேலைக்கு நேரமாச்சி, கஞ்சியை ஊத்து, கடிச்சிக்கிடை இருக்கு இல்லே?''

''இருக்கு, இருக்கு. உக்காருங்க.''

மாரியப்பன் மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். நாலு வயசு ராஜி தெருப் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளை நாலு அதட்டு அதட்டிக் கூட்டுக் கொண்டு வந்தாள். மேலுக்கு ஊற்றி. சட்டை போட்டு, தலையில் எண்ணெய் வைத்து இழுத்து ரப்பர் மாட்டி விட்டு...

எல்லா அவசர கதியில் தான்.

அதற்குள்-

தெற்குத் தெரு ராமாயம்மாள் கடாப்பெட்டி, உப்புத் தாளோடு வந்து விட்டாள். அவள் புஞ்சையில் தான் இன்று வேலை. பருத்தி எடுப்பு.

''என்ன பூவனம், இன்னும் கெளம்பலியா?''

''இந்தா கிளம்பிட்டேன்க்கா.''

''சாப்ட்டுட்டியா?''

''இன்னும் இல்லே, எல்லாம் நொடியிலே முடிஞ் சிரும் நீங்க போங்க. நா பின்னாலேயே ஓடியாரேன்.''

''எட்டு மணிக்கு மேலாச்சு. வெருசா பெறப்படு. கூலி பத்து ரூவா வேணும்ங்கிக. இப்படி வீட்லேயே பொழுதைக் கழிச்சா... எப்படி?''

'இல்லேக்கா... சோலியை முடிச்சுட்டு பெறப் பட்டுட்டேன்.''

எரிச்சலும் கோபமுமாய் ராமாயம்மாள் முனதி விட்டுச் செல்ல... இவளுக்குள் தீப்பற்றிக் கொண்டது.

ராஜியை அரைக் கிளாஸுக்கு அனுப்பி விட்டு, இவளும் வாயில் ரெண்டை அள்ளிப் போட்டு முடிக்க... முத்துப்பயல் தொட்டிலில் வீறிட்டான். 'மடியில் கிடத்தி அவன் பசியமர்த்த இப்போது பொழுதில்லையே...' இன்னும் தாமதித்தால் ராமாயம்மாள் தொலைத்து விடுவாள்.

முத்துப்பயலை நினைக்க நினைக்க அவளுக்குள் ஆயாசம். விரக்தியின் விளிம்பில் அவள். அடிவயிற்றில் ஒரு கொதிப்பு.

''ச்சே... அழுகிற புள்ளையை அமர்த்தக் கூட உட்கார முடியாம... பொட்டச்சி ஒடிச் சாக வேண்டியிருக்கு. பொட்டச்சியா பூமியிலே ஜெம்மமெடுத்ததே கொடுமை அதுலேயும் ஏழையாய்ப் பொறக்குறது அதை விடக் கொடுமை...''

மனசின் வெப்பம் கண்ணோரங்களில் துளிகளாய்ப் பூக்க... முத்துப் பயலை அள்ளிக் கொண்டாள். தொட்டிலைக் கழற்றிச் சுருட்டிக் கொண்டாள். மதியக் கஞ்சிக்கான தூக்குச் சட்டியோடு புறப்பட்டு விட்டாள். மனத்தில் அதே உளைச்சல்.

ராமாயம்மாள் என்ன சொல்லி வையப் போகிறாளோ தாமதமாகி விட்டது. நாறவசவு வைது விடுவாள்... எத்தனை திட்டித் தீர்த்தாலும் கேட்டுத்தான் தீரணும். சகித்துத்தான் ஆகணும். மான அவமானம் பார்த்தால் கதை நடக்காது.

கூரை பிய்ந்து வாயைப் பிளந்து கிடக்கிறது. தோல் கிழிந்த எலும்புகளாக கூரை முகடு துருத்திக் கொண்டு வெயிலில் காய்கிறது. இந்த வருஷம் கட்டாயமாக வேய்ஞ்சாகணும். ராமாயம்மாள் புஞ்சையில் பயிரிட்டிருக்கிற கோடைக் கம்பந்தட்டையை நம்பித்தான் கூரை முகடு காத்துக் கிடக்கிறது.

அவளுக்குள் பதைப்பு. பரபரப்பு. நடையை எட்டிப் போட்டாள். செம்மறியாட்டு மந்தையைக் கடந்தாள். 'தக்,தக்' கென்று அவள் நடந்த வேகத்தில் அதிர்ந்து போய், ஆடுகள் சிதறின.

பலசரக்குக் கடையில் பாக்கி ஏறிவிட்டது. எழுபத்தெழு ரூபாய்க்கும் மேல். நேற்றே கடைக்காரர்

வெறித்துப் பார்த்தார். ஏலச் சீட்டுக்குப் பணம் கட்டணும். பாத்திரச் சீட்டு வேறு கிடக்கிறது.

நினைவுகள் உள்ளே கூடு கட்டிக் கொண்டிருந்தன. தேனீக்களின் இரைச்சலாய் மொய்க்கிற நினைவுகள். அழுத்தும் பாரமாய்ப் பிரச்னைகள். கழுத்து நரம்பை முறிக்கும் சுமையாய் வாழ்க்கை, மூச்சுத் திணறுகிற சூழல். முட்டிக் கொண்டு வந்து நெஞ்சை அடைத்துக் கொள்கிற உணர்வுகள்...

'நாமதான் இப்படி 'பாடு பாடு'என்னு ஓடிச்சாகுறோம் மாடி மனைகளிலே சில மகராசிமார்கள் வெயில் முகம் பாராமல் ஆக்கி, அவிச்சிப் பொழுதைப் போக்குறாக. அவுகளுக்கும் கூத்துவன் படியளகத்தானே செய்றான்...

என்ன இழவோ... பொழப்பு இப்படிக் கிழிஞ்சு கிடக்கு ஹூம்...'

வேனலாய்க் கொதிக்கிற வெயில். உள்பாவாடையப் பிடித்து முரட்டுத்தனமாய் இழுக்கிற காய்ந்த பருத்திச் செடிக்குச்சிகள். பூவனம் ஓடி ஓடிப் பருத்தி எடுத்தாள். மடிமடியாய்ப் பருத்தி நிறையவும், பெரிய உப்புத்தாளில் தட்டினாள். வியர்த்துக் கொட்டுகிறது. இரண்டு கைக் கட்டை விரல்களும் காந்துகின்றன.

பூவனத்தில் பார்வை அடிக்கொருதரம் மஞ்சணத்தி மரத்துக்குப் போய் விட்டு வருகிறது. மரத்தில் கட்டியிருக்கிற தொட்டிலில் முத்துப்பயல்.

அரைக் கிளாஸ் சத்துணவுக் கூட்டத்தில் இருக்கிற ராஜி, பூவனத்தின் மனசுக்குள் வந்தாள்.

எப்படியிருக்காளோ... எந்தப் பிள்ளையோடு சண்டை போடுகிறாளோ... அழுது கரைவாளோ... ஆறுதல் சொல்ல அம்மாவைத் தேடித் தேம்பி நிற்பாளோ...

பூவனத்துக்குள் ஓர் இனம்புரியாத தவிப்பு. ஒரு பிசைவு. ராஜியைப் போய்ப் பார்த்து விட்டு வரணும் என்று ஒரு துடிப்பு. ஓடப் பரப்பரக்கிற கால்கள். ராமாயம்மாளின் அதட்டல் சப்தம் கேட்கிறது. தவித்த மனம் அரண்டு போய், உள்ளுக்குள் ஒடுங்குகிறது.

நாலு மணிக்கு வேலை முடிந்து புறப்பட்டனர். ராமாயம்மாளிடம் கேட்டு, புஞ்சைத் தலைமாட்டில் இருந்த மிளகாய் மார்ப்படப்பில் ஒரு கட்டு கட்டிக் கொண்டாள். விறகுக்கு வேண்டுமே! தொட்டில் சுருளும், முத்துப் பயலுமாய்ப் புறப்பட்டாள். சாயங்கால வெயில் கண்களில் குத்துகிறது.

உடம்பெல்லாம் பரவி பிசைகிற அலுப்பு. இடுப்பைச் சுற்றிலும் கொத்திப் பிடுங்குந்ற வலி, முழங்கால் மூட்டுகளில் ஊசிக் குத்தலாய் ரணம். உட்காரணும், நீட்டிப் படுக்கணும்' என்று ஏங்குகிற உள் எலும்புகள். தேகமெங்கும் சோர்வும் களைப்புமாய்...

வீடு வந்து சேர்ந்தாள் பூவனம். ராஜி திண்ணையில் விரலைச் சூப்பிக் கொண்டு உறங்குகிறாள். சத்துணவுச் சாம்பார் அவளது வாயைச் சுற்றி மஞ்சளாய்க் காய்ந்து... மூக்கில் சளி வழிந்து...சுற்றிலும் ஈக்கள் படைமொய்த்து...

நாதியற்ற பிள்ளை போலக் கிடக்கிறாளே...

பூவனத்தில் குலை பதறியது பதைந்தது. விறகைப் போட்டாள். பெற்ற மனம் தவித்துத் துடிக்க ராஜியை அள்ளி... உள்ளே பாயை விரித்துப் படுக்கப் போட்டாள்.

முத்துவையும் பக்கத்தில் படுக்க வைத்தாள். சேர்ந்து இவளும் படுத்துக் கொள்ள உடம்பு ஏங்கித் தவித்தது. உடம்பின் ஒவ்வொரு அணுவும் 'படு, படு' என்று கெஞ்சியது. முந்தியை விரித்தாள். தலை சாய்க்கப் போனவள் தயங்கினாள். உள்ளுக்குள் எறும்பு கடித்த மாதிரி ஓர் உணர்வு.

மாரியப்பன் வந்துவிடுவான். உழைத்து களைத்துப் போய்-உயிர் சுழன்று வருகிற மனுசர். வந்தவுடன் சோறு போடணும். சோறு இல்லாவிட்டால் கதை கந்தலாகி விடும்.

விதியையும் படைத்தவனையும் நொந்து கொண்டே எழுந்தாள். எலும்புகள் மொறு மொறுத்தன. கடைக்கு ஓடினாள். மனசுக்குள், என்ன குழம்பு வைக்கலாம். என்னென்ன சாமான்கள் வாங்கலாம் என்கிற யோசிப்புகள்...

அடுப்பு மூட்டணும். சோறு காய்ச்சணும். தண்ணீர் சுமக்கணும். அவருக்கு வெந்நீர் போட்டு வைக்கணும். தலைக்கும் மேலாகக் குவிந்து கிடக்கிற வேலைகள். சுவிட்சு போட்டு அவளை முடுக்கி விட்டுத் துரத்தியடிக்கிற வேலைகள்... கடமைகள்... அன்றாடச் சுமைகள்... நிரந்தரமான பாரம்.

மாரியப்பன் வந்து சேரும் போது, பொழுது அடைந்து கொண்டிருந்தது. கன்றிச்சிவந்த மேற்கு வான மேகத்திரளின் வெளிச்சம்தான் மிச்சமாக இருந்தது.

பூவனம் சக்கரம் கட்டிக் கொண்டவளைப் போல அங்குமிங்குமாய் வேலையோடு அலைந்து கொண்டிருக்க

ராஜியோடு கொஞ்ச நேரம் விளையாடிக் கொண்டிருந்தான்.

வெந்நீரில் குளித்தான். அவள் எடுத்துத் தந்த மாற்று வேட்டியைக் கட்டிக் கொண்டான். சாப்பிட்டு முடித்தது தான் தாமதம். ஆள் மறைந்து விட்டான்.

பீடி வாங்குகிற சாக்கில் வெளியேறி விட்டான்.

இனி படுக்கத்தான் ஆள் வரும். தெருக்காட்டில் அப்படி என்ன பேச்சோ... என்ன இழவு வேலையோ...

முத்துப் பயலைக் குளிப்பாட்டி, வேறு சட்டை மாட்டி, பவுடர் பூசி, திருஷ்டிப் பொட்டு வைத்து... சிறு துருப்பைத் தலைமுடியில் போட்டு... திண்ணையில் தவழ விட்டாள்.

அய்யாவோடு சேர்ந்து சாப்பிட்டு விட்ட ராஜி, தம்பியுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினாள். விளையாடினாள்.

இவளுக்குத்தான் மாளாத வேலையாயிற்றே!

புருஷன் உரித்துப் போட்டு போன வேட்டி, துண்டு பிள்ளைகளின் சட்டைகள், கவுன்கள் எல்லாவற்றையும் துவைத்துக் காயப் போட்டாள். கடைக்குப் போய் விட்டு வந்தாள். இவள் சாப்பிடும் போது எட்டு மணிக்கும் மேலாகி விட்டது. சாப்பிடவே மனசில்லை.

அவளுக்குக் கோபம் கோபமாய் வந்தது. யார் மேல் கோபப்பட? எதற்காக எவர் மீது கோபப்பட?

ஒன்றும் புரியவில்லை. முகமில்லாத எதிரியாய் வாழ்க்கையே முற்றுகையிட்டு, அவளை உதைத்துப்

புரட்டி எள்ளி நகையாடுகிறபோது... யார் மீது ஆத்திரப்பட?

பாயை விரித்தாள். தூங்கிவிட்ட ராஜியை உள்ளே கொண்டு வந்து படுக்க வைத்தாள். தொட்டிலில் முத்துவைக் கிடத்திவிட்டு, ரெண்டு ஆட்டு ஆட்டிவிட்டு...

குளிக்கக் கூட மனசில்லாமல் களைப்போடு படுத்து விட்டாள் பூவனம். உடம்பெல்லாம் அடித்துப் புரட்டிய மாதிரி வலியெடுத்தது. முதுகு முழுக்க வலி. காலை நீட்டினாள். முழங்காலின் வலி சுள்ளென்று உறைத்தது.

கசந்து அழறுகிற நினைவுகள் மனசை மொய்க்க, அப்படியே கிடந்தாள். உறக்கம் கண்களைச் சொருகிக் கொண்டு வரும் போது தூக்கத்தில் தாய் மடியில் முகம் புதைத்துத் தன்னிலையிழக்கும் தருணத்தில்.

மாரியப்பன் வந்தான். கதவைத் தாழ் போட்டான். கிட்டத்தில் வந்து நின்றான். அவளை ஒட்டிக் கொண்டு படுத்தான். இவளுக்குள் குமைச்சல். இவள் எரிச்சலுடன் எதிர்பார்த்ததைப் போலவே தாபத்துடன் அவன் கை மேலே விழுந்தது.

பூவனத்துக்குப் பூரான் ஊர்வதைப் போன்றதோர் உணர்வு; உறக்கத்தையும் தட்டிப் பறிக்க வந்த பாவியாகத் தோன்றுகிற பூரான்.

கண்கள் எரிந்தன. மனசும்தான்...

பூவைப் போல் புல்லரிக்கச் செய்ய வேண்டிய தாம்பத்ய சுகம் கூட.... பாறையைப் போல அழுத்துகிறதே...

''சும்மா இருங்க... தள்ளிப் படுங்க'' கண்டனக் கனலாய்ச் சீறினாள்.

''முடியாது'' அவன் குரலில் ஒரு மிருது கெஞ்சல்,

''எனக்கு ஒறக்கம் வருது''

''எனக்கு வரலை.''

''நா செத்துத் தொலைஞ்சாத்தான் உங்களுக்கு வரும்.''

''எதுக்குச் சாகணும்?''

''இந்தப் பாடுபட்டு இப்படிச் சீரழியறதை விட. சாகுறது எம்புட்டோ மேல்.''

''நானுந்தான் பாடுபடுதேன்.''

''நா பொட்டச்சி, காட்லேயும் சாகணும். வீட்லேயும் வந்து வேகணும். இப்படித் திமிரெடுத்து வர்ற ஆம்பளைக்கும் தீனியாகணும்,''

''என்ன... ரொம்பத்தான் நொந்துக்கிடுதே...?நீ மட்டுமா அதிசயம்? எல்லா வீட்லேயும் உள்ளதுதானே நம்ம வீட்லேயும்?''

'எல்லா வீட்லேயும் பொட்டச்சிகளுக்குக் கண்ணீரும் சாவும்தானே மிச்சம்?'

அவளது இறுகலான சீறல், இவனுக்கு அநியாயமான அனாவசியமாகப்பட்டது.

மெளனமானான். கோபம் நிறைந்த மெளனம். தாம்பத்ய உரிமை மறுக்கப்பட்ட கோபம். அவளவு புஜத்தைப் பற்றிய அழுத்தத்தில் அது தெரிகிறது.

இவளுக்குள்ளும் இறுக்கம். உழைப்பின் அயற்சியை உணர மாட்டேன் என்கிறானே என்கிற எரிச்சலை உள்ளடக்கிய இறுக்கம். சபிக்கப்பட்ட பெண் பிறவியாய் ஜென்மமெடுத்து விட்டு கோபத்தால் மொறு மொறுக்கிற இறுக்கம்.

கொஞ்ச நேரத்தில்-

அடியும், உதையும், அழுகையும் புலம்பலுமாய் அங்கே மென்மையான தாம்பத்யம் ரணப்பட... இரவு கனத்துக் கொண்டிருந்தது. வாழ்க்கையைப் போல.

அவன் உறங்கிப் போனான். பூவனம் ரொம்ப நேரம் பலதையும் நினைத்து விசும்பிக் கொண்டிருந்தாள். விரக்தி வசப்பட்ட மனசில், சாவைப் பற்றிய நினைவு முகம் காட்டிக் கொண்டேயிருந்தது.

தொட்டில் ஆடியது, முத்துப் பயல் திமிறினான், வீறிட்டு அலறினான். பசிக்கான அழுகை.

பெருமூச்சுடன் யந்திரமாய் எழுந்தாள். முத்துவைத் தூக்கி மடியில் கிடத்தி... யந்திரமாய் ஜாக்கட் ஊக்கைக் கழற்றினாள்.

அத்தப் பிஞ்சு உதடுகளில் எச்சில் ஸ்பரிசம் பட்ட கணத்தில். அவள் மேனியெங்கும் ஜில்லென்று பரவி பாய்ந்த பரவசம் தாய்மைப் புல்லரிப்பு.

முத்துப் பயலுக்கும் குஷி, பிஞ்சுக் கையால் இவளது மோவாயைத் தடவினான். பிஞ்சுக் காலால் ஆனந்தமாய் உதைத்தான். மடியில் கிடந்த மகனைப் பார்த்தாள். அவளுள், பரவச உணர்வைப் பரப்பி, வாழ்க்கையின் ஈர்ப்புச் சக்தியாக மடியில் கிடக்கிற உயிர்ச் சிற்பம்.

கனிந்து மிருதுவாகிப் போன தாய்மைப் பரிவோடு முத்துப் பயலின் மென்மையான தலைமுடியைக் கோதி விட்டாள்.

இப்போது அவள் யந்திரமில்லை. மனுஷி, தாய்மை உணர்வு ததும்புகிற மனுஷி.

பக்கத்தில் உறங்கிய மாரியப்பனைப் பார்த்தாள். அவளுக்குள் மெல்லிய அன்புணர்வு சுரந்தது. 'முத்துவைத் தந்தவன்.'

அவனது தலைமுடியையும் கோதி விடுவதற்கு மனம் தவிக்கிறது.

*-ஜூலை / 99 / கல்கி.*

# மைதானம்

பேச்சிக்கு எந்நேரமும் கால் துறுதுறுக்கும். சும்மா ஓரிடத்தில் நிற்காது. சக்கரம் கட்டிக் கொண்டு தான் பறப்பாள்.

வீடே செயில் மாதிரி. இருக்கப் பிடிக்காது. இறுக்கிப் பிடித்த மாதிரியிருக்கும். தெருதான் ரொம்பப் பிடிக்கும். அதுதான் அவளுடைய உலகம்.

அங்குதான் இவளது கூட்டாளிகள் பாவாடை கட்டிய வண்ணத்திப்பூச்சிகளாக திரியும். சிரிப்பும் விளையாட்டு மாய்... சண்டையும் சத்தமுமாய் மனசுக்கு நல்லாயிருக்கும்.

தெருவைவிட அவளுக்கு களம் ரொம்பப் பிடிக்கும். ஊருக்கு மேற்கேயுள்ள மைதானம் விளைந்த பொருள்களை சம்சாரிகள் காயப்போட்டு தூத்தி எடுக்கிற இடம். விரிவான களம், கடல் போல கண்ணை மூடிக் கொண்டு ஓடிப்பிடித்து விளையாடலாம். 'திரிதிரி பம்பக்கா விளை யாடலாம். வட்டமாய் உட்கார்ந்து கொண்டு 'கல்போகுது' விளையாடலாம் நேரம் போறதே தெரியாது. வெயில் கூட உறைக்காது.

வீட்டு நினைப்பும் வராது. பசியும் தெரியாது அம்மா முதுகில் நாலு சாத்து சாத்துவாளே என்கிற நினைப்பும் வராது. விளையாட விளையாட ஆசையாய் இருக்கும்.

தேனில் சிக்கிய எறும்பு மாதிரி... நகர்வதற்கே மனசு வராது.

''அவரவர் வீட்டுக்கு அவரைக்கஞ்சி குடிக்கப் போ...ங்க'' என்று கூச்சலான அறிவிப்புக்குப் பிறகு, எல்லாச் சிறுமிகளும் 'டுர்ர்ர்...'ரென்று வாயாலேயே காரை ஓட்டிக்கொண்டு கலைந்த பிறகு...கடைசியாகத் தான் பேச்சி வீடு போவாள்.

வீட்டில் காத்திருப்பது, வசவுதான் அம்மாவின் அங்கலாய்ப்புதான், கொதித்துப் போன கோபத்தில் அம்மா கத்துவாள்.

''தைப் பொறந்தா... ஒம்பது வயது முடியப் போகுது இப்படி தெருக்காட்டுலே கழுதைக் குதியா குதிச்சுக்கிட்டுத் திரிஞ்சா... அறிவு வருமா? பொறுப்பு வருமா? பொட்டச்சி இப்படியா அலையுறது? அவுத்து விட்ட கன்னுக்குட்டியா பொட்டச்சி ஓடித்திரிஞ்சா... வீடு விளங்குமா?''

அம்மாவின் நச்சரிப்பு, முள் முள்ளாகக் குத்துகிற இச்சிலாத்தி. வீடு வெறுத்துப் போவது இதனால்தான். அம்மா சிடுமூஞ்சி. எந்நேரமும் அடைக்கோழி மாதிரி வெடுக் வெடுக்கென்று கொத்திப் புடுங்குவாள்.

இந்தப் பிடுங்கலைச் சகித்துக் கொண்டு... உண்டு முடிப்பதற்குள், பேச்சிக்கு மூச்சு முட்டிப்போகும். அம்மாவின் முதுகைப் பார்த்து வாயைக் கோணித்து 'வெவ்வே' காட்டுவாள்.

கழுவிய கையை துடைப்பதற்கு தெருவுக்கு வந்து விடுவாள். விட்டு விடுதலையான சிட்டாகப் பறந்து விடுவாள். தெருதான் அவளது உலகம். அங்குதான் அவளது

பொழுது கரையும். மனசு நிறையும், ததும்பி வழியும் ஆகாயத்தில் ஜிவ்வென்று பறக்கும்.

இதெல்லாம்... போன மாதம் வரைக்கும்தான், எல்லாமே பொய்யாகி, பழங்கதையாகி...

இப்போது, கதையே வேறு.

அன்றைக்கும் அப்படித்தான். களத்தில் சின்னஞ் சிறிசுகளோடு ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தாள். பொழுதடைந்து விட்டது. கருகருவென்று மயங்கி கொண்டு வந்தது பொழுது, முகம் காட்டுகிற இருட்டு. கன்றிச் சிவந்த மேக வெளிச்சம் மட்டும்.

அம்மா தூரத்தில் வருவதைப் பார்த்து விட்டாள். பேச்சி இவளைத் தேடிக் கொண்டு தான் வருகிறாள். அடி விழத்தான் செய்யும்.

ஆங்காரமாய் கத்துவாள். ''நாசமாய்ப்போக, கட்டையிலே வேக'' என்று கொதிப்பாள், இடது கையால் தலை முடியைப் பற்றி வெடுக்கென்று இழுத்து...முதுகில் நாலு போடு போடுவாள். தீப்பிடித்த மாதிரி முதுகு எரியும்.

அடிவயிற்றைக் கலக்குகிறது.

''உங்கப்பன் வழிப் புத்திதானே ஒங்கிட்டேயும் வரும்? ஆடுகாலிப் பரம்பரை. துப்புக்கெட்ட நாயி... பொட்டச்சி இப்புடி பொழுது போறது தெரியாம விளை யாண்டா... உருப்படுவீயா? ஒரு உப்புக் கல்லுக்காச்சும் பெறுவீயா?''

அடியும் வசவுகளுமாக நாறடித்துக் கொண்டு தான் வீட்டுக்கு இழுத்துச் செல்வாள். எதிர்ப்படுகிற

பெண்களிடமெல்லாம் இவளைப் பற்றி புகார்கள் தான். அங்கலாய்ப்புத்தான்.

திகில் பிடித்துப் போய் நின்றாள். நெருங்கி வந்து விட்ட பேய். உள்ளுக்குள் திக், திக், திக்...

''என்னடி பேச்சி, இங்கதான் இருக்கீயா? இன்னும் சாப்பிடலியா? வாகண்ணு, உன்னைத் தேடித்தானே வாரேன்.''

பேச்சிக்கு ஒன்றும் புரியவில்லை. ஏகமாய் மர்மம். ஆச்சர்யம், அம்மாவிடம் இத்தனை கனிவான குரலும் உண்டா? இம்புட்டுக் குழைவாகப் பேசத் தெரியுமா?

பாசமும் பரிவுமாய் அவள் தலைமுடியைத் தடவினாள். அம்மா முகத்தில் ஒரு குழைவு. பிடறியில் கழுத்தில் படிகிற அம்மாவின் உள்ளங்கையில் குளிர்ச்சி.

பேச்சிக்கு இன்னும் திகைப்பு அடங்கவில்லை. இதென்ன... புது அம்மா! அன்பான அம்மா விளையாடுகிற களத்தைப் போல... மனசுக்குப் பிடிக்கிற அம்மா. அம்மா வாய்... அம்மா.

கனிவோடு சேர்த்து அணைத்துக் கொண்டு பேச்சியை அழைத்துச் செல்கிறாள்.

வட்டிலில் சோறு வைத்துத் தந்தாள். சாப்பிட உட்கார்ந்த பேச்சியின் முகத்தை பரிவோடு கண்களால் விழுங்கினாள். இவளுக்குள் ஜில்லிடுகிற பரவச உணர்ச்சி. புல்லரித்து அடங்குகிறது, உடம்பு, நெகிழ்ந்து கரைகிற மனசோடு அம்மாவை ஏறிட்டுப் பார்த்தாள், பேச்சி.

அம்மா கண்களில் பொங்கிப் பெருகுகிற பரிவுணர்ச்சி. கண்களுக்குள் ஊடுருவி மனசுக்குள் உறுத்தும்

கனிவு. அதையும் தாண்டிய ஆழத்தில் ஒரு மௌனமான வேதனை வலியைச் சகித்துக் கொள்கிற சோக நிழல்.

''சாப்புடுடா... செல்லம், சோத்தைப் பிசைஞ்சு உண்ணுடா... ஏங்கண்ணு, இன்னும் கொஞ்சம் குழம்பு ஊத்தட்டா?''

பேச்சி உள்ளுக்குள் கலங்கிக் கரைந்தாள். பாசத்தின் அதிசயத்தைத் தாள முடியாத நெகிழ்வு.

சாப்பிடுகிற சாக்கில் தலை கவிழ்த்தாள்.

''ஏண்டி பேச்சி.''

அம்மாவின் கனிந்த குரலில் ஒரு கெஞ்சல்.

''என்னம்மா?''

''ஏசெண்ட் அண்ணாச்சி... ஒன்னைத் தீப் பெட்டியாவீஸு வேலைக்கு வரட்டும்னு சொல்றாரு. நீ போறீயா கண்ணு?''

வட்டில் சோற்றில் மண்ணையள்ளிப் போட்ட மாதிரியிருந்தது. உள் மனசின் ஆழம்வரை நடுங்கி அதிர்ந்தாள். நெஞ்சு கிடந்து அடித்துக் கொள்ள...வார்த்தை நாவுக்குச் சிக்காமல் கண்ணாமூச்சி காட்ட...

''பேச்சி, நம்ம வீடு முந்தி மாதிரி இல்லேம்மா. ஏதோ கையகலப் புஞ்சையாச்சும் பூர்வீகச் சொந்தம்னு கெடந்துச்சு. காலூன்னி நிக்குறதுக்கு ஒரு எடமா இருந்த அதுவும் உருவிக்கிட்டுப் போயிருச்சி. உழைச்சா கஞ்சி, இல்லேன்னா இல்லேம்மா, அத்தலைஞ்ச பொழப்பா போச்சு. நீயும் இனிமே சின்னப்புள்ளையில்லே. ஒம்பது வயது முடியப் போவுது. நாளை ஒனக்கு ஒரு நல்லது செய்யணும்னா

கையிலே 'ஐவேசு' இல்லே, நீ வேலைக்குப் போய்...வாரச் சம்பளமா நாப்பது ரூபா கொண்ணாந்தாலும் போதும் ஒய்ஞ்ச்கைக்கு ஒத்தாசையாயிருக்கும்மா...''

புற்றிலிருந்து பாம்பு வரும். குளிர்ச்சியான அம்மாவிட மிருந்தும் வருமா? வெலவெலத்துப் போய்விட்ட பேச்சிக்கு பேச்சே வரவில்லை.

பேச்சியைப் போலவே நேரம் காலம் பார்க்காம விளையாடிக் கொண்டிருந்த செல்லி, இப்பொழுது தீப்பெட்டியாபீஸுக்கு வேலைக்குப் போகிறாள். எந்நேரம் தான் போவாளோ, எந்நேரம்தான் வருவாளோ... கண்ணிலேயே தட்டுப்படமாட்டாள்.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் விளையாட களத்துக்கு வருவாள். குழந்தைகளோடு குழந்தையாக கலக்க முடியாமல் தண்ணிலே எண்ணெயாக நிற்பாள்.

அவளைக் கேலி பண்ணி விரட்டுவாள் பேச்சி, விளை யாட்டில் சேர்க்க மறுப்பாள். அதிகாரமாய் அழிச்சாட்டியம் பேசுவாள். அவமானத்தில் சிறுமைப்பட்டுப் போய், கண்கலங்கி அவள் நிற்பதைப் பார்த்து, பேச்சி கை தட்டிக் கும்மாளமாய்ச் சிரிப்பாள்.

...இவளும் செல்லியைப் போல ஆகவோ? அந்த விளையாட்டு உலகத்தில் சேர முடியாமல் சிறுமைப்பட்டு நிற்பதா? நாதியற்று, ஒற்றையாய் நிற்கிற அவலம், தனக்குமா?

பேச்சி வீறிட்டுக் கத்தினாள். ''முடியாது... முடியாது''

சாப்பிட்டுக் கொண்டிருந்த எச்சில் கையை உதறினாள். சீற்றத்தில் சோற்று வட்டிலை காலால் ஏற்றினாள். உருண்டு போய்ச் சுவரில் மோதியது. வட்டில்.

''நா போகமாட்டேன். செத்தாலும் சரி...நா போக மாட்டேன்... போகவே மாட்டேன்''

அம்மாவின் முகத்தில் குப்பென்று கோபத்தீ. கண்கள் இடுங்கின. மட்டியைக் கடித்தாள்.

''போகமாட்டீயா?'' என்று எதிரொலித்த அம்மாவின் குரலில் ரௌத்ரம். அடிவயிற்றைக் கலக்குகிற மிரட்டல்.

''பெறகு, என்னடி செய்யப்போறே? தெருக்காட்டுலே 'திங்கு, திங்கு'ன்னு ஆடிக்கிட்டே அலையப் போறீயா? திங்குறதுக்கு எங்க போவே? நா மாண்டு மடிஞ்சிட்டா... சோத்துக்கு எங்க போயி நிப்பே?''

ஆத்திரத்தில் பொறிந்தாள். வார்த்தைகளால் கடித்துக் குதறினாள்.

பேச்சி மறுத்தாள். திமிறினாள். அழுது கரைந்தாள் சாப்பிட மறுத்து குப்புறப்படுத்துக் கொண்டாள். ஊஹூம், அம்மா அசையவில்லை. வாழ்க்கையைப் போல-வறுமையைப் போல அம்மாவும் தாட்சணயமற்றுப் போய்விட்டாள். மனசைக் கல்லாக்கிக் கொண்டாள்.

குலை பட்டினியாய் உறங்கிப் போன பேச்சிக்குள் கனா. குலை பதறுகிற கனா, கண்ணாமூச்சி விளையாட்டில் ஒளிவதற்காக, ஓடிப்போய் ஒரு குழியில் குதிக்கிறாள். காலுக்குத் தலை தட்டுப்படவில்லை. ஆழம் காணமுடியாத குழி. போய்க் கொண்டேயிருக்கிறாள், அலறுவதற்கு வாயைத் திறந்தால், சத்தம் வரவில்லை. கிலியில் மனசு மூச்சடைக்கிறது.

பதறிப் போய் முழிக்கிறபோது-பிடரியிலிருந்து முதுகு வரை மென்மையாக வருடுகிற அம்மாவின் உள்ளங்கையின் ஸ்பரிசம்,

''அடப்பாதரவே, படிச்சிக்கிட்டு, சிட்டுக்குருவியா செறகடிச்சிக்கிட்டுத் திரிய வேண்டிய சின்னஞ்சிறிசு...ஏ வவுத்துலே வந்து பொறந்த தங்கப்பெட்டி... இதை வேலைக்கு அனுப்பி வைச்சு வெந்து சாகுறதைக் கண் கொண்டு பாக்கணுமா? இந்த வங்கொடுமை எனக்கா வாய்கணும்? குருட்டுப்பய தெய்வம், ஏழை பாழைகளைச் சீரழிச்சி. இன்னும் எம்புட்டுத்தான் கூத்துப் பார்க்கப் போறீயோ...''

தொண்டைக்குள் சத்தமாய் முனு முனுப்பு. அதை முடிக்க விடாமல் முட்டிக் கொண்டு வருகிற விசும்பல். பேச்சியின் பிடறிக் கழுத்தில் விழுந்த சுடுநீர்த் துளியில், அம்மாவின் நொந்த மனசு தெரிய...

நெக்குருகிப் போய் விட்டாள் பேச்சி. அப்படியே அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறவேண்டும் போலிருந்தது.

அம்மாவுக்குள் இப்படியோர் அம்மாவா...!

மறுவாரமே, டப்பாவும் சிட்டையுமாக தீப்பெட்டியா பீஸ் பஸ்ஸில் ஏறிவிட்டாள். பகல் நேரக்கிராமத்துக்கு மறை பொருளாகி விட்டாள், பேச்சி.

★ ★ ★

**சி**றகை பிய்த்து விட்டாலும் சிட்டுக்குருவி சும்மா கிடக்காதே! தவ்வித் தவ்விக் குதிக்கத்தானே செய்யும்!

தீப்பெட்டியாபீஸிலும் வேலையோடு வேலையாக பேச்சிக்கு விளையாட்டுத்தான். குச்சியடுக்குகிற போதும் குறும்புதான். வேடிக்கைதான் குறுக்கும் நெடுக்குமாய் கன்றுக்குட்டியாக ஓடுவாள். மற்றவள் அடுக்கி வைத்திருந்த

சக்கையை அவள் பாவாடை நுனி தட்டுச் சிதறி விடும். வசவை வாங்கிக் கட்டிக் கொண்டு, குதூகலமாய்ச் சிரிப்பாள்.

அப்படித்தான் மூன்று நாளுக்கு முன்னால் பக்கத்தில் உட்கார்ந்து 'அடிப்பெட்டி' ஒட்டிக் கொண்டிருந்த ஆவுடைச்சியோடு நடந்த விளையாட்டு வினையாகி... வாய்ச் சத்தம் சூடேறி கைச்சரசமாகிவிட....

குச்சியடுக்குகிற சக்கை ரெண்டு ஒடிந்து போய் விட்டது. வாய்க்கு வராத வார்த்தைகளால் மேஸ்திரி நாற வசவாக' திட்டி விட்டான். சுற்றி நின்று வேடிக்கை பார்த்த கண்களால் தோலுரிக்கப்பட்டதைப் போல அவமானத்தை உணர்ந்தாள்.

அடிப்பதற்கு கையை ஓங்கிக் கொண்டு ஆத்திரத்துடன் மேஸ்திரி நெருங்கியபோது, நடுங்கியே விட்டாள். நல்ல வேளை. அடிக்கவில்லை.

அம்மாவிடம் சொல்லவில்லை. பாவம் அவள் வேறு நொந்து புலம்புவாள்.

நேற்றும் அப்படித்தான். மதியம் மணி ஒன்றரை எல்லோரும் சாப்பிடப் புறப்பட்டார்கள். இவளும் தூக்குச் சட்டியை, எடுத்துக் கொண்டாள்.

வேப்பமரத்தடியில் சாப்பிட்டு முடித்துவிட்டு, அடி பம்பில் தண்ணீர் அடித்துக் கை கழுவினாள். தண்ணீர் சிறிய வாக்காலில் சென்று நாலைந்து பூச்செடிகளுக்குப் பாய்கின்றது. கேந்திப்பூ சந்தன நிறத்தில் சிரிக்கிற அதன் அழகு.

அடிபம்ப் அடிக்கிற போது எழுகிற 'டடக், டடக், கென்கிற சத்தம் வேறு அவளுக்கு உற்சாகமாயிருந்தது. வயசுக்குரிய விளையாட்டுக் குணம் தலை தூக்கி, சாப்பிட்டு வந்த சகலருக்கும் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தாள்.

''டடக், டடக்... டடக்... ட்டடக்...'' அவளுக்குள் சங்கீதமாய் இந்தச் சப்தம்,

தன்னை மறந்து அடித்துக் கொண்டிருந்தாள்.

''ஏய், வேலை பார்க்க வந்தீயா, விளையாட வந்தீயா?'' என்ற மேஸ்திரியின் அதட்டல் கேட்டுத்தான் நிஜ உலகத்துக்கு வந்தாள்.

சுற்றிலும் ஒரு சுடு குஞ்சுகூட இல்லை. எல்லாரும் வேலைக்கு உள்ளே போய்விட்டனர். இவள் மட்டும் ஒற்றையாக.

அலங்க மலங்க முழித்தாள். குற்ற உணர்வு உறுத்தினாலும் பணிய மனசில்லை. இவன் அன்றைக்குத் திட்டியவன். அடிக்க வந்தவன்.

அவளது பிஞ்சுக்கையை இறுகப்பற்றி ஆத்திரத்துடன் உலுக்கினான்.

''வேலை பார்க்காமே, இங்க என்ன செய்கிற?''

ஒரு உதறி உதறி கையை உருவிக் 'கொண்ட பேச்சி, ''அதைப்பத்தி ஒங்களுக்கென்ன? குச்சி அடுக்குன கட்டை எம்புட்டோ அதுக்குத்தானே கூலி? கூலி கொறைஞ்சா எங்கம்மாதான் என்னவையணும்? ஒங்களுக்கென்ன வந்துச்சு?''

''எங்களுக்கு என்னவா? எதுத்துப் பேசுற அளவுக்குத் திமிரா? கஞ்சிக்கு வழியத்துப் போய் கந்தகத்துக்குள்ளே

சீரழிய வந்த சின்ன நாய்க்கு இம்புட்டு வாயா? இரு, இரு ஒன்னைப் பார்த்துக்கிடுறேன்...''

ஆபீஸுக்குள் ஓடுகிற அவளைத் துரத்துகிற மிரட்டல். ஏதோ தைர்யத்தில் பேசிவிட்டாலும்... பேச்சிக்கு இப்போது உதறலெடுக்கிறது, மிரட்டல் என்ன ரூபமெடுக்கிறதோ...

மீள முடியாத முள்ளுப் புதருக்குள் சிக்கிக் கொண்டதைப் போல... உள்ளுக்குள் ஒரு மிரட்சி.

இன்னும் விடியாத பொழுது, அம்மா உசுப்பி விட்டாள். கண் விழிக்கவே முடியவில்லை. பேச்சிக்குக் கண்ணெல்லாம் எரிந்தது.

முகத்தைக் கழுவினாள். பல்லைத் தேய்த்தாள். சடைபின்னிக் கொண்டாள். மனசுக்குள் மேஸ்திரியின் மிரட்டல் என்ன ஆகுமோ... என்ன செய்வானோ..

''என்னடி பேச்சி, முகம் கொறாவிப் போயிருக்கே?''

''ஒண்ணுமில்லேம்மா...''

ஆனாலும் உள்ளுக்குள் தடக்,தடக், தடக்...

புறப்பட்டாள். முற்றத்தில் இறங்கியதும் இருட்டும் வாடைக்காற்றும் மோதிற்று. நாய்ப்பயம் கூட தெரிய வில்லை. எதையும் உணரமுடியாத அளவுக்கு மனசெல்லாம் மேஸ்திரி பயம்.

''பார்த்துப்போ கண்ணு, இருட்டுலே கல்லு கில்லு காலை எத்திராம... யாருகூடயும் சண்டைகின்டை போட்டு டாம... கருக்கிடையா வேலை பாக்கணும்மா, என்ன?''

முதுகைத் துரத்திய அம்மாவின் கவலைக்கு உயிரில்லாமல் ''ஆட்டும்மா'' சொல்லிவிட்டு நடந்தாள்.

தெருவில் இறங்கினாள். களத்தை நோக்கி நடந்தாள். அங்கு தான் தீப்பெட்டியாபீஸ் பஸ் வந்து நிற்கும்.

ஊரையே அலறடிக்கிற ஹாரன் சப்தம் மூன்றாவது தடவையாக...''

இவள் பரபரப்பாளாள்.

பதினாறு பேரும் ஏறிவிட்டனர். ஏற்கனவே பத்துப் பதினைந்து பேர். பேச்சி மூன்றாவது சீட்டில் ஜன்னலோரம் உட்கார்ந்தாள்.

டிரைவர் கழுத்தைத் திருப்பி பேச்சியை குர்ர்ரென்று பார்த்தார். பார்வையில் தெரிந்த தீக்கங்கு, அவளைத் திகிலாக்கியது. அடி வயிற்றில் ஒரு கலக்கம்.

ஏஜெண்ட் பஸ்ஸுக்குள் ஏறி, தலைகளை எண்ணினார். அவரை எதிர்பார்த்துக் காத்திருந்த டிரைவர் கடுப்போடு பேச்சியைப் பார்த்துச் சீறினான்.

''நீ எதுக்கு வண்டியிலே ஏறுனே?''

ஏஜெண்ட் திகைக்க, சகல கண்களும் இவள் மீது கவிழ, உள்ளுக்குள் தடுமாறினாள், பேச்சி. அம்புபட்ட பறவையாக மனசு துடிக்க, மருகித் தவித்தாள்.

''ஏய். இந்தா! நா கேக்கேன் இல்லே? எதுக்கு வண்டியிலே ஏறுனே? எறங்கு முதல்லே''

பேச்சிக்குள் கொத்திப் பிடுங்கிற அவமானம், சக சிறுமிகளின் அனுதாபப் பார்வைகள் ஊசிகளாக இவளுள் பாய்ந்து...

''எதுக்கு, எதுக்கு?''

பதைப்போடு குறுக்கிடுகிறார் ஏஜெண்ட்

''இந்தக்குட்டி நாயை மொதல்லே எறக்கிவிடுங்க''

ஆத்திரமாய் ஏகிறுகிற டிரைவர்.

''ஒழுங்கா வேலை செய்யமாட்டா குழாயடியிலே விளையாடுவா. அதட்டுனா எதுத்துச் சட்டம் பேசுவா. இந்த மாதிரி வேலை செய்யாத வெட்டிக் கழுதைகளையெல்லாம் எதுக்கு வண்டியிலே ஏத்தணும்? டீசல் விக்கிற விலையிலே...''

பஸ் முழுவதும் திகிலான கசாமுசா சப்தம். இன்னதென்று புரியாமல் பயத்தோடு முணு முணுக்கிற சப்தம்.

இவளுக்கு உயிரே கழன்று போவதைப் போலிருந்தது குதறியெடுக்கிற அவமான அவஸ்தை.

''டீசல் போட்டு இந்தச் சாமக்காட்டுலே நாங்க டிரிப் அடிக்கோம். இதுகளை அள்ளிப்போட்டுக்கிட்டுப் போறோம். எதுக்கு? வேலைக்குத் தானா? வெளையாடவா? முளைச்சு மூணு எலை விடுறதுக்குள்ளே இந்தக் குரங்கு சட்டம் பேசுதே இதெல்லாம் உருப்படவா போகுது?''

ஏஜெண்டுக்கு எதுவுமே புரியவில்லை. பேச்சி அழுது விடுவாள் போலிருந்தது. வெட்டுண்ட கொடியாக தலை தொங்கிக் கிடந்தாள்.

புரியாத நிலையிலேயே டிரைவரின் ஆத்திரத்தை குளிர் வார்த்தைகளால் சமாதானப்படுத்தி...இவளையும் மென்மையாகக் கண்டித்தார்.

"இனிமே... இப்படியெல்லாம் புகார் வர்ற மாதிரி நடந்துக்காதே" என்று அன்பான அதட்டலில் சத்தம் போட்டு...

"ம்ம்... சரி சரி... வண்டி போவட்டும்" என்று இறங்கினார், ஏஜெண்ட்.

சுக்கல் சுக்கலாக கிழித்தெறியப்பட்ட காகிதமாக பேச்சி.

இந்த வயசில் விளையாடுகிறது, இம்புட்டுப் பெரிய குற்றமா?

முட்டிக் கொண்டு ததும்பிய அழுகையை உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டாள் கண்ணிமைகளில் நீர்க்கனம்.

ஸ்டார்ட்டான பஸ்ஸின் அதிர்வில் குலுங்கி உதிர்ந்த நீர்த்துளி, அவளது புறங்கையில்...

மிரட்டலான எகத்தாளத்துடன் இரைச்சலோடு பஸ் நகர்ந்தது. முகத்தை மறைப்பதற்காக ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

மைதானம் அவளை விட்டுப் பிரிந்து தூரம் தூரமாகப் போய்க் கொண்டிருந்தது.

*-1991-செம்மலர்*

# அவளுக்குள்...

வேறு வழியில்லை. பார்வதியை கூட்டிக் கொண்டு வந்து விட வேண்டியதுதான் என்று கடைசியாக முடிவுக்கு வந்தான், லட்சுமணன்.

வீட்டுக்கு வெளியே வந்தான். காலை வெயில் சுள்ளென்று மூஞ்சியில் அறைகிறது. பங்குனி மாச வெயில் கனத்துத் தொங்குகிற மேகம். ராத்திரி பூராவும் மின்னல் மழை வந்தாலும் வரக் கூடும். இறுக்கமும் புழுக்கமுமாய் மூச்சுத் திணறுகிறது.

வறட்சி கூலி ஜனங்களை பாடாய் படுத்தி விட்டது. வறட்டி விட்டது. மழை வந்தால் நல்லது. கோடை வெள்ளாமைக்காவது வேலைகள் துவங்கும், உழவு, பாத்தி கட்டு. நடுவை என்று, கூலியாட்களுக்கு ரெண்டு வேலை ஜோலி கிடைக்கும். அடுப்பு புகையும்.

தாழ்வார நிழலில் கிடந்த சைக்கிளை எடுத்தான். முன் வீல் காற்று இறங்கிக் கிடந்தது. பஞ்சராக இருக்குமோ...

சீட்டில் அப்பிக் கிடந்தது தூசி, கையால் ஒரு தட்டு தட்டினான். வண்டியே கலகலத்தது. கிழட்டுச் சைக்கிள்.

நானூறு ரூபாய்க்கு வாங்கி நாலு வருஷத்துக்கு மேலாகி விட்டது. கல்யாணம் முடிந்த மாசத்தில் வாங்கியது. ரிம் முழுக்க துருவேறி நிறம் மாறியிருந்தது. சில ஓட்டைகள்,

மக்கார்டு எல்லாம் பெயிண்டு உதிர்ந்து. சொறிபிடித்து... வண்டியே லட்சணம் கெட்டுப் போய் விட்டது. இவர்களது தாம்பத்யம் போல.

பெடலில் காலை வைத்தான். வீட்டைப் பார்த்தான். பார்வதி இல்லாத வீடு. களையற்றுப் போய் சுடரணைந்த அழுக்குத் தீபமாய் வீடு நிறைய முட்டும் சூன்யமாய்...

லட்சுமணன் ஒரு வேகத்தில் பெடலை அழுத்தினான். சீட்டில் ஏறி உட்கார்ந்தான். செயின், 'கொரட், கொரட்' டென்று கூச்சலிடுகிறது. செயின் கவரில் உரசுகிற அபஸ்வரம். சென்ட்ரலாக்சில் தேய்ந்து விட்டது போல பெடலை மிதிக்கிற போதெல்லாம் 'லொடக், லொடக்' என்கிறது. காற்றடிக்க சைக்கிள் கடைக்குப் போனான்.

மெட்டல் ரோட்டில் சைக்கிள் விரைகிறது. நாய் கடித்துக் குதறிப் போட்ட பழந்துணியாய் கிழிந்து கிடக்கிற ரோடு. குழிகளில் விழுந்து எழுகிற போதெல்லாம் தானாகவே 'கிணுங்' கென்கிற பெல்.

பார்வதி கோபித்துக் கொண்டு போய் நாலைந்து நாளாகி விட்டது. உண்டும் உண்ணாமலுமாய் நாட்கள் வெறுமையாய் ஊர்ந்தன.

பார்வதி இருந்திருந்தால்...

வேலைக்குப் போய் விட்டு வந்தவுடன், கால் கையைக் கழுவி விட்டு வந்து உட்கார்ந்தால் போதும், வட்டிலில் சோறு குழம்பு. எல்லாம் தயாராக இருக்கும். ஒரு மாயம் போல.

லேசாய் விக்கி விட்டால் தண்ணீர்ச் செம்புடன் பக்கத்தில் நிற்பாள். ''குடிங்க'' என்பாள். தொண்டையை மென்மையாய் வருடுவாள்.

''மெல்லச் சாப்பிட வேண்டியது தானே? என்ன அவசரம்?''

அன்புடன் மிருதுவாய் கண்டிப்பாள். அந்தப் பரிவிலும், கரிசனத்திலும் வயிறு குளிர்ந்து நிரம்பும்.

அவள் இல்லாமல்...

வட்டிலைத் தேடி, தானே சோறு வைத்து, தானே குழம்பு ஊற்றி, குழம்பைப் பற்றி குறை சொல்ல ஆள் இல்லாமல் உண்டு முடிப்பதற்குள் உடம்பு. மனசு எல்லாமே வெறுத்துப் போகும். ச்சீயென்றாகி விடுகிறது. பார்வதி இல்லாத சூன்யம், சுள்ளென்று உறைக்கிறது. பங்குனி மாச வெயிலாக மனசு கிடந்து ஏங்கித் தவிக்கிறது.

''நெழலோட அருமை, வெயில்லே காய்றப்போ தான் தெரியுது'? என்று புலம்பித் தகிக்கிறது. அதிலும் ராத்திரியில்.

படுத்தால் உறக்கமே வராது. நெருஞ்சி முள்ளாக நினைவுகள். பேச்சுத் துணையில்லாமல்... வீடே மௌனப் பாறையாய் போட்டு அமுக்கும். அழுத்தும். சுவர்க் கோழியின் 'ஙீ'யென்ற இரைச்சல் இவனைச் சீண்டும். நையாண்டி பண்ணும்.

மனசுக்குள் பார்வதி சம்பந்தப்பட்ட எண்ணங்கள். கல்லெறிபட்ட தேனீக்களாய் ரீங்காரமிடும், நிலையற்று பறந்தலையும். புகார்த்தொனியில் இரைச்சலிடும்.

நகரமறுத்து இரவு வம்பு பண்ணும். மல்லுக்கட்டும். அயர்ந்து உறங்குவதற்குள் 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிப் போகும். செத்துப் போகலாம் போலத் தோன்றும்.

'தனிமரம் தோப்பாகாது. தோப்பாவது, கீப்பாவது' தனி மரம் ஒரு மரமேயாகாது. ஒத்தை மனுசனாக இருக்கிற இருப்பும், ஒரு இருப்பா...? ச்சே!

வீடே வெறும் வீடாகிப் போன மாதிரி 'பகீர், பகீரெ'ன்கும். வந்த சண்டையே... வீட்டுக் கூரையால் தானே!

மெட்டல் ரோடு தார்ரோட்டில் போய் காணாமல் போயிற்று, தார் ரோட்டில் சைக்கிள் சற்று சரளமாய் ஓடியது. செயின் கவரில் உரசுகிற 'கொரட், கொரட்' சத்தம். இச்சிலாத்தியாக இருந்தது. எரிச்சலில் வலது பாதத்தால் ஒரு உதை. வலி தாங்காமல் செயின் கவர் சத்தம் மாறி, 'வீர், வீர் என்று கதறியது.

கூரை மேய்ந்து ரொம்ப நாளாகி விட்டது. குப்பையாகிப் போயிற்று. கன்னங்கரேலென்று அசிங்கமாய் கிடந்தது. முகடு கிழிந்து கிடந்தது. முகட்டுக் கட்டைகள் எலும்புகளாக கறுப்பாக வெளித் தெரிந்தன.

கூரை போன வருஷமே மேய்ந்திருக்க வேண்டும். இவனும் கம்பந்தட்டையாக ஊர் முழுக்க அலைந்தான். கம்பு பயிரிட்டிருந்த ஒவ்வொரு சம்சாரி வீட்டிற்கும் போய் வந்தான். கெஞ்சிக் கூத்தாடினான். கதையாகவில்லை.

கடுங்கோடை. மழை தண்ணீர் இல்லை. காடுகளில் ஒரு புல் பூண்டு கிடையாது. பச்சை என்ற பேச்சே இல்லை எருமை மாடுகள் வைத்திருக்கிறவர்களுக்கு கம்பந்தட்டைகளை விட்டால்... ஒரு பொட்டு கூளமில்லை. அவர்களும் கம்பந்தட்டைகளை விலைக்கு வாங்க போட்டி போட... ஆகாத விலையாயிற்று.

இவனுக்கு வெறுத்துப் போயிற்று. இல்லாமையும் இயலாமையும் இவனது முயற்சிகளை கூறு போட்டு, தின்று தீர்த்து விட்டது.

பார்வதியும் ஊர் நிலவரத்தை உணர்ந்துகொண்டாள்.

''சரி... கிடக்கு! அடுத்த வருஷம் பாத்துக்குவம்'' என்று தலையாட்டினாள். இதெல்லாம்... ஆடி மாசக் கதை.

''சண்டை வந்த அன்றைக்கு.

ஒரு வேலை ஜோலியில்லை. வறட்சி. ஒரு வெள்ளாமை வேலையும் நடக்கவில்லை. கூலியாட்கள் பகலிலும் படுத்துறங்கித் திரிந்தனர். நல்ல மதிய நேரம். லட்சுமணன் துண்டை விரித்து படுத்தவன், அப்பிடியே உறங்கி விட்டான். லேசாய் குறட்டை கூட வந்தது.

பார்வதி மதியக் கஞ்சி குடித்துக் கொண்டிருந்தாள். அவள் முன்னால் உரித்த வெங்காயம், முகட்டுக் கிழிசல், அவளுக்குப் பக்கத்தில் வட்ட வெயிலாக விழுந்திருந்தது. அந்த வெயில் வட்டத்தில் சிற்றெறும்பு வரிசை.

நிழலில் ஒரு நிறமாகவும். வெயிலில் ஒரு நிறமாகவும் சிற்றெறும்பு வித்தியாசப்படுவதை பார்த்துக் கொண்டு, கஞ்சி குடித்துக் கொண்டிருந்தவள்... திடுமென்று ''பே... ஏ'' என்று குடித்துப் போய் அலறினாள், அலறல் சத்தத்தில் விழித்துக் கொண்ட லட்சுமணனுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை, வெலவெலத்துப் போய் ''என்ன, என்ன'' என்று பதைத்தான். உறக்கச் சடவு தெளிந்த பிறகு தான்...விஷயமே பிடிபட்டது. பயந்துபோய் கத்திய பார்வதி முகத்தில் ஒரு மிரட்சி. ஓர் அருவெறுப்பு.

''ச் சேய்ய்... ச்சேய்ய்'' என்று அசிங்கத்தைக் கண்டு வெறுத்தவளாய், வட்டிலைத் தூக்கிக் கொண்டு துள்ளி நகர்ந்தாள். அவள் முகம் கோபத்திலும், பதற்றத்திலும் கோணலாகிக் கிடந்தது.

அந்த வட்ட வெயில் வெளிச்சத்தில், ஒரு செத்த பிரேதம் கொத்திக் குதறப்பட்ட ஒரு செத்த எலி. ரத்தமும் சதையுமாய் கிழிந்து கிடந்தது பார்க்கவே அசிங்கமாய் இருந்தது.

ஏதோ... பருந்தோ, காகமோ தூக்கிச் சென்ற எலி பிடி தவறி விட்டிருக்கிறது. முகட்டுக் கிழிசலுக்கு நேராகவா, அதைத் தவற விட்டிருக்க வேண்டும். அசிங்கம்! நடு வீட்டில் விழுந்து கிடக்கும் கிழிந்த எலி.

அவ்வளவு தான்!

பார்வதி ரணகாளியாகி விட்டாள். கூரை வேயாத குற்றம் முழுவதும் இவன் தலையில், 'கிழி, கிழி' என்று கிழித்து விட்டாள்.

'வக்கத்த ஆம்பளை' 'வகைகெட்ட ஆம்பளை' உப்புக் கல்லுக்குப் பெறாத ஆளு என்று அவள் பாட்டுக்கு அடுக்க ஆரம்பித்து விட்டாள்.

''காடிக் கஞ்சின்னாலும் மூடிக் குடிக்கணும் உருப்படியான கதவுமில்லே. ஒழுகாத கூரையுமில்லே. ஆலமரத்தடியிலே கஞ்சி காய்ச்சி படுத்தெந்திருச்சுப்போற நாடோடி பொழைப்பை விட, நாறுன பொழப்பாய்ப் போச்சு. துப்புக்கெட்ட உங்களுக்கு கழுத்தை நீட்டினதை விட ஒரு முழுக்கயித்திலே நீட்டியிருக்கலாம்.''

அங்கலாய்ப்பும் வசவுகளும் அனுமார் வாலாய் நீண்டது. லங்கையை சுட்டெரித்த அக்கினி வாலாக நீட்டி, அவனது தன்மானத்தை இழுத்து காலில் போட்டு மிதித்தது.

அவனும் பொறுத்து பொறுத்து பார்த்தான், கொதித்த மனசை கொட்டித் தீர்க்கட்டும் என்று பல்லைக் கடித்தான்?

எல்லை மீறி விட்டது. பொது நியாயத்தை தாண்டி விட்டது. 'அடுத்த வருஷம் பாப்போம்' என்று முடிவெடுத்ததில் அவளுக்கும் இருந்த பங்கை மறக்கிற பாசாங்கு முழுக் குற்றத்தையும் இவன் தலையில தள்ளி அமுத்துகிற சாமர்த்தியம். சாகசம். மனசறிந்த அக்ரமம். இதில் இழி சொல் வேறு.

உள்ளுக்குள் முள் முள்ளாய் குத்துகிற அவமானம், லட்சுமணனுக்கு, குத்துண்ட பறவையாக துடித்தாலும், வெளியே அசட்டுத்தனமாய் சிரித்துச் சமாளித்துப் பார்த்தான்.

அந்தச் சிரிப்பும் குத்துண்டது.

''என்ன இளிப்பு வேண்டிக்கிடக்கு? கூரை மேய வக்கத்த ஆளுக்கு குடும்பம் எதுக்கு? பொண்டாட்டி எதுக்கு? பரதேசியா திரிஞ்சிருக்க வேண்டியது தானே?''

லட்சுமணன் வெடித்து விட்டான்.

''அறிவு கெட்ட நாயே 'வாள் வாள்'னு எதுக்கு கத்துதே? வாயை மூடு.''

''மூடலைன்னா...?''

''பல்லை ஒடைச்சிருவேன்.''

''ஒடைப்பீகளோ? ஒடைச்சிருவீகளோ? உங்க கையை ஒடிச்சிட்டா...?''

லட்சுமணனுக்குள் தகிப்பு சாது மிரண்ட கொதிப்பு...

''இப்ப வாயை நிறுத்தப் போறீயா, இல்லியா?''

''எதுக்''

வார்த்தை வாய்க்குள் இருக்கும் போதே, ஓங்கிய கை மாறாமல் விட்டான் ஓர் அறை! அலறினாள். நாறவசவாய் வைதாள்.

மறுபடியும் ஓர் அடி வீடே ரணகளமாக, பக்கத்து வீட்டுப் பெண்கள் ஓடி வந்து குறுக்கே விழ ஆள் ஆளுக்கு சத்தம் போட்டு சண்டையை நிறுத்த...

பார்வதியின் குண விசேஷமே அது தான். அடிக்க அடிக்க வசவும் அழுகையும் கூடும். வெளியாட்கள் வந்த பின்னும் போன பின்னும் முடிவில்லாமல் நீளும்.

நிறுத்தவே மாட்டாள்.

கோபித்துக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போனால், வரவும் மாட்டாள். வைராக்கியம் இவன் போய் கூப்பிட்டால் தான் ஆயிற்று.

அதுவும் கூப்பிட்டவுடன் வரவும் மாட்டாள். அங்கேயும் ஒரே புகாரும், அழுகையும் தான். வழக்கும் பேச்சும் தான். அவளுடைய அம்மா அய்யா தலையிடடு, நல்ல வார்த்தை சொல்லி, 'அம்மா தாயே' என்று நாடியைப் பிடித்து, கெஞ்சிக் கூத்தாடி, மன்றாடி பிறகு தான் வருவாள். பிடிவாதக்காரி.

இந்தக் கொடுமைக்கு பயந்து போய்த்தான் இவனும் நாலு நாளாய் பல்லைக் கடித்துப் பார்த்தான். இயலவில்லை. வீட்டில் கொத்திப் பிடுங்குகிற சூன்யம், தனிமை உணர்ச்சியின் உறுத்தல். அவஸ்தை, போதாக் குறைக்கு. ஊரிலுள்ள பெரிய மனிதர்களின் நச்சுப் பிடுங்கல்கள்.

''ஏண்டா, பொண்டாட்டியை அடிச்சு வெரட்டிட்டு, ஒத்தையிலே கெடந்து இப்படிச் சீரழியுறே? அறிவு கெட்ட கழுதை! போடா... போய் கூட்டியாந்து, குடும்பம் நடத்துற வழியைப் பாரு.''

தார் ரோட்டில் ஏகப்பட்ட ஓட்டுகள். கிழிசல்கள்.

கிடங்கும் மேடுமாய் கொறுவாய்ப் பட்டிருந்தது.

ஒன்றிரண்டு லாரிகள் தடதடத்து ஓடின, பஸ்கள் எதிரில் கடந்து ஓடின. கருவேலி மரங்கள்கூட காய்ந்து போய் முள் முள்ளாய் கிடந்தன.

காடுகளில் வறட்சி தீப்பிடித்து கருக்கியிருந்தது. பச்சை கண்ணில் படவில்லை. வெயில் பழுத்து பழுத்து அடிக்கிறது. மழை வந்தாலும் வரும்.

தார் ரோட்டைக் கடந்து விட்டால்...ஒரு விலக்குப் பாதை. கரிசல் காட்டை வகிர்ந்தெடுத்த மாதிரி நீள்கிற ஒற்றையடிப்பாதை. ரெண்டுமைல் அப்புறம்.

பார்வதி ஊர்தான்.

'அவள் என்ன கூத்து பண்ணுவாளோ... தெரிய வில்லை', நினைத்தால் மனசு 'பக், பக்' கென்கிறது.

ஊர் வந்து சேர்ந்து விட்டது.

இதோ... அந்த தெரு முற்றத்தில் பார்வதி 'கொரட், கொரட்'டென்கிற சைக்கிள் சத்தத்தில் நிமிர்ந்தவள், தூரத்திலேயே இவனை இனம் கண்டு கொண்டாள், விருட்டென்று உள்ளே போய் விட்டாள். இவனும் அதை உணர்ந்து கொண்டாள்.

லட்சுமணனுக்குள் ஒரு திகிலுணர்வு. ''ரணகாளி! என்ன ஆட்டம் போடப் போறாளோ... தெரியலை.''

உள்ளங்கைக்குள் வியர்த்தது. இவனுக்குள் படபடப்பு. பிடிபட்ட குருவியின் சிறகாய்... மனசு.

போய் இறங்கி, சைக்கிளை ஸ்டாண்ட் போட்டான். கிளிப் போட மறந்து போனான். அவன் ஒரு எட்டு நகரவும். வண்டி தானாகவே உருண்டு, 'டமார்' என்று விழுந்தது.

ரொம்பத் தடுமாறிப் போனான்.

'சும்மாவே கெழட்டு சைக்கிள் விழுந்ததில் என்ன ஆச்சோ... என்ன போச்சோ...'

பதற்றத்துடன் வண்டியை தூக்கி தாழ்வார கல்தூணில் சாய்த்தான். மனசெல்லாம் கூச்சமும் லஜ்ஜையும் பிடுங்கித்திங்க. தர்ம சங்கடமாய் திண்ணையில் போய் உட்கார்ந்தான். சிமிண்ட் திண்ணை லேசாய் சுட்டது.

மாமியார் தான் வெளியே வந்தாள். முந்தானைச் சேலையை இழுத்து முதுகையும் தோள்களையும் மூடிக் கொண்டாள், மரியாதை கருதி.

''இன்னிக்குத்தான் ஊருக்குப் பாதை தெரிஞ்சதாக் கும்?'' என்று குறைந்த சத்தத்தில் கண்டனமாய் கேட்டாள்.

''அத்தை... அதுக்கில்லே... சும்மாதா'' என்று எதையோ உளறினான். அவன் வசத்தில் அவன் இல்லை. நாகுழறுகிறது, மனத்தடுமாற்றம் திண்டாடத்தவிப்பு.

அவள் தான் அங்கலாய்ப்பும் புலம்பலுமாய் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

பூப்போல வளர்த்து மூன்று பிள்ளைகளையும் கட்டிக் கொடுத்து... கடைக்குட்டியான பார்வதியை ரொம்பச் செல்லமாய் வளர்த்தது... மூன்று பெண்களும் 'கோவிச்சுக்கிட்டு' அடிக்கடி இங்கு வருவது... பார்வதியின் அய்யா ரொப்ப மனம் கொதித்துப் போய் இருப்பது.

என்று அவள் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டிருந் தாள். லட்சுமணன் உம் கொட்டிக் கொண்டே உள்ளே பார்த்தான். ஆத்மாவைத் தேடுகிற ஆத்மாவின் தவிப்பு.

நாலைந்து நாளில் அரை உயிராகிப் போயிருந்தான். சாப்பிட்டும் சாப்பிடாமலும் வாடிப் போன வாட்டம்.

இவன் பார்வைக்குள் பார்வதி சிக்கவில்லை. வீட்டுக்குள் நிழலிருட்டு. பார்வதிக்கு வாடிய அவன் முகம் நன்றாகத் தெரிகிறது.

அவனது அலையும் பார்வை. பார்வையில் மிதக்கும் வேதனை. தவிப்பு. கண்ணின் ஆழத்தில் ஒரு குழைவு. கனிவு. மன்னிப்பு கோருகிற குரல்.

எல்லாமே அவளுக்குள் ஒலிக்கிறது. சுண்டி விட்ட நரம்பாக அவளுள் பரவுகிற ஓர் அதிர்வு.

அப்போதுதான்.

அந்த இடி ஒரு சூறா வழியாய் வந்தார். பார்வதியின் அய்யா வரும் போதே அனலாய் வார்த்தைகளை எறிந்தார்.

''எவண்டா... இது?''

வெலவெலத்துப் போய் நிமிர்ந்தான், லட்சுமணன்.

''யார்டா நீ? எதுக்குடா இங்க வந்தே?''

பலத்த சத்தத்தில் ஆங்காரமாய்க் கேட்டார் இவன் முகம் சிறுத்து விட்டது.

ஒரு சலசலப்பை எதிர்பார்த்து வந்தவன் தான். ஆனால் இப்படியொரு அதிரடித் தாக்குதலை அவன் எதிர்பார்க்கவே யில்லை. பெண் கொடுத்த மாமாவே 'டா' போட்டு மருமகனை பேசுவதா? இது அத்து மீறல் அக்ரமமான பாய்ச்சல்.

லட்சுமணனுக்குள் சுரீரென்றது. செருப்படி விழுந்தவனாய் உணர்ந்தான். கதறும் பார்வையோடு மாமாவைப் பார்த்தான். வாய் எழவில்லை. நா புரள மறுத்து... மனசு கிடந்து வெந்தது. தகித்தது. எதுவும் செய்யத் தோன்றாமல், ஸ்தம்பித்துப் போய்

''எம்புள்ளையை அடிச்சு வெரட்டிட்டு, எந்த மூஞ்சி யோட இங்க வந்தே? இப்ப நா ஒன்னை செருப்பாலடிச்சா. எவன் கேட்பான்? வீடு மேய வக்கத்த பயலுக்கு வீரம் மட்டும் இருக்கோ?''

யாரும் சகிக்காத கெட்ட வார்த்தையோடு முடித்தார். சரேலென எழுந்தான், லட்சுமணன், ரௌத்ரமாய் கொதித்தான்.

அதே நேரத்தில்.

வீசியெறிந்த கல்லாக 'விர்ர்ர்'ரென்று சீறிக் கொண்டு வந்தாள். பார்வதி. அவள் முகத்தில் அடிப்பட்ட பிராணியின் சீற்றம் கண்களில் ரோஷப்பட்ட ஆத்திரம்.

''அய்யா...'' என்று பலமாய் கத்தினாள். ''இனி ஒரு சொல்லு பேசப்படாது. பேசுனா... அய்யா மக ஒறவே அந்து போகும்''

''ஒன்னைச் சொல்லலை. நீ உள்ளே போ''

''நா வேற, அவரு வேறா? அவரைச் சொல்றதும், என்னைப் பேசுறதும் ஒண்ணுதான்'' ஆவேசம் குறையாமல் கத்தினாள்.

''நீ... போ உள்ளே.''

''எதுக்கு உள்ளே போவணும்? மருமவனை மதிச்சு, மகளை வாழ வைக்க வக்கில்லாத உங்க வீட்டு வாசல்லே, மானமுள்ள பொம்பளை நிப்பாளா?''

''பிறகு...இங்கு எதுக்கு வந்தே?''

''அறிவு கெட்டுப் போய் வந்துட்டேன். சொரணையத்து இருந்துட்டேன். இனிமே, செத்தாலும் வர மாட்டேன்... வாங்க. நீங்க இவுக வூட்லே நமக்கென்ன பேச்சு? நம்ம வீட்டுக்குப் போவம்.''

யாரையும் அவள் திரும்பியே பார்க்கவில்லை. விறுவிறுவென தெருவில் நடந்தாள் பார்வதி. லட்சுமணனுக்குள் ஒரே திக்கு முக்காடல்.

பார்வதி தானா, இது? அவள் தானா இப்படி?

அவனுள் ஒரே இனிமைத் திணறல். பரவசத் திண்டாட்டம்.

*கல்தூணில் சாத்திக் கிடத்த சைக்கிளை எடுத்து, உருட்டினான். அவள் பின்னால் மௌனமாய் நடந்தான். மனைவியைப் பார்த்தான்.*

*ரணகாளியாயிருந்த பார்வதிக்குள் இப்படியொரு உயிர்த் தோழியா! இவனது இதயமாய் சீறிச் சினக்கிற மனக்கலப்பா!*

*அவனுள் பிரமிப்பு உணர்வு. சைக்கிள் உருள உருள, தானாகவே சுழலும் பெடல். இப்போது.*

*செயின் கவர் உரசுகிற 'கொரட், கொரட்' வரவில்லை.*

*-1992 தீக்கதிர் மே மலர்.*

# தளை

ஆவணி மாதத்து காலை வெயில் சுள்ளென்று உறைக்கிறது. டிராக்டர் கண்மாயை நோக்கி தடதடக்கிறது. டிரெயிலரில் அடுக்கான கூடைகள், மண்வெட்டிகள், கடப்பாறைக் கம்பிகள்... தண்ணீர்க் குடம், காபி போடச் சட்டி, கிளாஸ்கள்... மற்றும் சளசளக்கிற கூலியாட்கள்.

டக்கர் குதிக்கிற குதியில்... உட்கார்ந்திருக்கிற ஆள் களுக்கு குடல்ச்சுளுக்கே விழுந்து விடும் போலிருக்கிறது. உட்கார்ந்திருக்கிற எட்டுப் பேர் கைகளிலும் தூக்குச் சட்டிகள், டக்கர் தூக்கித் தூக்கிப் போட்டாலும், இவர்கள் கல்லுப் பிள்ளையார்கள் போல் உட்கார்ந்திருந்தனர்.

எல்லோரும் வேலாண்டியை கேலி செய்து கோட்டி பண்ணிக் கொண்டிருக்கின்றனர். டக்கரின் தடதடப்பையும் மீறுகிற கூட்டுச் சிரிப்பொலி...

எதையும் பொருட்படுத்தாமல் எந்தச் சொல்லாலும் தீண்டப்படாமல், டிரெயிலர் காடியைப் பற்றி குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்தான், வேலாண்டி.

வேலாண்டி கருவேடம் இல்லாதவன். வெள்ளத்தி. மாய்மாலம், சாமர்த்தியம் செய்யத் தெரியாது.மனசில் உள்ளது உதட்டில் வரும், அதுவும் சத்தமாய் வராது, சத்தங்களை எதிர்த்த சத்தமாய் வராது. சளசளப்புக்கு மத்தியில் மௌனமாயிடுவான்.

அவனுள் இன்று அவமானமும், வெறுப்பும். 'இம்புட்டு, அம்புட்டு' என்று சொல்ல முடியாது. தாறுமாறாக மனசுக்குள் தத்தளித்துக் கொண்டிருந்தது.

கோட்டி பண்ணிச் சிரிப்பவர்களை எப்போதேனும் ஏறிட்டுப் பார்ப்பான். அக்கினிப் பார்வை சிவபெருமானின் மூன்றாவது பார்வை. அனல் பறக்கும் அந்தப் பாவிகள் அதையும் ஊதித் தள்ளி விட்டு கெக்கெலி பண்ணுவார்கள்...

இவக்களுடன் ஏழெட்டு நாட்களாகத்தான் சங்காத்தம் தொடர்பு. அதற்கு முன்பெல்லாம்?

வேலாண்டி சொந்தப் புஞ்சையில்தான் வேலை செய்வான். ரெண்டு பிள்ளைகள் பள்ளிக் கூடம் போக, இவனும் மனைவியும் எந்நேரமும் அந்தப் புஞ்சையில் தான்.

கையகலப் பூமிதான். முக்கால் குறுக்கம். அதில் மூலைக்கொரு காய்கறிகள் பயிரிட்டிருப்பான். காலமும் கோடையுமாய் எந்நேரமும் வேலைகள் இருக்கும்.

அதிலும் வேலாண்டிக்கு உழைப்பு மேல் அபரிமிதமான பிரியம். கை சும்மாயிருக்காது. மனசும் சும்மாயிருக்காது. காலையில் எல்லாச் சம்சாரிகளும் காபித் தண்ணியக் குடித்து விட்டு ஓடைக்குப் போவார்கள். இவன் புஞ்சைக்கு வந்து விடுவான். கஞ்சி குடிக்கிற நேரம் வரைக்கும் எதையாச்சும் நோண்டிக் கொண்டே இருப்பான். கஞ்சி குடித்தபிறகும் தான்.

பொழுதடையத்தான் வீடு வருவான். வீடு வந்தாலும் சும்மாயிருக்க அவனால் முடியாது. விறகு உடைப்பான். கல்லை அடுக்குவான், மண்ணைக் குழைத்து சுவரைப் பூசுவான். புழுச்சி நாரில் கயிறு திரிப்பான். என்னமாச்சும்

செய்து கொண்டிருப்பான். பாடுபடாமல் அவனால் இருக்க முடியாது.

சும்மாயிருந்தால் கை சோம்பிப் போகுமாம். சூம்பிப் போகுமாம். ஏதாச்சும் செய்து கொண்டு இருந்தால் கைக்கும் வலுவாம். மனுசனைச் சுற்றிலும் சுத்தமாகும்.

வேர்வை வடிந்து கொண்டேயிருந்தால் உடம்பும் மனுசும் சுத்தமாகுமாம். சுத்தம் என்றால், அவன் அகராதியில் அழகு.

இது இவனது சின்ன வயசிலிருந்தே ஊறிப்போன சுபாவம்.

ஏழு வயசிருக்கும், அப்போது வீட்டுக்கு கிழக்கே குப்பைமேடு, குப்பையின் சரிவில் ஒரு சின்ன வேப்பங் கன்றைப் பார்த்தான். குழந்தைக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. மனசுக்குள்ளே குதியாளம் போடுகிற உற்சாகம். நிறைய கற்பனைகள்...பெரிய பெரிய திட்டங்கள்.

மண்டி போட்டு உட்கார்ந்து... சுற்றிலும் உள்ள ஈர மண்ணை பிஞ்சு விரலால் நோண்டி நோண்டி கிளறினான். வேர் அறுந்து போகாமல் பக்குவமாய் உருவி, வெயில் படாமல் ஈர மண்ணை வேரில் அப்பிக் கொண்டான்.

''சூரியன் பார்வை பட்டால் வேர் செத்துப் போகுமாம்.''

புஞ்சைக்கு ஓட்டமாய் ஓடினான். மாரி மூலையில் தான் தண்ணீர் பாய்ந்து ஈரம் கிடந்தது. சிறுசாகக் குழியைத் தோண்டினான். மண்ணோடு சேரத்து வேப்பங்கன்றை

ஊன்றி, பக்கத்தில் காய்ந்து கிடந்த சாணியை எடுத்து நொறுக்கி, அதில் தூவி, மண்ணைப் போட்டு மூடி...

அம்மாவிடம் கூடச் சொல்லவில்லை. உறக்கத்தில் கூட அந்தக் கன்றுதான். பத்து நாட்களுக்குப் பிறகு பார்த்தான். புதிய துளிர்கள். வெளிர் பச்சையாக ஈரமினு மினுப்பாக புதிய துளிர்கள்... உழைப்பின் உயிர்ப்பு...

அம்மாவிடம் காட்டினான். அவள் அப்படியே பூரித்துப் போய் விட்டாள். அப்படியே வாரியள்ளி மகனை நெஞ்சோடு சேர்த்து அணைத்து 'மொச்' மொச் சென்று முத்தமிட்டாள். ஏந்தங்கம்... ஏங்கண்ணு... ஏஞ்செல்லம்... எந்தச் சிறுக்கி மவனுக்கு இப்படி அறிவு வரும்? எங்க அண்ணனைப் போலத் தாண்டா... நீயும் மண்ணைத் தொட்டு முத்தங் கொஞ்சுற மனசு...''

பார்த்த ஆளிடம் எல்லாம் மகனைப் பற்றி பெருமை பெருமையாக சொல்லி மாய்ந்தாள். இவனுக்குப் பெருமிதம் பிடிபடவில்லை.

உச்சி முதல் உள்மனசு வரை இனித்தது. ஒரு சின்னஞ்சிறிய உழைப்பின் உயிர்ப்பான விளைவு...

அந்தக் கன்று இப்போது பெரிய மரமாகி விட்டது. அடர்த்தியான இலைகள். எல்லாத் திசையிலும் நீண்டு உயர்ந்த கிளைகள். அரை வட்டமான அடர்த்தியான ராட்சஸத் தலையோடு கம்பீரமாய் நிற்கிற அந்த மரம், புஞ்சைக்கே ஒரு அழகாகி விட்டது. மரத்தை நினைக்கிற போதெல்லாம் இவனுள் இனிய உணர்வு.

அந்தப் புஞ்சையின் பெயரே 'வேப்பமரப் புஞ்சை' என்றாகிவிட்டது. ஆகி என்ன செய்ய?

ம்...போச்சு... எல்லாம் போச்சு... மரத்தை வைத்து தண்ணீர் ஊற்றி வளர்த்தவனுக்கு பந்தம் இல்லாமல் போய்விட்டதே... ஒரே கையெழுத்தில் அறுபட்டு விட்டதே...

...போனமாதம், திங்கட்கிழமை, கீழராஜ குலராமன் ரிஜிஸ்டர் ஆபீஸில்.

''இதுல கையெழுத்துப் போடணும், போடத் தெரியுமா, கைநாட்டா?''

மஞ்சள் தண்ணீர் ஊற்றி கோயிலில் நிறுத்தப் பட்ட கிடாயாக வெல வெல வென்று விழித்தான் வேலாண்டி.

உயிர் பிரிகிற அவஸ்தையாக தடதடக்கிற மனசு 'தெரியும்' என்பது போல தலையை ஆட்டினான்.

மனசின் பீதியும் வேதனையும் விரல்களில் வியர்வையாகக் கசிய... பேனா சுமக்க முடியாத சுமையாகி விட்டது. மனசு, விரல்கள் எல்லாம் நடுங்கின. தலையெழுத்தைப் போல கோணல் மாணலாகிற்று கையெழுத்து.

மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு போட்டான்.

பத்திரங்களில் கையெழுத்து போட்டு முடித்தவுடன், அவனை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றனர். சாப்பாடு வாங்கிப் போட்டார்கள். சோறு இறங்க மறுத்தது. தொண்டைக் குழிக்குள் கட்டை போல் ஏதோ அடைத்துக் கொண்ட மாதிரி இருந்தது...

மனசின் மூலை முடுக்கெல்லாம் பிய்த்துப் பிடுங்குகிற கவலைகள். பறி கொடுக்கிற அவஸ்தை.

உயிருக்கு உயிரான ரத்த பந்தத்தை அறுத்துக் கொடுக்கிற உயிர் வாதை.

வேப்பமரத்துப் புஞ்சை என்றால், ஊர்மெச்சும். நல்ல தண்ணீர். மனிதக் கணக்கையும் மீறின விளைச்சல் காட்டும். ஆசையை மிஞ்சுகிற மகசூல். சிந்திய வியர்வையை ஏமாற்றாமல் ஒன்றுக்குப் பத்தாக பத்துக்கு நூறாக அள்ளித் தரும். உழைப்பு ஊற்றை பெருக்கெடுக்கச் செய்கிற மாதிரி பலன் தரும்.

விபரம் தெரிந்த நாட்களிலிருந்து இவன் விளையாட்டுப் போல வேர்வை சிந்திய புஞ்சை, இவனது முடிவேயில்லாத உழைப்புக்கு இடம் கொடுத்த புஞ்சை இவனது உழைப்புத் திணவுகளுக்கு எல்லாம் சந்தோஷமாய் முகம் கொடுத்து ஈடு தந்த புஞ்சை.

தாயைப் போல முகம் புதைக்க மடி தந்த புஞ்சை, உழுது புரட்டப்பட்ட நேரத்தில் பூவும் காயுமாக வெள்ளாமை குலுங்கி நிற்கிற சமயத்தில் மனைவியைப் போல மோக மூட்டிய புஞ்சை. பிள்ளையைப் போல மனசோடு கொஞ்சி விளையாடி நெகிழ்ச்சி தந்த மண்.

வேப்ப மரத்தில் எந்நேரமும் மைனாக்களின் சத்தம். சண்டையாய்-சரசமாய் சத்தங்கள். புஞ்சையில் ஒரு புழுவைக் கூட இருக்க விடாது. தவ்வித் தவ்வி நடை பயின்று, சகலத்தையும் கொத்தி முழுங்கிவிடும்.

போச்சு... எல்லாம் போச்சு... 'நூத்துக்கு அஞ்சு வட்டி' பரமசிவத்திடம் கை நீட்டி வாங்கிய கடன், வட்டி போட்டு குட்டி போட்டு, பல்கிப் பெருகி... விரியன் குட்டிகளாக காலைச் சுற்றி... புஞ்சையை விழுங்கி விட்டது.

க்ஷய ரோகத்தில் அஞ்சு வருஷம் கிடந்த அம்மா ஆசாரி பள்ளத்தில் சதையைக்கரைத்து விட்டு இளைப்பும் தோலுமாய் இருமலாய் வந்து சேர்ந்த அம்மா.

அய்யாவின் காலில் பாம்பு கடித்து, சாவுமில்லாமல், பிழைப்பும் இல்லாமல், ஆறு மாசமாய் நடந்த வைத்தியம்.

மனைவி வழியில் வந்த ரெண்டு கோயில் மொட்டை.... அதற்கான செலவுகள்...

எல்லாம் கூட்டுச் சேர்ந்து கடனையும் வட்டியையும் வளர்த்தது. பிக்கல் பிடுங்கள் தாங்க முடியாமல் செய்து... புஞ்சையை கைகழுவச் செய்து விட்டது...

கண்மாயின் உள்வாய். கன்னங் கரேல் என்று வைரமாய் மின்னுகிற மண் கிடங்கு, இரண்டாவது லோடு ஏறி...டக்கர் தேர்போல அசைந்து செல்கிறது. டிரெய்லரில் கோபுரம் குத்தியாக மண் கரம்பை மண்.

லோடு ஏற்றி முடித்த உற்சாகத்தில் கூலியாட்கள் எல்லோரும் வேலிமர நிழலுக்குள் போய் உட்கார்ந்தனர். டக்கர் திரும்பி வர அரை மணி நேரமாகும்.

வேலாண்டியில் உட்கார முடியவில்லை. மனசு வரவில்லை. உறங்கும். நேரம் தவிர மற்ற பொழுதெல்லாம் உழைத்த உடம்பு. 'எட்டு மணி நேர ஓய்வு' என்ற சட்டமெல்லாம் தொட்டறியாத கைகள்.

கொத்திக் கண்ட கோழியும், நக்கிக் கண்ட நாயும் மட்டுமல்ல... பாடுபட்டுப் பழகிப் போன கையும் கூட சும்மாவேயிருக்காது. வேலாண்டிக்கு கை குறு குறுத்தது மம்பட்டியைத் தூக்கினான்.

மண்கிடங்கின் சுற்று விளிம்பில் கிடந்த புல்க் கரடுகளை வெட்டி ஒதுக்கினான். கம்பியால் ஓங்கி ஓங்கிக் குத்தி, ஆட்டி, மண்ணின் இறுகலை உடைத்து நெகிழ்த்து விட்டான், கண்ட மேனிக்கு குப்புறக் கிடந்த கூடைகளை மலர்த்தி...சகலத்திலும் மண்ணை அள்ளி வைத்தான்.

வெய்யிலின் வீர்யத்தை காற்று மட்டுப் படுத்தி விட்டது. ஆடிமாதக் காற்று இன்னும் நின்னு போகவில்லை. நீள்கிறது. வெக்கையில்லாத ஊமை வெயில்.

வேலிமர நிழலுக்குள் இருந்து அதே சிரிப்பாணிச் சத்தம், மனசைக் குத்திக் குடைகிற கேலிகள். உழைப்பையே பரிகாசம் செய்கிற கிண்டல்.

''அண்ணே... வேலாண்டியண்ணே, ஒனக்கென்ன தலையெழுத்தா? வேணாக கொதிக்கிற வெயில்லே கிடந்து சாகுறே? நீயா அள்ளிக் கட்டிக்கப் போறே?''

''சும்மாயிரப்பா... மாங்கு மாங்குன்னு பாடு படுற மனுசனை ஏம்ப்பா தடுக்கறே? டக்கர் காரருசாயங்கலாம் தனியா அவருக்கு மட்டும் கிரீடம் குடுத்தாலும் குடுப்பாரப்பா...''

குப்பென்று வெடித்துச் சிதறுகிற சிரிப்புச் சத்தம். பேதப்பட்ட பல குரல்களின் ஒன்றுபட்ட நையாண்டித் தொனியாக நெஞ்சுக்குள் வந்து குத்துகிற சத்தம்.

வேலாண்டிக்கு எரிச்சலாய் இருந்தது. காறித் துப்பலாம் போலிருந்தது. 'ச்சே! மேல் வலிச்சபயக, வஞ்சனை இல்லாம ஒழைக்காம, மர நிழல்லே உக்காந்து அக்குருமம் செய்ற பயக... என்னைப் போய் கோட்டி பண்றாங்களே...! ஈனப் பயக, மயிலைப் பாத்து வாங்கோழி கேலி பண்ற மாதிரி...'

சக கூலிக்காரர்களின் வஞ்சனையும், தந்திரமும் ஏயாற்றும் இவனுள் ஒரு குமட்டலை ஏற்படுத்தி இருக்கிறது. அருவெருப்பாக இருக்கிறது.

இந்நேரம் வரை மர நிழலில் உட்கார்ந்திருக்கிறார்கள் டக்கர் வந்தவுடன் சுழற்றிவிட்ட பம்பரமாய் பரபரப்பாய் செயல்பட்டு லோடு பண்ண வேண்டும்.

ஆனால், டக்கர் வந்த பிறகுதான் ஒரு சிலருக்கு 'ஒன்னுக்கு வரும், தண்ணித் தாகமெடுக்கும்' என்று அந்நேரம் தான் குடத்துக்கு அருகில் மண்டி போடுகிறவனும் உண்டு. எல்லாம்... ஏமாற்றுகிற தந்திரம்.

இருப்பதில் உடம்பு நோகாத வேலை என்று பார்க்கிற குணம் சகலரிடமும் உண்டு. கம்பி பிடிக்க 'நாமுந்தி நீமுந்தி' என்று பறப்பார்கள். மம்பட்டி பிடிக்கவும் ஓடி வருவார்கள். அள்ளி வைத்த மண்கூடையை தூக்கிப் போடுகிற வேலைதான் ரொம்பக் கஷ்டம். நிற்காமல் சளைக்காமல்-மின்னல் வேகத்தில் செயல்படணும். ஈரமண் நெஞ்சு கனக்கும். புஜமெல்லாம் சதை உடைந்து வலியெடுக்கும்.

இதுக்கு ஆள் இருக்காது. வேலாண்டிதான் முதல் ஆளாக நிற்பான். வேறு வழியில்லாமல் மேலும் ரெண்டு பேர் வந்து சேர்வார்கள்...

'அடப் பாவிகளா... பாடுபடுறதுக்கு இம்புட்டுப் பயமா? வேர்வை சிந்த இம்புட்டு கஞ்சத்தனமா...'

இவனுள் வியப்பும் வெறுப்புமாய் பின்னலாடுகிற நினைவுகள்.

உழைப்புங்கறது ஒரு மந்திரம் போல. மாயமாய் செயல்படும். நாலு கம்புகளை ஊன்றி... எட்டுக் குச்சிகளை

குறுக்காகப் போட்டு...நார்களால் கட்டி காய்ந்த ஓலைகளைப் போட்டுப் பின்னி விட்டால்...

வெற்றிடத்தில் ஒரு தாழ்வாரம் எழுந்து விடுமே. தெருப் புழுதியில் விளையாடுகிற சிறுவனின் ஆசையைப் போல் மாயம் செய்கிற இந்த மந்திரமும் மனசுக்கு எம்புட்டு சந்தோஷமாய் இருக்கும்...

அதோட அருமையெல்லாம் இந்தப் பயல்களுக்கு ஏன் தெரியமாட்டேன் என்கிறது...

சோம்பல் பிடித்த இந்தத் தந்திரக் கார நரிகளோடு மாரடிப்பும் மல்லுக்கட்டுமாக பதினைந்து நாட்கள் நகர்ந்து விட்டன.

டக்கர் காரர், மண்ணைத் தட்டிய புஞ்சைக் காரர்களிடம் வாடகை வசூல் செய்த பிறகு... கூலியாட்களுக்கு பட்டுவாடா செய்தார். பதினைந்து நாள் சம்பளம், 225 ரூபாய், உள்ளங்கையில் நாலாய் மடித்த பணத்தாள்கள்.

டக்கர் வந்தவுடன் 'ஒன்னுக்கு' போகிறவனுக்கும் அதே சம்பளம். குடத்துக்கு முன் மண்ணிட்டவனுக்கும் அதே சம்பளம். இவனுக்கும் அதே சம்பளம். அப்போ...?

வஞ்சனையும், வெள்ளந்தியும் ஒரே எடையா? ஏமாற்றும் யோக்கியமும் ஒரே மதிப்பா? நரிகளுக்கும் மனுசனுக்கும் ஒரே விலையா...?

இவனுக்குள் ஏதோ குடைகிறது, மனசுக்குள் எறும்பு கடிக்கிற உணர்வு சுரீரிடுகிற வலி. 'நா இளிச்சவாயனா?'

ஓடி ஓடி உழைச்சோமே...ஓய்வில்லாம ஒதுங்காம உழைச்சோமே... அதுக்கு இதுதான் பலனா?

''...வேணாக் கொதிக்கிற வெயில்லே கிடந்து ஏன் சாகுறே? நீயா அள்ளிக் கட்டிக்கப் போடறே?''

கண்மாயின் வேலிமர நிழலுக்குள்ளிருந்து வெளிப் பட்ட அந்தக் குரல், இவனுள் மீண்டும்...

அவனுக்குள் ஏதேதோ புரிவதைப் போல்... உள்ளுக்குள் ஓடுகிற உணர்வுகளின் மீது சில மின்னல் வெளிச்சம். சக கூலிக்காரர்கள் மீது அவனுக்கு இருந்த வெறுப்பு இப்போது இல்லை. அனுதாபம்தான் மிஞ்சி நின்றது.

டக்கர்ங்கறது வேப்ப மரத்துப் புஞ்சையில்லே. மந்திரத்துலே விளையுற மாயச் செயலும் பலனும் வேற எவனுக்கோ. உழைக்கிற அருமையான சந்தோஷ உணர்ச்சியைக் கூட அனுபவிக்க முடியாம... வந்து நிற்கிற இளிச்சவாயன் பட்டம்...ச்சே!

இப்போதெல்லாம்.

வேலாண்டியும் டக்கர் போனவுடன் வேலிமர நிழலுக்குள் ஒதுங்கி விடுகிறான்.

டக்கர் திரும்ப வருவதற்குள் ஒரு குட்டி உறக்கம் கூட போட்டு விடுவான்.

மனதில் ஒரு உறுத்தல் இருக்கத்தான் செய்கிறது. அது எத்தனை நாளைக்கு?

*1991-செம்மலர் பொங்கல் மலர்*

# உதிர்வு

சூழல் எரிச்சலூட்டியது. ஓட்டுச் சாய்ப்பான வீடு. மதிய வெயில். வெக்கையான இறுக்கம். மூச்சு முட்டுகிறது. ச்சே!

நாளைக்கு 'அறிவொளி' கூட்டம். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மீட்டிங். ஹாலில்-அறிவொளி முதன்மைப் பயிற்சியாளர் முகாம். அந்த முகாமில் நான் 'பெண் கல்வி' குறித்துச் சிறப்புரையாற்ற வேண்டும்.

நாலு புஸ்தகங்களை மேய்ந்து, சில வாக்கியங்களைக் கடைவாயில் ஒதுக்கி, அசை போடாமலேயே மைக்கில் வாந்தியெடுப்பது எனக்கு எப்பவுமே பிடிக்காது. மனசின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். நமது கருத்துகளுக்கு நடப்பு வாழ்க்கையிலேயே நிரூபணங்கள் காட்ட வேண்டும்.

அதுதான் என் பாணி.

சம்பவங்களைத் தேர்வு செய்து குறிக்கணும்; வரிசைப் படுத்தணும்; அதற்கு நிறைய யோசிக்கணும்; நூல் பிசகாமல் யோசிக்கணும்.

முடியவில்லை. சூழல் விட மறுக்கிறது. வேர்வையும் கசகசப்புமாய், வெக்கையும் மூச்சுத் திணறலுமாய்... மனசு தப்பித்து ஓட விரும்புகிறது.

வீட்டு முன்னால் குடிநீர்த் தேக்கத் தொட்டி. தண்ணீர் திறந்து விட்டார்கள். ஊரே சுதாரித்துக் கொண்ட மாதிரி பேயிரைச்சல். பானைகளின் மோதல் கூச்சல். ஓடிப் பாய்கிற பெண்கள். 'நா முந்தி, நீ முந்தி' என்று போட்டி போடுகிற காட்டுக் கத்தல். சந்தைக் காடாகக் கலவரப்படுகிற வீட்டு முற்றம். என்னை உருட்டிப் பந்தாடுகிற 'கசமுசா' கூப்பாடு.

'ச்சே... இந்த வீட்லே மனுசன் நிம்மதியா யோசிக்கவே முடியாது. நகரச் சூழல்.'

சலித்துப் போய் பேனாவை நழுவ விட்டேன். எரிச்சல் மண்டுகிற மனசோடு சிகரெட்டை பற்றவைத்தேன். கடுகடுப்பில் இடுங்கிக் கொண்ட கண்கள். முற்றத்தில்...

ஏதோ ஒரு பெண். இடுப்பில் ஒரு பானை. வலது கையில் தொங்கும் ஓர் அலுமினியக் குடம். நீர்ச் சுமை தாங்காமல், வினோத வளைவாக நெளிந்த நிலையில் 'தக், தக்'கென்று அடியெடுத்து வைக்கும் பாதங்கள். சாயம் போன சந்தனக் கலர்ச் சேலை. நீரில் நனைந்து முழுங்காலோடு ஒட்டிக் கிடக்கிறது.

யாரிவள்? அட, நம்ம பார்வதி!

நல்ல சிவப்பு. கனிந்த பழம் காய்கிறபோது கறுத்துப் போவதில்லையா? அப்படித்தான், பார்வதியும்! அருள் கெட்டுக் கறுத்துப் போனாள். முகத்தில் எந்நேரமும் ஒரு பயபீதி, நிரந்தர இருட்டாக விழுந்து விட்டது. கண்களில் எப்பவும் ஒரு மருட்சி.

நேற்றுப் பிள்ளை. அதற்குள், வாழ்க்கையை வாழாமலேயே வாழ்ந்து கழித்து விட்டாள்.

பக்கத்து ஊரில்தான் வாழ்க்கைப் பட்டாள். கோயிலில் வைத்துத்தான் கல்யாணம். நான் கூடப் போயிருந்தேன். அவள் நுழைந்த வீடும் ரொம்ப வறுமைப்பட்டது.

அந்த மாப்பிள்ளைப் பயலைப் பார்த்த போது. எனக்குப் பிடிக்கவில்லை. ஒன்றுக்கும் அற்ற பயல் என்று நான் நினைத்தது... பொய்யாகிப் போய் விடவில்லை.

குடிகாரன், உப்புக் கல்லுக்குப் பெறாத சோம்பேறி.

பாவம் பார்வதி. மாடாக உழைத்து உடம்பு புண்ணானாள். அவனுக்கு வாய்க்கும் கொட்ட வேண்டும். குடிக்கக் காசும் தர வேண்டும். சுடர் சுமக்கும் மெழுகுவர்த்தியாய்... அவள்.

தினசரி அவளுக்கு அடி தான். மிதிதான். சண்டைதான். சச்சரவுதான். கலைந்த தலையோடும், கன்றிப் போன முகத்தோடும் அடிக்கொரு தடவை ஊருக்கு வந்து விடுவாள், கோபித்துக் கொண்டு.

பத்து நாள் கழித்து அந்தப் பயல் வருவான். கெஞ்சிக் கூத்தாடி அழைத்துக் கொண்டு போவான். மறுபடியும் அதே கதைதான். அடி, குடி, சண்டை, சச்சரவுகள் நரகமாய் அவளை அழுத்துகிற தாம்பத்யம்.

பாவம் பார்வதி! அரண்டு அரண்டு ஊமையாகிப் போனாள். அஞ்சு வருஷம் இப்படியே கழிந்து விட்டது. கள்ளி முளைத்த காடாய்ச் சீரழிந்து போய் விட்டது, வாழ்க்கை.

வாய் செத்துப் போன பெண், துடியாய் நாலு வார்த்தை கூடப் பேச மாட்டாள். பயந்து பயந்து... அந்தப் பயத்திற்குள்ளேயே குரல் புதைந்து போய்விட்ட மாதிரி,

எந்த நேரமும் மௌனம்தான். இறுக்கம்தான். விரக்தியின் விளிம்பான உறைவு.

அந்தப் பயல் கூட இவளை வாய்க்கு வாய் ''ஊமைக் கழுதை, ஊமைக் கழுதை'' என்று தான் வைவானாம்.

கண்ணீரும் கம்பையுமாய், கலைந்து காய்ந்த தலையுமாய் அவள் ஊருக்குள் வரும்போதெல்லாம்...ஏதோ என் மனத்தில் ஒரு நடுக்கம். ஒரு பகீர் உணர்வு.

தொடக்கப் பள்ளியின் ஆண்டு விழா. அந்த வருஷம் தான் ஆசிரியராக நுழைந்திருந்தேன். 'கலை விழா' முழுவதும் என் பொறுப்பு கலை நிகழ்ச்சிகள் நிறைய. ஊரே திரண்டு நின்றது. 'ஜே ஜே' என்று கூட்டம்.

கடைசி நிகழ்ச்சியாகப் பார்வதி வந்தாள். ஐந்தாம் வகுப்பு மாணவி. ஒரு சினிமாப் பாட்டுதான். இயற்கை வர்ணனைப் பாட்டு. மேடையில் மாறி மாறிக் கண் சிமிட்டுகிற கலர் விளக்குகள். வண்ணத் திரைகள். வர்ண ஜால உடையில் ஜெகஜோதியாக வந்து ஆடிக் கொண்டே பாடுகிற சிறுமி பார்வதி.

பாடுகிற போது அசைகிற சின்ன உதடுகளும், சின்னச் சின்ன நடன அசைவுகளும், பறவைகளைப் போன்ற பாவனைகளும்... சூழலையே மறக்கடித்த, ஒரு மாய உலகத்தையே சிருஷ்டித்து, கனவு நிலையில் சகலரையும் மூழ்கடித்து...

ஊர் ஜனம் அசந்து போயிற்று. ரொம்ப நாளைக்கு இவளைப் பற்றியே ஊரில் பேசிப் பேசி வாயாறினார்கள். அப்படி பாடி, ஆடி மொத்த ஜனத்தையே பிரமிக்கச் செய்த அந்தச் சிறுமி பார்வதி... படிப்பிலும் கெட்டிக்காரியாகவே

இருந்தாள். நாலாவது ரேங்க். படிப்பில் பார்வதியுடன் போட்டி போட்டு, சரிமல்லுக்கு நிற்பாள், ரேணுகா. ஒரு இம்மியளவாவது தோற்பவள் ரேணுகா தான்.

போன மாதம். 'அறிவொளி'யில் கருத்தாளர் பயிற்சி முகாம். கலெக்டர் ஆபீஸின் மீட்டிங் ஹாலில் நடந்தது. நான் அழைக்கப்பட்டிருந்தேன். உதவித் தாசில்தார் என்று ஒரு பெண்ணை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

'பரிச்சயமான முகமாக இருக்கிறதே' என்று மனசுக்குள் ஒரு குரல், ஞாபக அலமாரியை விடாமல் சுரண்டினேன். ஒன்றும் தட்டுப்படவில்லை. அந்தக் கூட்டப் பரபரப்பில் ஒன்றும் கேட்கவும் முடியவில்லை.

அந்தப் பெண் என்னை ஒரு மரியாதையோடு பார்த்தாள் உள்ளுக்குள் குழப்பம்.

லஞ்ச் டைம். நான் வெளியே வராந்தாவில் நின்று கொண்டிருந்தேன். என்னை நோக்கி அந்தப் பெண்.

''வணக்கம் சார்.''

மரியாதையான புன்னகையோடு அவள். நான் திகைத்துப் போய் சும்மா விஷ் பண்ணி வந்தேன்.

''என்னைத் தெரியலியா சார்?''

அவளது மெல்லிசான சிரிப்பு மரியாதையான இடை வெளியோடு நின்றாள். அசட்டுத்தனமாய் நெளிந்தேன்.

''தெரியவும் செய்யுது. தெரியாமலும் இருக்கு ஸாரி, தெளிவாகத் தெரியலே.''

''நாந்தான் சார் ரேணுகா. அஞ்சாங் கிளாஸ்லேயும், ஏழாங் கிளாஸ்லேயும் உங்ககிட்ட படிச்சேன், சார்.''

குப்பென்று பீறிட்ட நினைவுகள். பல வருஷங்களுக்கு முன்பாக என்னை உருட்டித் தள்ளுகிற நினைவலைகள்.

எனக்குள் இனம்புரியாத பரவசம். விம்முகிற பூரிப்பு. பெருமிதம்.

என்னிடம் படித்த ஒரு சிறுமி, இன்றைக்கு கௌரவ மிக்க அதிகாரி. உயர்ரகப் பணி. இன்றும் என்னிடம் மரியாதை காட்டுகிற கண்ணியம். நான் சிலிர்த்துப் போனேன்.

என் ஆசிரியத் தொழில் மீது, இன்றுதான் புனிதமான மரியாதையே ஏற்படுகிறது.

இது, வெறும் சம்பளத் தொழிலல்ல. வயிற்றுப் பாட்டு மாரடிப்பல்ல. சமூகசிருஷ்டி ஞான சிருஷ்டி. களிமண்ணில் அழகுச் சிலை படைக்கிற பிரம்மப் பணி.

''ரேணுகாவா...? அடையாளமே தெரியலையே.''

என்னுள் பரவசம். குழப்பம். உள்ளும் புறமுமாய்த் தடுமாறினேன். இனிமையான தவிப்பு.

யூனிஃபார்ம் டிரஸில் சிறுமி ரேணுகாவை நினைவு படுத்திப் பார்த்தேன். ம்ஹூம், முடியவில்லை, கம்பீரமான உதவித் தாசில்தார் நினைவின் வழிகளைப் பிரம்மாண்ட மாய் மறித்துக் கொண்டாள்.

பார்வதியை நினைத்தால்... சட்டென்று மனம் பூராவும் நிரம்பிக் கொள்கிற சோகம். அவலமான பரிதாபம். அவளும் இப்படி ஜொலித்திருக்க வேண்டியவளல்லவா...! இதே மாதிரி, இயல்பாக வளர்ந்து, கனிந்திருக்க வேண்டியவளல்லவா...

அடடா... பூப் பருவத்திலேயே உதிர்ந்து, ஒரு நார்ப் பயலிடம் சிக்கி, ஏதோ ஒரு பிணத்தின் மாலையாக விழுந்து, சுடுகாட்டில் வீசியெறியப்பட்டு, கால்களில் மிதிபட்டு, காய்ந்து உலர்ந்த. பொடிப் பொடியாகி...

அப்போது நான் ஏழாங் கிளாஸுக்குப் பொறுப்பு. வெள்ளியன்றே ஹோம்வொர்க் கொடுத்திருந்தேன்.

இந்த ஏழாம் கிளாஸை நினைத்தாலே எனக்கு எரிச்சல் எரிச்சலாய் இருக்கும். வெட்ட வெளியில்தான் கிளாஸ். கட்டிடமில்லை. மறைப்பில்லை. வேப்பமர நிழலில்தான் உட்காரணும்.

பக்கத்தில் ஒரு கடை. அதில் பெண்கள். தெற்கில் ஒரு டீக்கடை. அங்கிருந்து வேடிக்கை பார்க்கிற ஆட்கள். மடத்து வாசலில் வேலையற்ற ஆட்கள். அவர்கள் வகுப்பு நடக்கிறதைப் பற்றி அடிக்கிற 'கமெண்ட்'கள்.

போதாக் குறைக்கு... வேப்ப மரத்தில் காகங்களின் கரைச்சல். மைனாக்களின் 'கிச்சட்டி'ச் சத்தம். சுற்றிலும் வெயிலில் எரிந்த புழுதி... அதிலிருந்து வருகிற வெக்கை யான காற்று...

பறவைகளின் எச்சம் எந்தக் கணத்திலும் மேலே விழக்கூடிய நிரந்தர அபாயம்...

ஏழாங்கிளாஸ் பீரியட் என்றாலே... மகா எரிச்சல் தான், எனக்கு. நிம்மதியற்ற மனநிலையில்தான் இன்றும் நான்...

திங்கட்கிழமை நான் வகுப்பில் நுழைந்ததும் 'ஹோம் வொர்க்'கைக் கேட்டேன். ஏறக்குறைய எல்லோரும் முடித்திருந்தனர். ரேணுகாவின் நோட்டில் தப்புத் தப்பாய்

இருந்தது. பார்வதியின் நோட். கேள்விகளும், பதில்களும் குண்டு குண்டாக-தெளிவாக-எழுதியிருந்தாள். அடித்தல் திருத்தலே கிடையாது. ஆனால், படம் இல்லை. வரைவதற்கான முயற்சியே தெரியவில்லை.

என்ன இது? அலட்சியமா?

இதே தப்பை வேறு பிள்ளைகள் செய்திருந்தால்... பரவாயில்லை இவள் செய்யலாமா? படிப்பில் கெட்டிக் காரியான பார்வதியிடம் இந்த அலட்சியம் இருக்கலாமா? இதை அனுமதிக்கலாமா?

எனக்குள் கோபம் குமுறி வந்தது.

''ஏன், படம் வரையலை?''

மௌனம். பதிலற்ற மௌனம். பொருத்தமற்ற இறுக்கம். டாண் டாண் என்று பேசுகிறவளா, இப்படி?

இந்த இறுக்கம், என்னை மேலும் அவமதிப்பதுபோல உணர்ந்தேன். உள்ளுக்குள் உஷ்ணம்.

''நான் கேக்குறேன்லே? ஏன் படம் போடலே?''

அதே மௌனம்.

''கையை நீட்டு.'' கடுமையாகிப் போன என் குரல். எனக்கே அந்நியமாக-வேற்றுக் குரலாக?

மேஜையிலிருந்த குச்சி என் கைக்கு வந்தது. சுளீர், சுளீர், சுளீர். மூன்று மின்னல். மூன்று இடிகளாக அந்தப் பூவின் உள்ளங்கையில்.

எல்லாப் பிள்ளைகளும் அவளைப் பரிதாபமாய் பார்க்க அவள் கண்களில் ஈரத் துளி. சின்ன உதடு நடுங்கி விம்மியது.

''போ! அங்கே மண்டி போடு.''

வெயிலில் தகித்த மணலை என் கை காட்டியது.

அவள் மண்டி போட்டாள். வெயிலில்

ஒற்றையாய்-வெட்ட வெளியில்... கண்ணீர் சிந்தும் ஓவியமாக, சிறுமி பார்வதி.

வெளியில் போவோர், வருவோர் முகங்களி லெல்லாம் வெளிப்படையான ஏளனத் தொனி...

எல்லாவற்றையும் ஒரு சுற்று நடுக்கத்துடன் பார்த்து விட்டு. வெட்டுண்ட தலையாகத் தொங்கப் போட்டவள் தான், அப்புறம் நிமிரவேயில்லை.

அவமானத்தில் புழுங்கி, வெந்து. உள்ளுக்குள்ளேயே செத்துப் போனாளோ...பள்ளி வட்டத்தைத் தாண்டிய அந்நியர்களின் பரிகாசத்துக்குரிய ஜந்துவாகி விட்டோமே என்று நொந்து போனாளோ...

எனக்குள் ஒரு முள். உறுத்தல். கொஞ்சம் அத்துமீறி விட்டேனோ. குற்றம் செய்து விட்டேனோ...

நான் பயந்தது சரியாகி விட்டது.

மறுநாளிலிருந்து பார்வதி பள்ளிக்கு வரவேயில்லை. பதைத்துப் போய் நானே வீடு தேடி விசாரித்தேன். தாய் அப்புத்தாய் தான் எதிர்கொண்டாள்.

''நானும் எம்புட்டோ சொல்லிப் பார்த்துட்டேன்யா. ஒரேயடியா பிடிவாதமாச் சாதிக்கிறா. என்ன காரணம்னு வாயைத் திறந்தும் சொல்ல மாட்டேங்கிறா. 'போகலே, போகலே'ன்னு ஒரே பதில்தான். நா என்ன செய்ய முடியும்யா?''

ரேணுகா மாதிரி பூத்து-காய்த்து கனிந்து-இயல்பாக வளர்ந்து பரிணாமம் பெற்றிருக்க வேண்டிய பார்வதி. படிப்பைப் பாதியில் முடித்துக் கொண்டாள்.

குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு, நரக வாழ்க்கையில் வெந்து, சுபாவம் மாறி, ஊமைக் கறுப்பாகி...

இந்தச் சீரழிவில் என் பங்கும் உண்டல்லவா!

ஒரு பெண்ணின் கல்விப் பாதையை-அறிந்தோ, அறியாமலோ-பிடுங்கிக் கொண்ட நான்-வாழ்க்கையில் அவள் சீரழிவதற்குக் காரணமான நான்-'பெண் கல்வி' பற்றிப் பேசலாமா? பேசுவதற்கு இயலுமா? பேசினால்... மனச்சாட்சி என்னை மதிக்குமா? காறித் துப்பாதா? குற்ற உணர்வில் மனம் பதறியது.

போன வாரம்தான், ஊர்ப் பஞ்சாயத்தில் அவள் திருமண உறவு ரத்தாகி, வாழா வெட்டியானாள்.

சரி... நாளை நான் கூட்டத்திற்குப் போகணுமா? போகிற தகுதி இருக்கிறதா? இருக்கிறது!

பெண் கல்வியை ஊக்குவித்து நான் பேசுவதே கூட.... என் தவறுக்கான பரிகாரம் தானே!

இன்று நான் பேசப் போவதே... ரேணுகாவையும்-பார்வதியையும் பற்றித்தான். ஆனால், ஒரு விஷயம்.

பார்வதி போன்ற பூக்கள் உதிர்வுக்கு-அறிந்தோ அறியாமலோ-காரணமாக இருந்து விட்ட நிஜத்தை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதுதான், என் உரையின் முன்னுரை.

அதில் உறுதியாக இருந்தேன்.

*டிசம்பர் / 99 / கல்கி.*

# சாபம்

மதியக் கரண்டு. பம்ப்ஷெட் மோட்டார் ஆறுமணி வரைக்குந்தான் ஓடும். அதற்குள் குளிக்கப் போயாகணும். ரெக்கையைக் கட்டிக் கொண்டு முத்துமணி பரபரத்தாள்.

அடுப்படிக்குள்ளிருந்து அம்மாவின் கடுகடுத்த குரல்.

''ஏண்டி, வெள்ளாடு 'வாள் வாளு'ன்னு கதறுதே, காதுலே வுழலே? காதுலே இடியா வுழுந்துருச்சு?''

''கேக்கு, கேக்கு. என்ன செய்யச் சொல்லுதே, என்னை?''

''அந்தக் கொழையை எடுத்துத் தூக்கேன்டி''

''ஆமா... நா குளிக்கப் போகணும்''

''குளிக்கிறதுக்கு ஒரு கொமரி இப்படியா பறக்குறது? வீட்டுலேயே நாலு சொம்புத் தண்ணியை அள்ளி ஊத்திக்கிட வேண்டியதுதானடி?''

''அந்தக் கோழிக் குளிப்பெல்லாம் இன்னைக்குச் சரிப்பட்டு வராது. பம்ப்ஷெட் குழாய்லே தலையைக் கொடுத்து ஒடம்பு பூராவும் ஊறி நனைஞ்சாத்தான் குளிச்ச மாதிரியிருக்கும்.''

''குளிக்கப் போறதுக்கு முந்தி, வீட்டுக்குத் தண்ணி எடுக்கப் போறீயா, அதையும் நானே எடுத்துக்கிடணுமா?''

''எடுத்துத் தொலைக்கேன்''

பானையை எடுத்து இடுப்பில் இடுக்கிக் கொண்டு 'தக் தக்'கென்று தெருவில் நடந்தாள். குழாயில் ஏகமாய் கூட்டம். காட்டு வேலைகளுக்குப் போய் விட்டு இப்போது தான் வந்திருக்கிற பெண்கள், முத்துமணியைப் போலவே.

உலர்ந்த வியர்வையில் படிந்த புழுதித் திட்டுக்கள். கழுத்தடியிலும், முகத்திலும் உப்பு வரிகள். வெள்ளைக் கோடுகள்.

வேனாக் கொதிக்கிற வெயிலில் காட்டில் உயிரைக் கொடுத்து விட்டு வந்தால்... உஸ்ஸென்று ஓய்ந்து உட்கார நேரமிருக்கா, பெண்களுக்கு? வீட்டிலும் வேலைகள். கால்நடைகளைக் கவனிக்கணும். கடை கண்ணிக்குப் போகணும். அடுப்படிப் புகைக்குள் கண் அவியணும். புள்ளைங்களுக்கு பந்தி வைக்கணும். அப்புறம் புருஷனுக்கு...

அவசரம்... பரபரப்பு... ரெக்கையடிப்புத்தான்; எப்பவும் பெண்களுக்கு.

குழாயில் தண்ணீர் பிடிக்க சண்டை போடுகிற பெண்கள். 'நாமுந்தி, நீ முந்தி' என்று சர்ச்சைகள் பானைகளின் உரசல் சத்தம்.

இடுப்பில் பானையுடன் நின்ற முத்துமணிக்குள் பரபரப்பு. இருப்புக் கொள்ளாமல் பறக்கிற மனசு. கடைக் கண்ணால் தெற்கே பார்த்தாள்.

குழாயில் தண்ணீர் எடுக்கிற நேரத்தில் மட்டும் இந்த மடத்துத் திண்ணையில் இளவட்டக் கூட்டம். மனசின்

எரிச்சிலை கண்ணில் வடித்துக் கொண்டு முத்துமணிக்குள் வெறுப்புணர்வு.

'கொரங்குக் கூட்டம் இங்க எதுக்கு வந்து உக்காருதுக? என்னத்தைப் பாக்குதுக? அவுக ஆத்தா, அக்கா தங்கச்சிக்கிட்டே இல்லாதது, இங்க என்னா இருக்கு?'

காறித்துப்பணும் போலிருந்தது. முத்துமணிக்கு. குழாயடியில் பெண்களின் கூச்சல்.

''சோறு காய்ச்சணும்டி, பொழுதாகுது. ஒரு கொடத்தை பிடிச்சிக்கிடுதேண்டி''

''இந்தா சும்மா நில்லு. நானும் காப்பிச் சட்டியை கொதிக்க வைச்சுட்டுத்தான் வந்துருக்கேன்''

''கொஞ்சம் வெலகுங்க. நா அஞ்சரைப் பஸ்ஸுக்குப் போவணும்''

''எல்லாருக்கும் அவசரந்தான். எதுக்கு வெலகணும் நாங்க ஊஞ்சல்லே ஆடிக்கிட்டா இருக்கப் போறோம்?''

''அடச்சீ! புள்ளைத்தாச்சி கால் கடுக்க நின்னுக் கிட்டிருக்கா. வழிவிடுங்கடி. ஒரு பானையை புடிச்சுக்கிட்டு போவட்டும்.''

இந்தச் சண்டை சச்சரவுகளுக்கு மத்தியில் இடி பாட்டுக்குள் புகுந்து, அடைக்கோழியாய் சீறிச்சினந்து, முண்டியடித்து, முத்துமணியும் பறந்து பறந்து தண்ணீர் எடுத்தாள்.

அவளுக்குக் குளிக்கப் போகிற அவசரம். கரண்டு நிற்பதற்குள் குளித்தாகணும். உடம்பு பூராவும் நனைந்து, உள் மனமெல்லாம் குளிர்ந்து துவள, ஆசை தீரக் குளிக்கணும்.

ஓடி ஓடித் தண்ணீர் எடுத்தாள் இடதுபக்க இடுப்புக்குக் கீழே பாவாடை தாவணியெல்லாம் 'தொப், தொப்'பென்று நனைந்து விட்டது. ஈரப்பாவாடை காலோட ஒட்டி, பின்னி, வீசி நடக்க விடாமல் இச்சிலாத்திப்படுத்துகிறது.

மேற்கு வானத்தில் அறுத்து போட்ட மாம்பழமாய் தகதகக்கிற பொழுது. கனகாம்பரப் பூக்கலரில் வெயியல். காற்று இல்லாத பங்குனி மாசத்து வெய்யில்.

தேன் நோய் விழுந்து கருகிப் போன மிளகாய்ச் செடிக்குள் பழம் பொறுக்கிய போது... இன்றைக்கு அடித்த வெய்யில்! வெய்யிலா, அது? கொலைகார வெய்யில் யம்மாடி! நஞ்சடித்த கெண்டையாக ஆளைக்கிறக்கிய வெய்யில். மூளைச் சதையைக் கொத்திய வெய்யில் மூச்சு முட்டுகிற வெய்யிலில் வியர்த்துக் கொட்டி...துணி மணியெல்லாம் நனைந்து ஒட்டிக் கொள்ள, படிந்த புழுதியெல்லாம் உலர்ந்து, வெடவெடத்துப் போன துணிமணியும், நச நசத்துப் போன உடம்பும்...

ச்சே!குளித்தால்தான் உடம்பு உடம்பாகும். மனசு, ஒரு நிலைப்படும்.

மாற்றுத் துணிகளை மடித்து எடுத்துக் கொண்டாள். மஞ்சள், துண்டு, சோப்பு டப்பா சகிதம் புறப்பட்டு விட்டாள். காலுக்கு ரெக்கை முளைத்துக் கொண்ட மாதிரியிருந்தது. முத்துமணியின் மனசெல்லாம் பரபரப்பு சிறகடிப்பு.

பொழுதைப் பார்த்துக் கொண்டாள். உஷ்ணம் இல்லாத வெய்யில் காற்றில்லாமல் வெக்கையின் இறுக்கம். விடுவிடுவென்று நடந்தாள். ஊரைக் கடந்தாள்.

ஊரை ஒட்டியுள்ள பம்ப்செட் கிணறுகளெல்லாம் உப்புத் தண்ணீர் வாயில் பட்டால் குடல்வரை கசந்து அழறும், ஓடைக்குள் இறங்கினாள், நிறைய வேலிச் செடிகள். கரைகளில் தித்திச் செடிகள். வெய்யிலின் நிறத்தை அள்ளிப் பூசிக் கொண்டு பூத்திருக்கும் தித்திப் பூக்கள்.

குளிப்பது கூட பெண்களுக்குப் பிரச்சினைதான். மனசு நிறைந்த குளியலே கிடைக்காது. ஆசை போல குளிக்க முடியாது. கூரை வீடுகளில் குளிப்பதற்கு இடம் இருக்காது. இருட்டை திரையாக வைத்துத்தான் நாலு சொம்பு தண்ணீரை ஊற்றிக்கொள்ள வேண்டும்.

நிலாக்காலத்தில் அதுவும் முடியாது. ஊர் அடங்குகிற வரை காத்திருக்க வேண்டும். கூரை நிழலில் கிடைக்கிற இருட்டுக்குள் குளித்து முடிக்கணும்.

வீட்டுக்கு முன்னால் தண்ணீரை வைத்துக் கொண்டு சாயங்கால வெய்யிலில் கோவணத்தை மட்டும் கட்டிக் கொண்டு குளிக்கிற பெரியவர்களை இவள் சின்ன வயசில் பார்த்திருக்கிறாள். முற்றம் முழுவதும் நடந்து கொண்டே குளிப்பார்கள். சிந்துகிற தண்ணீர் முற்றத்தைத் தெளித்து விடும்.

பம்ப்ஷெட் மோட்டாரில் குளிக்கவருகிற ஆண்களும் கைலி, பனியனை கழற்றி எறிந்து விட்டு, அண்-டிராயருடன் சுதந்திரமாகக் குளிப்பார்கள். உடல் முழுவதும் தேய்த்து, ஆற அமர குளித்து முடிப்பார்கள்.

பெண்கள் அப்படியில்லை, சேலை, ஜாக்கெட்டுடன் அப்படியே மோட்டரில் தலையைக் கொடுப்பார்கள் துணிமணியை கழற்றாமல், உடம்பை எப்படித் தேய்ப்பது?

தேய்க்காமல் எப்படி அழுக்குப் போகும்? அழுக்கு போகாமல் குளிப்பதால் என்ன பிரயோசனம்?

பெண்களுக்கு மட்டும் ஏனிந்த இடைஞ்சல்? எது இடைஞ்சல் என்பது இப்போது புரிகிறது.

ராமலட்சுமி இவள் வயது தான். நாலாம் கிளாஸ் வரை ஒன்றாகக் கூடப் படித்தார்கள். இப்போது அவளை பார்க்கவே முடிகிறதில்லை.

அவள் சடங்காகி மூன்று வருஷத்திற்கும் மேலாகி விட்டது. அவுக வீடு பெரிய காரை வீடு, மெத்தை (மச்சு) வீடு. உள்ளேயே குளிப்பறை எல்லாம் உண்டு. பெரிய சம்சாரி வீடு. காட்டு வேலைக்குக் கூட வெளியே வரமாட்டாள்.

கல்யாணம் ஆனால்தான் அவளைப் பார்க்க முடியும். அவளுக்கு என்ன கவலை? குளிக்கிறதில் பிரச்சினையே இருக்காது. பூட்டு கதவு உள்ள குளிப்பறை. கூச்சமில்லாம தைர்யமா குளிக்கலாம். மனசு படபடக்காது.

இல்லாத வீடுகளில் தான் இந்தக் கவலை. காலை நீட்டி உடம்ப சாய்க்கக் கூட இடமில்லாத சின்னச் சின்ன வீடுகளில் குளிப்பதற்கென்று தனி இடம் ஒதுக்க முடியுமா?

முத்துலட்சுமி மதுரையில் வாழ்க்கைப் பட்டிருக் கிறாள். போன வருஷம்தான் கல்யாணம். புருஷனுக்கு காவல் துறையில் உத்தியோகம். காலனியில் தனி வீடு. ஒவ்வொரு வீட்டிலும் தனியாக பாத்ரூம் உண்டாம். தாழ்ப்பாள் உள்ள கதவு போட்டிருக்குமாம். துணி தொங்கப் போடுவதற்கு சுவரில் கம்பி மாட்டியிருக்குமாம். சோப்பு டப்பா வைத்துக் கொள்ள... மாடக்குழி போன்ற செல்ப் இருக்குமாம்.

அவளுக்கு குளிப்பதில் எந்த இடைஞ்சலும் இல்லையாம். கதவைப் பூட்டிக்கொண்டு மனம் போல குளிப்பாளாம். பதற்றப்படாமல்... மன நடுக்கம் இல்லாமல்... சுதந்திரத்தோடு குளிப்பாளாம்.

அவள் மகராசி. கொடுத்து வைத்தவள். புண்ணியவதி.

இப்போதெல்லாம் முத்துமணிக்கு ஒரே ஒரு கனவு தான். முத்துலட்சுமிக்குப் போல ஒரு வாழ்க்கை அமைய வேண்டும். உத்யோகம் பார்க்கிற புருஷன். குளியலறையுடன் கூடிய வீடு. பூட்டுக் கதவுடன் கூடிய குளியலறை.

... ஹூம்... அதற்கெல்லாம் யோகம் வேண்டும். கையில் பசை வேண்டும். நகை நட்டு போடவும், சீர் வரிசை செய்யவும் பணம் வேண்டும்.

வெறும் கழுதைக்கு அப்பேற்பட்ட மாப்பிள்ளை யெல்லாம் கிடைக்குமா? நெனைக்கக் கூட முடியுமா?

அதோ... புளியமரக் கிணறு. மோட்டார் ஓடுகிற இரைச்சல், நேராகப் பாய்ந்து தொட்டியில் குமிழியிடுகிற நீர்க்காற்றை. மஞ்சள் வெய்யில் பட்டு... உருக்கி வார்த்த வெள்ளியாகத் தகதகக்கிறது.

மாற்றுத் துணிகளை மரத்தடியில் போட்டாள். மரம் மாசியில் தளிர்த்த, புதுப் புடவை கட்டியிருக்கிறது. அதன் அடர்ந்த நிழல் கிழக்கே தூரத்தில்.

சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒரு ஈ, காக்கை கூட கிடையாது. தண்ணீர் பாய்ச்சுகிறவன் கூட பம்ப் செட்டுக்குப் பின்னால் தூரத்தில்... பருத்திச் செடிக்குள்.

மறுபடியும் எச்சரிக்கையுடன் பருந்துப் பார்வையாகப் பார்த்துக் கொண்டாள். யாருமில்லை. மனசில் ஒரு தெளிவு. தாவணியை உரிந்தாள். தொட்டிக்குள் இறங்கினாள்.

பம்ப் செட் ரூம் பூட்டிக் கிடக்கிறது. ரூமிற்குள்ளிருந்து தொட்டியை நோக்கி குழாய் வருகிற ஓட்டை வழியே உள்ளே பார்த்தாள். ஒரே இருட்டு. இருட்டுக்குள் இரைகிற மோட்டார் மட்டும்.

பாவாடை ஜாக்கெட்டுடன் குனிந்து நீர்க்கற்றையில் தலையைக் கொடுத்தாள். தடதடக்கிற தண்ணீர். தொடர் கற்றையாக வந்து அழுத்தத்துடன் மோதியறைகிற நீரின் இனிய சுகம். தொட்டியெல்லாம் அழுக்கின் நுரைகள். கூந்தலின் எண்ணெய்ச் சிக்கெல்லாம் நுரை நுரையாக...

மனசுக்குள் முளைத்துக் கொண்ட சிறகுகள். ஜிவ்வென்று சிறகு விரித்து ஆகாயத்தில் பறக்கிற மனசு. ரசனையோடு குளித்தாள், மல்லாக்க அண்ணாந்த நிலையில் நீர்க்கற்றைக்குத் தலையைக் காட்டினாள் முகம் நெஞ்செல்லாம் வழிகிற நீர்.

நனைந்த மயிர்க்கற்றை நீரில் அலைந்து. முதுகெல்லாம் பரவி. அடி வயிற்றிலும் படிந்து...

மனசுக்குள் ஒரு மாயலோகம்.

முகத்தில் வழிகிற நீலை வாயால் உறிஞ்சி கொப்பளித்தாள். உப்பு வேர்வையில் சொர சொரத்த கழுத்துப் பகுதியை. கால்களை, கைகளை அழுந்தத் தேய்த்தாள். திரண்டு உருள்கிற அழுக்குத் துகள்,

தேகத்தின் மற்ற பகுதி?

தொட்டிக்குள் உட்கார்ந்தபடியே மறுபடியும் சுற்றிலும் ஒரு பருந்துப் பார்வை.

பாவாடை நாடாவை அவிழ்த்தாள். முன்பக்கத்தை வாயில் கவ்விக் கொண்டு ஜாக்கெட் ஊக்குகளைக் கழற்றி, உரித்தாள். மார்புக்கு மேலாக பாவாடையை உயர்த்திக் கட்டிக் கொண்டாள்.

தேகம் ஒரு சுதந்திரத்தை உணர மனசில் ஒரு பயம் புழுவாக நெளிந்தது. பயத்துடன் ஒரு பார்வையை சுற்றிலும் எறிந்தாள். கண் விளிம்புக்குள் ஒரு மனித அடையாளம் கூட இல்லை.

ஆயினும் மனசில் ஓர் உறுத்தல். கண்களை நம்பினாள்.

சுதந்திரமாக நீர்க்கற்றைக்கு தேகத்தைக் காட்டினாள் திருப்பி திருப்பி... மாற்றி மாற்றி...

வேர்வையில் உலர்ந்து புழுதியையெல்லாம் தேய்த்துக் கழுவினாள். மார்புக்கு மேலே போட்டிருந்த பாவாடை முடிச்சைக்கூட அவிழ்த்து, கையால் உயர்த்திப் பிடித்துக் கொண்டே, குனிந்த நீர்க்கற்றைக்கு உடம்பைக் காட்டி...

வந்து சப்பென்று அறைந்து மோதுகிற நீர்க்கற்றையின் சுகம். அலுத்த உடம்பை பரிவோடு நீவி விடுகிற தாய்மை உணர்வு...

சோப்புப் போட்டாள். முகம், கழுத்து, கால் மற்றும் தேகம் முழுக்க நுரையோடும் சுகந்த மணத்தோடும் நீர் கற்றையில் உடம்பைக் கழுவிக்கொள்ளும் போது...

மனசின் ஆழத்தின் ஒரு கிள்ளல்,

தான் பார்க்கப்படுகிற உணர்வு உடம்பெல்லாம் பூரான் ஊர்கிற மாதிரியான இனம் புரியாத கூச்சம்.

மீண்டும் சுற்றிலும் பார்த்தாள், வேலி மரங்களின் அடர்த்தியைக்கூட ஊடுருவிக் கூர்ந்து நோக்கினாள்.

ஒரு சுடு குஞ்சுகூட தட்டுப்படவில்லை. வெட்ட வெளியும், வெய்யிலும் தான்.

அப்புறமும்... பார்க்கப்படுகிற உணர்வு. மனசைக் கிள்ளுகிற ரகசிய அவஸ்தை. பெண்ணுக்கேயுரிய பயமா? பயத்தில் வருகிற பிரமையா? பிரமை போல் உறுத்துகிற எச்சரிக்கை உணர்வா?

குளிப்புச் சுகத்தை முழுசாக அனுபவிக்க முடியாமல்... இதென்ன அவஸ்தை? குடித்துக் கொண்டிருக் கிற கஞ்சிக்குள் செத்துக்கிடக்கிற ஈயைப்போல...

ஈர இமைகளை விரித்து மீண்டும் ஒரு பருந்துப் பார்வை. கண்களை நம்புவதற்கு ஆசைப்படுகிற மனசு. மனசை அரிக்கிற அந்தக் கூச்ச உணர்ச்சி.

மஞ்சளைப் பூசிக் கொண்டாள். தலையை-உடம்பை-மறுபடி நீர்க்கற்றையில் கொடுத்து, திருப்பி திருப்பி... மாற்றி மாற்றி...

கூந்தலை அள்ளி இடது தோளில் போட்டு முறுக்கி நீரைப் பிழிந்து...

தாவணியையும், ஜாக்கெட்டையும் அடித்துத் துவைத்து பிழிந்து, தொட்டியை விட்டு மேலேறி... மாற்றுத் துணிகளை உடுத்திக் கொண்டாள். காலுக்கடியில் கிடந்த ஈரப்பாவாடையை எடுத்து, தொட்டியில் நனைத்து அடித்துத்

துவைத்தாள். பிழிந்தாள். அதைக் கொண்டே தலையைத் துவட்டிக் கொண்டாள்,

இப்போது கூட... மனசில் அதே வலி பார்க்கப்படுகிற உணர்வு. நடுமுதுகில் எறும்பு ஊர்வது போன்ற ஓர் அவஸ்தை. உள்ளுணர்வின் பிடுங்கல்.

துவட்டிய பாவாடையை தொட்டியில் போட்டு அலசிப் பிழிந்து விட்டு நிமிர்கிற போது-பம்ப்செட் ரூமிற்குள்ளிருந்து குழாய் வருகிற ஓட்டையில்-இருட்டில் ஒரு கண்-

ஒளிர்ந்து மறைவதைப் போல... பிரமையா, நிஜமா...

மனசுக்குள் நறுக்கென்று முள் தைத்த உணர்ச்சி ஆழம் வரை பாய்ந்து ரத்தம் பீய்ச்சுகிற வேதனை. பம்ப் செட் ரூம் பூட்டிக் கிடந்ததே... இருட்டுக்குள் ஆளா? ஐயய்யோ...

பாவாடையை அவிழ்த்துக்கூட விட்டாற்றியாகக் குளித்தோமே...

விறு விறுவென்று கிழக்கு பார்த்த ரூம் வாசலுக்கு வந்தாள். அடைத்துக் கிடக்கிற ரெட்டைக் கதவை காலால் மிதித்துத் திறந்தால்...

பொடிப் பொடியாய் நெற்றியெலலாம் வியர்வைத் துளிகளோடு, உதட்டை இளிக்கிற ஓர் அசிங்கம். ஆம்பளை அசிங்கம். கண்களில் பயம் பறவையாட பல்லையிளிக்கிற ஆண் மிருகம். தெரு நாயைப் போன்ற பொறுக்கி மிருகம்.

இவளுக்குள் குப்பென்று தீ. கோபத்தில் கண்கள் இடுங்கிற்று. உடம்பெல்லாம் பற்றிக் கொண்டு திகுதிகுக்கிற அக்கினி.

*மனசெல்லாம் சட்டென்று பரவிய அசூயை மலத்தில் மிதித்து விட்டதைப் போல வெறுப்பு.*

*குமட்டியது. நெஞ்சின் ஆழத்திலிருந்து கமறியது. கமறலைக் காறினாள்.*

*''த் தூய்'' விளக்குமாறால் மூஞ்சியில் அறைவதைப் போல துப்பினாள்.*

*சாக்கடையில் புரண்ட பன்றியால் உரசப்பட... உடம்பெல்லாம் அழுக்காகி விட்ட அருவெருப்பு.*

*இதை எங்கே போய் அலசிக் கழுவுவது? ஏழைப் பெண்ணாய் பிறப்பெடுதத சாபமே ஒரு அழுக்குச் சுமையாக அவளை அழுத்த...*

*பத்ரகாளியாக ஊரை நோக்கி நடந்தாள்.*

*ஜுன் / 99 / செம்மலர்.*

# அவனை அவனே...

இப்போதுதான் டிரைவர் தட்டி எழுப்பிவிட்டுப் போயிருக்கிறார்.

சீனிவாசனுக்குள் இன்னும் சுருண்டு படுத்துக் கொள்கிற உறக்கம். கண்ணிமைகளை விலக்க மனசில்லை. இமைகளின் உட்பகுதியில் திகுதிகுவெனக் காந்தல். இன்னும் கொஞ்ச நேரம் தூக்க சுகத்துக்கு ஏங்கித் தவிக்கிற உடம்பு. தை மாதப் பனி தரையைத் துளைக்கிறது. நெஞ்சுக்குள் முகம் புதைத்துச் சுருட்டி முடங்கிக் கொள்ள ஏங்க வைக்கிற பனி.

ஊஹூம்! மணியைப் பார்த்தான். 5-13.

இன்னும் டீ குடிக்கணும். பாத்ரூம் போகணும். டிரஸ் மாத்தணும். கண்ணாடி பார்த்துத் தலைசீவணும். கையெழுத்துப் போட்டு, கணக்குப் பார்த்து, டிக்கெட் கட்டுகளை வாங்கணும். இன்வாய்ஸ் பேப்பர் வாங்கணும்; 5-30க்கெல்லாம் டிப்போவை விட்டு பஸ்ஸை நகர்த்தியாகணும்.

5-40க்கு பஸ் நிலையத்தில் டயமெடுத்தாகணும்.

துரிதப்படுத்தி நிர்ப்பந்தப்படுத்துகிற தொழில். மடங்க மறுத்து அடம் பிடிக்கிற மனசை வசக்குகிற தொழில். மனசின் விருப்பங்களைக் காலில் போட்டு மிதித்து,

மனிதனை மெஷினாகச் சிறுமைப்படுத்துகிற கண்டக்டர் உத்தியோகக் கண்டிஷன்.

மனசெல்லாம் நெருஞ்சி முட்கள். உறுத்தி வலியெடுக்க வைக்கிற கூரிய முட்கள்.

ராவும் பகலுமாய்க் கனத்த தனத்த புத்தகங்களைத் தூக்கி வைத்துக் கொண்டு உற்று உற்றுப் படித்து, மால்தஸ்ஸையும், ராபர்ட் ஓவனையும் இன்னும் பிற பொருளாதார அறிஞர்களின் சிக்கலான எக்னாமிக்ஸ் தியரிகளைக் கரைத்துக் குடித்து... வாங்கிய பி.ஏ. என்கிற இரண்டெழுத்திற்கு என்ன அர்த்தம்? என்ன கௌரவம்? கண்டக்டர் உத்யோகம் தானா, அதற்கான அந்தஸ்து?

காக்கிச் சட்டை போட்டுக் கொண்டு, எச்சிலைத் தொட்டு டிக்கட் கிழிக்கிற தொழிலா? புனுகுப் பூனைக்கு எலிபிடிக்கிற உத்தியோகமா? லாண்டிரிக் கடையில் அழுக்குத் துணிக்கணக்கு எழுதுகிற காரியத்திற்கு ஒரு கவிஞனா?

வருஷங்களையும் வாலிபத்தையும் அள்ளி விழுங்கிக் கொண்ட படிப்புக்குரிய உத்தியோகம் கிடைத்திருந்தால்...

ஏழு மணிவரை உறங்கலாம், மழலையோடும் விளையாடி மகிழ்ந்து. மனையோடு பேசி மகிழலாம். ஆற அமரக்குளித்து, பேப்பர் படித்து விட்டு, மனசை குளிர்ச்சிப் படுத்துகிற குறும்புகளோடு, கொஞ்சுகிற சந்தோஷத்தோடு டிபன் முடித்து விட்டு, பத்து மணிக்கு ஆபீஸ் போய், ஐந்து மணிக்கு வீடு திரும்பி...

ஹூம்... எல்லாம் பாழ்! வாங்கிய பட்டம் பொருட் படுத்தப்படவில்லை. பி.ஏ.கண்டு கொள்ளப்படவில்லை.

''என்னப்பா சீனி, இன்னும் எந்திருக்கலியா? காலேஜ் ஆஸ்டல் இல்லேப்பா... இது பஸ் டிப்போ.''

டிரைவர்தான். பனியனை உள்ளே தள்ளிக் காக்கி பேண்ட் கொக்கிளை மாட்டிக் கொண்டிருந்தார். படுத்த நிலையிலேயே இவன் கால்களை நீட்டினான். உடம்பை நிமிர்த்தினான். விறைத்தான். நெட்டி முறித்து அலுப்பை உதறி விட்டு எழுந்தான். முகம் கழுவித் துடைத்து விட்டு, டீ குடிக்க கேண்டீனுக்குள் நுழைந்தான்.

பஸ் நிலையத்திலிருந்து 5-40க்கு பஸ் புறப்பட்டது. பனியின் ஊசிப் பாய்ச்சல். எலும்பு வரை ஊடுருவிப் பாய்ந்து நடுங்க வைக்கிற தைமாதப் பனி.

ஏழு மணி நெருங்கிக் கொண்டிருக்கையில், ஆமர்நாடு நெருங்கிக் கொண்டிருந்தது. இதுதான், இந்தப் பஸ்ஸின் எல்லை.

''என்ன சீனி, டிபனுக்கு ராசபாளையம் போயிருவமா?''

''இங்கேயே முடிச்சிருவோம். சட்னி சாம்பார் டேஸ்ட்யிருக்கும், நம்ம வீட்லே மாதிரி.''

அந்தச் சின்ன ஓட்டலுக்குள் நுழைந்தனர். தடபுடலாய் வரவேற்பு. உபசரிப்பு. ஓடி ஓடிக் கவனிக்கிற கடைக்காரர்.

திருப்தியுடன் டிபன் முடித்து விட்டு, சிகரெட் பற்ற வைத்தான். சீனி, புகையை ஊதிக் கொண்டே தினசரிப் பத்திரிகைகளில் பருவட்டாக ஒரு மேய்ச்சல். அடிக்கடி கைக்கடிகாரத்தைக் கவனித்துக் கொண்டான்.

'வேலை கிடைக்காமல் பட்டதாரி வாலிபர் தற்கொலை' என்ற செய்தி அதிர்வுடன் இவன் கவனத்தைச்

சுண்டியிழுக்க, சிற்றெறும்பு எழுத்துக்களைக் கூர்ந்து வாசித்தான். முடிப்பதற்குள்...

உயிர் பெற்று உறுமுகிற பஸ்ஸின் சத்தம். திடுக்கிட்டு நிமிர்ந்தான். டிரைவர் கையசைத்துக் கூப்பிடுவது கண்ணாடி வழியாக மங்கலாய்த் தெரிந்தது. நிமிர்ந்த இவன் விழிகளில் வெளிப்படையான கண்டனம்.

கண்டக்டர் விசிலடிக்காமல். டிரைவர் எப்படி வண்டியை ஸ்டாட் பண்ணலாம்? இது, அலட்சியம். கண்டக்டரை பொருட்படுத்தாத துடுக்குத்தனம். டிரைவரை போய்ச் சத்தம் போடலாமா?

லகானைப் பிடி. சுண்டியிழுத்துக் கட்டுப் படுத்து. உணர்ச்சிகளை வார்த்தைகள் காயப்படுத்தும். பிறரை மட்டுமல்ல, உன்னையும் தான்! சீனி, சாந்தமாக...அமைதி கொள்!

சமாளித்துக் கொண்டு அவசரமாய் ஓடி வந்து பஸ்ஸில், ஏறினான். விசிலடிக்க நினைப்பதற்குள்-

''கண்டக்டர் ஏறிட்டாரு. போகலாம்'' ஏதோ ஒரு பயணியின் சப்தத்தில் வண்டி நகர... சீனி உள்ளுக்குள் ஊனப்பட்டான். இப்போதும் அலட்சியப்படுத்தப்பட்ட உணர்வு, அத்து மீறலுக்காளான நமைச்சல்.

வண்டி ஃபுல்லாகியிருந்தது. இரண்டு ஹைஸ்கூல் பையன்கள் ஸ்டாண்டிங்கில். விறுவிறுவென டிக்கெட் கொடுத்தான்.

''ரெண்டு தொண்ணூறு குடுங்க.''

''ஒண்ணு அம்பது ஒண்ணு.''

''நாலு ராசபாளையம்.''

''அய்யனாபுரம் ஸ்டாப். ஒண்ணு எழுபது குடுங்க.''

''ஆலங்குளம் முக்கு ரோடுக்கு, ஒரு ரூபாய் ஒண்ணு.''

ஸ்கூல் போகிற பெண்கள் மிகத் துல்லியமாய்ச் சில்லறை தந்து, ஒரு வார்த்தை கூடச் சிந்தாமல் டிக்கெட் வாங்கினர், சில பையன்கள் மௌனமாய் பாஸ்புக்கை நீட்டினர்.

இவனுக்குச் சலிப்பாக இருந்தது. மனத்தில் ஒட்டாமல் வேலையின் தரம் விலகி, விலகி ஓடுவது போலிருந்தது.

என்ன இது! சகலத்தையும் அவர்களே தீர்மானித்து முடித்து விட்டனர். பழக்கப்பட்ட ரூட்டில்... பழகிப் போன பயணிகள். கண்டக்டர் என்கிற இவனது அதிகாரத்தை. தேவையை, பிடுங்கிக் கொண்டு, அவர்களாகப் பகிர்ந்து கொண்ட மாதிரி ஓர் இழப்புணர்வு, இவன் தீர்மானிப்பதற்கும், இவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கும் ஒன்றுமில்லாமல் போய் விட்ட ஒரு வெறுமை.

சீட்டுக் கிழித்துக் கொடுக்கிற மிஷினாக, தன் தரம் தாழ்த்தப் பட்டு விட்டதைப் போல, மனசுக்குள் மெல்லிய அவமதிப்பு.

பஸ் முழுக்கச் சலசலப்பு, பேச்சு சப்தம், அவரவர் கதைகள்; அவர்களுக்குள் பரஸ்பரமாய்க் கிண்டல்கள், சிரிப்புகள், இவனிடம் பேசுவதற்கும் விசாரிப்பதற்கும் ஒருவருக்கும் எந்தத் தேவையும் இருப்பதாகத் தெரியவில்லை.

சப்பென்றிருந்தது.

அவசரமாய் 'இன்வாய்ஸ்' குறித்துக் கொண்டான்.

அடுத்த ஸ்டாப்பில் ஏறிய கிராமத்துப் பெண்கள். அவர்களுக்குக் கூட இவனிடம் விசாரித்து அறிந்து கொள்ள ஒன்றுமில்லை, இவனை ஒரு மனிதனாக அல்ல. கண்டக்டர் என்பதாகக் கூட பொருட்படுத்திக் கொள்ளவில்லை.

இவனுள் ஏதோ ஒன்று குமறிக் கொண்டிருந்தது. நிதானத்தைச் சலனப்படுத்துகிற நமைச்சல். முகத்தைச் சிடுசிடுப்பாக்குகிற உள் குமைச்சல்.

ஸ்டாப்களில் கூட, விசிலடிப்பதற்கு முன்பே பிரேக் போட்டு விடுகிற டிரைவர். எந்த நிறுத்தத்தில் இறக்கம் இருக்கும், இருக்காது என்பதெல்லாம், அனுபவப்பட்ட அவருக்கு அத்துப்படி.

சைடு கண்ணாடியில் பார்த்தே... ஏறுபவர்களையும், இறங்குபவர்களையும் கண்காணித்து... விசிலுக்கு முன்பே நகர்த்தி விடுகிறார்.

நான் எதுக்கு? கண்டக்டர்ங்கிறவன் எதுக்காக? அவனுக்கு என்ன அதிகாரம்? ஒண்ணுமில்லையா? அவன் அவசியமில்லையா? நான் ஒரு மனுசன், மனுசன்ங்கிற அர்த்தத்துலே மதிக்காட்டாலும் பரவாயில்லே... கண்டக்டர்ங்கிற தொழிலையாச்சும் பொருட்படுத்த வேண்டாமா?

தனது இருப்பின் அவசியமின்மையை உணர்கிற கணங்கள் கொடியவை.

மனசு படபடத்தது. முகம் சிவக்கிற கோபக் கங்கு. அனல் பரத்துகிற நினைவுகள். 'யார் மீது பாயலாம் குதறிப்

பிடுங்கலாம்' என்று பம்பிப் பதுங்குகிற அளவுக்கு, நிறம் மாறுகிற மனசு.

பல்லைக் கடி, மனசைக் கட்டுப்படுத்து. பொருட் படுத்தா விட்டாலும்... நீ கண்டக்டர்தான். மதிக்கா விட்டாலும் கூட... நீ உனக்கு மனிதன் தான். உணர். ஆற அமர யோசி. யோசனையின் நீட்சியில் வெம்மையைத் தணி. சீனி. நீ மனிதன்... மனிதன்...

யோசிக்கத் திராணியற்ற மனசு, அடங்க மறுத்துத் திமிறுகிறது. பாயத் துடிக்கிறது.

பஸ் ஆலங்குளம் கடந்து போனது.

''ஒரு ராசபாளையம் குடுங்க,''-பத்து ரூபாய் நோட்டை ஒரு வெள்ளைச் சட்டை நீட்டியது.

'சில்லறை இல்லியா?'

இவனையும் மீறி வெளிப்படுகிற கடுப்பு குரலில் இவனுக்கே அனாவசியம் என்று தோன்றுகிற கடுப்பு.

''இல்லே.''

''இல்லாம எதுக்காக வண்டியிலே ஏறுரீக? உசுரை வாங்குறதுக்கா?'

எதிர்த் திசையிலிருந்து கோபம் கிளம்பவில்லை. சிரிக்கிறார். பெருந்தன்மையான புன்னகை ரொம்பச் சகஜமாகச் சொல்கிறார்.

''டிக்கெட் மட்டும் குடுங்க. ராசபாளையத்துலே வந்து மிச்சத்தை வாங்கிக்கிடுறேன், சார். நம்ம துட்டு ஓடியா போயிடும்?''

சீனிக்குச் சப்பென்று ஆகிவிட்டது, கண்டக்டர் என்கிற தோரணையைக் காட்டுவதற்குக் கிடைத்த சிறிய வாய்ப்பையும், புன்னகையால் தட்டிப் பறித்து விட்டான். பாவி!

சங்கம்புட்டியைக் கடந்து, அய்யனாபுரத்தில் ஆட்களை உதிர்த்து விட்டு, டிக்கெட்களை ஏற்றி விட்டு பஸ் நகர்ந்தது சீனி, டிரைவர் பக்கத்தில் நின்று இன்வாய்ஸ் எழுதிக்கொண்டிருந்தான்.

ஸ்டாப்பிங் இல்லாத ஓர் இடத்தில் பட்டிக் காட்டுக் கிழவர் கையை நீட்டினார். அவர் காலடியில ரெண்டு சிறுசுகள், அதில் ஒரு சிறுவனுக்குப் புது மொட்டை போட்டிருந்தது.

என்ன நினைத்தாரோ... டிரைவர் நிறுத்தினார். சட்டையில்லாத அந்தக் கிழவர் பின்வாசலில் சிறுசுகளை ஏற்றிவிட்டு, அவரும் ஏறினார். சிரமப்பட்டுத் தள்ளாடினார். சிறுசுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதிலேயே சிரத்தை காட்டினார்.

இவனுள் திகுதிகுவெனப் பற்றிக் கொண்டு எரிந்தது. பின்வாசலில் ஏறிக் கொண்ட கிழடு. இந்தக் கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு, நீந்திப் பின்னால் சென்றாக வேண்டிய அனாவசியச் சிரமம் இவனுக்கு, ச்சே!

ஸ்டாப்பிங் இல்லாத இடத்துலே நின்னு கையைக் காட்டுனதுக்குக் கடிச்சுக் குதறிடணும். அந்த மொட்டைக்கும் ஒரு டிக்கெட்டை போட்டுத் தீட்டிரணும். விடக் கூடாது. இப்பவாச்சும் கண்டக்டர் இருக்கிறதை உணர்ந்திடணும். 'பாவம்டா! சீனி..தப்புச் செய்யாதே!'

உள்ளுக்குள் ஒலித்த குரலைப் புறம் தள்ளினான். நீந்தி நெளிந்து பின்னால் ஊர்ந்தான்.

இவன் வருவதை எதிர்பார்த்து அந்தப் பெரியவர். இவன் முகத்திலேயே அவரது பார்வை. பார்வையில், பிடிபட்டுப் போன பறவையின் பரிதாபம். கருணையை எதிர்பார்க்கிற அறியாமை.

''ஐயா... ராசபாளையத்துக்கு டிக்கட் எம்புட்டையா?''

பாலைவனத்தில் ஒரு நீரூற்று. முதல் குரல் கண்டக்டர் இருப்பைப் பொருட்படுத்திய குரல். இவனது இருப்பை இவனுக்கே உணர்த்திய அசலான குரல்.

மனசெல்லாம் பாய்ந்து பரவுகிற குளிர்ச்சியின் இதம்.

''தொண்ணூறு பைசா.''

ரெண்டு ரூபாய்த் தாளை நடுக்கத்துடன் நீட்டினார்.

''இந்தப் புள்ளைக தகப்பனைப் பறி குடுத்துட்டுக் கதியத்து நிக்குதுக. எம் பேரப் புள்ளைக. வளர்க்கிறதுக்காகக் கூட்டிட்டுப்போறேன். இதுகளுக்கும் டிக்கட் போடணுமாய்யா? போடனும்னா... போட்டுக்கங்க.''

இவனுள் சிலீரெனப் பாய்கிற குளிர்ச்சி மின்னல்! சகல சாளரங்களும் அகலத்திறந்து கொண்டன. உள்ளுக்குள் குப்பென்று காற்றும் ஒளியும் புகுந்து... மனசே பூரிப்பும் பெருமிதமுமாய்த் ததும்ப...

கண்டக்டராக மட்டுமல்ல... அதற்கும் அப்பால்... இவனை ஒரு மனிதனாகவும் பொருட்படுத்தி விட்டார். இரக்கப்பட உரிமையுள்ள மனிதனாக... சீனிவாசன் என்கிற தனித்துவ சுயமாக... சுயமான மனிதனாக...

தலையில் கிரீடம் வைத்த மாதிரி... பயணிகள் மத்தியில் இவனுக்கு மாலை போட்டு கௌரவித்த மாதிரி... ஒரு பிரமை!

சீனியின் கடைக் கண் ஓரங்களில் ஈர மினுமினுப்பு.

''பையனுக்கு டிக்கட் வேண்டாமய்யா. கம்பியை நல்லாப் பிடிச்சுக்கோங்க.''

அவனை அவனே தரிசித்து விட்ட உள்மனக் கும்மாளம். வார்த்தைகளில் பிடிபடாத சந்தோஷமும் திருப்தியும் மனசைத் தத்தளிக்கச் செய்ய... இன்வாய்ஸ் எழுதினான்.

*பிப்பரவரி 1990 கல்கி*

# கோணல் எழுத்து நாலு...

''*ரா*சாத்திக்கு இடுப்புவலி கண்டுடுச்சாம்!'

*அந்தக் காலை நேரத்தில் சிறகு கட்டிக் கொண்டு தெருத் தெருவாய்ப் பறந்தது செய்தி.*

*கிராமம், சகஜ நிலையிலிருந்து திரும்பி ராசாத்தியின் மேல் பார்வையை நங்கூரமிட்டது. மௌனப் பரபரப்போடு ஒரு ஓட்டம் போல நடந்து போகிற பெண்கள், எதிர்ப்படுகிறவர்களிடம் அவசரமாய்ச் செய்தியைப் பரிமாறிக் கொண்டனர்.*

*''நம்ம ராசாத்திக்கு இடுப்பு வலி எடுத்துருச்சாமே!''*

*''பாரு... ? அண்ணாமலை மாமா பேத்தியா?''*

*''அவளுக்குத்தா?''*

*''அடடே, தலைப் பிரசவமாச்சே;''*

*''சிக்கல் இல்லாம புள்ள வவுத்தைவுட்டுக் கழிஞ்சிட்டா... அது கடவுள் புண்ணியம். ஆயிரங்கண்ணு மாரியாத்தா என்ன நெனைச்சிருக்காளோ...*

*அந்தக் கூரை வீட்டை நோக்கி பல திசைகளிலிருந்து வேகம் வேகமாக வருகிற பெண்கள். மண்ணில் நீளம் நீளமாய் நிழல்கள் விரைகின்றன. கொஞ்ச நேரத்தில்-*

அண்ணாமலை வீடு அல்லோகல்லோலப்பட்டது. பரிதவிப்பும் அங்கலாய்ப்புமாய்ச் செயல்படுகிற பெண்கள் முதுமையைப் பொருட்படுத்தாமல் ஓடிச்சாடி உதவிகள் செய்கிற கிழவிகள்.

யாரையும் எதிர்பார்க்காமல் வேலைகள், சூறாவளியாக-புயலாக-

பிரசவம் என்றால் கிராமமே அரண்டு விடும். 'என்ன ஆகுமோ, ஏது நேருமோ என்கிற திகில் பற்றிக் கொள்ளும் நடுக்காடு. ஒரு சிக்கல் வந்து விட்டால், ஆத்திர அவசரத்துக்கு அருகில் ஆஸ்பத்திரி கிடையாது; டாக்டரும் இல்லை. ஆஸ்பத்திரி இருக்கிற டவுனுக்குக் கொண்டு போவதென்றாலும்...நல்ல ரோடு வசதியும் கிடையாது.

விதியேயென்று சாமி கும்பிடுவதைத் தவிர வேறு கதியேயில்லை. சுகப்பிரசவமாகி விட்டால்...அப்பாடா என்றிருக்கும. 'ஆத்தா புண்ணியம்' என்று கும்பிடும். வேறு 'ஏதாகிலும்' நேரிட்டு விட்டால்... துக்கப்படுவதைத் தவிர வேறு வழி? 'நாம குடுத்து வைச்சது அம்புட்டுத்தான்' என்று விதியை நொந்து கொண்டு சுய ஆறுதல் பெற வேண்டியதுதான்.

ராமாயம்மாள் வந்து விட்டாள். சுண்டெலி மாதிரி சின்ன உருவம். சுறுசுறுப்புக்காரி. பயமில்லாமல் தயக்க மில்லாமல் விறுவிறுவெனச் செயல்படுவாள். பிரசவம் பார்க்கிற இந்தத் தொழிலில் ஒரு பாந்தத்துடன்-பெருமிதத்துடன் வேலை செய்வாள்.

அவள் வீட்டுக்கு வெளியே தலைகாட்டிய போதெல்லாம் அண்ணாமலை பயத்தோடு விசாரித்தார்.

''இப்ப எப்படி இருக்கு?''

''நாம கைப் பக்குவம்தான் செய்யலாம். அதுக்கு மேலே நம்ம கையிலே என்ன இருக்கு? அந்த 'ஆத்தா' தயவுதான் வேணும்.''

பாதி நரையாகவும், மீதி செம்பட்டையாகவும் உள்ள சின்னத் தலையைக் கவலையோடு ஆட்டிக் கொண்டார் அண்ணாமலை.

வெளியே இருந்த மனிதர்களிடம் ஒரு பீதி பரவியது. பரஸ்பரம் துக்கப் பார்வைகளைக் கனத்துடன் பரிமாறிக் கொண்டனர். மனசுக்குள் முண்டுகிற உணர்வுகளை வார்த்தைப்படுத்த அஞ்சினர். எச்சிலோடு பேச்சையும் உள்ளே விழுங்கிக் கொண்டு தவித்தனர்.

கனந்த மௌனம் அந்தத் தெருவின் கழுத்தையே நெறித்தது.

வீட்டுக்குள்ளிருந்து வருகிற சிறு சிறு சப்தங்களைக் கூட திகிலுடன் கவனித்தனர்.

எல்லாம் சில நிமிடங்கள் தான்.

பூமிக்குப் புதிதாக ஒரு மழலையின் வீரிட்ட அழுகைச் சப்தம் தென்றலாய்...

வேர்வையைத் துடைத்துக் கொண்டு வெளிப்பட்ட ராமாயம்மாளிடம் வெற்றிப் பெருமிதம். ''ஆம்பளைப் புள்ளே'' என்ற சப்தமான அறிவிப்பில் வெளிப்படையாக முகம் காட்டிய மகிழ்ச்சி.

சட்டென்று இறுக்கம் விலக, மனசுக்குள் அடக்கப் பட்டுக் கிடந்த உணர்வுகள் பீறிட... உள்ளேயும்

வெளியேயும் கலகலப்பான பேச்சுச் சப்தம். 'ஆத்தாடி, இப்பத்தான் நிம்மதி' என்ற தொனியில் ஆசுவாசப் பேச்சுக்கள்.

அந்தச் சப்தத்தை அமுக்கிக் கொண்டு, உள்ளிருந்து பலமாக ஒலித்தது. ஆனந்தக் குரவைச் சப்தம்.

கூரை நிழலில் கனத்து நின்ற பெரியவர்கள், ஒரு சுமை இறங்கிய நிம்மதியுடன் டீக் கடைக்கும் தோட்டத்துக்குமாய்க் கலைந்தனர்.

வருஷக் கணக்காகப் பிரசவம் பார்க்கிற ராமாயம்மாளே... திகைத்துப் போனாள். மறுநாள் காலையில், ராசாத்தி கிடந்த கிடப்பில் அப்படியே அரண்டு போனாள். கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கண்ணைக் கட்டி முள்ளுக்காட்டில் விட்ட மாதிரி இருந்தது.

ராசாத்தியின் உடம்பு குணம் கெட்டு விட்டது. கையும் காலும் வெவ்வேறு திசையில் திருகிக் கொண்டும் விறைத்துக் கொண்டும்... உதடுகள் விரிய, பல்லை இளித்துக் கொண்டு...

சிரிப்பது போல வாய் விரிகிறது. இது மனிதச் சிரிப்பல்ல. அமானுஷ்யமான இளிப்பு, சவச் சிரிப்பு. சப்தமில்லாத உணர்ச்சியில்லாத சிரிப்பு. இமை தட்டாத கண்களில் பறவையாடுகிற விழிகள்.

ராமாயம்மாள் உள்ளுக்குள் இருண்டு போனாள். பதற்றத்தில் மனசு கிடந்து மருண்டது.

''இதென்ன கூத்து? பேய் பிடிச்சுடுச்சா?''

அவளுள் பீறிட்ட பயம் வெளிப்பட,

அந்தக் காலை நேர சகஜ வாழ்க்கையை மிதித்து நசுக்கிக் கொண்டு காட்டுத் தீயாகச்செய்தி பரவியது.

ராசாத்தியின் வினோதமான அசைவையும், கிடக்கிற அலங்கோலத்தையும் பார்த்த பெண்கள் எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

''இது பேய்க் குணம்தான்.''

ராசாத்தி வாழ்க்கைப்பட்ட ஊரில் ஓடைக்கு அருகில் ஆலமரம் ஒன்று இருக்கிறதாம். அதில் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி எப்போதோ தூக்குப் போட்டுச் செத்துப் போனாளாம்.

அந்த வழியாகத்தான் தினசரி புஞ்சைக்குப் போய் வருவாளாம். ராத்திரியில் கூட ஒத்தையில் பயமில்லாமல். அலையக் கூடிய ராசாத்தியைக் கர்ப்பத்தோடு தவித்து மடிந்த அந்த ஆவிதான் பிடித்துக் கொண்டதாம்!

ஒவ்வொரு கிழவியும் ஒவ்வொரு அவலக் கதையாகச் சொல்லிச் சொல்லியழுது சோகத்துடன் பெருமூச்சு விட்டனர்.

பூவம்மா கிழவிதான் அதுகளைச் சப்தமிட்டுக் கண்டித்தாள்.

''எதுக்கடி அழுகுறீக? முத்துசாமிபுரத்துலே. ஒரு சாமியாடி இருக்காரு. துடியான சாமியாடி. சக்கம்மா அவரு மேலே எறங்கிஅருள் பாடுவா. எப்பேற்பட்ட பேயா யிருந்தாலும் இழுத்துட்டுப் போய் ஆலமரத்துலே ரோமத்தோட ஆணியடிச்சு அறைஞ்சிருவாரு. அவரைக் கூட்டிட்டு வந்தாத்தான் ராசாத்தியை உசுரோட பாக்கலாம்.''

பூவம்மா கிழவியின் சொல்லுக்கு மறு அப்பீலே கிடையாது. ''ஐயய்யோ... யாராச்சும் போய் அந்தச் சாமியாடியைக் கூட்டிட்டு வாங்களேன்'' என்று சகல பெண்களும் நச்சரிக்க ஆரம்பித்தனர்.

பேத்தியின் புருஷனுக்குத் தகவல் சொல்லி அழைத்து வரப்போன அண்ணாமலை இன்னும் வரவில்லை.

சில பெண்கள் ராசாத்தியின் உள்ளங் கால்களில் குரு தைலத்தைச் சூடு பறக்கத் தேய்த்தனர். ஜன்னல், வாசல் கதவுகளைச் சாத்தினர். ஓர் அகலச் சட்டியில் நெல் உமியை நிரப்பி, தீக்கங்குகளை அதில் போட்டு, ஊதி விட்டு... உரித்து வைத்திருந்த வேப்பமரப் பட்டைகளைப் போட்டு, புகையை உண்டு பண்ணினர்.

அந்தச் சின்ன அறைக்குள் பயமும் திகிலும்... இருட்டும் புகையுமாய் மூச்சுத் திணறியது.

சாமயாடியைக் கூப்பிட ஒருவனை சைக்கிளில் விரட்டினர்.

கூட்டத்திலிருந்த ஆனந்தி, முகச்சுளிப்போடு பார்த்தாள். பத்து வரைக்கும் படித்தவள். பயத்தையும் தயக்கத்தையும் மென்று விழுங்கி விட்டு மெல்ல ராமாயம்மாளிடம் கிசுகிசுத்தாள். ''ஏதாச்சும் டாக்டரைக் கூட்டியாந்து பாக்கக் கூடாதா?''

பூவம்மா கிழவிதான் சினத்துடன் குறுக்கிட்டாள்.

''ஏண்டி... நீ படிச்ச படிப்பு மவுசை இங்க அவுத்துக் காட்ட வந்தீயாக்கும்?''

''இல்லே ஆச்சி...டாக்டர் வந்து ஊசி போட்டர்னா...''

''சரிதான், நிறுத்துடி. சதைக்குத்தானடி அவரு ஊசி போடுவாரு. மனசைப் பிடிச்ச பேய்க்கு ஊசி போடுறதுக்கு எந்தக் கொம்பன் பொறந்துருக்காண்டி? படிச்சவன் பாட்டைக் கெடுத்தானாம், எழுதுனவன் ஏட்டைக் கெடுத்தானாம்...! நீ எல்லாத்தையும் கெடுத்துச் சீரழிச்சிருவே போலிருக்கே...''

பூவம்மா கிழவியின் ஆங்காரமான சீற்றத்தில்... ஆனந்தி அப்படியே அடங்கிப் போனாள்.

எல்லோரும் சாமியாடியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். பொறுமையில்லாமல் பூவம்மா தான் கேட்டாள்.

''சாமியாடியைக் கூப்பிட யாரு போயிருக்கிறது?''

''நம்ம சின்னச்சாமி...''

''யாரு? அந்தச் செல்லையா மவனா?''

''அவன்தான்.''

''அவனும் படிச்ச பயலாச்சே. கோண எழுத்து நாலு எழுத்தைப் படிச்சிட்டாத்தான்... கூறுகெட்டுப் போவானே! அவனும் சாமியாடியை ஒழுங்கா கூட்டிட்டு வரப் போறானோ... இல்லியோ...''

நேரம் நிம்மதியற்ற மனச்சுமையோடு ஊர்ந்தது. இளமதியத்துக்கு மேலாகி விட்டது. இன்னும் ராசாத்தி அப்படியே தான் கிடந்தாள்.

சுற்றி உட்கார்ந்திருந்த பெண்களைத் திடுக்கிட வைக்கிற தடதடக்கிற சப்தத்தில் மோட்டார் பைக்! தூசியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்ற வண்டியிலிருந்து இறங்கினான் சின்னச்சாமி... கூடவே டாக்டர்.

பூவம்மா கிழவி திகைத்தாள். சின்னச்சாமியை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள். ஒன்றும் பேச முடியவில்லை.

உள்ளே நுழைந்த டாக்டர்... அங்கிருந்த சூழலைப் பார்த்து விட்டு எரிச்சல் பட்டார்.

''ஏன் இப்படி இருட்டு? முதல்லெ வெளிச்சத்தை விடுங்க. ஜன்னலைத் திறங்க!''

மண்டி போட்டு உட்கார்ந்தார். ராசாத்தியைப் பார்த்தார். நாடி பார்த்தார். விறைத்துக் கொண்டு போகிற கை விரல்களை நிமிர்த்தி, திருப்பிப் பார்த்தார்.

''என்னம்மா செய்யுது?''

''நேத்துதான் குழந்தை பொறந்துச்சு, அதுக்குப் பொறகு ராத்திரியெல்லாம் நல்லாத்தான் இருந்தா. விடிஞ்ச பிறகுதான்... இப்படி... காத்து கருப்பு அடிச்சிருக்கும்னு...''

எல்லோரும் மௌனமாக இருந்தனர். ராமாயம்மாள் தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். டாக்டர் மெல்லிசாகச் சிரித்தார்.

''காத்துக்கு கலரெல்லாம் கிடையாது. கருப்புக் காத்துமில்லே. பச்சை காத்து மில்லே. சரி... கொஞ்சம் வெந்நீர் கொண்டாங்க.''

என்ற டாக்டர்... பூவம்மா கிழவியைப் பார்த்தார்.

''இந்த உமிச் சட்டியையெல்லாம் காலி பண்ணுங்க. கதவைத்திறங்க. காத்து வரட்டும்...''

''இல்லேய்யா... பச்சை ஒடம்புக்குக் குளுந்த காத்து ஒத்துக்காது...''

''எனக்குத் தெரியும்மா... மொதல்லே நான் சொல்றதை செய்யுங்க. தம்பி... ஒரு டேபிள்ஃபேன் வாங்கிக் கொண்ணாந்து வைங்க...''

வெந்நீர் வந்ததும் ஊசியைப் பீச்சினார். கால்ஷியம் இன்ஜெக்ஷனை சிரிஞ்சரில் ஏற்றினார். ராசாத்தியின் கையில் நரம்பைத் தேடிக் கண்டு பிடித்து ஊசி போட்டார். இரண்டு ஊசி.

''பேய் பூதத்துக்கெல்லாம் சுடுகாடுதான் பிடிக்கும். நம்மளைப் பிடிக்காதும்மா. ஏற்கெனவே சுண்ணாம்புச் சத்து கொறைவான ஒடம்பு. பிரசவத்துலே ரொம்ப ரத்தம் போயிருக்கும். அதனாலேதா இந்த வலிப்பு. ஊசி போட்டுருக்கேன்... இனிமே பேயெல்லாம் ஓடிப் போயிடும்...''

டாக்டரின் அமைதியான கிண்டல்... எல்லோருக்கும் ஆறுதலாக இருந்தது. இனி பயப்பட ஒன்றுமில்லை.

எங்கிருந்தோ கொண்டு வரப்பட்ட டேபிள் ஃபேனை ராசாத்தியின் அருகில் வைத்து, பிளக்கைத் தேடிச் சொருகினார், டாக்டர். 'விர்ர்'ரென்ற இசையுடன் கிளம்பிய காற்று, ராசாத்தியின் கூந்தலைப் பரத்தியது.

கொஞ்ச நேரம் தான்.

திருகல், விறைப்பு எல்லாம் நின்று போய் ராசாத்தியின் கை கால்கள் துவண்டன. கண்கள் மூடிக் கொண்டன. முகத்தில் மெல்ல மெல்ல திரும்பி வந்தது உயிர்க்களை.

டாக்டர் சின்னச்சாமியை தேடினார். மாத்திரைகள் கொடுத்தார். உணவுப் பக்குவம் சொன்னார். முப்பது ரூபாயைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

பெண்களுக்கு ஆச்சர்யமும் நிம்மதியும். சின்னச் சாமியை மகிழ்ச்சியோடு சூழ்ந்து கொண்டனர். ஒரு பெரியவர் கேட்டார்.

''சாமியாடியைக் கூட்டி வரத்தானே போனே? பெறகு எப்படி டாக்டரைக் கூட்டிட்டு வந்தே?''

சுற்றிலும் பார்த்து விட்டுச் சொன்னான்.

''உங்க கூடச் சேர்ந்து... ராசாத்தியைச் சாக விடுறதுக்கு எனக்குச் சம்மதமில்லே. அதான்... டாக்டர்கிட்டே போனேன். அவரும் வரமாட்டேன்னுதான் சொன்னாரு.

அப்புறம்... சாமியாடி விவரத்தையெல்லாம் சொல்லி கெஞ்சிக் கூத்தாடுன பெறகுதா அவரு புறப்பட்டாரு.''

எல்லோரும் அவனைச் சந்தோஷமாயப் பார்த்தனர்.

''என்ன இருந்தாலும் நாலு எழுத்து படிச்சிருந்தா... அதுக்கு ஒரு புத்தி வேலை செய்யத்தான் செய்யுது. நாம பட்டிக்காட்டு கழுதைக. படிக்காம கண் அவிஞ்சு கெடக்கோம். நமக்கு என்ன எழவு தெரியுது?''

என்று அங்கலாய்த்த பூவம்மா கிழவியை அர்த்தத்துடன் பார்த்தாள் ஆனந்தி.

*பிப்ரவரி 1990 கல்கி.*

# பெண் ஒரு பூ மட்டுமல்ல...

குழம்புச் சட்டியை இறக்கி வைத்தாள். கொதித்து அடங்கிப் போயிருந்த கம்மஞ்சோற்றுக்குள் துடுப்பைச் செலுத்தி, குழைத்து முடித்தவுடன் சமையல் வேலை முடித்த ஆயாசத்துடன் நிமிர்ந்தாள், கமலம்.

கையிடுக்குகளிலும் முகத்திலும் நசநசத்த வியர்வை அவளை உறுத்தி இச்சிலாத்திப்'படுத்தியது.

மனது கிடந்து பரபரத்தது. 'புல்லுக்குப் போகணுமே, பொழுதடையப் போகுதே...'

அவசர அவசரமாக வீட்டைப் பெருக்கி முடித்த கமலம் வெளியே முற்றத்துக்கு வந்த போது நிமிர்ந்து பார்த்தாள். மேற்கு மலைத் தொடரின் முதுகில் சூரியன் மோதிக் கொண்டிருந்தது.

தொழுவத்தில் கட்டியிருந்த எருமை இவளைப் பார்த்தவுடன் கண்களை விரித்து, காதுகளை விடைத்தது. எதிர்பார்ப்புடன் இவளை நோக்கியது. கமலத்துக்கு மனது கஷ்டப்பட்டது.

'பாவம், சினைமாடு. கொலை பட்டினியா கிடக்கு'

அம்மா மீது எரிச்சல் பாய்ந்தது. இந்நேரவரை புஞ்சையிலே என்ன செய்றா?

அவள் முன்னிலும் துரிதமானாள். முற்றம் துப்புறவுப் பட்டது. முகத்தைக் கழுவிக் கொண்டு, கடாப் பெட்டியையும் பன்னரிவாளையும் எடுத்துக் கொண்டு கிளம்பும் போது-

கடைக்குட்டியைத் தூக்கிக் கொண்டு தங்கச்சி வந்து சேர்ந்தாள்.

''புஞ்சையிலிருந்து அம்மா வந்தா... 'அக்கா புல்லுக்குப் போயிருக்கா...' ன்னு சொல்லிருடி'' என்று போகிற போக்கில் கூறிவிட்டு தெருவில் இறங்கினாள்.

சூரியனின் கடைசி மூச்சும் போய் விட்டது. பகலும் இரவும் மோதிக் கொள்கிற சாம்பல் நிற வெளிச்சம் மட்டுமேயிருந்தது.

'இந்நேரம் புல்லுக்குப் போய்ட்டு, எந்நேரம் திரும்பி வர்றது? போய் புல்லுக்கு குனியுறதுக்குள்ளே இருட்டிப் போகுமே...' என்ற நினைவில் அவள் துணுக்குற்றாள்.

எப்பொழுதும் அம்மா புஞ்சையிலிருந்து 'வெள்ளனத்துலே' வந்து விடுவாள். சமையலை அவள் வசம் ஒப்படைத்து விட்டு, ராஜத்தோடு சேர்ந்து புறப்பட்ட விடுவாள். பொழுது அடைவதற்குள் திரும்பி வந்து விடுவாள். இதுதான் வழக்கம். இன்று-

என்ன வேலையோ... இன்னும் வந்து சேரவில்லை. ராஜம் வந்து ''வாடி, வாடி'' என்று நச்சரித்தாள்.

என்னத்தை வர்றது? சமையலை முடிக்காமல் எப்படிப் போவது? மாட்டுக்குப் புல்லைப் போட்டு விட்டு,

இவர்கள் என்னத்தைச் சாப்பிடுவது? கடைசியில்- ராஜம் ''நா காளைமுத்து புஞ்சைப் பக்கம் போறேன், வெருசா வந்துசேரு'' என்று கூறி விட்டுப் போயிருக்கிறாள்.

கமலம் நடையை சற்று எட்டிப் போட்டாள். அவள் வேகத்துக்குப் பயந்து போய், ஊர் சட்டென்று பின் வாங்கிக் கொண்டது. வடமேற்குத் திசையில் சென்றாள். புஞ்சையின் பொழிகளே பாதைகளாக உள்ளதால்... வளைந்தும் நெளிந்துமாய் விரைந்தாள்.

கிறுக்கன் கிழித்துப் போட்ட துணிகளாக அழுக்கு மேகங்கள் கந்து கந்தாக் கிடந்தன. ஆர்ப்பரிக்கிற ஆடி மாதக் காற்று வெறி பிடித்துப் போய் வீசுகிறது. புழுதியையும் குறுமணலையும் அள்ளியிறைக்கிறது. ஆளைக்கூட தள்ளப் பார்க்கிறது.

சிந்தனையெல்லாம் புல்லுக்குள் கிடக்க, விரைந்து கொண்டிருந்த கமலம். நடையை நிதானித்தாள்.

எதிரில்-

காளை முத்து வந்தான். ஈரத்துணிகள் தோளில் கிடந்தது. குளித்து விட்டு வரும்போது கூட கையில் வாட்ச் கிடக்கிறது. சிகரெட் பாக்கட்டையும், தீப்பெட்டியையும் உள்ளங்கைக்குள் வைத்திருந்தான்.

துஷ்டனைக் கண்டவளைப் போல தூர விலகி நின்றாள். அவன் மெல்லிசாகச் சிரித்தான்.

''என்ன, புல்லுக்கா?''

''ம்...ம்...ஆமா...''

''பொழுதாயிப் போகலை?''

''ம்ச்சூ! என்ன செய்றது?''

வார்த்தைகளை நறுக்கிக் கொண்டு விரைந்தாள். மனதுக்குள் உறுத்துகிற ஒரு சந்தேகக் குறுகுறுப்பு. திரும்பிப் பார்த்தாள், சந்தேகம் சரியாய்ப் போயிற்று.

அவன் இவளையே திருமபித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறான். அவளுக்கு நெஞ்சு கமறியது. காறித் துப்ப வேண்டும் போலிருந்தது.

மோதிக் கொண்டு வந்த இருட்டு, உள்ளுக்குள் கொண்டு வந்த அச்சத்தை அவள் துடைத்துக் கொண்டாள்.

யாருக்கோ சொல்லிக் கொள்வதைப் போல தனக்குள் சொல்லிக் கொண்டாள். ''நம்மளை எந்த நாய்...என்ன செஞ்சிடப் போகுது?''

ராஜம் தன்னை எதிர் கொண்டு நிற்பாள் என்ற நினைப்பு, ஒரு பாதுகாப்புணர்வைத் தந்தது.

ஒரு வேளை... அவள் ஏதோ ஒரு காரணமாக... வேறு தோட்டத்துக்குப் போயிருந்தால்...

சின்ன அச்சம் மனதுக்குள் ஒரு பனித்திரையாக விழுந்தது. அவளது சுபாவமான துணிச்சல் சட்டென்று அதை அகற்றியது.

'எதுக்குப் பயப்படணும்? நம்மளைப் பேயா அடிக்கப் போவுது? நம்ம வேலையைப் பாத்துக்கிட்டு, நம்ம பாட்டுக்கு வந்தா... எதுவும் ஒன்னும் செய்து விடாது' கமலம் பொதுவாக துணிச்சல்காரி. துணிச்சல்

மட்டுமல்ல, சற்று வித்தியாசமான விவேகத்திற்கும் சொந்தக்காரி.

ஆணைவிட பெண் பலவீனமானவள், மென்மையான இயல்பு கொண்டவள், அதன் காரணமாய் ஆணுக்குப் பணிந்து நடக்க வேண்டும் என்பதையெல்லாம் ஒத்துக் கொள்ள மாட்டாள். அவள் காடுகரைகளில் பேசுகிற பேச்சையும் வேகத்தையும் பார்த்து, கிழடு கட்டைகள் மூக்கில் விரலை வைத்துக் கொள்ளும் வெறுப்போடு வியந்து கொள்ளும்.

''அப்பவும்... பொட்டச்சிக்கு இம்புட்டுத் தைர்யமா?'' என்று கிழடுகள் முணு முணுக்கும். ''பொட்டக்கழுதை இப்புடி வாயாடியாயிருக்கக் கூடாதுடியம்மா?''

காளைமுத்துவின் புஞ்சைக்கு வேலைக்குப் போனால், அவன் இவளுடன் வேண்டுமென்றே வாயாடுவான். இவள் எடுத்தெறிந்து பேசுகிற பேச்சைக் கேட்டு விட்டு அவன் கிண்டலாகச் சொல்லுவான்.

''நீ எம்புட்டுப் பேசுனாலும்... ஒரு ஆம்பளைக்கு கழுத்தை நீட்டிக் கட்டுப்பட வேண்டியவதானே?'!

''கழுத்தை நீட்டுறது சரி-எதுக்குக் கட்டுப்படணும்?''

''ஆயிரம் இருந்தாலும்... பொம்பளையும் ஆம்பளையும் ஒன்னாக முடியுமா?''

''ஏன் ஆம்பளைக்கென்ன கொம்பா முளைச்சிருக்கு? பொம்பளை மட்டும் ஒம்பது மாசமா?''

வாயடைத்துப் போவான். ஆயினும் காளைமுத்து உடன்பட்டுவிடமாட்டான். பெண் மெல்லியல்பு கொண்டவள். அதன் காரணமாக ஆணுக்கு நிகரானவளல்ல என்பதில் உணர்வு பூர்வமாக இருப்பான்.

அந்த ஊரின் பெரிய சம்சாரியின் மகன். எந்த வேலையும் செய்யாமல்... வெள்ளை வேட்டியும், டி.சி. ஸர்ட்டுமாக எந்நேரமும் மைனர் போலத் திரிபவன். அவனைப் பொறுத்தவரை-

பெண்கள் பூக்கள். அழகான வண்ணப் பூக்கள். ரசிக்கப்படவும், நுகரப்படவும் மட்டுமே ஜென்மம் எடுத்த பூக்கள். பணிவதிலேயே மகிழ வேண்டிய பூக்கள்...

அவளுக்கு அவனைப் பற்றித் தெரியும்.

அதிலும் இந்தக் கமலப் பூவின் மீது அவனுக்குத் தாளமுடியாத மோகம். இளமை வாளிப்பும், பருவக் கவர்ச்சியும் கொண்ட அவளது அழகான தேகத்தை நினைத்துப் பார்க்கும் போதெல்லாம்... அவன் உள்ளுக்குள்ளேயே மயங்கித் திளைத்து உடைந்து பலவீனப்பட்டு விடுவான்.

ஒரு நாள் ஒரு பொழுதாவது இவளை வசக்கியாகணும் அனுபவிச்சாகணும் என்றோர் குறி, நெஞ்சுக்குள் விழித்துக் கொண்டேயிருந்தது.

தனது தோட்டத்துக்கு கமலம் கூலி வேலைக்கு வரும் போதெல்லாம்... இதனாலேயே வாய் கொடுத்துப் பார்ப்பான்; எல்லாச் சமயங்களிலும் துடிப்பான வார்த்தை களை துணிச்சலாக எறிந்து, வாயடைத்து விடுவாள். ஒரு நாள் கூட-

'பொம்பளையை பூன்னு ஏன் சொல்றாக? கசக்குறதும் நுகர்றதும் சுலபம்ங்கிறதுனாலே தானே?'' என்றான்.

அவன் கேள்வியில் வெற்றிக் கெளிமிதத்துடன் கூடிய ஒரு கர்வம் இருந்தது.

''வாசத்துக்கும் நெறத்துக்கும் பூவைச் சொன்னா... அதுவே எல்லாத்துக்குமா? அதெப்படி? ஆம்பளையை சிங்கம்னு சொல்றாக, அவுக என்ன... காட்லே எலும்பைக் கடிச்சிக்கிட்டா இருக்காக?''

கேள்வியின் கம்பீரம் முறிந்து விழுந்த கஷ்டம் அவனைச் சிரமப்படுத்தியது. ஆயினும், கர்வம் குறையாமல் கேட்டான்.

''மனசில்லாத பொண்ணைக்கூட கைவலுவாலே கெடுத்துர முடியும். ஒரு ஆம்பளையை அப்படிக் கெடுத்துர முடியுமா?''

சம்மதமில்லேன்னா... யாரையும் யாரும் கெடுத்துர முடியாது. பொட்டச்சி என்ன கிள்ளுக்கீரையா? கைவலுவிலேயும் மனவலுவிலேயும் பொம்பளை எந்த விதத்துலேயும் கொறைஞ்சது கிடையாது''

''சும்மா பேசிட்டா போதுமா? ஆம்பளையை எதுத்து, ஒரு பொம்பளை என்ன செய்துட முடியும்?''

''வெறிநாய் கடிக்க வந்தா... பொம்பளையும் விரட்டத்தான் செய்வா. ஓடிக்கிட்டேயிருக்க மாட்டா''

அவளது பதில் கல்லெறி மாதிரி அவனைத் தாக்கியது. மனதுக்குள் கால்பரப்பி கம்பீரமாய் நின்ற கர்வம். அடிபட்டு

வேரறுந்து விழுந்தது. அதன் காலடியில முளை விட்டுக் கொண்டிருந்த வன்மம், சட்டென்று வளர்ந்து' நிமிஷத்தில் விருட்சமாயிற்று.

நினைவுகள் அலைக்கழிக்க, புல்லை அறுத்துக் குவித்தாள். மத்தாங்கப்புல்லும், குஞ்சாம்புல்லும் காடாய் கிடந்தது. அறுக்க அறுக்க ஆசையாக இருந்தது.

வெளிச்சத்தின் சாம்பல் நிலம் கருத்துக் கொண்டே வந்தது. அவள் சந்தேகப்பட்டது ஊர்ஜிதமாகிவிட்டது. ராஜம் அங்கே இல்லை. அவள் வேறு ஏதோ திசைக்குப் போய்விட்டாள்.

மேற்கு மலைத் தொடரின் தலைக்குமேல், வெந்து தணிந்த உலோகத் தகடுகளாய் மேகங்கள் சிவந்து கனிந்து கிடந்தன. காற்று நின்று போயிருந்தது. சூழ்ந்து நெருங்கிக் கொண்டு வந்தது. இருட்டு.

நிமிர்ந்து சுற்றும் முற்றும் மபார்த்தாள். ஒரு ஈ காக்கையைக் கூட காணோம். இவள் மட்டுமே இவளுக்குத் தெரிந்தாள். எங்கும் இருட்டு.

கிராமத்தை விட்டு விலகிய தூரத்தில், தனிமையில் நிற்கிறோம் என்ற நினைவு, உள்ளுக்குள் ஒரு பயங்கரமாய் பரவியது. மனது கிடந்து 'திக்திக்' கென்று அடித்துக் கொண்டது. இது அச்சமா, திகிலா... அல்லது வேறா?

தன்னைத்தானே அவள் தைர்யப்படுத்திக் கொண்டாள்.

அறுத்துப் போட்டிருந்த புல்லையள்ளி, கடாப் பெட்டிக்குள் திணித்தாள். பெட்டி நிரம்பியது. மேலும் அள்ளித் திணித்து, கோபுரம் குத்தியாக வைத்துக் கொண்டாள்.

பெட்டியைத் தூக்கினாள். கனமாயிருந்தது. சிரமமாயிருந்தது. முக்கித்திணறி தூக்கி தலையில் வைத்துக் கொண்டாள். கிளம்ப எத்தனித்தாள்.

இருட்டுக்குள் கிடந்த ஊர், எரிகிற விளக்குகளினால் மட்டும் இனம் காட்டியது. சிவந்து கிடந்த மேகங்கள் கூட சாம்பல் பூத்து கருத்து விட்டது. ஒளிபெற்று தன்னைக் காட்டிக் கொண்ட ஈக்கி நிலா, நட்சத்திரம் போலத் தானிருந்தது. முகத்தில் இருட்டு மோதியது.

அவசர அவசரமாகக் கிளம்பினாள். தோட்டத்தை விட்டுக் கிளம்பி, ஒற்றையடிப் பாதையில் பரபரத்து, ஓடை மணலுக்குள் இறங்கியபோது.

மனசு திக்கென்று அடித்துக் கொண்டது.

எதிரில்-

ஒரு உருவம் சிகரெட் கங்கு கொள்ளிக் கண்ணாக ஒளிர்ந்து அடங்குகிறது. காளை முத்துவோ...

மனசின் அதிர்வு, காதுக்குக் கேட்டது. பயத்தின் மெல்லிய சிறகடிப்பு.

எதுக்கு வாரான்?... ஒரு வேளை அதுக்கோ...? 'நீ ஒரு பூதான்' என்று நிரூபிக்க வர்ரானோ...

உள்ளுக்குள் படபடப்பு.

நெருங்கி விட்ட உருவம்... அவனே தான்!

நழுவும் தைர்யத்தை இழுத்துப் பிடித்துக் கொள்ள முயன்றாள். அவளது சுபாவம் வெளிப்படும் தருணம் வந்து விட்டது.

பெண்ணுன்னா அவ்வளவு மட்டமா? இழிவா? ஆண் நெனைச்சா... பெண்ணை என்ன வேணும்னாலும் செய்யலாமோ... அந்தளவுக்கு ஆண்கள் மனசுலே தன்னகங்காரமா? அதிகார வெறியா? இஷ்டம்போல இழுத்தடித்து விடலாம் என்கிற மமதையா...

நினைக்க நினைக்க அவளுள் வெருட்சி, ஆத்திரம் ஒரு தீயாக ஆவேசமாய் கொழுந்து விட்டெரிந்தது.

நடு ஓடைக்குள் அவன் எதிர்கொண்டான்.

''யாரு... கமலந்தானே?''

''ஆமா.''

விலகி நடந்தாள்.

''ஏன் ஓடுறே...? நீதான் துணிஞ்சவளாச்சே?''

''அதுக்கு? இங்கேயே இருக்கணுமா? அம்மா தேடுவா. நா போகணும்.''

''நானும் ஒன்னைத் தேடித்தானே வந்துருக்கேன்?''

''எதுக்கு?''

எட்டி அவள் கையைப் பிடித்தான். வளையல்கள் அதிர்ந்து கலகலத்தன. மலத்தை மிதித்துவிட்ட மாதிரி அருவெருப்பான கூச்சம் அவளுள் ஓடியது.

அவன் ரொம்பக் கொஞ்சலாக-இதமாக-சொன்னான்.

''இதுக்குத்தா.''

''அதுக்கு வேற ஆளைப்பாரு...'' வெளத்தோடு வெடுக்கென்று கையை உருவிக் கொண்டாள்.

''பாக்குறதுக்கு எனக்கு நெறைய ஆளுக இருக்கு... ஆனாலும் பூ மாதிரி அழகு யார்கிட்டே இருக்கும்?''

ஏகத்தாளமான கேள்வி, அவளது ஆவேசத் தீயில் எண்ணெயை ஊற்றியது.

''மரியாதையா ஒதுங்கிப் போயிரு. இல்லே... மானங்கெட்டுப் போகும்.''

விலகி நகர்ந்த அவளை மறித்துக் கொண்டான்.

''வாயாலேயே சவடால் அடிச்ச ஒன்னை... கையாலே அணைச்சுப் பாக்க எம்புட்டு ஆசையாயிருக்கு தெரியுமா?''

''அளவுக்கு மேலே ஆசைப்பட்டா... யாராயிருந் தாலும் கஷ்டந்தான்... சொல்லிட்டேன்.''

''என்ன செய்வே? இப்ப ஏங்கிட்டேயிருந்து நீ தப்பிச்சிர முடியுமா?''

''அதிகாரம் பண்ணி ஆட்டம் போட்டா... எவனும் உருப்பட மாட்டான்.''

''பாப்பமே...''

தலைமேலிருந்த கடாப் பெட்டியைப் பிடித்தான். அவள் பிடியை இறுக்கினாள். இழுத்துப் போட்டு விட்டான்.

விருட்டென்று எட்டி நகர்ந்த அவளை எட்டிப் பிடித்தான். இழுத்து தன்னோடு அணைத்தான்.

திமிறினாள். பலம் கொண்ட மட்டும் மல்லுக் கட்டினாள். காலால் இடறி விட்டான். பொத்தென்று மணலில் விழுந்தாள்.

ஆவேசம் பொங்கிக் குமுறினாலும், தோற்று விடுவோமோ என்கிற திகில் மெல்லிசாக உள்ளுக்குள் தலை காட்ட... மூர்க்கமாய் திமிறினாள்.

வெறியுடன் மேலே விழுந்து அமுக்கிய அவன், அவளது திமிறலில் விலகி மணலில் கிடந்தாலும், அவளை அவன் விடுவதாக இல்லை. அவன் ஒரு கை மார்பை அழுத்த இன்னொரு கை அவளது கூந்தலைப் பற்றி அமுக்கிக் கொண்டு அவள் முகத்தைத் தாழ்த்தினான். அவள் முகத்தில் எச்சில்படுத்திவிட வேண்டுமென்ற வெறி.

அவளது ஒரு கை, அவனது உச்சி மயிரை பற்ற... மறு கையால் தாடையை ஏந்தி தூக்கிப் பிடித்து, தாழவிடாமல் எதிர்த்து மல்லுக் கட்டினாள்.

அவள் உடம்பெல்லாம்-நரம்பெல்லாம்-விறைத்தது. காலால் அவனை உதைக்க முயன்றாள்.

பண்ணரிவாள் கூட இல்லையே... தூரத்தில் கிடக்கும் புல் பெட்டிக்குள் கிடக்கிறது.

தோல்வியின் விளிம்பைத் தொடப் போகிறோம் என்கிற நிஜம், அவளை மென்மேலும் ஆவேசம் கொள்ள வைத்தது.

அவளைத் தவிர்த்துக் கொண்டு அவன் முகத்தைத் தாழ்த்த முயல-அவள் தாடையைப் பற்றி தடுக்க...

இருவருக்குள் முரண்பட்ட உணர்வுகள் வெறிபிடித்துச் சண்டையிட...

அவள் மெல்ல மெல்லத் தளர்ந்து வந்தாள். தாடையைப் பற்றியகை, வழுகிக் கொண்டிருந்தது. அவளுக்குள் அச்சமும் ஆவேசமும் ஆர்ப்பரித்தது. என்ன செய்ய என்று அவள் யோசிக்க எதுவுமில்லாமல் திகைத்த போது மிருகவெறி மின்ன நெருங்கி வருகிற அவனது கண்கள்.

ஆணவம் பொங்கிய கண்கள். வன்மம் நிறைந்த கண்கள். ஆண் என்கிற திமிர் கொண்ட கண்கள்...

அவளுள் பலம் பெருகுவதைப் போலிருந்தது.

தாடையிலிருந்து வழுகிக் கொண்டு மேல் நகர்ந்தது போகிற உள்ளங் கையை... சிரமங்களுக்கு மத்தியில் அவளாக மேலும் கொஞ்சம் நகர்த்திக் கொள்ள-

சரியாக இருந்தது.

அவனது கன்னப் பொருத்தில் அவளது உள்ளங்கை அழுத்த, அவளது பெருவிரல் சரியாக அவனது, வலது கண்ணைத் தொட-

மூர்க்கமாய்ச் செயல்பட்டாள்.

மானம், ரோஷம், வீரம், ஜீவன் சகலத்தையும் திரட்டி, பெருவிரலில் தேக்கி, பலம் கொண்ட மட்டும் பெரு விரலை விறைப்பாக அழுத்த...

காடே அதிர்ந்து திகிலடிக்கிற மாதிரி... 'ஹோ......' வென்று கதறினான். தனது இரு கையாலும் வலது கண்ணைப் பொத்திக் கொண்டு அலறிப் புரண்டான், மணலில்.

''ஐயோ... கண்ணு போச்சே... ஐயய்யோ.''

குத்துண்ட மிருகமாய்த் துடித்தான், காளை முத்து.

அவளது இடது கைப்பெருவிரலில் ஈரப் பிசுபிசுப்பு.

அவசர அவசரமாய் எழுந்தாள். புல்லுப்பெட்டியை நிமிர்த்தி... சிந்திக்கிடந்த புல்லை அள்ளி வைத்துத் தூக்கிக் கொண்டு, பரபரவென்று நடந்தாள்.

பெண் வெறும் பூ மட்டுமல்ல என்பதற்கான ஒரு ரகசிய சாட்சியமாக காளைமுத்து அந்தக் கிராமத்தில் ஒற்றைக் கண்ணோடு உலவினான்.

*1982-குங்குமம்*

**நிறைந்தது**

திருவரசு புத்தக நிலையம்